# நேசம் மலர்ந்தது

கலைவாணி சொக்கலிங்கம்

# நேசம் மலர்ந்தது

## 1

அன்புடன் பேசும் ஆயிரம்
வார்த்தைகளைவிட உரிமையோடு
திட்டும் ஒரு வார்த்தையில்
இருப்பதுதான் உண்மையான அன்பு!

**வீ**டு முழுக்க உறவினர்களின் கலகலப்பு, சலசலப்பு. வாண்டூஸ்களின் உற்சாக விளையாட்டுகள். பெரியவர்களின் அன்பான விசாரிப்புகள் வரவேற்புகள். பெண்களின் கொலுசொலி வளையொலியோடு கூடிய செல்ல சிணுங்கல், சிரிப்பொலிகள், வேலையாட்களின் சுறுசுறுப்பான உழைப்பு என வீடு கல்யாணக்களை கட்டியிருந்தது.

நாளை மறுநாள் திருமணம் என்பதால் வெளியூரில் உள்ள உறவினர்கள் வந்த வண்ணம் இருக்க... இரண்டு கார்களும் ஓய்வில்லாமல் வெளியே செல்வதும் உறவினர்களை அழைத்து வருவதுமாய் எப்போதும் பிஸியாகவே இருக்க, கைலாசம் செல்போனும் கையுமாய் வந்தவர்களை வரவேற்றுக் கொண்டிருந்தார்.

வந்தவர்களை உபசரிக்கும் பணியில் ஈடுபட்டிருந்த தாட்சாயிணி பம்பரமாய் சுழன்று கொண்டிருக்க, அவளது இளைய மகன் யுவராஜன் அன்னையை நெருங்கினான்.

"அம்மா! ஏன் இப்படி ஓடுறீங்க? பொறுமையாக நடங்கம்மா. மூட்டுவலி இருக்குதில்ல?" – பணிவாய்ச் சொன்ன மகனைப் பார்த்துப் புன்னகைத்தாள் தாட்சாயிணி.

"அதெல்லாம் பார்த்தா முடியுமாப்பா? வந்தவங்கள கவனிக்க வேண்டாமா?"

"கவனிக்கலாம்மா. பொறுமையா செய்யுங்க. நீங்க ஏன் கிச்சனுக்கு போறீங்க? ஜெயா என்ன பண்றா?"

"அவ டிபன் செய்துட்டு இருக்காடா? நீ எங்கிட்ட பேசி டயத்தை வீணாக்காதே. போ... போய் உன் அண்ணனை எழுப்பு. வீடு நிறைய விருந்தாள் வந்திருக்கு. அவன் இன்னும் கீழே வரவேயில்லை."

"என்ன? இன்னுமா தூங்கிட்டு இருக்கான்?"

"எழுப்பிவிடாம என்னிக்கு எழுந்திருக்கான் அவன்? நைட் பூரா அவன் ரூம்ல லைட் எரிஞ்சிட்டே இருந்தது. என்னதான் பண்ணினானோ?"

"என்ன பண்ணியிருப்பான்? வருங்கால மனைவிகிட்ட போன்ல உறவாடிட்டு இருந்திருப்பான்." – கிண்டலாய்ச் சொன்ன இளைய மகனிடம் கிசுகிசுத்தாள் தாட்சாயிணி.

"யுவா! பொண்ணுகிட்ட போன்ல பேசுற விஷயமெல்லாம் நம்ம சொந்தக்காரங்களுக்குத் தெரிய வேண்டாம்."

"ஏம்மா? இதில என்ன தப்பு?"

"ஷ்... சொன்னாக் கேள். அவங்கல்லாம் கிராமத்தில இருந்து வந்திருக்காங்க. இதையெல்லாம் ஈஸியா எடுத்துக்க மாட்டாங்க. ஒரு மாதிரி பேசுவாங்க. அதனால அவனை அந்த போனை ரூம்லயே வெச்சிட்டு வரச்சொல்லு."

"சான்ஸே இல்ல. சாப்பாடு தண்ணி இல்லன்னாக்கூட இருந்திடுவான். போன் இல்லாம இருக்கவே மாட்டான்."

"அம்மா சொன்னேன்னு சொல்லு. போனோட வந்தா நானே பிடுங்கி வெச்சிடுவேன்னு சொல்லு. போ. சீக்கிரமா எழுந்து குளிச்சிட்டு நல்லதா ட்ரெஸ் பண்ணிட்டு வரச் சொல்லு."

"ஓ.கே.ம்மா."

"யுவா! இதென்ன சட்டை போட்டிருக்கே?"

"ஏம்மா! இதுக்கென்ன? நல்லாத்தானே இருக்கு?" – தான் அணிந்திருந்த கருநீல டி-ஷர்ட்டை குனிந்து பார்த்துக்கொண்டே கேட்டான். அவனுக்கென்றே தைத்தது போல வெகு கச்சிதமாய் பொருந்தியிருந்தது. அடர்ந்த கருநீலம் அவனது பொன்நிறத்தை இன்னும் எடுப்பாய்க் காட்டியது.

சற்று குட்டையான கைவைத்திருந்த பனியனை திருப்தியில்லாமல் பார்த்தாள் தாட்சாயிணி. தந்தம்போல் பளபளத்த மகனின் கைகளை அதில் சுருள் சுருளாய் படர்ந்திருந்த உரோமத்தைக் கண்டு, லேசான பதட்டத்தோடு மகனை ஏறிட்டாள்.

"இனிமே கல்யாணம் வரைக்கும் இந்த மாதிரி பனியனெல்லாம் போடாதே யுவா!"

"ஏம்மா?"

"டேய்! எல்லார் கண்ணும் ஒரே மாதிரி இருக்காதுடா. இந்தப் பனியனைப் பார். உன் உடம்பை அப்படியே காட்டுது. கலரை வேற தூக்கலாக் காட்டுது."

"என்னம்மா நீங்க?"

"யுவா! முதல்ல இந்த பனியனைக் கழற்றிப் போட்டுட்டு முழுக்கை வைச்ச சட்டை போட்டுக்க. கொஞ்சம் லைட் கலரா இருக்கட்டும்."

"அம்மா! வரவர உங்க பிஹேவியர் சரியில்ல. நான் என்ன குழந்தையா? கண்ணு படுறதுக்கு?"

"டேய்! குழந்தைகளுக்குத்தான் கண்ணு படுமா? காலையில இருந்து நூறு பேர் கேட்டுட்டாங்க."

"என்ன கேட்டாங்க?"

"உன் சின்ன மகன் என்ன வெள்ளைக்காரப்பய மாதிரி பளபளன்னு இருக்கான். குங்குமப்பூ நிறைய சாப்பிட்டியான்னு."

"கேட்கிறவங்க கிட்ட சொல்லுங்கம்மா... நீங்களும் ஊட்டியிலேயே பிறந்து வளர்ந்திருந்தா... இந்தக்



கிளைமேட்டுக்கு என் மகன் கலருக்கு வந்திடுவீங்கன்னு சொல்லுங்க."

"டேய்! வந்தவங்ககிட்ட இப்படிச் சொல்லிடாதே. சரி, முயற்சி செய்து பார்க்கலாம்னு இங்கேயே தங்கிடப் போறாங்க."

"என்ன தாட்சாயிணி? நாங்க வந்து இவ்வளவு நேரமாகுது... ஒரு காபித் தண்ணி கிடையாதா?" - என்றவாறு வந்த பெண்மணியைக் கண்டதும் அவசரமாய்ப் புன்னகைத்தாள்.

"வாங்க அண்ணி... வாங்க. நல்ல இருக்கீங்களா?"

"ம்... ம்... ஆமா! இது யாரு? யுவராஜனா?"

"ஆமா அத்தே!"

"அடேயப்பா! எவ்வளவு வளர்ந்திட்டான்? இவனுக்கே கல்யாணம் பண்ணிடலாம் போலிருக்கே?"

"அதுக்கு என்ன அத்தே அவசரம்? முதல்ல அண்ணன் கல்யாணம் நல்லபடியா முடியட்டும்."

"ஏன் தம்பி! நீ வெளியே எங்கேயும் போகாம ஏஸி ரூம்லயே இருப்பியா?"

"ஏன் அண்ணி கேட்கிறீங்க?" - மகனைப் போகும்படி கண்ணைக் காட்டியவாறே கேட்டாள் தாட்சாயிணி.

"இல்ல... நீயும் சுமாரான கலர்தான். கைலாசமும் புதுநிறம்தான். இவன் மட்டும் எப்படி இவ்வளவு கலரா மஞ்சள் துண்டு மாதிரிப் பிறந்தான்?" - கண்களில் லேசாய்ப் பொறாமை வழிய அவள் கேட்க, தாயிடம் கைகாட்டிவிட்டு சிரிக்காமல் சொன்னான் யுவராஜன்.

"அது வேறொன்னுமில்ல அத்தே. நான் வயித்தில இருக்கும்போது அம்மா நிறைய மஞ்சள் கிழங்கு சாப்பிட்டாங்களாம். அதான் இப்படிப் பொறந்தேனாம். நீங்களும் ட்ரைபண்ணிப் பாருங்களேன்."

"யுவா! பெரியவங்ககிட்ட மரியாதையாப் பேசணும். போ... போய் அண்ணனை எழுப்பிவிடு." - என்றவாறே தாட்சாயிணி அந்தப் பெண்மணியின் கைகளைப் பற்றி அழைத்துச் சென்று இருக்கையில் அமரவைக்க, லேசான புன்னகையோடு மாடிப்படியேறினான் யுவராஜன்.

மாடியறையை நெருங்கி கதவில் கைவைத்த போது கார்த்திக்கின் தூக்கக் கலக்கமான குரல் கேட்டது.

"குட்மார்னிங் டா!"

"அட! பரவாயில்லயே... எழுப்புறதுக்குள்ள எழுந் திட்டியே!" - என்றவாறு கதவைத் திறந்தவனின் முகம் கருத்தது. அண்ணன் காலை வணக்கம் சொன்னது தனக்கல்ல. காதோடு வைத்திருந்த செல்போனில் சொல்லிக் கொண்டிருந்தான் எனத் தெரிந்ததும் வேகமாய்க் கட்டிலை நெருங்கினான்.

உறக்கம் முற்றிலும் கலையாமல் கண்களை மூடிக்கொண்டே பேசிக் கொண்டிருந்த அழகான கார்த்திக், அருகே கேட்ட காலடி ஓசையில் கலைந்து சிரமமாய் விழிகளைத் திறந்தான்.

கோபமாய் முறைத்துக் கொண்டு நின்ற தம்பியைக் கண்டதும் பதட்டமாய் எழுந்து கொண்டே போனை அவசரமாய் கட் பண்ணினான்.

"வாடா! என்ன இவ்வளவு சீக்கிரமா எழுந்திட்டே?"



"என்னது? இப்ப டைம் என்ன தெரியுமா?"

"எவ்வளவு?" - என்றவாறே கண்களை சுவரில் மாட்டியிருந்த கடிகாரத்திற்குத் திருப்ப, அது ஒன்பதை நெருங்கிக் கொண்டிருந்தது. அசடு வழியத் தம்பியிடம் திரும்பினான்.

"ஓ! மணி ஒன்பதாகப் போகுதா? ஸாரிடா! நைட் தூங்க லேட் ஆயிடுச்சு! அதான்... அசந்து தூங்கிட்டேன்."

"நைட்டெல்லாம் அப்படி என்ன வேலை செய்தாய்?"

"சுஜாகிட்ட பேசிட்டு இருந்தேனா... டைம் போறதே தெரியல."

"எப்படித் தெரியும்? நீதான் பைத்தியமா மாறிட்டு வர்றியே..." - யுவராஜன் சொல்லிக் கொண்டிருக்கும்போதே கார்த்திக்கின் செல்போன் தேவதையைக் கண்டேன் எனப் பாடி அழைத்தது.

கார்த்திக் எடுப்பதற்குள் அதை எடுத்தான் யுவராஜன். திரையில் 'டார்லிங் காலிங்' என ஒளிர, அண்ணனை முறைத்தான்.

"ஏன் அண்ணா! உங்க ரெண்டு பேருக்கும் வேற வேலையே கிடையாதா? அப்படி என்னதான் பேசுவீங்க?"

"அதெல்லாம் சொன்னாப் புரியாது. சொல்லவும் கூடாது. போனைக் கொடு."

"நீ பேச ஆரம்பிச்சா நிறுத்தவே மாட்டாய். முதல்ல எழுந்து குளிச்சிட்டுக் கீழே வா. கெஸ்ட் எல்லாம் வந்து உன்னைத்தான் தேடுறாங்க."

"பேசிட்டுப் போறேன்டா!"

"நோ... நீ போய்க் குளி. நான் பேசுறேன்."

"நீயா? நீ என்ன பேசுவ?"

"என் அண்ணிகிட்ட நான் என்ன வேணா பேசுவேன். நீ கிளம்பு." - என கார்த்திக்கை எழுப்பிக் குளியலறைக்குள் அனுப்பிவிட்டு விடாமல் பாடிக்கொண்டிருந்த போனை எடுத்து காதில் வைத்ததும் எதிர்முனையில் இனிய குரல் ஒலித்தது.

"இவ்வளவு நேரம் என்ன பண்ணிட்டு இருந்தீங்க? ஆமா! ஏன் போனைக் கட் பண்ணீங்க?"

"ஹலோ அண்ணி! நான் யுவராஜன். அண்ணன் குளிக்கிறான்." - என்றதும் பதறினாள் சுஜாதா.

"ஐயோ! ஸாரி... ஸாரி!"

"எதுக்கு அண்ணி ஸாரி?"

"இல்ல... நான்... அப்புறமா பேசுறேனே... அவர்கிட்ட..."

"நோ அண்ணி. இன்னும் ரெண்டு நாளைக்கு அவர்கிட்டப் பேசவே முடியாது."

"ஏன்... ஏன்?"

"அட! அவன் கல்யாண மாப்பிள்ளை. சாஸ்திரம் சம்பிரதாயம்னு எவ்வளவோ சடங்கு இருக்கு. இப்பவே வீடு முழுக்க ரிலேஷன்ஸ் வந்தாச்சு. இந்த நேரம் நீங்க ரெண்டு பேரும் போன்ல பேசிட்டே இருந்தா உங்க அன்யோனியத்தைப் பார்த்து மத்தவங்க பொறாமைப் பட மாட்டாங்களா?"

"என்ன?"

"ஆமா அண்ணி! உங்க ரெண்டு பேர் நல்லதுக்காகத் தான் சொல்றேன். அம்மா அடிக்கடி சொல்லுவாங்க. கல்லடி பட்டாலும் கண்ணடி படக்கூடாதுன்னு."

"அப்படின்னா?"

"கல் பட்டு ஏற்படுற காயத்தைவிட கண்ணு படுறது பெரிய கஷ்டமாம். நீங்க ஒருத்தருக்கொருத்தர் வெச்சிருக்கிற பிரியத்தைப் பார்த்து கண்ணு படக்கூடாதில்ல. அதான் சொல்றேன்."

"அப்போ... இனிமே போன் பண்ணவே கூடாதா?" - லேசான வருத்தத்தோடு சுஜாதா கேட்க, சிரித்தான் யுவராஜன்.

"அண்ணி! நடுவுல ஒரே நாள்தான் இருக்கு. அடுத்த நாள் மார்னிங் கல்யாணம். அதுவரை பொறுத்துக்கங்க. அதுக்கப்புறம் லைஃப்லாங் பேசிட்டே இருங்க, சரியா?"

"ம்... போனை வெச்சிடவா?"

"போனை வெச்சிடாதேடா." - தலையைக்கூடத் துவட்டாமல் ஓடி வந்தான் கார்த்திக். தம்பியின் கையிலிருந்த போனைப் பறித்து காதில் வைக்க, மறுமுனை மௌனம் காத்தது.

"ச்சே! லைன் கட்டாயிடுச்சு. ஏன்டா கட் பண்ணினே?"

"ஹலோ! நான் கட் பண்ணலை. உன் ஆள்தான் வெச்சிட்டாங்க."

"என்னடா சொன்னாள்?"

"கல்யாணம் வரைக்கும் வேலை இருக்குமாம். அதனால போன் பண்ணி டிஸ்டர்ப் பண்ண வேண்டாம்னு சொன்னாங்க." - என்ற தம்பியை நம்பாமல் பார்த்தான்.

"அப்படியா சொன்னாள்? இருக்காதே!"

"உன் ஆராய்ச்சியையெல்லாம் பிறகு வெச்சிக்க. முதல்ல தலையைத் துவட்டு. ஜலதோஷம் பிடிச்சிடும். அப்புறம் மணமேடையில உட்கார்ந்து மூக்கை உறிஞ்சிட்டு இருப்ப." - என்றவாறே டவலை எடுத்து நீட்டினான் யுவராஜன்.

"தேங்க்ஸ்டா யுவா! நம்ம வீட்ல ஏன்டா இவ்வளவு சத்தம்? யார் வந்திருக்காங்க?"

"சரிதான்... அண்ணா! நம்ம குடும்ப உறவினர்கள் மொத்தமும் வந்தாச்சு. எல்லாரும் மாப்பிள்ளை எங்கேன்னு கேட்டுட்டு இருக்காங்க. சீக்கிரமா ட்ரெஸ் பண்ணிட்டுக் கீழே வா."

"இது வேறயா? எனக்கு நிறைய வேலை இருக்குடா."

"என்ன வேலை?"

"நாளைக்கு மேரேஜ் ஹாலுக்குப் போகணுமில்ல!"

"ஆமா!"

"மணவறையைப் பூக்களாலயே அலங்கரிக்கணும்னு எனக்கும் சுஜாவுக்கும் ஐடியா."

"ஓஹோ!"

"அதுக்காக சுஜாவோட ஃபிரெண்டப் பார்த்துப் பேசணும். அவங்க ஹில்ஸ் டவர்ல ஏதோ பொக்கே ஷாப் வெச்சிருக்காங்களாம். நாம கேட்டா மண்டபத்துக்கே வந்து டெக்கரேஷன் பண்ணித் தருவாங்களாம்."

"இவ்வளவுதானே! ஒரு போன் போட்டுச் சொல்லிடு."



"ம்ஹூம்... அவங்க ரொம்ப பிஸியான ஆளாம். நேர்ல போய்ச் சொல்லி பாதிப் பணம் அட்வான்ஸா கொடுத்துப் புக் பண்ணனும். என்ன மாதிரி அலங்காரம் பண்ணனும் என்னென்ன ப்ளவர்ஸ் வேணும்னு நம்மகிட்ட கேட்டுட்டுத் தான் செய்வாங்களாம்."

"அதுக்கு?"

"இப்பவே மணி பத்தாகப் போகுது. நான் இப்பக் கிளம்பிப் போனாத்தான் சரியா இருக்கும்."

"சான்ஸே இல்ல. உன்னை வெளியவே விடக் கூடாதுன்றது அம்மாவோட ஆர்டர். வீட்ல ஏதோ சடங்கெல்லாம் இருக்காம்." - அதற்குள் தாட்சாயிணி மாடிக்கே வந்து விட்டாள்.

"பசங்களா! இன்னும் என்னடா பண்றீங்க? டிபன் சாப்பிட வேண்டாமா? டேய் கார்த்தி! நீ என்னடா ஈரத்தோட நிக்கிற? கீழே உங்க மாமா தேடுறாங்க."

"இதோ வந்திட்டேம்மா. நீங்க ஏம்மா மேலே வந்தீங்க? கால் வலிக்குமே!"

"அது இருக்கட்டும்... நீ துணிய மாத்திட்டு சீக்கிரம் வா. யுவா! நீ எங்கூட வாப்பா."

"இதோ வர்றேம்மா." - என்றவாறே தாயைப் பின்தொடர்ந்து படிக்கட்டில் இறங்கினான் யுவராஜன்.

"யுவா! மதிய சாப்பாட்டுக்கு எல்லாரும் அசைவம் கேட்கிறாங்களே!"

"செய்திடலாம்மா. என்ன வாங்கணும்?"

"சமையல்காரர்கிட்ட சொல்லி லிஸ்ட் வாங்கி வெச்சிருக்கேன். நீ டிபன் சாப்பிட்டுட்டு போய் வாங்கிட்டு வந்திடுப்பா."

"சரிம்மா."

"அம்மா! நானும் யுவாகூட கொஞ்சம் போயிட்டு வந்திடுறேன்." - என்றவாறு சட்டையின் பட்டன்களை மாட்டிக்கொண்டே கீழே இறங்கி வந்தான் கார்த்திகேயன். தாட்சாயிணி நின்றாள்.

"என்ன? வெளியே போறியா? உன்கிட்ட நேற்றே என்ன சொன்னேன்?"

"அம்மா! நான் ஒண்ணும் ஊர் சுத்தப் போகலம்மா. முக்கியமான வேலை."

"அப்படியென்னடா முக்கியமான வேலை?"

"அம்மா! மணவறையை நம்ம வீட்டை எல்லாம் டெக்கரேஷன் பண்றதுக்கு ஆள் பார்க்கணும்."

"பந்தல் போடுறவர் செய்யுற வேலைதானே இது? நீ ஏன் ஆள் பார்க்கணும்?"

"அம்மா! அவங்க எல்லாம் பிளாஸ்டிக் பூ, ஜரிகைத் தாளால அலங்காரம் பண்ணுவாங்கம்மா. நான் சொல்றது ஃப்ரெஷ் ஃப்ளவர்ஸ். புதுசாப் பூத்த இயற்கையான பூக்களால நறுமணம் வீசும் மலர்களால் செய்யப்படும் அலங்காரம்."

"இதுக்காக நீ ஏன் வெளியே போற? நம்ம தோட்டத்திலேயே கணக்கில்லாம பூ பூக்குக் கிடக்கு. நம்ம



தாஸ்கிட்டச் சொன்னா மொத்தத்தையும் பறிச்சிட்டு வந்திடுவான்."

"அட! எனக்கு இது தோணாமப் போச்சே. அண்ணா! அம்மா சொல்ற மாதிரி செய்துடலாமா?"

"தாஸ் பூவைப் பறிச்சிடுவான் சரி. அதை டெக்கரேட் பண்றது யாரு? நீயும் நானும் விடியவிடிய உட்கார்ந்து செய்யலாம்னு சொல்றியா?"

"என்னடா கேள்வி இது? மணவறையை அலங்காரம் செய்யறவன்கிட்ட சொல்லிட்டாப் போதும். எல்லாம் அவனே செய்திடுவான்."

"இல்லம்மா! அது சரியா வராது."

"ஏன்டா?"

"சரியா வராது. நான் ஏற்கனவே எல்லாம் பேசி டேட் கொடுத்திட்டேன். இனிமே மாத்த முடியாது."

"அண்ணா! என்ன சொல்றே? எங்கிட்ட என்ன சொன்ன நீ?"

"சொன்னேன்டா. ஆனா சுஜா மூலமா எல்லாம் பேசி முடிச்சிட்டேன். இப்பப் போய்ப் பார்த்துப் பேசிட்டு அப்படியே ஒரு பொக்கே ஆர்டர் பண்ணிட்டு வந்திடுறேன்."

"பொக்கேயா? அது எதுக்கு?"

"அம்மா! நாளைக்கு மாப்பிள்ளை அழைப்பு முடிஞ்சதும் நைட் ரிஸப்ஷன் இருக்கு இல்ல. அப்போ பொண்ணு கையில கொடுக்கணுமாம்."

"என் பிரண்ட்ஸ்தாம்மா. இப்போ இதுதான் பேஷனாம்."

"என்னவோ சொல்ற? சரி இந்த வேலையை சின்னவன்கிட்ட சொல்லி அனுப்பு. நீ எங்கேயும் வெளியே போகக்கூடாது. வீட்லயே இரு."

"அவனுக்கு நிறைய வேலை இருக்குமே!"

"அண்ணா! எத்தனை வேலை இருந்தாலும் நான் பார்த்துக் கொள்கிறேன். நீ கடையோட அட்ரஸ் சொல்லு. நான் போய் ஆர்டர் கொடுத்திட்டு வர்றேன்."

"ஒன் மினிட் யுவா!" - என்றவாறு பேண்ட் பாக்கெட்டினுள் கைவிட்டு ஒரு சிறிய அட்டையை எடுத்து நீட்டினான்.

"இதுதான் விசிட்டிங் கார்ட். குறிஞ்சி பொக்கே ஷாப். நீ போய் என் பேர் சொல்லு தெரியும். அவங்க சில மாடல்ஸ் காட்டுவாங்க. அதுல நல்லதா நீயே சூஸ் பண்ணிடு. நாளைக்கு மார்னிங் வீட்டுக்கு வரச் சொல்லிடு."

"காலையிலயா?"

"மார்னிங் வீட்டை டெக்கரேட் பண்ணிட்டா ஈவ்னிங் மண்டபத்தில வேலை ஆரம்பிக்கச் சரியா இருக்குமில்ல."

"எல்லாம் பக்காவா பிளான் பண்ணிட்ட போலிருக்கே. வேற என்ன செய்யணும் நான்?"

"இந்தா... இந்த டென் தவுஸண்ட்ல பில் பே பண்ணிடு. அப்புறம்... நல்ல சிவப்பா ரெட்ரோஸ்ல ஒரு பொக்கே ரெடி பண்ணச் சொல்லிடு. ரொம்ப கிராண்டா இருக்கணும்னு சொல்லு. எவ்வளவு அமௌண்டா இருந்தாலும் ஓ.கே."



"ஏன்டா இப்படிப் பணத்தை வீணாக்குற? கொஞ்ச நேரத்தில வாடிப்போற பூவுக்கு இவ்வளவு பணத்தைச் செலவழிக்கணுமா?"

"அம்மா! கல்யாணத்துக்கு வர்றவங்க எல்லாம் சும்மா அசந்து போக வேண்டாமா?"

"மத்தவங்க அசந்து போறாங்களோ இல்லையோ... அண்ணி அசந்து போயிடுவாங்க. அதுக்காகத்தானே இவ்வளவு மெனக்கெடுறான். ஏண்ணா? நம்ம கார்டன்ல எவ்வளவோ விதமான பூக்கள் பூத்துக் குலுங்குது. என்னிக்காவது ஒரு நாளாவது நின்னு ரசிச்சுப் பார்த்திருப்பியா?"

"அதெல்லாம் உன் வேலைடா. நமக்கு அந்தப் பொறுமை ரசனை எல்லாம் கிடையாது."

"இப்ப மட்டும் என்ன பூ அலங்காரம் மேல அவ்வளவு ஆர்வம் வந்தது?"

"உன் அண்ணிக்குப் பிடிச்ச மாதிரி செய்யுறேன். வேறு ஒண்ணுமில்ல. நீ இப்படிப் பேசிட்டே நின்னா டைம் ஆகிடும். சீக்கிரம் கிளம்பு. "

"இருடா, புள்ள சாப்பிட்டுட்டுப் போகட்டும்."

"இல்லம்மா... நான் வந்து சாப்பிடுறேன். நீங்க சமையல்காரர் லிஸ்ட்டையும் எடுத்திட்டு வாங்க. நான் வாங்கிட்டு வந்திடுறேன்."

"இதோ கொண்டு வர்றேம்ப்பா." - என்றவாறு தாட்சாயிணி கீழே இறங்கிச் செல்ல, தம்பியைத் தன் புறமாய்த் திருப்பினான் கார்த்திகேயன்.

"யுவா! சொன்னது நினைவிருக்கட்டும். ரெட் ரோஸ் பொக்கே."

"நினைவிருக்கு."

"செய்து வெச்சதைத் தந்தா வாங்காதே. பழசா இருக்கும். புதுசாச் செய்யச் சொல்லு. அப்பத்தான் ஃப்ரெஷ்ஷா இருக்கும்."

"சரி."

"ரொம்ப விரிஞ்ச ரோஸ் வேண்டாம். மலர்ந்தும் மலராம பாதி மொட்டா இருக்குமே. அதை வெச்சு செய்யச் சொல்லு. அதுதான் அழகா இருக்கும்."

"பொக்கேன்னாலே அப்படித்தாண்ணா செய்வாங்க."

"இருந்தாலும் நாமளும் சொல்லணுமில்ல. அவங்க பாட்டுக்குப் பழைய பூவை வெச்சு செய்துட்டா என்ன பண்றது?"

"அப்போ நான் ஒண்ணு பண்ணட்டுமா?"

"என்ன?"

"நானும் அந்தப் பொக்கே ஷாப்காரன்கூடவே போயி ஒவ்வொரு பூவா பார்த்துப் பார்த்துப் பறிச்சு பக்கத்தில உட்கார்ந்தே செய்திட்டு வரட்டுமா?"

"என்னடா தம்பி இப்படிக் கேட்குற?"

"பின்னே? எனக்குத் தெரியாதா எதை எப்படி வாங்கணும்னு? போ... போய் முதல்ல சாப்பிடு." – என்றான் லேசான கோபத்தோடு.

"கோவிச்சுக்காதேடா. ஒரு முன்னெச்சரிக்கைக்காகத் தான் சொன்னேன்."



"எல்லாம் எனக்குத் தெரியும். நீ பேசாமப் போ... போ."

"ம்... யார் அண்ணன் யாரு தம்பின்னே புரிய மாட்டேங்குது." – போலியான பணிவோடு சொல்லிக் கொண்டே கார்த்திகேயன் விலகிச் செல்ல, புன்னகையை மென்றுகொண்டே தாயைத் தேடிச் சென்றான் யுவராஜன்.

## 2

பூக்கின்ற பூக்கள் எல்லாம்
அழகல்ல உன்னைப் போல்
அழகான பூ இதுவரை பூத்ததில்லை!
நீ பூக்களின் அரசி!

மலர்க் கண்காட்சி போல் வரிசையாய் வீற்றிருந்த மலர் ஷோ ரூம்களைப் பார்த்துக் கொண்டே காரை மெதுவாய்ச் செலுத்தினான் யுவராஜன். கண்ணாடியால் மூடப்பட்டிருந்த ஷோரூம்களில் புதிதாய்ப் பூத்த ரோஜாக்கள், ஆர்கிட், டெய்சி, சோலியா, மேரிகோல்டு எனப் பலவிதமான மலர்கள் சிரித்து மயக்கின.

அதனை ஒட்டினாற் போலிருந்த திறந்தவெளிக் கடைகளில் பக்கெட்களிலும் மூங்கில் கூடையிலும் கலைநயத்தோடு அடுக்கி வைக்கப்பட்டிருந்த பூக்களின் மணம் வீதியெங்கும் பரவிக் கொண்டிருந்தது.

பூக்களை வாங்குவதற்குக் கூட்டம் அலைமோதிக் கொண்டிருக்க, அதற்கு மேல் காரைச் செலுத்த முடியாமல் சாலையோரமாய் ஒதுங்கி காரை நிறுத்திவிட்டு இறங்கிப் பூட்டினான். பாக்கெட்டினுள் கைவிட்டு அந்த முகவரி [illegible] மீண்டும் ஒருமுறை வாசித்தான்.

'இதே ரோடுதானே... எந்தக் கடையாக இருக்கும்?' - யோசனையாய் நடக்க ஆரம்பித்தான். மூட்டையாய் வந்து இறங்கும் பூக்களை மலைபோல் குவித்து தனித்தனியாய்ப் பிரித்துக் கொண்டிருந்த வியாபாரிகளைக் கடந்து சென்று வரிசையாய் இருந்த கடைகளின் முகப்புப் பலகையைப் பார்த்துக் கொண்டே நடந்தவனின் கால்கள் நின்றன.

இரண்டு பெரிய ஷோரூம்களின் நடுவே சிறிய கண்ணாடித் தடுப்புடன் கூடிய சின்னக் கடையின் முகப்பில் அந்தப் பெயர் தெரிந்தது. 'குறிஞ்சி பொக்கே ஷாப்' பூக்களால் எழுதப்பட்டிருந்த பெயரைக் கண்டதும் முகவரி அட்டையை எடுத்துச் சரிபார்த்துக் கொண்டான்.

சாலையை விட்டு இறங்கி கடையின் வாசலை அடைந்து எட்டிப் பார்த்தான். சிறியதும் பெரியதுமான குவளைகளில் பலவிதமான மலர்கள் இதுவரை பார்த்தறியாத நிறங்களில் பளிச்சென நின்று கொண் டிருக்க, ஒவ்வொரு மலர்களையும் ரசனையாய்ப் பார்த்துக் கொண்டே கடைக்குள் நுழைந்தான்.

சில்லென குளிரூட்டப்பட்ட அறையின் குளிர் சில்லிட்டது. தன்னைச் சுற்றிலும் மலர்க் கூட்டங்கள் மட்டுமே நிறைந்திருக்க, மனித நடமாட்டமே இல்லை. கண்களைச் சுழற்றித் தேடினான்.

அப்போதுதான் கடையைத் திறந்திருப்பார்கள் போலும்.

இதமான நறுமணத்தோடு ஊதுபத்தியின் மணம் கமழ்ந்தது. மெதுவாய் நடைபோட்டு அறை முழுக்கத் தேட, ஒருவரும் கண்ணில் படவில்லை. சிறிய மேஜையின்



பின்னே போடப்பட்டிருந்த நாற்காலி வெறுமையாய் இருக்க, மேஜையின் மீதிருந்த சிறிய குப்பியில் செருகப்பட்டிருந்த ஊதுபத்தி புகைந்து கொண்டிருந்தது. அருகே உறையால் போர்த்தப்பட்டிருந்த கணினி. அதன் அருகே தொலைபேசி, சிறிய ஸ்படிக லிங்கம்.

'என்ன இது? இப்படியா பொறுப்பில்லாமல் கடையைத் திறந்து வைத்துவிட்டு ஒருவர்கூட இல்லாமல் இருப்பது?' பொறுமையை இழந்த யுவராஜன் டேபிளின் மீது லேசாய் விரல்களால் கொட்டியவாறு குரல் கொடுத்தான்.

"எக்ஸ்கியூஸ்மீ..."

"யெஸ்..." - பூக்களின் பின்னாலிருந்து உடனே பதில் வர, சட்டெனத் திரும்பினான். இளம் ரோஜா நிற ரோஜா மொட்டுக் குவியலின் பின்னே அந்தப் பெண்ணின் முகம் தெரிந்தது. பூக்களின் நிறத்தோடு ஒன்றிய நிறம். குளிர்ந்த மலராய் மலர்ந்த முகம். வட்டக் கருவிழிகள் மட்டும் அசையாவிட்டால் அந்த முகத்தைப் பூ என்றுதான் நினைத்திருப்பான்.

இது என்ன பெண்ணா, பூவா? விழிகளை ஒருமுறை மூடித் திறந்தான் யுவராஜன். பெண்தான். அந்தப் பெண் கை நிறைய ரோஜா மலர்களோடு எழுந்து அவனை நோக்கி வந்தாள். ரோஜா நிறத்தில் கற்கள் பதித்த சூரிதார். துப்பட்டா காற்றிலாட ரோஜா வனமே தன்னை நோக்கி நடந்து வருவதைப் போல் உணர்ந்தான்.

கால்கள் அசைய மறுத்தன. இமைகள் மூட மறுத்தன. விழிகள் அவள் முகத்தில் நிலைத்து வேறெங்கும் அசையவில்லை. பேச்சு மூச்சின்றி உறைந்து விட்ட

சிலையாய் அவன் நின்றிருக்க, அவள் அவனை நெருங்கினாள்.

"யெஸ் ஸார்! வாட் யூ வாண்ட்?" - அவனுக்கு மட்டுமே கேட்கக்கூடிய மென்மையான குரல். இது என்ன குரலா? வீணையின் நாதமா?

"எக்ஸ்கியூஸ்மீ ஸார். வாட் யூ வாண்ட்?" - என்றவாறே அவனது முகத்திற்கு முன்னால் சொடுக்கினாள் குறிஞ்சி. திடுக்கிட்டுச் சுதாரித்தான் யுவராஜன். பார்வையை விலக்க முடியாமல் தடுமாறிக் கொண்டிருந்தவனை அதே மென்குரலில் அழைத்தாள்.

"ஸார்! என்ன வேணும் உங்களுக்கு?"

"நா... நான்... எம் பேர் யுவராஜன்."

"ஓ.கே.!"

"இந்த பொக்கே ஷாப்?"

"என்னோடதுதான். என்ன ஸார் வேணும்?"

"வந்து... என் பிரதரோட மேரேஜ்க்கு நீங்க ப்ளவர் டெக்கரேஷன் பண்ணனும். அதுவிஷயமாப் பேசிட்டுப் போலாம்னு..."

"மேரேஜ் என்னிக்கு?"

"நாளை மறுநாள். நீங்க நாளைக்கே வீட்டுக்கு வந்திடணும்னு..."

"ஸாரி ஸார். அன்னிக்கு வேறொரு அப்பாயின்ட் மெண்ட் இருக்கு. ஸாரி!"

"என்னங்க இப்படிச் சொல்றீங்க?"



"ஸாரி ஸார். ரெண்டு நாள்ல கல்யாணத்தை வெச்சிக்கிட்டு இப்ப வந்து சொன்னா எப்படி? ஜஸ்ட் ஒரு டென் டேஸ்க்கு முன்னாலயாவது வந்து சொல்ல வேண்டாமா? இப்ப முடியாது ஸார்..."

"இல்ல... என் அண்ணன் ஏற்கெனவே சொல்லி அட்வான்ஸ் கூட கொடுத்திருக்கார். பேலன்ஸ் கொண்டு வந்திருக்கேன்."

"அட்வான்ஸ் தந்திருக்காரா? யார் ஸார் உங்க அண்ணன்?" - கையிலிருந்த ரோஜா கொத்தை டேபிள் மீது வைத்து சற்றுப் பெரிதாய் இருந்த லெட்ஜரைப் புரட்டினாள்.

"அண்ணன் பேரு கார்த்திக். அண்ணி பேரு சுஜாதா. அண்ணிகூட உங்க பிரெண்டாமே!" - யுவராஜன் சொல்ல, சட்டென நிமிர்ந்தாள் குறிஞ்சி.

"என்ன?"

"ம்... அண்ணி மூலமாத்தான் உங்ககிட்ட அண்ணன் வந்து பேசுனதாச் சொன்னார்."

"ஓ! சுஜாவோட மேரேஜ் பத்தித்தான் சொன்னீங்களா? அடடா! நான் யாரோன்னு நினைச்சேன். உட்காருங்க ஸார்." - அவசரமாய் நாற்காலியை எடுத்துப் போட்டாள்.

"பரவாயில்ல... இருக்கட்டும்."

"ஐயோ! உட்காருங்க ஸார். சுஜாவுக்குத் தெரிஞ்சா திட்டுவா! என்ன சாப்பிடுறீங்க?"

"அதெல்லாம் எதுவும் வேண்டாம். இந்தாங்க மேடம் மீதிப் பணம். ஏதோ டிஸைன் காட்டுவீங்கன்னு அண்ணன் சொல்லி அனுப்பினான்."

"ஒன் மினிட் ஸார்..." - என்றவள் பணத்திற்கான பில்லை அவனிடம் கொடுத்துவிட்டு பணத்தைப் பெற்றுக் கொண்டாள். டிராயரைத் திறந்து பணத்தைப் பத்திரப்படுத்தி விட்டு மேஜை மீதிருந்த கணினியைப் போர்த்தியிருந்த உறையை விலக்கினாள். மின் இணைப்பைக் கொடுத்து விட்டு, நிமிர்ந்தபோது வாசலில் மாருதி வேன் வந்து நின்று ஹாரன் எழுப்பியது.

"ஒன் மினிட் ஸார்..." - என்றவள் வாசலுக்குச் செல்ல, ரோஜா நிறத் தென்றல் அசைந்தாடுவதைப் போல் தோன்றியது. தன்னைக் கடந்து அவள் செல்கையில் லேசாய் உரசிவிட்டுப் போன துப்பட்டா மயிலிறகாய்த் தோன்றியது.

"ஏன் அண்ணா இவ்வளவு லேட்?" - என்றவாறே கடையின் ஓரமாய் இருந்த இன்னொரு கதவைத் திறந்தாள் குறிஞ்சி. காரை விட்டு இறங்கிய மாதவன் அலுத்துக் கொண்டான்.

"அதையேம்மா கேட்குற? இது கல்யாண சீசனாச்சே. பூ மார்க்கெட்ல கூட்டம்னா கூட்டம் அப்படி ஒரு கூட்டம். நீ கேட்ட பால் செண்டுப் பூவுக்காக பத்து கடை ஏறி இறங்கிட்டேன். கிடைக்கவே இல்ல..."

"சரிண்ணா. கஸ்டமர் வெயிட் பண்றாங்க. நீ பூவையெல்லாம் இறக்கிட்டு காரை ஷெட்ல போய் விட்டுடு. ரோட்ல நின்னா இடைஞ்சலா இருக்கும்."

"சரி... நீ கஸ்டமரைக் கவனி. நான் இதைப் பார்த்துக்கிறேன்." - என்றதும் மீண்டும் அதே வேகத்தோடு உள்ளே வந்தாள். தன் இருக்கையில் அமர்ந்தவாறே புன்னகைத்தாள்.



"ஸாரி ஸார்... கொஞ்சம் லேட்டாயிடுச்சு."

"இட்ஸ் ஓ.கே. இது உங்க அண்ணனா?"

"ஆமா ஸார்...!"

"நீங்க ரெண்டு பேருமே இந்தப் பிஸினெஸ்தான் பண்றீங்களா?"

"யெஸ் ஸார். நான் பொக்கே, ப்ளவர் டெக்கரேட் எல்லாம் பண்ணுவேன். அண்ணன் மலர் வளையம், மாலை, மலர்க் கிரீடம் எல்லாம் செய்வான்."

"வாவ்! இதையெல்லாம் எங்கே கத்துக்கிட்டீங்க?"

"எங்க அப்பாகிட்ட இருந்துதான். நாங்க சின்ன வயசா இருக்கும்போதே அப்பா இந்தக் கடையை நடத்துறாங்க. அப்ப இருந்தே பார்த்துப் பழகினது. இப்போ அப்பா போனபிறகு எங்களுக்குப் படியளக்குது."

"ஓ! ஸாரி!"

"அப்பா அவங்க காலத்துக்கு ஏத்த மாதிரி பண்ணினதை நாங்க கொஞ்சம் மாடர்னா பண்றோம். செய்யுற தொழில்ல ஒரு நேர்த்தியும் நேர்மையும் இருக்கிறதால எப்பவும் பிஸியாவே இருப்போம். ஸார்! நான் இப்போ சில ஸ்டில்ஸ் காட்டுறேன். பாருங்க. உங்களுக்கு எது பிடிச்சிருக்குன்னு சொன்னா அதே டிஸைன்ஸ்ல டெக்கரேட் பண்ணிக் கொடுத்திடுவேன்." - என்றவாறே அவள் கணினியை லேசாய் அவன் புறம் திருப்பி வைத்து பட்டன்களைத் தட்ட, திரை முழுவதும் வண்ண வண்ண மலர்களால் அலங்கரிக்கப்பட்ட சில படங்கள் ஒளிர்ந்தன.

பத்திற்கும் மேற்பட்ட படங்களை அவள் காட்ட குழம்பிப் போனான் யுவராஜன். ஒவ்வொன்றும் ஒவ்வொரு

அழகு. எதைத் தேர்ந்தெடுப்பது எதை ஒதுக்குவது எனப் புரியாமல் தவித்தான்.

"எது ஸார் பிடிச்சிருக்கு?"

"எல்லாமே பிடிச்சிருக்கு. எதையும் ரிஜெக்ட் பண்ண முடியல்ல."

"இதைப் பாருங்க ஸார்." - என்றவாறு ஒரு பட்டனைத் தட்டினாள். திரையில் தெரிந்த படத்தைப் பார்த்து விழிகளை விரித்தான் யுவராஜன். ஆரஞ்சு நிற டெய்சி மலர்களால் அலங்கரிக்கப்பட்ட சுவரில் இடையில்டயே நீல நிற ரோஜாக்கள் பசும்புற்களின் பின்னணியில் தெரிந்தன.

"வாவ்! சிம்ப்ளி சூப்பர்ப். ஓ.கே.! நீல நிற ரோஜா நம்ம ஊர்ல இருக்குதா என்ன?" - திரையை விட்டுப் பார்வையை விலக்காமலே பிரமிப்புடன் அவன் கேட்க, புன்னகைத்தாள் குறிஞ்சி.

"இல்ல ஸார். நீல நிற ரோஜா எங்கேயுமே கிடையாது."

"பின்னே இது எப்படி?"

"ஒயிட் ரோஸ்தான். ப்ளூ ரோஸா மாறியிருக்கு."

"வாட்? எப்படி?"

"இப்படி..." - சுவரோரமாய் இருந்த நீளமான சிமெண்ட் தளத்தைக் காட்டினாள். அதில் மண் குடுவையில் சாயக் கரைசல்.

"இது என்ன? கலர்ல ஊற வெப்பீங்களா?"

"ஆமா ஸார். ஒரு சில கல்யாணப் பொண்ணுக்கு ட்ரெஸுக்கு மேட்ச்சா பூ கேட்பாங்க. அந்தக் கலர்ல பூக்கள் இல்லன்னா ஒயிட் பூக்களை தேவையான கலர்ல ஊற வெச்சு உலர வெச்சு யூஸ் பண்ணிப்போம்."

"சூப்பர் ஐடியா. எப்படிங்க இதெல்லாம்?"

"செய்யுற தொழில்ல ஏதாவது புதுமையை ஏற்படுத்தலாம்னு யோசிச்சா இப்படிப் பல ஐடியா வரும் ஸார்!"

"உங்ககிட்ட நிறைய கத்துக்கணும் போலிருக்கு. சரி! இந்த டிஸைன் செய்ய எவ்வளவு ரேட்?"

"இதுதான் பிடிச்சிருக்கா?"

"ம்... சூப்பரா இருக்கு. வித்தியாசமாகவும் இருக்கு. இதையே செய்திடுங்களேன்." - யுவராஜன் ரஸனையாய்ச் சொல்ல, சற்றுத் தயங்கினாள் குறிஞ்சி.

"என்னாச்சுங்க?"

"இல்ல... இந்த டெக்கரேஷன் செய்ய எப்படியும் நாலு நாள் தேவைப்படும். மொத்தமா ஒயிட் ரோஸ் கிடைக்கணும். அதைத் தனித் தனியா ஊற வெச்சு மறுநாள்தான் உலர வைக்கணும். நல்லா உலர்ந்த பிறகுதான் டெக்கரேட் பண்ண முடியும்."

"ஓ! அப்போ முடியாதா?"

"இந்தக் கல்யாணத்திற்கு முடியாது. உங்க வீட்ல நெக்ஸ்ட் மேரேஜ் வந்தா முதல்லயே சொல்லிடுங்க. நான் கண்டிப்பாச் செய்து தந்திடுறேன்." - என்றதும் புன்னகைத்தான்.

"நீங்க திறமைசாலி மட்டுமில்லை. சாமர்த்தியசாலியும் தான்."

"ஸார்?"

"பின்னே? அடுத்த கல்யாணத்துக்கும் உங்களையே புக் பண்ண வெச்சிடுவீங்க போலிருக்கே!"

"ஸாரி ஸார்! தப்பா எடுத்துக்காதீங்க. நான்..."

"சும்மா விளையாட்டுக்குச் சொன்னேன். ஓ.கே. இப்போ இந்த ப்ளு ரோஸ் இல்லாம வேற ஏதாவது ஒரு கலர் வெச்சு இதே டிஸைன் பண்ணலாமா?"

"ஷ்யூர் ஸார். இந்த ஆரஞ்சு டெய்சிக்குப் பதிலா ஒயிட் டெய்சி அல்லது லில்லிப்பூ வெச்சிட்டு நடுவே டார்க் ரெட் ரோஜா வெச்சா ரொம்ப எடுப்பா அழகாவும் இருக்கும். அப்படிச் செய்திடலாமா?"

"குட். அப்படியே பண்ணிடுங்க. இந்த டிஸைனுக்குக் கூடுதலா பணமாகுமா? நான் எவ்வளவு தரணும்?"

"நோ ஸார். ஃபுல் அமௌண்ட் தந்திட்டீங்க. இது போதும். மேரேஜ் வீட்லயா? மண்டபத்திலயா?"

"மண்டபத்திலதான். பட்... வீட்லயும் கொஞ்சம் அலங்கரிச்சா நல்லாயிருக்கும். செய்ய முடியுமா?"

"கண்டிப்பா ஸார். வீட்டு அட்ரஸ் கொடுத்திட்டுப் போங்க. நான் வந்திடுறேன்."

"உங்களுக்கேன் வீண் சிரமம். நான் காரை அனுப்புறேனே!"

"நோ ஸார். என்கிட்ட ஸ்கூட்டி இருக்கு. அதிலயே வந்திடுவேன். நோ ப்ராப்ளம். நீங்க அட்ரஸ் மட்டும் சொல்லுங்க."



"ஜஸ்ட் ஒன் மினிட்." - என்றவன் வெளியேறி காரை அடைந்து பின்இருக்கையில் இருந்த அழைப்பிதழில் ஒன்றை எடுத்துக் கொண்டு வந்தான்.

"இந்த இன்விடேஷன்ல எங்க வீட்டு அட்ரஸ், போன் நம்பர் எல்லாம் இருக்கு. அட்ரஸ் கண்டுபிடிக்கச் சிரமமா இருந்தா போன் பண்ணிக் கேட்டுட்டு வாங்க."

"தேங்க்யூ ஸார்!"

"ஓ.கே. மேடம். அப்ப நான் கிளம்பட்டுமா?"

"ஓ.கே. ஸார்." - அவள் சுலபமாய் விடைகொடுத்து விட, யுவராஜனால் சட்டென வெளியேற முடியவில்லை. கால்களும் மனமும் நின்ற இடத்திலேயே நின்றன.

"என்ன ஸார்? வேற எதுவும் வேணுமா?"

"வேற...?" - யோசனையாய் கடையை ஒருமுறை பார்த்துக் கொண்டிருந்த நேரம், வாசலில் இரண்டு இளம் பெண்கள் வந்து நின்றனர்.

"குறிஞ்சி! பொக்கே ரெடியா?"

"ஹாய்! வாங்க. பொக்கே ரெடியா இருக்கு. கம்."

"ஆல்ரெடி லேட் நாங்க. க்விக்கா எடுத்திட்டு வாயேன், ப்ளீஸ்."

"இதோ வர்றேன். ஸார்... ஒன் மினிட்."

"யா! ஷ்யூர். நீங்க போங்க." - என்றவாறே எழுந்தவனின் கண்ணில் இரத்த சிவப்பு நிற ரோஜாக்கள் பட்டது. சட்டென கார்த்திக்கின் நினைவு வர லேசாய் நெற்றியில் தட்டினான்.

'சே! எப்படி மறந்தேன்? திரும்பத் திரும்பச் சொன்னானே!' - என நினைத்தவாறே அந்தப் பூக்களின் அருகே நெருங்க, கொத்தாய் இருந்த ரோஜாச் செண்டை எடுத்து கவரில் சுற்றி அந்தப் பெண்களிடம் கொடுத்துவிட்டுப் புன்னகையோடு வழியனுப்பி வைத்தாள் குறிஞ்சி.

ஏமாற்றமாய் நின்றவனைத் திரும்பிப் பார்த்தாள் குறிஞ்சி. "ஸார்! வேற எதுவும் வேணுமா?"

"யா! ரெட் ரோஸ் பொக்கே வேணும். இருக்கா?"

"இப்பவே வேணுமா?"

"நாளைக்கு ஈவ்னிங் கிடைச்சாப் போதும். மணப் பெண் கையில கொடுக்க வேண்டும்."

"ஓ! வெரி நைஸ். சுஜாவுக்கு ரெட் ரோஸ்ன்னா ரொம்பப் பிடிக்கும்."

"இதெல்லாம் என் அண்ணன் ஏற்பாடு."

"சுஜா சொன்னாள். ஓ.கே. ஸார். நாளைக்கு ஈவ்னிங் ரெடி பண்ணித் தந்திடுறேன்."

"நீங்க டெக்கரேட் பண்ணிட்டு இருப்பீங்களே... பிறகெப்படி?"

"ஸார்... என் அண்ணன் மட்டுமில்ல, இந்தக் கடையில இன்னும் ரெண்டு பெண்ணுங்களும் வொர்க் பண்றாங்க. அவங்களும் ரொம்ப அழகா பொக்கே செய்வாங்க."

"அப்பச் சரி. ஓ.கே. நான் கிளம்புறேன்."

"ஓ.கே. ஸார்."



"உங்களைப் பார்த்ததில ரொம்பச் சந்தோஷம்."

"தேங்க்யூ ஸார்."

"அப்புறம்... இந்த ரோஸ் எல்லாம் யாராவது ஆர்டர் பண்ணியிருக்காங்களா?" - சற்று முன் அவள் கையில் வைத்திருந்த இளம் ரோஜா நிற மொட்டுக்களைக் காட்டிக் கேட்டான்.

"நோ ஸார். இது எல்லாமே ரோஸ் கார்டன்ல இருந்து இப்பத்தான் பறிச்சிட்டு வந்தேன்."

"விற்பதற்குத்தானே?"

"யா... ஸார்!"

"இதை மொத்தமா எனக்குக் கொடுத்திடுங்களேன்."

"ஷ்யூர். மொத்தம் நூற்றி ஐம்பது ரோஸ் இருக்கு."

"பரவாயில்ல, தந்திடுங்க. நான் பே பண்ணிடுறேன்."

"பொக்கே செய்யவா? இல்ல அப்படியே தந்திடவா?"

"பொக்கேயா செய்து கொடுத்திடுங்க."

"ஒரு டென் மினிட்ஸ் வெயிட் பண்ணுங்க ஸார்." - என்றவள் ரோஜாக்களை முள் இல்லாமல் கத்தரித்து மேஜை மீது கவரை விரித்து நேர்த்தியாய் அடுக்கி, இடையே அலங்கார இலைகளைச் செருகி, பன்னீர்த் துளிபோல் எதையோ ஸ்பிரே செய்து கவரைச் சுற்றி பேக் செய்ய, அழகான பொக்கே ரெடியானது.

மெலிதாய் இருக்கும் இந்த விரல்களில் எத்தனை சுறுசுறுப்பு, லாவகம். பொக்கேயின் கைப்பிடியில் வாழ்த்து அட்டையைப் பின் பண்ணினாள்.

"ஸார், ரெடி. நீங்க யாருக்குக் கொடுக்கப் போறீங்களோ அவங்க பேரை இதுல பில்-அப் பண்ணிடுங்க."

"தேங்க்யூ..." - ஆவலாய் அதை வாங்கிக் கொண்ட போது லேசாய் உரசிக் கொண்ட விரல்களில் மின்சாரம் பாய்ந்தது. பூச்செண்டை மார்போடு அணைத்துக் கொண்டே, பர்ஸை எடுத்துப் பணத்தை நீட்டினான். மீதிப் பணத்தைப் பெற்றுக்கொண்டு, திருப்தியான புன்னகையோடு தலையசைத்து விடைபெற்றான் யுவராஜன்.

அந்தப் பெண்ணையே தன்னோடு அணைத்துக் கொண்டிருப்பது போல் ஒரு பரவசம் எழுந்தது. பூங்கொத்தை லேசாய் வருடினான். இதமான புன்னகையோடு காரை அடைந்து நின்று திரும்பி கடையைப் பார்த்தான்.

'குறிஞ்சி பொக்கே ஷாப்.' 'அந்தப் பெண்கள் கூட இதே பெயரில்தானே சொல்லி அழைத்தார்கள்! குறிஞ்சி! அபூர்வமான மலர். அபூர்வமான பெயர். ம்... நன்றாகத் தான் இருக்கிறது. பூவும் இவளும் ஒரே இனமோ? பார்த்தால் அப்படித்தான் தெரிகிறது.

ம்... பார்க்கலாம். நாளைக் காலையில் வீட்டுக்கு வருவாளே.' அந்த நினைப்பே இனிக்க, உற்சாகமாய்க் காரில் ஏறிப் புறப்பட்டான். மனம் காற்றில் பறப்பதைப் போல் உணர்ந்தான்.

மறுநாள்தான் பார்க்க முடியும் என்ற எண்ணத்தில் தன் வேலையில் மூழ்கியவன் அன்று மாலையே குறிஞ்சியை நேரில் கண்டதும் திக்குமுக்காடிப் போனான். காலையில்



ரோஜா மலர்களின் நடுவே தானும் ஒரு ரோஜாவாய் நின்றவள், மாலையில் ஆர்குட் மலர்ச் சோலையில் புதுவிதமான ஆர்குட் மலராய் மலர்ந்து நின்றாள்.

அக்கம் பக்கத்தவர்களுக்குத் திருமண அழைப்பிதழை நேரில் கொடுக்கலாம் என்று தங்களது பண்ணையின் அருகில் வசிப்பவர்களது வீட்டிற்குச் சென்ற போதுதான் மீண்டும் அந்த இனிய சந்திப்பு நிகழ்ந்தது.

அன்று மாலையில் பனிமூட்டமும் லேசான தூறலும் தொடங்கிவிட, காரைப் பண்ணை வீட்டில் நிறுத்திவிட்டு ஜெர்கின் கோட்டோடு சற்றுக் குறுகலான வழியில் ஏறி சக நண்பன் அரவிந்த் வீட்டை நோக்கிச் சென்று கொண்டிருந்த போது ஆர்க்கிட் மலர் வனம் கண்ணில் பட்டது.

எப்போதும் போல் நின்று சில நொடிகள் ரசனையாய் நோக்கிவிட்டு நகர நினைக்கையில் அந்த முகம் கண்ணில் நுழைந்தது. காலையில் பார்த்த அதே முகம். பனித்துளி படர்ந்த ரோஜா போல் முகத்தில் மழைத் துளிகள் விழுந்து இன்னும் அழகாக்கிக் காட்டியது.

அவளைக் கண்டதும் உற்சாகமாய் குரல் கொடுத்தான் யுவராஜன்.

"ஹலோ! நீங்க எங்கே இங்கே?" - பூங்கொடி களுக்கிடையே மாட்டிக்கொண்ட புள்ளிமானாய் திணறிக் கொண்டிருந்த குறிஞ்சி, திடீரெனக் குரல் கேட்டதும் மருண்டு திரும்பினாள்.

உயரமாய் தலையை மறைத்துக் கொண்ட மழைக் கோட்டோடு நின்றவனைக் கண்டதும் இன்னும் மிரண்டு

அருகே நின்ற பெரிய மரத்தின் பின்னே பதுங்கிக் கொண்டாள். யுவராஜன் புன்னகைத்தான். தலையிலிருந்த கோட்டை அகற்றினான்.

"என்னங்க! என்னை அடையாளம் தெரியலையா? மார்னிங் கூடப் பார்த்தோமே. உங்களோட ப்ளவர் ஷாப்பிற்கு வந்தேனே... என் பிரதரோட மேரேஜ் டெக்கரேஷனுக்கு..." - யுவராஜன் விவரிக்க, மறைந்திருந்த குறிஞ்சி சற்றுப் பதட்டமாக நகர்ந்து வந்தாள்.

மழையின் ஈரத்தால் பிசுபிசுத்த தரையில் மெதுவாய்க் காலூன்றி மெல்ல நடந்து யுவராஜனை நோக்கி வந்தாள். தோட்டத்தின் முள் வேலி ஆறடிக்கும் உயரமாய் இருவருக்கும் இடையே நின்றது. முள் வேலியைப் பற்றிக் கொண்டு ஏராளமான செடிகொடிகள் படர்ந்து கிடந்தன.

வேலியை நெருங்கி கைக்கெட்டிய கொடிகளை அவசரமாய் விலக்கினாள். சற்று இடைவெளி கிடைத்ததும் அதன் வழியே வெளியே சரிவுப் பாதையில் நின்றவனை ஏறிட்டாள். குரலில் பதட்டமும் கண்களில் கலவரமும் தெரிந்தது.

"ஸார்... நீ... நீங்க... சுஜாவோட மச்சினன் தானே?"

"யூ ஆர் கரெக்ட். பரவாயில்லயே... என்னை மாதிரியே நீங்களும் நல்லா நினைவு வெச்சிருக்கீங்களே!"

"ஸ... ஸார்."

"என்னங்க? இப்படிக் கொட்டுற மழையில பூப்பறிச்சிட்டு இருக்கீங்க? அயராத உழைப்பு தேவைதான். அதுக்காக இப்படியா?"



"ஸார்! என்னைக் கொஞ்சம் பேச விடுங்களேன்... ப்ளீஸ்!" - அவளது குரலும் முகமும் கலவரமாய் இருப்பதை அப்போதுதான் உணர்ந்தவனின் முகம் மாறியது.

"என்னங்க? என்னாச்சு?"

"ஸார்! நான்... நான் இங்கே தனியா மாட்டிக்கிட்டேன். ப்ளீஸ் ஸார். நீங்கதான் ஹெல்ப் பண்ணனும். மழை வேற அதிகமாகிட்டே இருக்கு. எனக்குப் பயம்மா இருக்கு. ப்ளீஸ் ஹெல்ப் மீ ஸார்!" - குறிஞ்சி கெஞ்சுதலாய்க் கேட்டுக் கொண்டிருந்தபோதே இடியுடன் மழை வலுக்கத் தொடங்கியது.

# 3

வானவில் போல வந்து
வந்து போவதல்ல நேசம்
வானத்தைப் போல நிலைத்து
நிற்பதுதான் நேசம்!

"என்ன சொல்றீங்க குறிஞ்சி?" - உள்ளம் பதறக் கேட்டான் யுவராஜன்.

"ஆமா ஸார்! வழக்கமாப் பூப்பறிக்க வர்ற கார்டன்தான். இன்னிக்கு நான் உள்ளே நிற்கிறதைக் கவனிக்காம தோட்டக்காரர் கேட்டைப் பூட்டிட்டுப் போயிட்டார்."

"அச்சோ! ஜஸ்ட் ஒன் மினிட்." - என்றவன் தனது செல்போனை எடுத்து மழை நீர் படாமல் கவனமாய் தோட்டத்தின் உரிமையாளர் எண்ணைத் தொடர்பு கொள்ள, எதிர்முனை மௌனம் காத்தது.

"என்ன ஸார் பண்ணுறீங்க?"

"இந்தக் கார்டன் ஓனருக்கு போன் பண்ணி வரச் சொல்றேன்."

"அவர் போன வாரமே மும்பை போனவரு இன்னும் வரல ஸார். தோட்டக்காரன் மட்டும்தான் இருந்தான்."

"யாரு? பழனியா?"

"ம்..."

"அவன் தோட்டத்திலதானே ஸ்டே பண்ணுவான்?"

"நானும் அந்தத் தைரியத்திலதான் உள்ளே இவ்வளவு தூரம் வந்தேன். திடீர்னு பார்த்தா கேட்டைப் பூட்டிட்டு வெளியே போறார். நான் எவ்வளவோ கூப்பிட்டுப் பார்த்தேன். திரும்பிக்கூடப் பார்க்கல்ல."

"ஏங்க! அவனுக்குக் காது சரியாக் கேட்காதுங்க."

"என்ன?"

"நாம வாயசைக்கிறத வெச்சுக் கிளீயராப் புரிஞ்சுப்பான். பட்...!"

"ஏங்க! இப்ப எப்படி நான் வெளியே வர்றது? பயமாச்சே, அண்ணன் வேற தேடிட்டே இருக்கும்."

"பயப்படாததீங்க. அவன் ஏதேனும் கடைத் தெருவுக்குப் போயிருக்கலாம். நீங்க மழையில நனையாதீங்க. இந்தப் பக்கமாப் போனா பழனியோட குடில் இருக்கும். அங்கே போய் இருங்க. நான் போயி பழனிய அழைச்சிட்டு வர்றேன்."

"ஐயோ!" - பலமாய் அதிர்ந்தாள் குறிஞ்சி.



"ஏங்க! என்னாச்சு?"

"ஸார்! ரொம்ப இருட்டிப் போச்சே. எங்கிட்ட டார்ச் கூட இல்ல. மழையும் நிக்கல. எனக்கு ரொம்பப் பயமா இருக்கு. இந்த இருட்டுல என்னைத் தனியா விட்டுட்டுப் போயிடாதீங்க ஸார்! ப்ளீஸ்..." - முள் வேலியின் இடைவெளியில் கையை நுழைத்து யுவராஜனின் கரத்தை இறுகப் பற்றிக் கொண்டாள்.

அந்தப் பற்றுதலில் அவளது நடுக்கம் புரிந்தது. பயம் பதட்டம் தொனித்தது. குளிரால் ஏற்பட்ட நடுக்கத்தோடு சேர்ந்து வெடவெடவென்று நடுங்கினாள். சுற்றுப்புறம் முழுக்க இருள் கவிழ்ந்திருக்க, மழைத் துளிகளின் ஓசையைத் தவிர வெகு அமைதி.

இந்த இருளில் தனிமையில் இவளை விட்டுச் செல்வது சரியல்ல என்று தோன்றிட, என்ன செய்வது என்று சுற்றிலும் பார்வையை வீசினான். மேலே தூரம் தூரமாய் தனித்தனியே வீடுகள் லேசான வெளிச்சப் புள்ளிகளோடு தெரிந்தன.

அவ்வளவு தூரம் ஏறிப்போய் யாரிடமும் உதவி கேட்டாலும் இந்தக் குளிரில் மழையில் யாரும் வெளிவரப் போவதில்லை. அலைச்சலும் நேரமும்தான் வீணாகும். இதிலிருந்து மூன்றாவது வீடுதான் அரவிந்தன் வீடு. என்றாலும் மாலை நேரம் - அதுவும் மழைபொழியும் மாலை நேரங்களில் அவன் தனியாய் இருக்க மாட்டான்.

குட்டி புட்டி ஏதோ ஒன்றோ அல்லது இரண்டுமே அவனுடன் இருக்கும். ஸோ! அவனை உதவிக்கு எதிர்பார்க்க முடியாது. வேறு வழியில்லை. கேட்டை ஏறிக்

குதித்துவிட வேண்டியதுதான். மனதில் எழுந்த முடிவுடன் பற்றியிருந்த அவளது கரத்தை மெல்ல விலக்கினான்.

"குறிஞ்சி! நீங்க முன்பக்கக் கேட்டுக்கு வந்திடுங்க. நான் இந்தப் பக்கமா வர்றேன். கேட்டைத் தாண்டிக் குதிச்சிடலாம்... சரியா?"

"ஸார்...!"

"ஆபத்துக்குப் பாவமில்லங்க. பூட்டை உடைச்சாத் தப்பாயிடும். பேசாமத் தாண்டிக் குதிச்சிட்டா என் கார்லயே வீட்ல போய் விட்டுடுறேன்."

"ஸார்... ஆனா... கேட் பக்கத்திலப் போக ஒரு கிலோ மீட்டர் தூரம் நடக்கணுமே. வெளிச்சமோ பாதையோ தெரியலையே!"

"குத்து மதிப்பா நடந்து போங்க."

"ஐயோ! செடியில் மிதிச்சிட்டா வீணாகிடாதா? அவ்வளவும் காஸ்ட்லி ப்ளவர்ஸ் கொடி."

"ஏங்க! இப்ப நீங்க வெளியே வரணுமா? இல்ல செடி கொடி முக்கியமா?"

"கோவிச்சுக்காதீங்க ஸார். ரொம்பக் கஷ்டப்பட்டு இந்தக் கொடிய வளர்த்திருப்பாங்க. எல்லாமே பூவும் மொட்டுமா இருக்கு. கால்ல மிதிபட்டு சிதைஞ்சிடக் கூடாதில்ல."

"அப்ப ஒண்ணு பண்ணுங்க. நீங்க இங்கேயே வெயிட் பண்ணுங்க. கீழே என் கார் நிக்குது. அதுல டார்ச் இருக்கு. எடுத்திட்டு வந்திடுறேன். "

"ஸார்! தனியா நிற்கப் பயமா இருக்கே!"



"மிஸ் குறிஞ்சி. இப்படியே நின்னு பேசிட்டு இருந்தா ரெண்டு பேருக்கும் குளிர்ல பிட்ஸ் வந்திடும். ஒன்று நீங்களே வெளியே வர ட்ரை பண்ணுங்க. இல்லை என்னையாவது ஹெல்ப் பண்ண விடுங்க. இப்படியே பயந்திட்டு இருந்தா எப்படி வெளியே வர்றது? உங்க வீட்ல தேடமாட்டாங்களா? இப்படியே மழையில நின்னா உடம்பு என்னாகும்? ஏன் பயப்படுறீங்க? பெண்ணாப் பொறந்தா எவ்வளவு தைரியமா இருக்கணும். இப்படிப் பயப்படுற நீங்க ஏன் இவ்வளவு தூரம் பூப்பறிக்க வர்றீங்க?

"உங்க அண்ணனையோ வேற யாரையோ அனுப்பலாமில்ல. மழை ஈரத்தில பூச்சி பாம்பு எதுவும் வெளியே வந்தா என்ன பண்ணுவீங்க? பழனி பூட்டிட்டுப் போனதும் உங்க அண்ணனுக்கு ஒரு போனாவது பண்ணி யிருக்கலாமில்ல?"

"போன் வொர்க் பண்ணல. மழையில நனைஞ் சிடுத்து."

"வெரிகுட். இப்ப என்ன பண்ணப் போறீங்க? நைட்டெல்லாம் கொட்டுற மழையில இப்படியே நின்னு கின்னஸ் சாதனை பண்ணப் போறீங்களா?" - கண்டிப்புடன் கூடிய சிறு கேலிப் பேச்சில் முகம் வாடிப் போனாள் குறிஞ்சி.

"என்ன ஸார்... இப்படியெல்லாம் கேட்கிறீங்க?"

"பின்னே? பயப்படறதுக்கும் ஒரு அளவு வேண்டாமா? நாலு எட்டு வெச்சா போய் டார்ச் எடுத்திட்டு வந்திடுவேன். அதுக்குக்கூட விடலன்னா எப்படி?"

"ஸாரி ஸார். எனக்கு... இருட்டுன்னா கொஞ்சம் பயம்."

"எது? இது கொஞ்சம் பயமா?"

"ம்..."

"சரிதான். சரி! உங்களுக்குக் கந்தசஷ்டி கவசம் தெரியுமா?"

"ஓ! முழுசும் மனப்பாடம் பண்ணி வெச்சிருக்கேன்."

"தட்ஸ் குட். இப்போ கண்ணை மூடிட்டு மூடின கண்ணுக்குள்ள முருகனை நிறுத்தி வெச்சிட்டு சஷ்டி கவசம் சொல்லிட்டு இருங்க. நான் ரெண்டே நிமிஷத்தில வந்திடுறேன்... சரியா!"

"ஸார்! வந்திடுவீங்கள்ல?"

"என்னங்க... இப்படிக் கேட்கிறீங்க?"

"இல்ல. நான் யாரோ எவரோ? இந்த மழையில இருட்டுல நாம ஏன் வருத்திக்கணும்னு கிளம்பிப் போயிடாதீங்க ஸார்!"

"அப்படி நினைக்கிறவனா இருந்தா இவ்வளவு நேரம் நின்னுட்டு இருப்பேனா? எனக்கு என்ன வேண்டுதலா இந்த மழையில நனையணும்னு..." - அவன் சொன்ன பிறகே குறிஞ்சி அவனை நன்றாய்ப் பார்த்தாள். இருளில் பார்வையைக் கூர்மையாக்கினாள்.

தன்னை அடையாளம் காட்டுவதற்காக விலக்கிய மழைக்கோட்டை மீண்டும் அவன் மூடாமல் விட்டிருக்க, சொட்டச் சொட்ட நனைந்து கொண்டிருந்தான். அவ்வப் போது பளீரிட்ட மின்னல் ஒளியில் இருவரும் ஒருவரை யொருவர் பார்த்துக் கொண்டனர். இருள் கண்களுக்குப் பழகியிருந்ததால் அவனது நிழலுருவம் தெளிவாய்த் தெரிந்ததும் மனம் கலங்கினாள்.



தனக்காக யாரோ ஒருவர் ஏன் சிரமப்பட வேண்டும். இந்த இருளில் தைரியமாய் உதவி செய்ய வேண்டும் என்று தோன்றியதே பெரிய விஷயம். இதில் மேலும் நேரத்தை வீணாக்க வேண்டாமே. கடவுள் போல் வந்திருக்கிறான். இவனும் வராவிட்டால் தன் நிலை?

அவசரமாய் அவனிடம் மன்னிப்புக் கோரினாள். "ஸாரி ஸார்! என்னால உங்களுக்கு ரொம்பச் சிரமம். ரொம்ப நனைஞ்சிட்டீங்களே... வெரி ஸாரி ஸார்."

"இதுல ஒரு சிரமமும் இல்ல. இந்த மழை என்னை ஒண்ணும் பண்ணாது. நீங்க நனையறதை நினைச்சாத்தான் கஷ்டமா இருக்கு. நீங்கதான் புரிஞ்சுக்காம நம்பிக்கை இல்லாமப் பேசுறீங்க."

"இல்ல ஸார். நான் நம்புறேன். நான் சஷ்டி கவசம் சொல்லிட்டு நிற்கிறேன். நீங்க சீக்கிரமா வந்திடுங்க ஸார்."

"வெரிகுட். இதோ இப்பவே வந்திடுறேன்."

"ஸார்... பார்த்துப் போங்க. வழுக்கிடப் போகுது. பாதையெல்லாம் சேறும் சகதியுமா இருக்கும்."

"நான் பார்த்துக்கிறேன். நீங்க பயப்படாம இருங்க. இப்ப வந்திடுவேன்." - பேசிக்கொண்டே அவன் விலகி நடக்க, இருட்டில் எதுவும் புலப்படவில்லை. அவனது குரல் தேய்ந்து மறைந்ததும் தனிமைப் பயம் மிரட்டியது.

மழைத்துளியின் சடசடவென்ற சத்தமும் பூதாகார மாய்ப் பயமுறுத்தியது. காற்றின் அசைவிற்கேற்ப மரங்கள் கொடிகள் அசைவது இன்னும் பயமுறுத்த கண்களை மூடிக் கொண்டாள் குறிஞ்சி. சற்று முன் அவன் சொல்லிவிட்டுப்

போனது நினைவு வர, கண்களுக்குள் முருகனின் திருவுருவைக் கொண்டு வந்து நிறுத்தினாள்.

பயம் சற்று மட்டுப்பட, தனிமையின் அமைதியை விரட்ட எண்ணி, லேசான முணுமுணுப்போடு சஷ்டி கவசத்தை உச்சரிக்கத் துவங்கி, அதிலேயே ஒன்றிப்போன சில நொடிகளில் முதுகிற்குப் பின்னே காலடி ஓசை கேட்டது. மழை ஈரத்தில் தரையில் நடக்கும் அவசரமான நடை.

சட்டெனக் கண்களைத் திறந்தாள். யார்? தோட்டக்காரனாய் இருக்குமோ? ஐயோ! டார்ச்சை எடுக்கப் போனவனை இன்னும் காணோமே! அந்நிய ஆடவன்தான். என்றாலும் அவன் அருகே இருந்தவரை தோன்றாத பயம் இப்போது மூச்சை அடைக்க வைத்தது.

பின்னால் திரும்பிப் பார்க்கவே அச்சமாக இருந்தது. அந்தப் பழனிகூட இளவயதுக்காரன்தான். இந்த இருளில் கொட்டும் மழையில் அவனிடம் தனியே மாட்டிக் கொண்டால்? நினைவே வயிற்றைக் கலக்கியது.

இப்போது காலடி ஓசை இன்னும் நெருங்கி வர, பயத்தில் உயிரே போயிற்று. இதயம் பலமடங்கு துடித்தது. முகத்திலறைந்த மழைத்துளியை நடுங்கும் கரத்தால் வழித்துவிட்டுப் பார்வையை முள்வேலியின் வெளியே வீசனாள்.

இருட்டில் எதுவும் புலப்படவில்லை. டார்ச் ஒளியோ காரின் ஹெட்லைட் வெளிச்சமோ தெரியவில்லை. பயத்தில் கண்ணீர் சுரக்க, தொண்டை அடைத்துக் கொண்டது. கைகால்கள் நடுங்க, துடிக்கும் இதயத்தோடு பார்வையைப் பின்னால் திருப்ப, டார்ச் வெளிச்சம் அவன் மீது பட்டது.



உடல் நடுங்க நின்றவளைக் கண்டதும் யுவராஜன் அவசரமாய்க் குரல் கொடுத்தான்.

"நான்தான் குறிஞ்சி! பயப்படாதீங்க." - அவன் குரல் கேட்டதும் போன உயிர் மீண்டாற்போல் ஆயாசமாய் பெருமூச்சோடு நிற்க இயலாமல் தரையில் சரிந்தவளை நாலே எட்டில் வந்து தாங்கிக் கொண்டான். டார்ச் நழுவி தரையில் விழுந்து பல கோணங்களில் ஒளியை வாரி யிறைத்தது.

"குறிஞ்சி! என்னாச்சு? எழுந்திருங்க... ப்ளீஸ். என்ன... பயந்திட்டீங்களா? நான்தான் குரல் கொடுத்தேனே!" - கன்னங்களைத் தட்டினான்.

"ஸ... ஸார்! நீங்க... எப்படி இந்தப் பக்கம்? நா... நான்... தோட்டக்காரன்னு நினைச்சிட்டேன்."

"எங்க வீட்ல இருந்து இந்தத் தோட்டத்துக் கேட் ரொம்பப் பக்கம். ஏன் இவ்வளவு தூரம் சுத்தி வரணும்னு ஸ்ட்ரெய்ட்டா வந்திட்டேன்." - என்றவாறே அவள் எழுந்து நிற்க உதவினான்.

சிரமமாய் எழுந்து நின்றவள் கையில் ஒட்டியிருந்த மண்ணை மழை நீரில் கழுவினாள். குளிர் அதிகமாக பற்கள் தந்தியடிக்க ஆரம்பித்தது. உடை முழுவதும் சேறும் சகதியுமாய் இருக்க, பெய்து கொண்டிருந்த மழை அதைச் சுத்தம் செய்தது. யுவராஜன் குனிந்து டார்ச்சை எடுத்தான்.

"குறிஞ்சி! போலாமா?"

"போ... போ... லா... ம்... ஸா... ர்."

"குறிஞ்சி! என்னாச்சு? ரொம்பக் குளிருதா?"

"ம்... ம்..."

"ஒன் மினிட்..." - என்றவன் தன் ஜெர்கினுள் கைவிட்டு கம்பளித் துண்டை எடுத்து அவளுக்குப் போர்த்தி விட்டான். அதற்கு மேலாகத் தனது ஜெர்க்கினைக் கழற்றி மாட்டி விட்டான்.

"கொஞ்சம் குளிர் குறையும். ஒரு பைவ் மினிட்ஸ்ல வீட்டுக்குப் போயிடலாம். சமாளிச்சுக்கங்க. போலாமா?"

"ஸார்! உங்களுக்கு... குளிருமே!"

"இந்தக் குளிர் என்னை ஒன்றும் செய்யாது. நான் டார்ச் அடிச்சிட்டே முன்னாடி நடக்கிறேன். என்னைப் பிடிச்சிக்கிட்டே என் பின்னால வாங்க." - அவன் சாதாரணமாகச் சொல்லிவிட்டு நடக்க ஆரம்பிக்க, லேசாய்த் தயங்கி நின்றாள்.

"வாங்க!" - நின்று திரும்பி அழைத்தான்.

"ஸார்! நான்... நான் வேணா முன்னாடி போகட்டுமா?" - அவள் எதற்காகத் தயங்குகிறாள் எனப் புரிந்து போக, புன்னகையோடு தோளைக் குலுக்கினான்.

"எனக்கு ஒண்ணும் அப்ஜெக்ஷன் இல்ல. ஆனா சேத்துல கால் மாட்டிக்கிட்டா என்னைப் பிடிச்சிட்டுத்தான் காலை எடுத்து வைக்க முடியும். அதோட நான் வரும்போது வழியில ரெண்டு பெரிய கருந்தேளைப் பார்த்தேன்."

"ஐயோ!" - கண்களை இறுக மூடிக்கொண்டு அவன் முதுகோடு ஒட்டிக் கொண்டாள். உடல் நடுங்கியது.

"இவ்வளவு பயம் இருக்கே... பிறகென்ன வீராப்பு? பேசாம என் தோளைப் பிடிச்சிக்கிட்டே வாங்க!" - என்றவாறே நடக்க ஆரம்பித்தான்.



"ஸ... ஸார். அதைக் கொன்னுட்டீங்களா?"

"எதை?"

"அதான்... அந்தக் கருந்தேளை!"

"அது நம்மை என்ன பண்ணுச்சு? பொழைச்சிட்டுப் போகட்டும்னு விட்டுட்டேன்."

"அச்சோ! அப்ப இங்கதானே இருக்கும்!" - தோளைப் பற்றியிருந்த கைகள் இறுக, யுவராஜின் புன்னகை அதிகமாகியது.

"ஆமா! இவன் போய் ஒரு அழகான பெண்ணைக் கூட்டிட்டு வருவான். அவ காலைப் பதம் பார்க்கலாம்னு அங்கேயே வெயிட் பண்ணிட்டு இருக்கும்."

"ஐயோ நான் வரல்ல. எனக்குப் பயம்மா இருக்கு." - அவனை இறுகப் பற்றிக்கொண்டே நின்று விட்டாள்.

"ஏங்க! அதுக்கு வேற வேலைவெட்டி இல்ல? அது எப்பவோ போயிருக்கும். வாங்க."

"ஸார்! அது ரொம்பப் பெரிசா இருந்ததா? கருகருன்னு இருந்ததா?"

"குறிஞ்சி! பேசுறதுக்கு எவ்வளவோ இருக்கு. இந்த விஷ ஜந்துவைப் பத்திப் பேசி ஏன் இன்னும் பயத்தை கூட்டிக்கிறீங்க? ஏற்கெனவே உடம்பு இப்படி நடுங்குது. இதுல இந்தப் பேச்சுத் தேவையா?"

"ஸாரி ஸார். அமைதியா நடந்தா இன்னும் பயமா இருக்குமே."

"நாம ஏன் அமைதியாப் போகணும்? ஏதாவது ஜாலியாப் பேசிட்டே நடக்கலாம்!"

"என்னது? ஜாலியாவா?"

"உடனே கோபப்படாதீங்க. ஜாலியான்னா... சும்மா கலகலப்பா!"

"ஸார்... இப்ப டயம் என்ன இருக்கும்?"

"எட்டு மணியாகப் போகுது."

"கடவுளே! அண்ணன் எங்கெல்லாம் தேடுதோ தெரியலையே!"

"ஏன்? இங்க வர்றேன்னு சொல்லிட்டு வரலையா?"

"ம்ஹூம்... நான் வரும்போது அண்ணன் கடையில இல்ல. சரி, வந்து சொல்லிக்கலாம்னு புறப்பட்டு வந்திட்டேன். இப்படி மாட்டிக்குவேன்னு நினைக்கலியே. போனும் ஒர்க் பண்ணல. அண்ணன் பதறிப் போயிருக்கும்."

"ஏன்? போன இடத்தில முன்னப்பின்ன ஆகும்னு நினைக்க மாட்டாங்களா?"

"அப்படியெல்லாம் ஆகாது. ஆறு மணிக்குள்ள நான் வீட்டுக்குப் போயிடுவேன். இதுவரை இப்படி ஆனது இல்லை. அண்ணன் பயந்திட்டு இருக்கும்."

"அண்ணன் மட்டும்தான் தேடுவாரா? அம்மா அப்பால்லாம் தேடமாட்டாங்களா?"

"அம்மா தேடமாட்டாங்க. ஏன்னா அவங்க இப்ப உயிரோட இல்ல. அப்பாவை நாங்கதான் தேடி அலையணும்."

"ஏன்?"



"எப்போ எங்கே குடிச்சிட்டு விழுந்து கிடப்பார்ன்னு அவருக்கும் தெரியாது. எங்களுக்கும் தெரியாது. ஸோ! தினமும் தேடித்தான் கண்டுபிடிக்கணும்."

"ஏங்க! காலையில அப்பா போன பிறகுன்னு சொன்னீங்களே!"

"ஓ! அதுவா? கடையை அப்படியே போட்டுட்டுப் போயிட்டாங்க. அதைத்தான் நானும் அண்ணனும் ரொம்பச் சிரமப்பட்டு நிமிர்த்திப் பழைய நிலைக்குக் கொண்டு வந்தோம்."

"அப்பா நிறையக் குடிப்பாரா?"

"எனி டைம் தண்ணியிலதான் மிதப்பாரு."

"பணம்?"

"நாங்கதான் கொடுப்போம்."

"ஏங்க... நீங்களே பணம் கொடுத்துக் கெடுக்கலாமா?"

"நாங்க கொடுக்கலேன்னா தெருவில போற வர்றவன்கிட்ட எல்லாம் கையேந்துவார் ஸார். பார்க்கவே கொடுமையான விஷயம். அதை சகிக்க முடியாமத்தான் கொடுப்போம். ஒரு காலத்துல ஓஹோன்னு வாழ்ந்தவர் என் அப்பா. இப்போ ஏதோ போதாத காலம்... இப்படி ஆகிட்டாங்க."

"எதனால இப்படிக் குடிபோதைக்கு அடிமை யானாங்க?"

"குடிகாரங்களுக்கு சாக்குபோக்குக்காப் பஞ்சம்? அம்மா செத்துப்போன துக்கம் தாளலன்னு சொல்வாங்க."

"உங்க அம்மா மேல அவ்வளவு பிரியம் போலிருக்கு. அதான்..."

"பிரியம் இருந்தாக் குடிக்கணுமா? இதெல்லாம் சும்மா ஸார். அப்படிப் பார்த்தா அன்பான கணவனை இழந்து எத்தனைப் பெண்கள் தவிக்கிறாங்க. அவங்கள்லாம் குடிக்கிறாங்களா?"

"அம்மாடியோவ்! நாடு தாங்காதும்மா. நாம வேற பேசுவோமே!"

"இன்னும் எவ்வளவு தூரம் ஸார் நடக்கணும்? கால் வலிக்குது."

"காய்ந்த தரைன்னா அஞ்சு நிமிட நடைதான். ஆனா இப்போ சகதியா மாறிப் போச்சே. ஒவ்வொரு ஸ்டெப்பும் பார்த்து நிதானமாத்தான் வெக்கணும். முக்கால் கிணறு தாண்டிட்டோம். இப்ப கேட் வந்திடும்."

"ஸார்! உங்க பேர் என்ன சொன்னீங்க?"

"இப்பவாவது கேட்கணும்னு தோணிச்சே. மிக்க நன்றி!"

"ஸாரி ஸார். டென்ஷன்ல இருந்ததால கேட்கணும்னு தோணல."

"இட்ஸ் ஓ.கே. எம் பேரு யுவராஜன்."

"நைஸ் நேம். வீட்ல எப்படிக் கூப்பிடுவாங்க?"

"யுவன்... யுவா... ராஜா இப்படி அவங்க அவங்க இஷ்டத்திற்குக் கூப்பிடுவாங்க. ஆமா! உங்க முழுப் பெயரே குறிஞ்சிதானா?"

"ம்ஹூம்... குறிஞ்சி மலர்."



"வாவ்... சூப்பர் நேம். இந்தப் பேரை உங்க அப்பாதானே வெச்சாங்க?"

"அட! எப்படி ஸார் கண்டுபிடிச்சீங்க?"

"பூக்களோடயே வாழ்ந்திருக்காரே. அதனாலதான் ரொம்ப ரசனையோட இந்தப் பேரை செலக்ட் பண்ணியிருக்காங்க. குறிஞ்சிப்பூ ஒரு அபூர்வமான பூ இல்லையா?"

"ம்... ரொம்பப் பிடிச்ச பூ அது."

"எனக்கும்தான்." - புன்னகையோடு அவன் சொல்ல, தன்னையும் மீறி புன்னகைத்தாள். இந்த நிமிடம் என்ன செய்து கொண்டிருக்கிறோம் என்பது அப்போதுதான் உறைத்தது.

காலையில் சில நிமிடங்களே பார்த்துப் பேசிய ஒருவனால் என்னிடம் எப்படி இவ்வளவு சகஜமாய் பேசமுடிகிறது. நானும்தான் எப்படி எந்த சங்கோஜமும் இல்லாமல் இவனது தோளைப் பற்றிக் கொண்டு இத்தனை உரிமையாய் நடந்து கொண்டிருக்கிறேன். இரவு, தனிமை, கொட்டும் மழை.

இந்த நிலையில் எந்த நம்பிக்கையில் எந்தத் துணிவில் இவனுடன் பேசிக் கொண்டிருக்கிறேன்? எந்த நம்பிக்கையில் இவனிடம் உதவி கேட்டேன். எனக்கு உதவி செய்வதற்காகவே இவனைக் கடவுள் அனுப்பினாரா? இவன் செய்வது உதவியாக இருக்கலாம். ஆனால் நான் செய்வது சரியா?

யாருமற்ற இடத்தில் அதுவும் இரவு நேரத்தில் ஒரு ஆடவனுடன் ஒட்டி உரசிக் கொண்டு நடக்கலாமா? பயத்தில்

பதட்டத்தில் விலகியிருந்த பெண்மையின் குணங்கள் ஒட்டிக் கொள்ள, அவனது தோளைப் பற்றியிருந்த கரங்களை மெல்ல விலக்கிக் கொண்டாள். அதற்குள் நுழைவாயில் வந்துவிட யுவராஜனின் நடையும் தடைப்பட்டது.

"ம்... வாசலுக்கு வந்திட்டோம். குறிஞ்சி... இப்ப உங்க திறமையைக் காட்ட வேண்டிய நேரம் வந்தாச்சு."

"எ... என்ன?"

"இந்த கேட் மேல ஏறி வெளியே ஜம்ப் பண்ணுங்க." அவன் கேலியாய்ச் சொல்ல, முகம் வெளிறிப் போனாள்.

"எ... என்ன? நானா?"

"ஆமா! உங்களையும் தூக்கிட்டு ஏறினா ரெண்டு பேருமே விழுந்துதான் கிடப்போம். முதல்ல நீங்க ஏறி வெளியே போங்க. நான் பின்னால வர்றேன்."

"ஐயோ! இவ்ளோ பெரிய கேட்ல எப்படி ஏறுறது. மேல வேற கத்தி மாதிரி செட் பண்ணியிருக்காங்களே! ஸார்! நீங்க எப்படி உள்ளே வந்தீங்க?"

"இதே வழியிலதான். வேற வழியில்லையே. ஏறுங்க. மழை கொஞ்சம் குறைஞ்சிருக்கு. சீக்கிரம் போயிடலாம்."

"ஸார்! நான்... நான் எப்படி?"

"நான் தூக்கி விடுறேன். அதோ அந்தக் கம்பியப் பிடிச்சிட்டு ஏறிடுங்க. நான் ஹெல்ப் பண்றேன்."

"வேண்டாம் வேண்டாம்." - உடலைக் குறுக்கிக் கொண்டு அவசரமாய் மறுத்தாள் குறிஞ்சி. சற்று அடங்கியிருந்த இதயம் மீண்டும் எகிறியது.



"அப்போ பூட்டை உடைச்சிடலாமா?"

"ஏதோ பிரச்சினை ஆகும்னு சொன்னீங்களே!"

"ஆமா! பழனி வந்து பார்த்தா ஏதோ திருடங்க வந்து பூட்டை உடைச்சிப் பூக்களைத் திருடிட்டுப் போயிட்டாங்கன்னு போலீஸுக்குப் போவான். போலீஸ் வரும். மோப்ப நாய்கூட வரும். நம்ம கால் தடங்களை ஸ்மெல் பண்ணி நேரே நம்மைத் தேடி வந்திடும். அப்புறம்..."

"ஐயோ! வேண்டாம். அப்படியெல்லாம் எதுவும் நடக்கக்கூடாது."

"அப்போ ஏறுங்க. கமான்." - என்றவனைத் தயக்கமாய் ஏறிட்டாள். உடலும் உள்ளமும் கூசித் தயங்கின தவிப்பாய் கைகளைப் பிசைந்து கொண்டிருந்தபோது கேட்டின் வெளிப்புறமாய் ஒரு டார்ச் ஒளியின் வட்டம் தெரிந்தது. மெல்ல மெல்ல அது அவர்களை நெருங்க உடல் சில்லிட்டுப் போக, யுவராஜனை இறுகப் பற்றிக் கொண்டாள் குறிஞ்சி.

## 4

நிழலாய்த் தொடர்ந்து வந்த
நான் உன்னைப் பிரிய மனமின்றி
மனதால் மரணிக்கின்றேன் - உன்
சுவாசம்பட மீண்டும் பிறக்கிறேன்!

**வி**டாமல் பெய்து கொண்டிருந்த மழையைப் பொருட்படுத்தாமல் தனது ஆம்னியில் ஒவ்வொரு இடமாகத் தேடிக் கொண்டிருந்தான் மாதவன். சென்ற இடம் எல்லாம் ஒரே பதில்தான் வந்தது.

"இன்னிக்கு இங்கே வரவேயில்லையே. நேற்றுதான் வந்திட்டுப் போனாங்க." - என்ற பதிலில் நொந்து போனான். மாலையில் தொடங்கிய மழை நிற்காமல் பெய்து கொண்டே இருக்க, மனம் கலவரமானது. மீண்டும் செல்போனில் முயற்சி செய்து பார்த்துவிட்டு ஏமாற்றமாய்ப் போனை வைத்தான்.

மீண்டும் உயிர்ப்பித்துக் கடை எண்ணுக்கு டயல் செய்ய, பணியிலிருந்த பெண், "இன்னும் வரல்ல ஸார்!" என்றாள்.

"போனாவது பண்ணினாளாம்மா?"

"இல்ல ஸார். இதுவரை போன் வரல்ல. ரெண்டு கஸ்டமர் வந்து வெயிட் பண்றாங்க."

"என்னவாம்?"

"இன்னிக்கு ஈவ்னிங் பொக்கே செய்து தர்றதா மேடம் சொன்னாங்களாம். ஆர்டர் பண்ணினவங்க வந்திருக்காங்க."

"எந்த மாடல் வேணும்னு கேட்டுச் செய்து கொடுத்தனுப்பும்மா. நான் இன்னும் ரெண்டு இடத்தில தேடிட்டு வர்றேன்."

"ஓ.கே. ஸார்." - போனை வைத்துவிட்டு மீண்டும் காரைக் கிளப்பினான். மனம் தவிக்க ஆரம்பித்தது. எங்கே சென்றாள் இந்தப் பெண்? சொல்லாமல் வெளியே எங்கும் செல்லமாட்டாளே, எங்கே சென்றாளோ? எப்படிக் கண்டுபிடிப்பேன்? யாரிடம் கேட்பேன்?

குறிஞ்சி! ஒரு போனாவது பண்ணேன்? இந்த அண்ணன் தவிப்பை உன்னால் உணர முடிகின்றதா?



சீக்கிரமாய் வந்துவிடேன். பொழுதும் போய்க்கொண்டே இருக்கிறது. எங்கேனும் தனியாய் மாட்டிக் கொண்டாயா? கடவுளே! நான் என்ன செய்யப் போகிறேன்?

அரற்றும் மனதோடு சாலையின் இருபுறமும் கவனமாய்ப் பார்த்துக் கொண்டே காரை வெகு நிதானமாய்ச் செலுத்தினான். மனம் மெல்ல மெல்ல தனது நம்பிக்கையை இழக்க ஆரம்பித்த நேரம், செல்போன் அழைத்தது. அவசரமாய் எடுத்துக் காதில் வைத்தான்.

"ஹலோ!"

"ஸார்! நான் காவேரி பேசுறேன் ஸார்."

"நீயா? என்னம்மா? குறிஞ்சி போன் பண்ணினாளா?"

"இல்ல ஸார்!"

"பிறகேன் போன் பண்ணினே? நான் எவ்வளவு டென்ஷன்ல சுத்திக்கிட்டு இருக்கேன். என்ன விஷயம்? சீக்கிரம் சொல்லு."

"ஸாரி ஸார்."

"இதுக்கா போன் பண்ணின?"

"இல்ல ஸார். வந்திருக்கிற கஸ்டமர் ரெண்டு பேருமே ஆர்க்கிட் பொக்கே கேட்கிறாங்க. அது நம்மகிட்ட ஸ்டாக் இல்ல."

"இல்லன்னு சொல்லி அனுப்ப வேண்டியதுதானே?"

"சொன்னேன் ஸார். ஆனா அவங்க இந்த பொக்கேக்காகத்தான் மேடத்துக்கிட்ட ஆர்டர் பண்ணினாங்களாம். ஃபுல் பேமெண்ட்டும் கொடுத்திட்டாங்களாம். எங்கிட்ட ரொம்பக் கோபப்படுறாங்க ஸார்."

"போனை அவன்கிட்ட கொடு."

"சரி ஸார். ஸார்! எங்க ஓனர் உங்ககிட்டப் பேசணுமாம்." - என்ற காவேரியின் குரலைத் தொடர்ந்து ஒரு ஆண் குரல் கேட்டது. எடுத்த எடுப்பிலேயே குரலில் கோபம் கொப்பளித்தது.

"ஹலோ மிஸ்டர்! என்ன கடை நடத்துறீங்க? நேற்றே ஆர்டர் கொடுத்திட்டு இப்ப வந்து அரை மணி நேரமா வெயிட் பண்றோம். பொக்கே என்னாச்சு?"

"ஸாரி ஸார்! ஆர்க்கிட் ப்ளவர் இப்பக் கொஞ்சம் டிமாண்ட். அதான்..."

"இதை நேற்றே சொல்லியிருந்தா நான் வேற இடத்தில ஆர்டர் பண்ணியிருப்பேனில்ல? என்னவோ உன் தங்கை புதுசா பறிச்சு உடனே செய்து தந்திடுவேன்னு சொன்னாளே! என்ன... இப்பத்தான் செடிய நட்டுட்டு இருக்காளா?"

மாதவனின் மூளைக்குள் மின்னல் வெட்டியது. "ஸ... ஸார்! இப்ப என்ன சொன்னீங்க?"

"ம்... செடிய நட்டுட்டு இருக்காளான்னு கேட்டேன்."

"இல்ல ஸார்... புதுசா பறிச்சி உடனே செய்து தர்றேன்னு சொன்னாளா?"

"அப்படித்தான் சொல்லி பணத்தை வாங்குனா. முழுப் பணத்தையும் வாங்கிட்டு இப்ப கையவிரிச்சா என்ன பண்றது?"

"யெஸ்! அப்போ கண்டிப்பா ஆர்க்கிட் கார்டனுக்குத் தான் போயிருப்பா. அதை யோசிக்கலையே நான்!"



"என்னய்யா சொல்றே?"

"ஸார்! உங்களுக்கு வேற ஏதாவது பொக்கே வாங்கிக்கங்க. மழை பெய்துட்டு இருக்குறதால ஆர்க்கிட் கிடைக்கல்ல. வெரி ஸாரி ஸார்."

"ஏதாவது ஒரு காரணத்தைச் சொல்லிடுங்க. இப்படிக் கடை நடத்தினா எப்படிய்யா கஸ்டமர் வருவாங்க?"

"ஸாரி ஸார். இது இயற்கையோட தவறு. நாங்க என்ன செய்ய முடியும்? ஆனா அதைவிட அருமையான பொக்கே செய்து தரச் சொல்றேன். போனை அந்தப் பொண்ணுகிட்ட கொடுங்க ஸார்!"

"இந்தாம்மா!" போன் கைமாறியதும் காவேரியின் குரல் கேட்டது.

"சொல்லுங்க ஸார்."

"காவேரி! குறிஞ்சி ஆர்க்கிட் பூ பறிக்க போயிருப்பான்னு நினைக்கிறேன். நான் போய்ப் பார்த்திட்டு வர்றேன். நீ இந்தக் கஸ்டமரை அனுப்பிட்டுக் கடையைப் பூட்டிட்டுக் கிளம்பும்மா."

"சரிங்க ஸார்."

"வேற பொக்கே வேணுமான்னு கேளு. வேண்டாம்னு சொன்னா பில் புக்கைப் பார்த்து அவங்க தந்த பணத்தைத் திருப்பிக் கொடுத்து அனுப்பிடு."

"சரி ஸார்."

"வேற யாரும் வந்தா நீயே பேசி அனுப்பிடு. எனக்குப் போன் பண்ண வேண்டாம். ட்ராபிக்ல டிஸ்டர்பன்ஸா இருக்கும்."

"சரிங்க ஸார்." - என்றவாறு அவள் போனை வைத்துவிட, தனது செல்லை அணைத்துவிட்டுக் காரை உசுப்பினான். ஆர்க்கிட் கார்டன் பால்ஸ் ரோட்டில் இருக்கிறது. இந்த மழையில் போக எப்படியும் ஒரு மணி நேரமாகும். அதற்குள் வந்து விடுவாளா? ஆள் நடமாட்டம் குறைந்த பகுதியாயிற்றே. பதட்டமாய்க் காரின் வேகத்தை அதிகரித்தான் மாதவன்.

ஒளிவட்டம் தத்தித் தத்தி அருகில் நெருங்க, குறிஞ்சியின் பிடி அழுத்தமாய்ப் பதிந்தது. யுவராஜனுக்கும் லேசான கலக்கம் இருந்தபோதும் அதைக் காட்டிக் கொள்ளாமல், அவளது கையை ஆறுதலாய்ப் பற்றிக் கொண்டு, சற்றுத் துணிவைத் திரட்டிக் கொண்டு குரல் கொடுத்தான்.

"யாருப்பா அது?" - என்றவாறே தன் டார்ச்சை உயர்த்திப் பிடிக்க, திடீரென முகத்தில் பாய்ந்த ஒளியால் கண்களைச் சுருக்கினான் பழனி.

"அட! பழனி." - பழனியின் முகம் குழப்பமாய் விரிந்தது. கேட்டைப் பார்த்தான். பூட்டு தொங்கியது.

"ஸார்! நீங்க எப்படி இங்கே? அதுவும் இந்த நேரத்தில? எப்படி ஸார் உள்ளே போனீங்க?"

"அது பெரிய கதை பழனி. பொறுமையாச் சொல்றேன். முதல்ல கேட்டைத் திற. எங்கே போயிட்ட நீ?"

"மழை வர்ற மாதிரி இருந்தது ஸார். அதான் சீக்கிரமாய்ப் போய்ச் சாப்பிட்டுட்டு வந்திடலாம்னு மெயின் ரோட்டுக்குப் போனேன். மழை பலமாப் பிடிச்சிக்கவே இவ்வளவு நேரம் ஹோட்டல் வாசல்லதான் ஒதுங்கி



நின்னேன். நீங்க எப்போ ஸார் வந்தீங்க?" - கேட்டவாறே இடுப்பிலிருந்த சாவிக் கொத்தால் பூட்டை விடுவித்துக் கேட்டை அகலமாய்த் திறந்து உள்ளே நுழைந்தவன், எதிரே ஈரம் சொட்ட வந்து நின்றவளைக் கண்டு வியந்து போனான்.

"எம்மா! நீங்க என்னம்மா இங்கே இருக்கீங்க?"

"ம்... ராத்திரி நேரத்தில இந்தத் தோட்டம் எப்படி இருக்கும்னு பார்க்க வந்தேன்." - என்றாள் கடுப்பாய்.

"சும்மா விளையாடாதீங்கம்மா. எதையாவது விட்டுட்டுப் போயிட்டீங்களா?"

"யோவ்! நீதான்யா என்னை விட்டுட்டுப் போயிட்டே. காட்டுக்குள்ள இருட்டுல மழையில நான் பயந்தே செத்திருப்பேன். ஸார்தான் கடவுள் மாதிரி வந்து காப்பாத்தினார்."

"என்னம்மா சொல்றீங்க?"

"பழனி! இவங்க பூப்பறிக்க வந்தது உனக்குத் தெரியாதா?"

"தெரியும் ஸார். எங்கிட்டப் பணம் தந்திட்டுத்தான் பூப்பறிக்க ஆரம்பிச்சது."

"பின்னே? நீ பாட்டுக்குப் பூட்டிட்டுப் போயிட்டே. வந்தவங்க வெளியேபோனாங்களா என்னன்னு செக் பண்ண மாட்டியா?"

"ஸார்! இந்த அம்மா வரும்போது நான் ரோஜா தோட்டத்தில நின்னேன். வந்து ரொம்ப நேரமாகிப் போச்சு. இன்னிக்குச் சீக்கிரமே இருட்டிப் போச்சே... அதனால இந்த அம்மா கிளம்பிப் போயிட்டாங்கன்னு நினைச்சேன். இந்த

அம்மாவோட வண்டியும் வாசல்ல இல்ல. இவங்க புறப்பட்டுப் போயிட்டாங்கன்னு நினைச்சிட்டுத்தான் பூட்டிட்டுப் போனேன். ஏம்மா! உங்க வண்டி இல்லையே. எங்க விட்டீங்க?"

"நான் இன்னிக்கு வண்டியில வரல்ல. வண்டி பஞ்ச்சர். அதனால ஆட்டோவில வந்தேன்."

"அப்போ பூவையெல்லாம் எப்படித் தூக்கிட்டுப் போவீங்க?"

"பூ பறிச்சு முடிச்சதும் அண்ணனுக்குப் போன் பண்ணினா காரை எடுத்துட்டு வருவான்னு இருந்தேன்."

"ஏம்மா! நீங்க வண்டியில வரலன்னு எனக்கு எப்படிம்மா தெரியும்? எங்கிட்டயாவது ஒரு வார்த்தை சொல்லியிருக்கணும். இல்ல இருட்டும் முன்னால கிளம்பியிருக்கணும்."

"நீ இப்படிக் கிளம்பிப் போவேன்னு எனக்கு என்ன தெரியும்? நீ சொன்னியா? வெளியே போவேன்னு." - கோபமாய்ப் பாய்ந்தவளைத் தடுத்தான் யுவராஜன்.

"சரி... சரி! யாருமே வேணும்னு செய்யல. ஏதோ தெரியாம நடந்துப் போச்சு. விடுங்க. இனிமே இப்படி நடக்காமப் பார்த்துக்கங்க. அதுக்காக இப்படி மழையில நின்னு சண்டை போட வேண்டாம்."

"இல்ல ஸார். நீங்க மட்டும் வரலன்னா என்ன ஆகியிருக்கும்?"

"ஒண்ணும் ஆகியிருக்காது. பழனி வந்ததும் கிளம்பியிருப்பீங்க."



"இல்ல. குளிர்ல ஜன்னி வந்தோ இல்ல பயத்தில நெஞ்சு வெடிச்சோ செத்திருப்பேன்."

"ஏங்க! வாயை மூடுங்க. ஏன் இதே வார்த்தைய சொல்லிட்டே இருக்கீங்க. இப்படியெல்லாம் பேசாதீங்க."

"ஸார்! உங்களைப் பார்க்கிற வரைக்கும் நான் பட்ட பாடு... இவன் எங்கே போனான், எப்போ திரும்பி வருவான்னு தெரியாமப் பயந்து தவிச்சுப் போயிட்டேன் தெரியுமா? ஒரு மழைத் துளியோட சத்தம்கூட இடி விழுகிற மாதிரி இருந்தது. அவ்வளவு பயம்."

"ஏம்மா! இவ்வளவு பயப்படுறவங்க ஏன் இப்படிக் காடு கரைன்னு அலையுறீங்க? பேசாம ஒரு கல்யாணத்தைக் கட்டிட்டு வீட்டோட இருக்க வேண்டியதுதானே!" - பழனியும் பொறுமை இன்றிக் கத்த, குறிஞ்சியின் ஆத்திரம் அதிகரித்தது.

"ஏய்! வார்த்தைய அளந்து பேசு. நீ ஒண்ணும் எனக்கு அட்வைஸ் பண்ண வேண்டாம். செய்யுற வேலையில ஒரு கவனம் இல்ல. நீ என்னைப் பேசுறியா? சுகவனம் ஸார் வரட்டும், பேசிக்கிறேன்."

"பேசிக்கம்மா... எனக்கு ஒண்ணும் பயமில்ல. இப்பக் கிளம்பு. நான் கேட்டை மூடணும்."

"பழனி! என்ன நீ? கொஞ்சமும் மரியாதை இல்லாமப் பேசுற?"

"பின்ன என்ன ஸார்? என்ன பொழப்பு இது? பெண்டாட்டி புள்ளைகளோட சந்தோஷமா வாழ முடியாம இப்படி வனாந்தரத்தில வந்து வேலை செய்துட்டு இருக்கோம். ஒரு தலைவலி காய்ச்சல்னாக்கூட மருந்து

தரவோ கஞ்சிக் காச்சித் தரவோ ஆள் கிடையாது. அவ்வளவு ஏன்? ராத்திரி நேரம் பாம்பு கடிச்சு செத்தாக்கூட அநாதைப் பொணமாத்தான் கிடக்கணும். ஓனருக்கென்ன கவலை. வருமானத்தை வாங்கிக்கிட்டு மும்பை கல்கத்தான்னு கிளம்பிடுறாரு. ஒரு நாள்கூட லீவு போட முடியல்ல.

"இதுல இந்த மாதிரி பேச்செல்லாம் வேற கேட்க வேண்டியிருக்கு. இந்தம்மா கவனக்குறைவா இருந்துகிட்டு என்கிட்டப் பாயுது. நானும் மனுஷன்தானே. ஒரு வேளை சாப்பாட்டுக்கு மூணு கிலோ மீட்டர் தூரம் நடந்து போயிட்டு வர்றேன். இந்த அம்மா இந்தக் கொட்டுற மழையில நிக்க வெச்சு கேள்வி கேட்டுட்டு இருக்கு. ஏன் ஸார்? நாளைக்கே நான் உடம்பு முடியாமப் படுத்தா இந்தம்மா வந்து வைத்தியம் பார்க்குமா? கூட்டிட்டுப் போங்க ஸார். ஈரத்தில நடந்து வந்தது காலெல்லாம் நோவுது." – பழனி தனது இயலாமையை எரிச்சலாய் வெளிப்படுத்த பதிலுக்கு சீற முயன்றவளைக் கரம் பற்றி அடக்கினான் யுவராஜன்.

"குறிஞ்சி! கொஞ்சம் பொறுமையா இருங்க. அவன் சொல்றதும் நியாயம்தானே! அவன் கஷ்டம் அவனுக்கு."

"அதுக்காக..."

"ப்ளீஸ். ஏற்கெனவே மணிக்கணக்கா நனைஞ்சிட்டு இருக்கீங்க? இன்னும் ஏன் நனையணும். முதல்ல வாங்க. வீட்டுக்குப் போகலாம்."

"வேண்டாம் ஸார். உங்க போனைக் கொடுங்க. என் அண்ணனுக்குப் போன் பண்ணி வரச் சொல்லிடுறேன்."

"ஏம்மா! இந்த மழையில நின்னு பேசினாப் போன் என்னாகும்? போம்மா... அதோ அதுதான் ஸாரோட வீடு.



போய்த் தலையைத் துவட்டிட்டுப் பேசு. குளிர்ல ஜன்னி வந்திடப் போகுது."

"எல்லாம் எனக்குத் தெரியும். நீ உன் வேலையை மட்டும் பார்."

"இங்கேயே நின்னா எப்படி? நீங்க வெளியே போனாத்தானே நான் கேட்டைப் பூட்டிட்டுப் போக முடியும்."

"ச்சே! ஸார்! வாங்க ஸார் போயிடலாம்." – எரிச்சலாய் வெளியேறினாள் குறிஞ்சி. யுவராஜனும் புன்னகையோடு வெளியேற பழனி குரல் கொடுத்தான்.

"ஏம்மா! பூப்பறிக்கவே இல்லையா? சும்மா போறீங்க!"

"உன் பூ எல்லாம் இனி யூஸாகாது. இந்த மழையில நனைஞ்சி வீணாப் போனதை வெச்சு நான் என்ன பண்றது?"

"அப்போ பறிச்ச பூவெல்லாம்?"

"எல்லாம் அங்கேதான் இருக்கு. நீயே வெச்சுக்க."

"அதை வெச்சு நான் என்னம்மா பண்றது?"

"எதையாவது பண்ணித் தொலைய்யா. ஸார்! நீங்க வாங்க... ச்சே! இன்னிக்குக் கண் விழிச்ச நேரமே சரியில்ல!" – எரிச்சலோடு முனகிக் கொண்டே சாலையில் இறங்கி நடக்க ஆரம்பித்தாள்.

"பழனி! அந்தப் பூவெல்லாம் வீணாகிடாம உன் குடில்ல எடுத்து வை. நான் காலையில வந்து எடுத்துக்கிறேன். சரியா?"

"சரி ஸார்! அந்த அம்மா உங்களுக்கு தெரிஞ்ச வங்களா ஸார்?"

"ரொம்ப ரொம்ப வேண்டப்பட்டவங்க..."

புன்னகையோடு சொல்லிவிட்டு முன்னே சென்றவளை பின்தொடர்ந்தான்.

டார்ச் ஒளியை எதிர்பாராமல் விடுவிடுவென நடந்தவளை நெருங்கிக் கேலியாகக் கேட்டான்.

"என்ன! பயமெல்லாம் போயிடுச்சுப் போலிருக்கு?"

"வாட்?"

"இல்ல. இருட்லேயே பி.டி.உஷா மாதிரி ஓடுறீங்களே.. அதைக் கேட்டேன்."

"இது ரோடுதானே! இதுல என்ன பயம்?"

"ரோட்டுலகூட சில சமயம் கட்டுவிரியன், நல்ல பாம்பு எல்லாம் நடமாடும்! வெளிச்சம் இல்லாம வெளியே நடக்கவே கூடாது. நாம தெரியாமத்தான் மிதிப்போம். ஆனா மிதிபடுறவங்க சும்மா இருப்பாங்களா? ஓங்கி ஒண்ணு போட்டுட மாட்டாங்க!"

"ஏன் ஸார் இப்படிப் பயமுறுத்திக்கிட்டே இருக்கீங்க?" - குரல் நடுங்கக் கேட்டவளின் நடை தடைப்பட்டது.

"நான் ஒண்ணும் பயமுறுத்தல. நடக்கிறதைச் சொன்னேன்."

"நீங்க எதுவுமே சொல்ல வேண்டாம். பேசாம வாங்க."

"எதுக்காக இவ்வளவு கோபம்?"

"பின்னே என்ன ஸார்? அவன் எவ்வளவு திமிராப் பேசினான். பார்த்தீங்களா? என்னவோ பெண்டாட்டி பிள்ளைகளை விட்டுட்டு வந்து சுகவனம் ஸாருக்கு சேவை



செய்யற மாதிரிப் பேசுறான். சம்பளம் வாங்குறானில்ல? காசு வாங்கினா அதுக்கேத்த மாதிரி உழைக்க வேண்டாமா?"

"நீங்க சொல்றது சரிதான் குறிஞ்சி. ஆனா அவன் சொன்னதுலயும் எந்தத் தப்பும் இல்ல."

"என்ன?"

"குறிஞ்சி! வயித்துப் பொழப்புக்காக ஊர் விட்டு ஊர் வந்து உழைக்கிறான். ஆனா அவனும் மனுஷன் தானே! அதுவும் இளவயசுக்காரன். வாரம் ஒருமுறை இல்லன்னாக்கூட பரவாயில்ல... மாசத்தில ரெண்டு நாளாவது அவனுக்கு லீவு கொடுக்க வேண்டாமா?

"சுகவனம் ஸார் எப்பவுமே அவருடைய லாபத்தைத் தான் பார்ப்பாரே தவிர பழனிய ஒரு மனுஷனா மதிக்கிறதேயில்ல. அவன் என்ன மிஷினா? உழைச்சிக் கொட்டிட்டே இருக்க? அவனுக்கும் ஆசாபாசங்கள் இருக்காதா? அவனோட குழந்தைகள் தகப்பனைக் காண ஏங்காதா? கண் காணாத இடத்தில இருக்கிற புருஷனுக்கு எந்தக் கஷ்டமும் வந்திடக் கூடாதுன்னு அவன் மனைவி தவிக்க மாட்டாங்களா?"

"இவன் ஏன் ஸார் தனியா இருக்கணும்? பேமிலியையும் கூட்டிட்டு வந்திட வேண்டியதுதானே!"

"இதை அவனே சுகவனத்துகிட்டக் கேட்டுட்டான். அதுக்கு அவர் என்ன சொல்றார் தெரியுமா?"

"என்ன சொல்றார்?"

"பெண்டாட்டி கூடவே இருந்தா இவனுக்கு வேலையில கவனம் இருக்காதாம்."

"நான்சென்ஸ்." - பற்களைக் கடித்தாள் குறிஞ்சி.

"நாம கோபப்பட்டு என்ன ஆகப் போகுது?"

"அப்படி ஏன் இவர்கிட்ட கிடந்து கஷ்டப்படணும்? பேசாம வேற வேலை தேடிட்டுப் போக வேண்டியதுதானே!"

"அப்படியெல்லாம் சட்டுன்னு அவனாலப் போக முடியாதுங்க."

"ஏன்? ஏதாவது அடிமை சாசனத்தில் கையெழுத்துப் போட்டிருக்கானா?"

"அப்படின்னு சொல்ல முடியாது. கிட்டத்தட்ட அதே மாதிரிதான்."

"என்ன ஸார் சொல்றீங்க?"

"குடும்பஸ்தனுக்கு ஆயிரம் பொறுப்பு இருக்கு மில்லையா? தங்கை கல்யாணம், பெத்தவங்க மருத்துவச் செலவுன்னு... வொய்ப்போட டெலிவரி செலவு வரை கடன் வாங்கித்தான் பண்றான். அதையெல்லாம் சம்பளத்தில கழிச்சுப்பார் சுகவனம். ஸோ... அவனால போகவும் முடியாது. எதுவா இருந்தாலும் சகிச்சுத்தான் ஆகணும். நாங்க எல்லாம் இந்த வீட்ல இருக்கும்போது அவனுக்குக் கொஞ்சம் ஹெல்ப்புல்லா இருந்தது. இப்ப நாங்களும் இல்லையா? பாவம்! பேச்சுத் துணைக்குக்கூட ஆளில்லாம ரொம்பக் கஷ்டப்படுறான்."

"என்ன? நீங்க இங்கே இல்லையா?"

"ம்... இந்த வீட்டை விட்டுப் போய் மூணு வருஷமாச்சு. இப்போ பாரதி ரோட்லதான் இருக்கோம்." - என்றவாறே வீட்டை நெருங்கினான் யுவராஜன்.



"ஏன் ஸார்? அது ரொம்ப ஹெவியான ப்ளேஸ் ஆச்சே. இந்த அருமையான இடத்தை விட்டுட்டு அங்கே போக உங்களுக்கு எப்படி ஸார் மனம் வந்தது? வாவ்! என்ன அழகான வீடு?" - வியப்பாய் விழிகளை விரித்தாள் குறிஞ்சி.

வீடு முழுக்க வெளிச்சம் தெரிய, யுவராஜனைத் திரும்பிப் பார்த்தாள். "உள்ளே யார் இருக்காங்க ஸார்? எல்லா லைட்டும் எரியுதே!"

"எங்க வீட்ல வேலை செய்யுறவங்க இருக்காங்க. கொஞ்சம் வயசான தம்பதிங்க. குழந்தைங்க கிடையாது. அதனாலேயே இங்கேதான் இருப்பாங்க." - என்றவாறு கேட்டைத் தாள் விலக்கித் திறந்தான். மழை குறையத் துவங்கியது.

"வாங்க... உள்ளே வாங்க!"

"ஸார்! அண்ணன் தேடும். ஒரு போன் பண்ணணும்." - தயங்கி நின்றாள்.

"பண்ணலாம். வாங்க. முதல்ல ஈரத்தைத்துடைச்சிக் கூந்தலை ஆறவிடுங்க. ஜுரம் வந்திடப் போகுது." - என்றவாறே அவன் போர்டிகோவை அடைய, குறிஞ்சியின் கால்கள் பின்னிக் கொண்டது. இதுவரை இயல்பாய் இருந்த மனம் இப்போது மிரண்டது.

பயமாய் கண்களைச் சுழற்றி அந்த வீட்டைப் பார்வையால் அளந்தாள். சுற்றிலும் தோட்டத்தோடு கூடிய பெரிய வீடு. பகல் போல் வெளிச்சமாய் காட்சியளித்த போதும் ஏனோ ஆள் அரவமற்ற அந்த வீட்டைப் பார்க்கையில் வயிற்றைப் பிசைந்தது.

ஆபத்தில் தனியே தவிக்கும்போது கடவுளாய்த் தெரிந்தவன் திடீரென காமுகனாய்த் தோன்றினான். மழையில் நனைந்த உடலோடு கதவைத் திறந்தவன், அங்கிருந்தே கைநீட்டி அவளை அழைக்க, குறிஞ்சியின் உடல் உதறியது.

'ஐயோ! என்ன தைரியத்தில் இவனுடன் வீடு வரை வந்தேன்? எத்தனை மடத்தனம் இது? ஏதோ ஆபத்தில் உதவினான். தன் தோழியின் கணவனாகப் போகிறவனின் தம்பி என்ற ஒன்றைத் தவிர இவனைப் பற்றி என்ன தெரியும்? முன்பின் அறிமுகமில்லாதவனை நம்பி எப்படி இவ்வளவு தூரம் வந்தேன்.'

"ஏன் நின்னுட்டீங்க? வாங்க!" – யுவராஜன் மீண்டும் அழைக்க, அவனது குரலும் முகத்தில் தெரிந்த மாற்றமும் பயத்தை இன்னும் அதிகரித்தது.

'இது காலையில் பார்த்த முகம் இல்லை. சற்று முன்பாகப் பார்த்த கலகலப்பான இயல்பான முகமல்ல. லேசாக இறுகினாற் போலிருக்கிறதே. இவன் கண்டிப்பாய் நல்லவனாய் இருக்க முடியாது.

தனியாய் சிக்கிக் கொண்டவளை சாமர்த்தியமாய்ப் பேசி வீடு வரை அழைத்து வந்து விட்டானே! இதற்காகத்தான் அண்ணனுக்கு போன் செய்யாமல் தட்டிக் கழிக்கிறானா? கடவுளே! எப்படி இவன் பேச்சில் மதிமயங்கிப் போனேன்?

இப்போது இவனிடமிருந்து எப்படித் தப்புவது? நிச்சயமாய் இந்த வீட்டில் வேறு யாரும் இருக்கப் போவதில்லை. வயதான தம்பதிகளுக்கு ஆளில்லாத வீட்டில்



என்ன வேலை? என்னை ஏமாற்றத்தான் டார்ச் எடுக்க வரும்பொழுது வீட்டின் விளக்குகளை எரிய வைத்துவிட்டு வந்திருக்கிறான்.

கூடாது... இவனிடம் மாட்டிக் கொள்ளக் கூடாது. ஓடு... குறிஞ்சி ஓடு. ஓடிடு...' – மூளை வேகமாய் கட்டளையிட, பார்வையை வாசலுக்குத் திருப்பியவள் இன்னும் அதிர்ந்தாள். கதவு திறந்தே இருக்க... உடன் வந்தவனைக் காணவில்லை. தன்னைச் சுற்றிலும் மயான அமைதி நிலவ, குறிஞ்சியின் உடல் தடதடத்தது. மழை சுத்தமாய் நின்று போயிருக்க... காட்டுப் பூச்சிகளின் சத்தம் மிரட்டியது.

'என்ன இது? வீடா மயானமா? கூட வந்தவனைக் காணவில்லையே... அவன் மனிதன்தானா? இல்லை பேயா? கால் இருந்ததா?

ம்... இருந்ததே! ஊன்றி நடந்தானே... பிறகெப்படி மறைந்தான்? இந்த இடமே சரியில்லை. பேய் படத்தில் வரும் பங்களா போல் இருக்கிறதே!

முருகா! முருகா... காப்பாத்துப்பா.

காக்க காக்க... கனகவேல் காக்க...

நோக்க நோக்க... நொடியினில் நோக்க

பார்க்க பார்க்க பாவம் பொடிபட...!'

நடுங்கும் குரலோடு சஷ்டி கவசத்தை உச்சரித்துக் கொண்டே அதிரும் இதயத்தோடு வந்த வழியே திரும்ப...

தோளில் சூடான கரம் ஒன்று பதிந்தது.

# 5

பிரிவு என்பது
உறவின்
ஆரம்பம் - அது வாழ்வின்
இறுதிவரை தொடரும்!

உடல் மொத்தமும் நடுங்க, தன் தோளில் விழு கரத்தைப் பட்டெனத் தட்டிவிட்டு ஓட யத்தனித்தாள் குறிஞ்

"கண்ணு! உள்ளார வாம்மா." - என்ற பரிவா குரலில் கால்கள் நின்றன. திரும்பிப் பார்க்க அச்சப்ப துடிக்கும் இதயத்தோடு அசையாமல் நின்றவளின் முன் வந்து நின்றார் அந்தப் பெண்மணி.

"ஏங்கண்ணு! வெளியே நிக்கிற. உள்ளார வாம்ம இப்படி நனைஞ்சிருக்கியே. வாம்மா."

"நீ... நீங்க யாரு?" - கண்களில் நம்பிக்கையின்றி கேட்டாள்.

"நான் தங்கம்மா. இந்த வீட்டுல வேலை செய்யுறேன்

"வே... வேலையா? ஆள். இல்லாத வீட்ல என் வேலை செய்வீங்க?"

"ஆளில்லேன்னு யார் கண்ணு சொன்னது?"

"அ... அவர் சொன்னாரே!"

"அதுவா? இங்க வந்து தங்க மாட்டாங்களே தவ சின்னவரும் பெரியவரும் அப்பப்ப வந்து போவாங் கண்ணு. அதிலும் சின்னவர் ஒரு நாள் கூட இங்க வரா இருந்ததில்ல. இந்த வீட்டு மேலயும் அவுக தங்கச்சி மேலயு அம்புட்டுப் பிரியம்."



"குறிஞ்சியின் பயம் மெல்ல விலகியது. "ஓ! இது... அவங்க தங்கச்சி வீடா?"

"அவுக வாழ்ந்த வீடும்மா!"

"அப்படின்னா?"

"ஏங்கண்ணு! எல்லாத்தையும் இந்தக் குளிர்ல நின்னே பேசணுமா? உள்ளார வா தாயி."

"அ... அவர் எங்கே?"

"தம்பி முழுக்க நனைஞ்சிடுத்தே. அதான் வெந்நீர்ல குளிக்கச் சொன்னேன். அப்படிக் குளிச்சா சளி பிடிக்காது. நீகூட குளிம்மா. உள்ளே வா."

"இல்ல... நான் வீட்டுக்குப் போகணும்."

"உள்ள வந்து உன் அண்ணனுக்குப் போன் போடம்மா. வீட்ல போன் இருக்கு வா. தம்பி எல்லாம் சொல்லிட்டுத்தான் குளிக்கப் போச்சு. அவர் மட்டும் தனியா இருக்கார்ன்னு உள்ள வரத் தயங்கினியாமே. அதான் என்னை அனுப்பினார்."

"அது... வந்து... நான்..."

"தப்பு இல்லம்மா. எல்லாப் பெண்களுமே உன்னை மாதிரி எச்சரிக்கையாத்தான் இருக்கணும். யாரையும் உடனே நம்பிடக் கூடாது. இந்த எச்சரிக்கை உணர்வு கடவுள் நமக்குத் தந்த வரம். சில பொண்ணுங்க இதை அலட்சியமாக் கிடுறாங்க. அதனால அந்தக் குடும்பமே இடிஞ்சு போயிடுது."

"என்னங்க! கங்கம்மாவைப் பார்த்த பிறகும்கூட நம்பிக்கை வரலையா?" - கேட்டுக்கொண்டே வந்தவனின்

மீது சோப்பின் நறுமணம் கமழ்ந்தது. புது உடையில் பளிச்சென நின்றவனைத் தயக்கமாய்ப் பார்த்தாள்.

"அது... நம்பிக்கை இல்லாம இல்ல..."

"நம்பிக்கை சுத்தமா இல்ல. கேட்லயே உங்க முகம் அதைத் தெளிவாச் சொல்லிடுச்சே. அதான் கங்கம்மாவை அனுப்பினேன். ஆனா முகத்துல இன்னும் பயம் தெரியுதே!" - என்றான் அவளது முகத்தை ஆராய்ந்து கொண்டே.

அவனது பார்வையின் வெம்மை தாளாமல் பார்வையைத் தழைத்துக் கொண்டாள்.

"இல்ல... நான்... வீட்டுக்குப் போகணும்."

"அப்போ உள்ளே வரமாட்டீங்க? சரி... கங்கம்மா! டேபிள்ல என்னோட போன் இருக்கும். எடுத்திட்டு வாங்க."

"சரிய்யா!" - கங்கம்மா வீட்டிற்குள் நுழைய, குறிஞ்சியை யோசனையாய்ப் பார்த்தான்.

"குறிஞ்சி!"

"ம்..."

"என்னைப் பார்த்தா எப்படித் தெரியுது?"

"எ... எப்படின்னா?"

"இந்த... ரௌடி மாதிரி, பொறுக்கி மாதிரி, போர் ட்வெண்டி மாதிரி தெரியுறேனா?"

"சேச்சே!" - அவசரமாய் மறுத்தாள்.

"தீவிரவாதி மாதிரியோ நயவஞ்சகமாவோ தெரியுறேனா?"



"ஐயோ! அப்படியெல்லாம் எதுவுமில்ல. ஏன் இப்படிக் கேட்கிறீங்க?"

"பிறகேன் உங்களுக்கு எம் மேல நம்பிக்கை வரல்ல? ஏன் வீட்டுக்குள்ள வராம என்னை அவமதிக்கிறீங்க?"

"ஸார்! அதெல்லாம் ஒண்ணுமில்ல ஸார். அந்தத் தோட்டத்தை விட்டு வெளியே வந்ததும் உடனே வீட்டுக்குப் போகணும் போல இருந்தது. அண்ணன் பயந்து போய்த் தேடிட்டு இருக்கும். இப்ப உள்ள வந்து நிற்க எனக்குப் பொறுமையில்லை. தப்பா எடுத்துக்காதீங்க."

"உண்மையாவே இதுதான் காரணமா?"

"ம்...!" - தலையாட்டினாள்.

"சரி... அப்பக் கார்ல ஏறுங்க. நானே கொண்டு போய் விட்டுடுறேன்."

"இ... இல்ல... வேண்டாம்."

"ஏன்?"

"அண்ணனுக்குப் போன் பண்ணினாப் போதும். காரையெடுத்திட்டு வந்து கூட்டிட்டுப் போயிடும்."

"ஏன் குறிஞ்சி? இந்த ராத்திரி நேரத்தில அவர் ஏன் சிரமப்படணும். என்கிட்ட கார் இருக்கு. அதுல வந்தா என்ன?"

"இல்ல ஸார். நீங்க நினைக்கிற மாதிரி இது ஒண்ணும் சாதாரண விஷயமில்ல."

"ஏன்?"

"நாங்க குடியிருக்கிறது சாதாரணக் குடியிருப்புப் பகு
எப்பவும் நடமாட்டம் உள்ள இடம். இப்படி இருட்டு நேரத்தி
இந்த நனைஞ்ச கோலத்தோட ஒரு அந்நிய ஆடவனோ
நான் போய் இறங்கினா விடியுறதுக்குள்ள என் பேரை
காத்துல பறக்க விட்டுடுவாங்க. இதே என் அண்ணனோ
போய் இறங்கினா அண்ணனும் தங்கையும் இப்பத்தா
கடையைச் சாத்திட்டு வர்றீங்களான்னு கேட்பாங
எங்களுக்குன்னு இருக்கிற மரியாதையைக் காப்பாத்தி
கணுமே. அதான் சொல்றேன். அண்ணனுக்குப் போ
பண்ணுங்க. அண்ணன் வந்ததும் போயிடுறேன்."
தணிவாகவே குறிஞ்சி சொல்ல, உறைந்து போய் நின்றா
யுவராஜன். கண்களை இறுக மூடினான்.

"இவ்வளவு நேரமா எங்க போயிட்டு வர்றே? ஒ
போன்கூட பண்ணல்ல. இந்த நேரம் எப்படி வந்தே?"

"அவரோட கார்ல வந்தேன்."

"எனக்கு ஒரு போன் பண்ணினா நான்
வரமாட்டேனா?"

"அண்ணா! உங்கூட எப்படி ஜாலியாப் பேசமுடியும்
எதையுமே திங்க் பண்ண மாட்டியா?"

"வரவர யார் பேச்சையும் மதிக்க மாட்டேங்கிற நீ?"

'நீங்கதான் என்னோட ஆசையை மதிக்க மாட்டே
கிறீங்க!'" - கோபமான உரையாடல்கள் தலைக்குள்
சுழன்றன. நெற்றிப் பொட்டில் வலித்தது. தலையை உதறி
கொண்டான்.

"ஸார்! என்னாச்சி?"



சட்டெனக் கண்களைத் திறந்தான். கலங்கிச் சிவந்திருந்த கண்களைக் கண்டதும் லேசாய்ப் பதறினாள் குறிஞ்சி.

"ஸார்! என்ன ஸார்?"

"நத்திங்!"

"தம்பி! போன்." - என்றவாறு கங்கம்மா வந்ததும் முகத்தை இயல்பாக்கி போனை வாங்கினான். குறிஞ்சியிடம் நீட்டினான்.

"இந்தாங்க... உங்க அண்ணன்கிட்டப் பேசுங்க."

"தேங்க்யூ ஸார்." - என போனை வாங்கி அதில் மாதவனைத் தொடர்பு கொள்ள, அங்கே நில்லாமல் வீட்டிற்குள் நுழைந்தான். இரண்டே நிமிடத்தில் திரும்பினான். கையில் பூத்துவாலையோடு மடிப்பு கலையாத சூரிதார் செட்.

"ஆமாண்ணா! சுகவனம் ஸார் கார்டனுக்கு ஆப்போஸிட்ல தான் இருக்கு. நான் வாசல் பக்கத்தில தான் நிற்கிறேன். வந்திடு, வெச்சிடுறேண்ணா." - என்றவாறு போனை கட் பண்ணி யுவராஜனிடம் நீட்டினாள்.

"தேங்க்யூ ஸார். அண்ணன் இங்கேதான் வந்திட்டு இருக்கான். இப்ப வந்திடும். ரொம்ப தேங்க்ஸ் ஸார்."

"மிஸ் குறிஞ்சி! வீட்டுக்குள்ள வரமாட்டீங்க. இந்தாங்க இந்த ட்ரெஸ்ஸயாவது மாத்திக்கங்க. அதோ அங்க பாத்ரூம் இருக்கு. கங்கம்மா அழைச்சிட்டுப் போங்க."

"ப... பரவாயில்ல ஸார்... இருக்கட்டும்."

"பிடிவாதம் பண்ணாதீங்க குறிஞ்சி. இந்த ஈர ட்ரெஸ்ஸோட எவ்வளவு நேரம் நிற்பீங்க? ப்ளீஸ்!

சொன்னாக் கேளுங்க. இதுல டவல் இருக்கு. தலைய துவட்டிக்கங்க." - அவன் மீண்டும் சொல்லத் தயக்கமா வாங்கிக் கொண்டாள்.

"இது என் தங்கையோட ட்ரெஸ். உங்களுக்குச் சரியா இருக்கும்னு நினைக்கிறேன். போட்டுக்கங்க."

"இப்ப அண்ணன் வந்திடும்."

"நான் வாசலில் நின்று உங்கள் அண்ணன் வந்தா கூப்பிட்டுக்கிறேன். நீங்க போங்க. கங்கம்மா! அழைச்சிட்டு போங்க."

"வா கண்ணு." - என கங்கம்மா முன்னே செல்ல தயக்கமாய்ப் பின்தொடர்ந்தாள். சுவரோரமாய் இருந்த பாத்ரூமை நெருங்கியதும் விளக்கை எரிய விட்டாள் கங்கம்மா.

"உள்ளார போய் துணிய மாத்திக்கங்கம்மா. நான் இங்க நிற்கிறேன்."

"ம்..."

"பைப்பைத் திருகினா சுடுதண்ணி வரும். குளிக்கிறதா இருந்தா குளிங்க. சோப்பு ஷாம்புகூட இருக்கு."

"ம்..." - என்றவாறு கதவைத் திறந்து உள்ளே நுழைந்தவள் அசந்து போனாள். அறை முழுக்க வெள்ளை நிற டைல்ஸ் பதித்து பளபளப்பாய் இதமான நறுமணத்தோடு வெகு சுத்தமாய் இருந்தது. ஹேங்கரில் துணிகளைத் தொங்கவிட்டுக் குழாயைத் திருகினாள்.

வெதுவெதுப்பான நீர் ஆவிபறக்க வந்தது. முகத்தை மட்டும் கழுவலாம் என நினைத்தவள் குளிருக்கு இதமான



சூடாய் நீர் விழுந்ததும் உடம்பின் சேறு சகதிகளைக் கழுவ, கையிலிருந்த வாட்சைக் கழற்றி சோப் வைக்கப்பட்டிருந்த ஷெல்ப்பில் வைத்துவிட்டு துணிகளை அலசிப் பிழிந்தாள்.

உடல் முழுக்க நனைந்துவிட ஒருமனதாய் குளிக்கத் துவங்கினாள். தலையை நன்கு அலசி உடலைத் தேய்த்து பளிங்காய் மின்னும் அளவிற்கு நீண்ட குளியல். நேரம் போவது தெரியாமல் குளித்துக் கொண்டே இருக்க, கதவு தட்டப்பட்டது.

சட்டெனப் பதறி பைப்பை மூடினாள். தண்ணீர் விழும் சத்தம் நின்றதும் கங்கம்மாவின் குரல் கேட்டது.

"கண்ணு! உன் அண்ணன் வந்திடுச்சும்மா!"

"ஐயோ! இதோ வந்திட்டேம்மா!" - அவசரமாய்த் தலையைத் துவட்டிக் கொண்டு யுவராஜன் தந்த உடைகளை அணிந்து கொண்டாள். தனது ஈர உடைகளை அலசிப் பிழிந்து கையில் வைத்துக்கொண்டே கதவைத் திறந்தாள்.

"அம்மா! எனக்கு ஒரு கவர் வேணுமே... இந்தத் துணிகளை வைக்கிறதுக்கு."

"எடுத்திட்டு வர்றேன் கண்ணு!" - கங்கம்மா நகர்ந்ததும் தலையைக் கோதிவிட்டுக் கொண்டே கார் அருகே நின்று கொண்டிருந்தவர்களை நோக்கிச் சென்றாள்.

சுத்தமாய்க் கழுவித் துடைத்த பளிங்குச் சிலையாய் வந்தவளைக் கண்டதும் யுவராஜனின் பேச்சு நின்றது. அவனது கண்களில் தெரிந்த ரசனையையும் பிரமிப்பையும் கண்டு தனது பார்வையைத் திருப்பிய மாதவனின் முகம் கடுத்தது. பற்கள் நறநறவென அரைபட்டன.

"அண்ணா! வந்திட்டியா? நான்..."

"கிளம்பு குறிஞ்சி! மழை வர்ற மாதிரி இருக்கு. சீக்கிரம் வீட்டுக்குப் போயாகணும். அண்ணி காத்திட்டு இருப்பா. வா, போகலாம்."

"மாதவன்! டிபன் ரெடியா இருக்கு. சாப்பிட்டுப் போகலாமே!"

"இல்ல ஸார்! எனிவே என் தங்கையைப் பாதுகாப்பா அழைச்சிட்டு வந்ததுக்கு ரொம்ப நன்றி ஸார். நாங்க கிளம்புறோம்."

"காபியாவது குடிச்சிட்டுப் போலாமே!"

"இல்ல ஸார். டயமாகுது. கேட்டதுக்கு நன்றி. குறிஞ்சி! கார்ல ஏறு."

"அண்ணனும் தங்கையும் வீட்டுக்குள்ளயே வராமக் கிளம்புறீங்களே!"

"அதுக்கென்ன ஸார்! இன்னொரு நாள் கண்டிப்பா வர்றோம். கிளம்பட்டுமா?" - புன்னகையோடு கேட்டவளைப் பார்த்து முகம் மலர்ந்தான் யுவராஜன்.

"போயிட்டு வாங்க. நாளை சந்திப்போம்."

"கண்டிப்பா!" - இருவரின் முகத்தையும் கூர்ந்து பார்த்தான் மாதவன். அதில் தெரிந்த பூரிப்பு பயமுறுத்தியது. தங்கையின் முகத்தைத் தவிர இவனது பார்வை எங்கும் செல்லவில்லையே. எச்சரிக்கையாக இருக்க வேண்டும். முகம் கடுக்க தங்கையை ஏறிட்டான்.

"போலாம்னு சொன்னேன்." - என்றவாறு காரில் ஏற, குறிஞ்சியின் முகம் மாறியது. 'இந்த அண்ணனுக்கு என்ன



ஆயிற்று? ஏன் இத்தனைக் கோபப்படுகிறான்?' புரியாமலேயே கையிலிருந்த ஈரத் துணிகளோடு காரில் ஏறி அமர்ந்தாள்.

ஆவலாய் கார் அருகில் நின்ற யுவராஜனிடம் முகத்தைக்கூடக் காட்டாமல் விருட்டெனக் காரைக் கிளப்பிப் புறப்பட்டான். இரண்டே நிமிடத்தில் சாலையைத் தொட்டு விட... ஆள் அரவமற்ற ஈரமான சாலையில் கார் சீறிப் பாய்ந்தது.

"அண்ணா! என்னாச்சு உனக்கு? ஏன் இப்படி நடந்துக்கிற?"

"வாயை மூடு. வீடு போய்ச் சேரும்வரை வாயைத் திறக்காதே!" - சீறினான் மாதவன். அண்ணனின் கோபத்தில் மிரண்டு போனாள் குறிஞ்சி.

"அண்ணா?"

"வாயை மூடுன்னு சொன்னேன்." - என்றதும் அதிர்ந்து போனவளாய் வாயை மூடிக் கொண்டாள். காரின் வேகத்தால் குளிர் உடலை ஊடுருவியது.

வீட்டை அடைந்ததும் காரை நிறுத்திவிட்டு தங்கையின் கையைப் பற்றித் தரதரவென உள்ளே அழைத்துச் சென்றான். காரின் ஓசை கேட்டு, சமையலறையில் இருந்து வெளியே வந்த நீலாவின் பார்வையில் முதலில் பட்டது குறிஞ்சி அணிந்திருந்த சூரிதார்தான்.

'இது... இது... எப்படி இவளிடம் வந்தது?' கண்களை ஒருமுறை அழுத்தமாய் மூடித் திறந்தாள். இளம் மஞ்சள் நிற சூரிதார் அது. கழுத்திலும் கையிலும் வரிசையாய் செர்ரி

பழங்களை பதித்து வைத்தது போல் பட்டு நூலா
செய்யப்பட்ட வேலைப்பாடுடன் கூடிய விலையுயர்ந்
ஆடை. துப்பட்டா முழுக்க முத்துக்கள் பதித்து அசத்தின.

குறிஞ்சியின் உடலுக்கு அது வெகு பொருத்தமா
இருக்க, மனம் பலவிதக் கேள்விகளை எழுப்பியது. இது எ
உடை. எனக்காகச் சின்ன அண்ணன் ஆர்டர் செய்
வாங்கி வந்தது. இது எப்படி இவளிடம் வந்தது? இவளுக்கு
அண்ணனுக்கும் என்ன தொடர்பு?

"யார் அவன்? அவனுக்கும் உனக்கும் என்ன
தொடர்பு?" - தன் மனதில் தோன்றிய அதே கேள்வியை
கணவன் கேட்டதும் துணுக்குற்றுத் திரும்பினாள்.

"அண்ணா! என்ன கேட்கிற நீ? நான்தான்
போன்லயே சொன்னேனே. அந்தத் தோட்டக்காரன் என்னை
கவனிக்காம கேட்டைப் பூட்டிட்டுப் போயிட்டான். அப்போ..."

"நான் அதைக் கேட்கல்ல. அவன் யாருன்னு
கேட்டேன்?"

"அவர் நம்ம சுஜா இருக்கால்ல? அ
ஹஸ்பண்ட்டோட தம்பி."

"அவளுக்கு இன்னும் கல்யாணமே ஆகலையே!"

"நாளை மறுநாள் கல்யாணம். இன்விடேஷன்கூட
வெச்சிட்டுப் போனாளே!"

"சரி! இவன்கூட உனக்கு எப்படிப் பழக்கம்?"

"இன்னிக்குக் காலையில கடைக்கு வந்திருந்தா
நீ கூட பார்த்திருப்ப."



"எதுக்கு வந்தான்?"

"மேரேஜ் ஹால்ல ப்ளவர் டெக்கரேஷன் பண்றதுக்கு டிஸைன் பார்க்க வந்தார். பொக்கேயும் வாங்கிட்டுப் போனார்."

"அப்போ... அவனை ஒரு முறைதான் பார்த்தேன்ற?"

"ஆமா!"

"அதுக்குள்ள எப்படி அவன் வீடு வரைக்கும் போனே? அதுவும் அவன் வீட்டுப் பாத்ரூம்ல குளிச்சி அவன் தந்த டிரெஸ்ஸ போட்டுட்டு வந்து நிக்கிற? என்ன தைரியத்தில அவன் வீடு வரை போனே?" - மாதவனின் சீற்றத்தில் குறிஞ்சி மட்டுமல்லாமல் நீலாவே அதிர்ந்து போனாள்.

தன் கணவன் கோபப்பட்டு அறிந்தாளில்லை. ஏன் அதிர்ந்துகூடப் பேசியதில்லை. இன்று ஏன் இத்தனை ஆவேசம்? அதுவும் அவன் சொன்ன விஷயங்கள் இன்னும் கலங்கடித்தன.

யார் வீட்டுக்குப் போனாள்? யாருடன் போனாள்? யார் தந்த உடை இது? நிச்சயமாய் இது என் உடைதான். ஆனால் இதைக் கொடுத்தது யார்? சின்ன அண்ணனா? பெரிய அண்ணனா? - நீலா தனக்குள் மருகிக் கொண்டிருக்க, குறிஞ்சியின் குரலில் வேகம் கூடியது.

"அண்ணா! என்னைப் பேச விடு. மழையில நனைஞ்சி கீழே விழுந்து ட்ரெஸ் எல்லாம் சேறு ஆகிடுச்சு. அதைக் கழுவிக்கணும்னுதான்..."

"அதுக்காக அவன் வீட்டுக்குப் போகணுமா? இருட்டு நேரம். அந்த வனாந்திரப் பகுதியில உனக்கு ஏதாவது ஒண்ணு ஆகியிருந்தா...?"

"அண்ணா! நான் ஒண்ணும் முட்டாளோ ஏமாளியே
இல்ல. எனக்கும் தைரியம் எச்சரிக்கை உணர்வு எல்லாம்
இருக்கு."

"தைரியமா? உனக்கா? அவ்வளவு தைரியம்
இருக்கிறவ அந்தக் கேட்ல ஏறிக் குதிச்சு வெளியே
வந்திருக்கலாமில்ல. ஏன் பயந்து போய் அடுத்தவன் கிட்
ஹெல்ப் கேட்டே...?"

"அண்ணா...!"

"இதோ பார் குறிஞ்சி! நான் ஏற்கெனவே
சொல்லியிருக்கேன். இந்த மாதிரி இடங்களுக்கு நீ போக
வேண்டாம்னு. நான் சொல்ற எதையுமே கேட்க மாட்டியா?"

"அண்ணா! நீ நினைக்கிற மாதிரி எதுவுமே
நடக்கலண்ணா."

"நடந்திடக் கூடாதேன்னுதான் நான் பயப்படுறேன்.
நடந்த பின்னாடி எதையும் மாத்த முடியாதும்மா." - என்றான்
நீலாவைப் பார்த்தபடி. அவளது கண்களிலிருந்து நீர்
வழிந்து கொண்டிருந்தது.

"இப்ப எதுக்காக என்னை நிறுத்தி வெச்சி விசாரிக்கிற?
எனக்கு ரொம்ப டயர்டா இருக்கு. நான் படுக்கப் போறேன்."

"நில்லு. அவன் வீட்லயே சாப்பிட்டாச்சா?"

"பைத்தியமா நீ? நான்தான் அந்த வீட்டுக்குள்ளேயே
போகலன்னு சொன்னேனே. அவர்கூட உன்கிட்ட
சொன்னாரில்ல?"

"இன்னொன்னும் சொன்னானே!"

"என்ன?" - புரியாமல் விழித்தாள் குறிஞ்சி.



"நாளைக்குப் பார்க்கலாம்னு எவ்வளவு துணிச்சலா
எம் முன்னாடியே சொல்றான். நீயும் கண்டிப்பான்னு
அசராம சொன்னியே!"

"கடவுளே! அண்ணா! நாளைக்கு அவங்க வீட்ல
போய் டெக்கரேஷன் பண்ணனும். அதைத்தான்
சொன்னார்."

"இல்ல. எனக்கு நம்பிக்கை இல்ல. அவன்
பார்வையே சரியில்ல. அதுல நிறைய வித்தியாசம் தெரியுது
குறிஞ்சி! உன் நல்லதுக்குத்தான் சொல்றேன். அவனைப்
பார்க்கிறதோ பேசுறதோ வேண்டாம்."

"ஏன்?"

"அதான் சொன்னேனே. அவன் பார்வையே
சரியில்லன்னு..." - என்ற மாதவனை உறுத்து விழித்தாள்.
முகத்தில் ஏளனம் படர அலட்சியமாய்ப் புன்னகைத்தாள்.

"பாம்பின் கால் பாம்பறியும் என்பார்களே... அது
இதுதானோ?"

"என்ன உளர்ற?"

"நீ அனுபவசாலி ஆயிற்றே... அதான் எல்லாரும்
உன்னை மாதிரியே இருப்பாங்கன்னு நினைக்கிற?" -
என்றாள் வெடுக்கென. மாதவனின் கண்கள் சிவந்தன.

"குறிஞ்சி!"

"சும்மா கத்தாதே. அவர் பார்வையிலோ எம் மேலயோ
எந்தத் தப்பும் இல்ல. தப்பு உன் பார்வையில தான் இருக்கு."

"குறிஞ்சி! சொல்றதைக் கேளு."

"மொதல்ல நான் சொல்றதை நீ கேளு. அவர் எனக்கு ஹெல்ப் பண்ணினவர். அதுமட்டும்தான் எம்மனசில இருக்கு. அவர்கிட்டயும் எந்தக் கெட்ட எண்ணமும் கிடையாது. உனக்குப் பயம். உன்னை மாதிரியே நானும் யாரையாவது இழுத்திட்டு வந்திடுவேனோன்னு பயப்படுற." - குறிஞ்சி கோபமாய்ச் சொல்ல, நீலா முகத்தை மூடிக் கொண்டு அழுதாள்.

மனைவியின் கண்ணீரைக் கண்டதும் கொதித்துப் போனான் மாதவன். கோபமாய் தங்கையின் தோளைப் பற்றித் திருப்பினான்.

"எதுக்கு எதை இழுக்கிறாய்?"

"நான் ஒண்ணும் இல்லாததைச் சொல்லலையே... உண்மையைத்தானே சொன்னேன். அந்தப் பயத்தில தானே என்கிட்ட இவ்வளவு கோபப்படுறே! துருவித் துருவி விசாரிக்கிறே?"

"குறிஞ்சி! தயவு செய்து புரிஞ்சுக்க. உன் நல்லதுக்குத்தான்..."

"போதுண்ணா! நான் ஒண்ணும் குழந்தை இல்லை. எனக்கும் நல்லது கெட்டது தெரியும். என் மனசுல தேவையில்லாத எண்ணங்கள் ஒரு நாளும் வராது. அப்படியே வந்தாலும் உன்னை மாதிரி மறைச்சி வைச்சிட்டு திடீர்னு ஒரு நாள் ரகசியமாக் கல்யாணம் பண்ணிட்டு வந்து நிற்க மாட்டேன்.

தைரியமா உன்கிட்ட... அப்பாகிட்ட எல்லாம் சொல்லி ஊரைக் கூட்டி கல்யாணம் பண்ணிப்பேன். திருட்டுக்



கல்யாணம் பண்ற அளவுக்கு மோசமான பொண்ணு இல்லை நான். என் அம்மாவும் என்னை அப்படி வளர்க்கலை!"

அதற்கு மேல் அங்கு நிற்க இயலாமல் நீலா கண்ணீரோடு தன் அறைக்குள் ஓட, முகம் முழுக்க வேதனையோடு தங்கையை ஏறிட்டான்.

"போதுமா! அவ அழுதிட்டுப் போறா? இதுக்காகத் தானே இவ்வளவு பேச்சுப் பேசின?"

"நான் ஒண்ணும் யாரையும் குத்திக் காட்டி பேசல்ல. குற்றம் உள்ள நெஞ்சு சுட்டா நான் என்ன பண்றது?"

"வேண்டாம் குறிஞ்சி! உண்மை எதுவும் புரியாம அடுத்தவங்க மனசைப் புண்படுத்தாதே. அது பெரிய பாவம்."

"இதையேதான் நானும் உனக்குச் சொல்றேன். நீயா சந்தேகப்பட்டு என் மனசைக் கஷ்டப்படுத்தாதே. என்னைப் பத்திக் கவலையும் படாதே. போ... போய் உன் பொண்டாட்டியை சமாதானப்படுத்து. இது தினமும் நடக்கிற கூத்துதானே! பெரிசா பேச வந்திட்டே...!" - எரிச்சலாய்த் தன் அறைக்குள் நுழைந்து கதவை படீரென அறைந்து சாத்தினாள்.

கோபமும் அவமானமும் இயலாமையுமாய் பற்களைக் கடித்துக் கொண்டு நின்றான் மாதவன்.

அறைக்குள் இருந்து நீலாவின் விசும்பல் கசிந்து வர, சட்டெனக் கோபம் தணிந்து நீண்ட பெருமூச்சுடன் மனைவியை நோக்கிச் சென்றான்.

## 6

ஒரு துளி கண்ணீரைத் துடைப்பது
அன்பு அல்ல - மறு துளி வராமல்
தடுப்பதே உண்மையான அன்பு!

கணவனின் மார்பில் சாய்ந்து அழு கொண்டிருந்தாள் நீலா. பொங்கி வழிந்த கண்ணீரை துடைத்து அவளது தலைகோதினான் மாதவன். அவன முகமும் அவளது குரலில் நெகிழ்ந்திருந்தது.

“நீலாம்மா! இப்படி அழுதிட்டே இருந்தா எப்படி? ஏன் இப்படி உன்னையே வருத்திக்கிற?”

“என்னாலதானங்க உங்களுக்கு இவ்வள அவமானம்? உங்க தங்கை உங்களை அவமானப்படுத்தும் போதெல்லாம் என் மனசு என்னைக் கொல்லுதுங்க...”

“அவ பேசுறதை எல்லாம் காதுல வாங்காதேம்மா!”

“எப்படிங்க? என் முன்னாலதானே உங்களைப் பேசுகிறாள்!”

“நீலா! அவ மேலயும் தப்பு சொல்ல முடியாது. அப்பாவும் குடும்பத்தையே மறந்து பொறுப்பில்லாம அலையுறாங்க. நானும் திடீர்னு உன்னைக் கூட்டிட்டு வந்ததும் ரொம்ப மனசொடிஞ்சுப் போயிட்டா. அந்தக் கோபம் அவளுக்கு.

அவகிட்ட ஒரு வார்த்தைகூடச் சொல்லலையேன்னு வருத்தம். நம்ப வைச்சுக் கழுத்தறுத்திட்டேன்னு நினைக்கிறா. மத்தபடி அவ நல்லவ... நீலா. சீக்கிரமே நம்மளைப் புரிஞ்சுப்பா. வருத்தப்பட...



கண்ணீரைத் துடைத்துக் கொண்டே எழுந்து அமர்ந்தாள் நீலா. “ஏங்க! நான் வேணா குறிஞ்சிகிட்ட எல்லாத்தையும் சொல்லிடட்டுமா!”

“என்ன சொல்லப் போறே?”

“உன் அண்ணன் மேல எந்தத் தப்பும் இல்லை. நான்தான் வழி தவறி...” - என்றவளின் வாயை மூடினான் மாதவன்.

“நீலா! என்ன பேசுற நீ? உன்கிட்ட எத்தனை முறை சொல்லியிருக்கேன். இதைப் பற்றிப் பேசக்கூடாதுன்னு...”

“இல்லங்க! தப்பு பண்ணினவ நான். நீங்க ஏன் பழியைச் சுமக்கணும்?”

“ஷ்! சத்தமாப் பேசாதே. நடந்தது நடந்ததாவே இருக்கட்டும். இப்ப நீ என் மனைவி. என் மனைவி எப்பவும் யார் முன்னாலயும் தலை குனியக்கூடாது. அதுக்காக... எத்தனை பேச்சுக்களையும் நான் கேட்டுக்குவேன்.”

மீண்டும் கண்ணீர் உடைப்பெடுக்க, கணவனின் மடியில் சாய்ந்தாள்.

“உங்களைக் கணவனா அடைய நான் என்னங்க தவம் பண்ணினேன்? கடைசி வரைக்கும் இந்த அன்பு மட்டும் போதுங்க. வேற எதுவும் வேண்டாம்.”

“என் அன்பு எப்பவும் மாறாது நீலா! முதல்ல நீ இப்படி அழுகுறதை நிறுத்து. எதுக்காக அழறே? உன்னையே நீ தாழ்வா நினைச்சுக்காதே. முதல்ல உன் குற்ற உணர்வைத் தூக்கி எறி. உன் மேல எந்தத் தப்பும் இல்லை.”

"நான் தப்புப் பண்ணலையா? ஐயோ! மன்னிக்கவே முடியாத பெரிய தப்புப் பண்ணியிருக்கேன்."

"ம்ப்ச்! இந்த எண்ணத்தைத்தான் அழிச்சிடுங்கிறேன். நடந்து முடிஞ்சதைப் பத்திப் பேசுறதால மனவருத்தம்தான் அதிகரிக்கும். நடந்ததை மாத்த முடியாது. ஆனா இனிமே நடக்கப் போறதைத் தீர்மானிக்கலாம். சந்தோஷமா மாத்தலாம்."

"ஆனா... என்னால முடியலையே!"

"முடியணும். முடியும்... முதல்ல இப்படி வீட்டுக் குள்ளேயே அடைஞ்சு கிடக்காதே. நாளையில இருந்து என்கூடக் கடைக்கு வா."

"கடைக்கா...? நானா?"

"ஆமா! வந்து பொக்கே செய்யக் கத்துக்கோ. கத்துக்கலைன்னாக்கூட பரவாயில்லை. அந்தப் பூக்களை யெல்லாம் பாரு. உன் வருத்தமெல்லாம் மாயமா மறைஞ்சிடும். சரியா!"

"ஏங்க! நான் கடைக்கு வந்தா உங்க தங்கைக்குப் பிடிக்காதே!"

"அவளைப் பார்த்து ஏன் பயப்படுறே நீலா? அவ உன்னைவிடச் சின்னப் பொண்ணு. நீ அவளோட அண்ணி. என்னோட மனைவி. இந்த வீட்டோட மருமகள். இத்தனை அதிகாரம் உனக்கு இருக்கு. இந்த அதிகாரத்தோட தைரியமா கடைக்கு வா.

குறிஞ்சி என்ன கேட்டாலும் தைரியமாப் பேசு. அவளைக் கண்டாலே பதுங்காதே. தைரியமா ஃபேஸ்



பண்ணு. அவ இன்னொரு குடும்பத்துல போய் வாழப் போறவ... அவளுக்குத் தாயா தகப்பனா... நாமதான் இருக்கோம்னு புரிய வை."

"ஏங்க! இதெல்லாம் நடக்குமா?"

"நடக்கும். என் தங்கை ரொம்ப நல்லவ. அவளுக்கு உன் மேல எந்தக் கோபமும் இல்லை. அவ வருத்தம், கோபம் எல்லாம் என் மேலதான். நான் செய்ததை அவளால இன்னும் ஏத்துக்க முடியலை. மத்தபடி கடையில இருக்கும்போது சாதாரணமாகத்தான் இருப்பாள். இந்தக் கோபமெல்லாம் சீக்கிரம் மாறிடும்மா..."

"அது போதுங்க... அவ என்னை அண்ணியா ஏத்துக்காட்டியும் பரவாயில்லை. உங்களை வெறுக்காம இருந்தா போதும்."

"உன்மேல அவளுக்கு எப்பவும் பிரியம் இருக்கு நீலா! வீட்டுக்குள்ளேயே அடைஞ்சு கிடக்கிறியேன்னு பரிதாபப் படுவாள். நீ மட்டும் அவகிட்ட நெருங்கிப் பேச ஆரம்பிச் சிட்டாப் போதும். ஈஸியா ஒட்டிப்பா!

அதை விட்டுட்டு வேற எதையாவது பேசி உன்னை நீயே குறைச்சுக்காதே. எப்பவும் என் மனைவியா தலைநிமிர்ந்து நிக்கணும். இந்தக் கண்ணீர், பயம்... இதையெல்லாம் தூக்கிப் போட்டுடு. இனிமே நீ புது நீலாவா மாறணும். சரியா!"

"ச... சரிங்க."

"குறிஞ்சி என்ன சொன்னாலும் கலங்கக் கூடாது. சாமர்த்தியமாப் பேசிப் பதிலடி கொடுக்கணும். புரியுதா?"

"ம்..."

"அதுக்காக ரெண்டு பேரும் குடுமிப்பிடி சண்ட போட்டுக்காதீங்க. அப்புறம் என்பாடு திண்டாட்டமாயிடும்!" கணவன் பாவனையோடு சொல்ல நீலாவின் முக புன்னகைத்தது.

"அப்படியெல்லாம் சண்டை போட மாட்டோம்."

"ம்... இதே மாதிரி சிரிச்சாப் போதும். இந்த புன்னகையே குறிஞ்சியைச் சாய்ச்சிடும்...." – என்றது இதமாய்ச் சிரித்தாள்.

"ஏங்க! உங்களுக்கு ஏன் அவ்வளவு கோபம் வந்தது?

மாதவனின் முகம் புன்னகையைத் தொலைத்தது "டென்ஷன் நீலா! சாயந்திரத்தில இருந்து அவளை காணலைன்னு பைத்தியக்காரன் மாதிரி சுத்திக்கிட் இருக்கேன். ஒரு ஃபோன்கூடப் பண்ணலை தெரியுமா என்னன்னு நினைப்பேன்...? கொஞ்ச நேரத்தி என்னென்னவோ நினைப்பெல்லாம் வந்திடுச்சி.

இவ என்னன்னா எந்த டென்ஷனும் இல்லாம குளிச் டிரஸ் மாத்திட்டு வர்றா. ஒரு அண்ணனா நான் எப்படி கொதிச்சுப் போயிருப்பேன் சொல்லு... அதோட அவ பார்வை! அதில எவ்வளவு ரசனை தெரியுமா! கூட பொறந்தவளை என் கண் முன்னாடி ஒருத்தன் வெறிச்சு பார்த்தா எனக்கு எப்படி இருக்கும்... சொல்லு!"

"யாருங்க அது?" – படபடக்கும் இதயத்தோ கேட்டாள்.

"ம்ப்ச்! அவன் பேரைக் கூட கேட்டுக்கலை. இதி வீட்டுக்குள்ள



"போனீங்களா?"

"அங்கே நிற்கவே பிடிக்கலை. பிறகெப்படி உள்ளே போவேன்? பேசாம கிளம்பி வந்திட்டேன்."

"ஏங்க!"

"என்னவோ தெரியலை நீலா. எனக்கு இப்பல்லாம் யாரைப் பார்த்தாலும் கொஞ்சம் பயமாத்தான் இருக்கு."

"ஏன்?"

"என் தங்கைக்கு உன்னை மாதிரி எதுவும் நடந்திடக் கூடாதுன்னு மனசு கிடந்து அடிச்சுக்குது. நீலா! நான் உன்னைக் குறிப்பிட்டுச் சொல்லலை. தயவு செய்து தப்பா எடுத்துக்காதே!"

"இல்லங்க! உங்களை எப்படித் தப்பா நினைப்பேன்? உங்களை என் கடவுளாத்தான் நினைச்சிட்டு இருக்கேன். நீங்கள் கடவுள்தான்!"

"வேண்டாம்மா... திரும்பவும் பழைய கதைக்குப் போயிடாதே. இனிமே நடக்கிறதைப் பற்றிப் பேசலாம். நாளையில இருந்து நீ கடைக்கு வர்ற?"

"சரிங்க..."

"குறிஞ்சியை மட்டுமில்ல வெளியாட்கள் எல்லாரையும் தைரியமா எதிர்கொள்ளணும். இத்தனை நாளும் வீட்டுக்குள்ளேயே அடைஞ்சி கிடந்தது போதும். இனி இந்த சிறைவாசம் போதும்."

"இது சிறைவாசம் இல்லைங்க. நான் செய்த தப்புக்கு எனக்கு நானே கொடுத்துகிட்ட தண்டனை. பெத்தவங்களை... கூடப் பொறந்தவங்களை எல்லாரையும் தலைகுனிய

வெச்சுட்டு என் ஆசைதான் முக்கியம்னு வீட்டை விட்டு வெளியே வந்தேனே... அதுக்கான தண்டனை இது!"

"நீலா... ப்ளீஸ்! ஏன் போனதையே பேசிட்டு இருக்க... நடந்ததையெல்லாம் கெட்ட கனவா நினைச்சு மறந்திடு."

"முடியலைங்க. என்னால முடியலை... ஏதோ வேகத்தில வந்திட்டேன். ஆனா ஒவ்வொரு நிமிஷமும் பெத்தவங்களோட நினைப்பும் தூக்கி வளர்த்தவங்களோட நினைப்பும் என்னை வாட்டியெடுக்குது. என்னால அவங்க எவ்வளவு அவமானத்தை... வேதனையை அனுபவிப்பாங்களோன்னு நினைக்கும்போது நெஞ்சே வெடிச்சிடும் போலிருக்கு..." - சொல்லும்போதே கண்ணீர் மீண்டும் உடைப்பெடுத்தது.

"வயசுப் பொண்ணுங்களுக்கு எப்பவுமே நிதானமும் பொறுமையும் வேணும் நீலா. வாழ்க்கையைத் தேர்ந்தெடுக்கிற பொறுப்பும் பொறுமையும் நம்மைப் பெத்தவங்களுக்குத்தான் இருக்குன்னு நம்பணும். அந்தப் பொறுப்பை அவங்ககிட்டயே ஒப்படைச்சிடணும்.

நாமெல்லாம் சின்னவங்க. நமக்கு என்ன தெரியும்? இந்த அறியாத வயசில எதையும் ஆராயாம... மின்மினிகளையெல்லாம் வைரம்னு நினைச்சி ஏமாந்திடுறோம். இனிக்க இனிக்கப் பேசுறவங்களோட... சுயரூபம் தெரியும்போது மனசொடிஞ்சு தற்கொலை முடிவை எடுத்திடுறீங்க.

இப்படி எல்லா முடிவையும் அவசரமாகவே எடுத்து அதுவும் தப்பான முடிவா எடுக்கிறீங்க. ஒரே ஒரு நிமிஷமாவது பெத்தவங்களை நினைச்சுப் பார்த்தா இந்த முடிவை எடுக்க மனசு வருமா?



உங்களைப் பெத்து... பார்த்துப் பார்த்து வளர்த்தவங்களுக்குத் தெரியாதா? நம்ம புள்ளைக்கு எப்படிப்பட்ட மாப்பிள்ளை பார்க்கணும்னு... அதுக்குள்ள அவசரப்பட்டு ஏன் ஆபத்தில மாட்டிக்கிறீங்க? இந்த மாதிரியான காரியத்தால எத்தனை குடும்பம் மான, அவமானத்துக்குப் பயந்து உயிரை விட்டிருக்கு தெரியுமா?"

நீலா பதறி கண்களை மூடிக் கொண்டாள். "போதுங்க... இதுக்கு மேலே எதுவும் சொல்லாதீங்க. எனக்கு... பயம்மா இருக்கு!" - உடல் நடுங்கக் கூறியவளைத் தன்னோடு அணைத்துக் கொண்டான்.

"ஸாரிம்மா.... வெரி ஸாரி. மறந்திடுன்னு சொல்லிட்டு நானே நினைவுபடுத்துறேனா... ஸாரிம்மா...!"

"நான் தப்பு பண்ணிட்டேங்க. பெரிய தப்பு பண்ணிட்டேன். எனக்கு மன்னிப்பே கிடையாது!" - குலுங்கி அழுதாள்.

"போனது போகட்டும்மா... இப்பவாவது சொல்லு. உன் வீடு எங்கே இருக்கு? உன் அப்பா பேரு என்னன்னு சொல்லு... நான் எப்படியாவது அவங்ககிட்ட பேசி சமாதானப்படுத்துறேன்."

பதட்டமாய் மறுத்தாள். "ஐயோ! வேணாங்க... அவங்களைப் பொறுத்தவரை நான் எப்பவோ செத்துப் போயிருப்பேன். இனிமே அவங்க முகத்தில போய் விழிக்க வேண்டாம். எல்லாருமே என்னை மறந்திருப்பாங்க. என்னால ஏற்பட்ட ரணம் ஆறியிருக்கும். அது ஆறட்டும்.

என்னால அது திரும்பவும் புண்ணாக வேண்டாம். நான் யாரையும் பார்க்க வேண்டாம். நான் எங்கே இருக்கேன்னு யாருக்கும் தெரிய வேண்டாம்."

"என்னம்மா இது? தினம் தினம் அவங்களை நினைச்சு நீ அழறியே?"

"அவங்களைக் கதற வைச்சிட்டு வந்தேனே... அந்த பாவத்துக்கு நான் கண்ணீர் விட்டுத்தானே ஆகணும்..."

"நீலா! இப்படி உன்னையே வருத்திக்காதே. உன் வீட்டு அட்ரஸ் சொல்லு. நான் போய்ப் பேசுறேன். என்ன நடந்ததுன்னு எடுத்துச் சொன்னா புரிஞ்சுப்பாங்க..."

"வேண்டாங்க... உசுரையே விட்டுடுவாங்க. எங்க அண்ணனுங்க உங்க பேச்சை நின்னு நிதானமாக் கேட்க மாட்டாங்க. கொன்னே போட்டுடுவாங்க..."

"ஓ! உனக்கு அண்ணன் இருக்காங்களா? சொல்லவே இல்லையே?"

"சொல்லி என்ன ஆகுப் போகுது. யாரும் என்னிடம் வந்து உறவு கொண்டாடப் போறதில்லை. எனக்கு அந்தத் தகுதியும் இல்லை. எல்லாத்தையும் இழந்திட்டேன். நான் எல்லாத்தையும் இழந்திட்டேன்..." - மீண்டும் அவள் அழத் துவங்க, மாதவன் பெருமூச்சுடன் படுக்கையில் சாய்ந்தான்.

'எத்தனை முறை எத்தனை விதமாய்க் கேட்டாலும் கண்ணீரை மட்டுமே பதிலாகத் தருகிறாள். திருமணமாகி இரண்டாண்டுகள் முடிந்தும் போயிற்று. இன்னமும் இவளது நம்பிக்கைக்கு உரியவனாய் நான் நடந்து கொள்ளவில்லை. அனைத்துப் பாரங்களையும் சோகங்களையும் இறக்கி வைக்கும் சுமைதாங்கியாய் இருக்கின்றேனே!

என்னிடம் ஏன் மனம் திறந்து பேச மறுக்கிறாள்? தான் பிறந்த கதை... வளர்ந்த கதை...



கூடாதவனை நம்பி ஏமாந்த கதை... எல்லாவற்றையும் சொன்னவள்... தன் பிறந்த வீட்டைப் பற்றி மட்டும் மூச்சு விட்டதில்லை.

எத்தனை செல்லமாய் வளர்க்கப்பட்டிருப்பாள் என்று புரிந்தது. வேலை செய்து அறியாத பிஞ்சு விரல்கள். கல்லில் மண்ணில் நடந்திராத பூப்போன்ற பாதங்கள். வெயில் படாத சருமம். இன்னும் பால்மணம் மாறாத குழந்தை முகம். இந்த முகத்தைப் பார்த்தால் ஏமாற்றத் தோன்றுமா?

இந்தக் குழந்தைப் பெண்ணை எப்படி ஏமாற்றினான் அவன்? பெற்றவர்களிடமிருந்து பிரித்து எமனிடம் கொடுக்க எப்படி மனசு வந்தது? சாகும் வயதா இவளுக்கு? நல்ல வேளையாய் என் கண்ணில் பட்டாள். இல்லையென்றால் பாறையில் சிதறி உயிரை விட்டிருப்பாள்.

இந்தப் பூப்போன்ற உடல் இரத்தமும் சதையுமாய் சிதறிப் போயிருக்கும். தன் மகள் எங்கோ வாழ்ந்து கொண்டிருக்கிறாள் என்ற எண்ணத்தில் பெற்றவர்கள் தங்கள் காலத்தைக் கடத்தியிருப்பார்கள்! யார் அவர்கள்? இவளைப் பெற்ற அந்த அப்பாவிப் பெற்றோர் எங்கே இருக்கின்றனர்?

அநாதை என்று சொன்னது பொய். இதோ இன்று இவளது வாயால் உண்மை வந்துவிட்டது. அண்ணன்கள் இருக்கிறார்கள். பெற்றவர்கள் இருக்கிறார்கள். இது போதும். இனி இவளைக் கொஞ்சம் கொஞ்சமாய்ப் பேச வைத்து விடலாம்.'

“என்னாங்க?”

“ம்...”

“எழுந்திருங்க.... சாப்பிட்டுப் படுங்க.”

“பசி இல்லைம்மா...”

“நான் உங்களுக்காகச் சப்பாத்தி, பட்டாணி குருமா எல்லாம் செய்து வைத்திருக்கேன். ரெண்டே ரெண்டு சாப்பிட்டுப் படுங்க. ப்ளீஸ்!” - அவளது கெஞ்சலில் மற்றவற்றை ஒதுக்கிவிட்டுப் புன்னகையோடு எழுந்து அமர்ந்தான்.

“பட்டாணிக் குருமாவா? நீயா செய்தே?”

“ம்... பக்கத்து வீட்டு ஆன்ட்டிகிட்ட கேட்டு நானே பண்ணினேன். சாப்பிட்டுப் பார்த்து எப்படி இருக்குன்னு சொல்லுங்க.”

“சாப்பிடற மாதிரி இருக்குமா?”

“என்னங்க... இப்படிக் கேட்கிறீங்க?” - லேசாய் சிணுங்கினாள்.

“இல்லைம்மா... ராத்திரி நேரம். வெளியே மழை வேற பெய்துட்டு இருக்கு. இந்த நேரம் உடம்பு ஒண்ணுன்னா டாக்டர்கிட்ட கூட போக முடியாது. அதான்...”

“அப்போ... என் சமையல் அவ்வளவு மோசமாவா இருக்கு?”

“சேச்சே! அப்படிச் சொல்ல முடியாது. இருந்தாலும்...”

“பார்த்தீங்களா! உங்களுக்கு நம்பிக்கையே இல்லை. சரி... யாரும் சாப்பிட வேண்டாம். நான் தெருவில கிடக்கிற நாய்க்கே போட்டுடுறேன்...” - என எழுந்தாள்.



“வேண்டாம்மா... நானே சாப்பிடுறேன். பாவம்! வாயில்லா ஜீவனை ஏன் வதைக்கணும்?”

“ம்... ம்... இப்படியெல்லாம் சொன்னா நான் அழுதிடுவேன்.”

“வந்திட்டேன்... வந்திட்டேன்... சாப்பிடுவோம். வா... வா...” - என எழுந்து மனைவியை அழைத்துக் கொண்டு அறையை விட்டு வெளியேறியவனின் கண்கள் தங்கையின் மூடிய அறையைக் கண்டதும் தயங்கி நின்றது.

“என்னாங்க?”

“நீலா! பாவம் குறிஞ்சி. என் மேல உள்ள கோபத்தில சாப்பிடாமலே படுத்திட்டா. நான் போய் அவளை எழுப்பிட்டு வர்றேன். நீ போய் டிஃபனை எடுத்து வை.”

“நானும் வரட்டுமா?”

“வேண்டாம்மா... உன்னைப் பார்த்தா கோபப்படுவா.”

“எத்தனை நாள்தான் நான் பயந்திட்டே இருக்கிறது. நேருக்கு நேரா ஃபேஸ் பண்ண வேண்டாமா! நானே போறேன்.”

“அடேயப்பா! நீலா மேடத்துக்குத் தைரியம் வந்திடுச்சு. சென்று வா மகளே... வென்று வா!” - கை உயர்த்தி ஆசிர்வதித்தான்.

“நீங்க போய் கை, கால் அலம்பிட்டு வாங்க. நான் குறிஞ்சியோட வர்றேன்...” - என்றவாறு குறிஞ்சியின் அறையைத் திறந்து மெல்ல நுழைந்தாள்.

இதயம் தடக் தடக்... என அடித்துக் கொண்டது. இந்த வீட்டுக்கு வந்த நாள் முதலாய் இதுவரை குறிஞ்சி தன்னிடம்

பேசியதில்லை. நேருக்கு நேராய் முகத்தைப் பார்க்கக் கூட மாட்டாள். நீலா கிச்சனில் நின்றால் காபிகூட அருந்தாமல் கடைக்குக் கிளம்பி விடுவாள்.

அதற்குப் பயந்தே குறிஞ்சி குளித்துச் சாப்பிட்டுவிட்டு புறப்படும் வரை நீலா தன் அறையை விட்டு வெளியே தலைகாட்ட மாட்டாள். அண்ணனுடன் இயல்பாக பேசினாலும் தன்னைக் கண்டதும் குறிஞ்சியின் முகம் கடுத்துவிடும். உடனே எழுந்து போய் விடுவாள்.

இத்தனை வெறுப்பை உமிழ என்ன காரணம் என்று புரியவில்லை. ஆனால் தன் அண்ணனை மணந்து கொண்டாள். அதுவும் சொல்லாமல் கொள்ளாமல். திடீரென மாலையும் கழுத்துமாய் வந்து நின்றதில் உடைந்து போனாள் என்று புரிந்தது.

நாளடைவில் இந்த வெறுப்பு மாறிவிடும் என்று எண்ணியவளுக்கு ஏமாற்றமே மிஞ்சியது. இதோ இன்று வரை காய்ச்சிக் கொண்டுதான் இருக்கிறாள். ஆனால் நேரிடையாய் எதையும் பேச மாட்டாள். திட்ட மாட்டாள். அண்ணன் மீது மட்டுமே பாய்வாள்.

இப்போது உள்ளே சென்று எழுப்பினால் என்ன செய்வாள்? கத்துவாளோ? கோபப்படுவாளோ? எது நடந்தாலும் சரி. இன்று அவளிடம் பேசியே ஆகவேண்டும். அதோடு அவளிடம் நிறையக் கேள்விகள் கேட்க வேண்டும். முதலில் இந்த டிரஸ்... இது எப்படி வந்தது... என்று தெரிந்தே ஆக வேண்டும்.

மனதில் துணிவைத் திரட்டிக் கொண்டு கட்டிலை நெருங்கினாள். நெருங்கும்போதே வித்தியாசத்தை உணர்ந்தாள். கழுத்து வரை மூடியிருந்த போர்வை குறிஞ்சியின் உடல் நடுங்கிக் கொண்டிருந்தது. லேசான முனகல் கேட்டது. மின்விசிறி பரபரவெனச் சுற்றிக் கொண்டிருந்தது.

விழித்துத்தான் இருக்கிறாளா? ஆனால் உடல் ஏன் இப்படி உதறுகிறது? குளிர்கிறதோ? சுவரோடு பதிந்திருந்த ஸ்விட்ச் போர்டை நெருங்கி ஃபேன் சுவிட்சை நிறுத்தினாள். இப்போது முனகல் தெளிவாய்க் கேட்க, பதட்டமாய்க் கட்டிலை நெருங்கி குறிஞ்சியைத் தொட, உடல் அனலாய்க் கொதித்தது.

"ஐயோ! குறிஞ்சி... என்னாச்சும்மா? குறிஞ்சி..." - குரல் கொடுத்துக் கொண்டே கன்னங்களைத் தொட, கண்களைத் திறக்க முடியாமல் திணறலாய் முனகினாள்.

"ம்... ம்... ம்மா! அ.. அண்ணி! என்னால... முடியல்ல... முடியல்ல..!"

"ஐயோ! என்னங்க! ஓடி வாங்களேன். சீக்கிரமா வாங்களேன்..." - மனைவியின் கூக்குரலில் முகம் கழுவிக் கொண்டிருந்த மாதவன் வேகமாய் ஓடிவர, குறிஞ்சியைத் தன் மடி மீது கிடத்திப் பதறிக் கொண்டிருந்தாள் நீலா.

**வி**டிந்து வெகுநேரம் ஆன பின்னும் படுக்கையை விட்டு எழ மனமில்லாமல் படுத்திருந்தான் யுவராஜன். அவனருகே அந்த மலர்ச்செண்டு. குறிஞ்சி தந்த ரோஜாச் செண்டு. அதை மெல்ல வருடினான்.

'ஏய்! யார் நீ? இத்தனை நாளாய் எங்கே இருந்தாய்? இந்த ஊட்டியில் நான் போகாத இடமே இல்லை. ஆனால் இதற்கு முன் ஒருமுறை கூட நீ என் கண்ணில்

பட்டதேயில்லையே! இத்தனை நாளாய் கண்ணாமூச்சி ஆடினாயோ?

இப்போது மட்டும் ஏன் என் எதிரில் வந்தாய்? அதுவும் பார்த்து முழுதாய் ஒரே நாளில் அடியோடு சாய்த்து விட்டாயே... பார்! உன்னால் நேற்று இரவு முழுக்க நான் உறங்கவில்லை. என் கண்களைப் பார்... எப்படி சிவந்திருக்கிறது என்று! நான் இதுவரை இப்படி உறக்கம் வராமல் புரண்டதில்லை, தெரியுமா?

விடிந்த பிறகு ஒருநாளும் தூங்கியதில்லை. அதிகாலையில் எழுந்து நடைப்பயிற்சி, உடல் பயிற்சி என என் வேலையை ஆரம்பித்து விடுவேன். இப்படி மொத்தமாய் மாற்றி விட்டாயே... இன்னிக்கு வருவே இல்ல... வந்து பார். உன்கிட்ட பேசிக்கிறேன்.

இப்படியா ஒருத்தனைப் பைத்தியமாக்குவது? உன் கண்ணில் என்ன வசிய மை வைத்துள்ளாயா? உன் கண்களைப் பார்த்த என்னால் வேறு ஒருவரையும் பார்க்கப் பிடிக்கவில்லையே... வீடு முழுக்க உறவினர் கூட்டம். தலைக்கு மேல் கல்யாண வேலை இருக்கிறது.

ஆனால் என்னால் வழக்கம் போல் ஓடியாடி வேலை செய்ய முடியவில்லையே! தனிமையில் அமர்ந்து இதேபோல் உன்னுடன் பேசிக் கொண்டே இருக்க வேண்டும் என்று தோன்றுகிறதே... இதற்கு என்ன அர்த்தம்?'

"தம்பி! உனக்கு என்னடா ஆச்சு? ஃபோன்ல பேசுறேன்னு பார்த்தால் தனியா பேசிட்டு இருக்கே?" - என்றவாறே நுழைந்த கார்த்திக்கைப் பார்த்ததும் அசடு வழிய எழுந்து அமர்ந்தான்.



"எப்போண்ணா வந்தே?"

"என்னவோ அர்த்தம் கேட்டுட்டு இருந்தியே... அப்பத்தான் வந்தேன்."

"தப்பிச்சேன். ஆமா! என்ன நீ அதிசயமா எழுந்து குளிச்சிட்டு மாப்பிள்ளை மாதிரி வந்து நிற்கிற?"

"டேய்! நான் மாப்பிள்ளைதான்டா... மறந்திட்டியா? எனக்குக் கல்யாணம்."

"என்ன அண்ணா நீ? அதுகூடத் தெரியாமலா இருக்கேன்."

"பின்னே... இவ்வளவு நேரம் ரூம்லயே அடைஞ்சு கிடந்தா என்ன அர்த்தம்? நைட் எப்படா வீட்டுக்கு வந்தே?"

"அது ரொம்ப நேரமாச்சு..."

"ஏன்டா? இன்விடேஷன் கொடுத்திட்டு வர ஏன் அவ்வளவு நேரம்?"

"அ... அது... நேற்று ஒரே மழையில்லையா? அதுல மாட்டிக்கிட்டேன்."

"ஏன்? கார்லதானே போனாய்? பிறகென்ன?"

"என்ன.... நீ? சி.பி.ஐ. மாதிரி விசாரிச்சிட்டு இருக்கே... போ. போய் வேற வேலை இருந்தா பாரு."

"டேய்! என்னடா? நான் பேசுற டயலாக் எல்லாம் நீ பேசுற... ஆமா! ஏன் முகத்தைப் பார்த்துப் பேச மாட்டேங்கிறே? என்னடா எதுவும் தப்பு பண்றியா?" - கார்த்திக் கேலியாய்க் கேட்க, திடுக்கென நிமிர்ந்தான் யுவராஜன்.

அவனது கண்களைப் பார்த்தவன் முகத்தைச் சுருக்கினான். "யுவா! ஏன் கண்ணெல்லாம் சிவந்திருக்கு? தண்ணி அடிச்சியா?"

"சீச்சி! என்ன கேட்கிற நீ?"

"பின்னே ஏன்டா கண்ணெல்லாம் சிவந்திருக்கு, உண்மையைச் சொல்லுடா!"

"நைட்டெல்லாம் தூங்கலைண்ணா... அதான்."

"ஏன் தூங்கலை? எப்பவும் படுத்ததும் தூங்கிடுவியே?"

"ஆமா... ஆனா நேத்துத் தூக்கம் வரலை. தூங்கவும் முடியலை!"

"அதான்... ஏன்னு கேட்கிறேன்?"

"அது... வந்து... அண்ணா! நான் நேற்று ஒரு..."

"நம்ம பழைய வீட்டுக்குப் போனியா?" – கார்த்திக்கின் குரல் மாறியது.

"ம்... போனேன்."

"நினைச்சேன். அதான் உன் தூக்கம் போயிருக்கு. நீ ஏன்டா அங்கெல்லாம் போற?"

"ஏண்ணா?"

"அங்கே போனா... அவ நினைவு வந்து கொல்லுதுன்னுதான் நாங்களே அவாய்ட் பண்றோம். நீ மட்டும் ஏன் தினமும் ஓடுறே? போய் ஏன் உன் துக்கத்தைக் கூட்டிக்கிறே? நம்மையெல்லாம் விட எவனோ ஒருத்தன்தான் முக்கியம்னு போனவளை நினைச்சி நாம ஏன்டா அழணும்?



மொதல்ல அந்த வீட்டை வித்துத் தொலைக்கணும்..." – கண்களில் கோபச் சிவப்போடு கார்த்திக் கர்ஜிக்க...

யுவராஜனின் உடல் முழுக்க அதிர்ந்தது. அதுவரை மனதில் தோன்றியிருந்த உற்சாகம் சட்டென வடிந்து போனது.

# 7

எப்போதும் மறக்காமல் இருப்பது
அன்பல்ல எது நடந்தாலும் வெறுக்காமல்
இருப்பதுதான் உண்மையான அன்பு!

குறிஞ்சி கண் விழித்தபோது மறுநாள் ஆகியிருந்தது. உடல் முழுக்க அசதியாய் இருக்க... தீயாய் காந்திய விழிகளில் முதலில் பட்டது நீலாதான். படுக்கை அருகே போடப்பட்டிருந்த ஸ்டூலில் அமர்ந்து கண்களை மூடி... இருகரம் கூப்பிக் கடவுளை வேண்டிக் கொண்டிருந்தாள்.

உதடுகள் எதையோ உச்சரித்துக் கொண்டிருக்க... கண்களின் ஈரம் கசிந்து இமைகள் நனைந்திருந்தன. கலைந்த தலையும் வறண்ட முகமுமாய் அமர்ந்திருந்தவளைக் கண்டதும் மனம் இளகியது. மெல்லக் கைநீட்டித் தொட்டாள்.

"அ... அண்ணி!" – காதுகளைத் தீண்டிய மெல்லிய குரலில் சடக்கெனக் கண்களைத் திறந்தாள் நீலா. குறிஞ்சியைக் கண்டதும் முகம் பிரகாசித்தது. பரிவோடு நடுங்கும் விரலால் அவளது முகத்தை வருடினாள்.

"குறிஞ்சி! கண் விழிச்சிட்டியா? முருகா! நாங்க ரொம் பயந்து போயிட்டோம். டாக்டர்கூட பயமுறுத்திட்டார். இப் உடம்புக்கு எப்படி இருக்கும்மா?"

"ம்... உடம்பெல்லாம் வலிக்குது... அண்ணி!"

"நைட் முழுக்க ஜுரம் நிற்கவே இல்ல... டாக்டரு எத்தனையோ ஊசி போட்டுட்டார். நானும் உன் அண்ணனும் பயந்தே போயிட்டோம். இப்பக்கூட இரத்தம் எடுத்திட்டுப் போறாங்க. டெஸ்ட் பண்ணணுமாம்."

"எ... என்ன? நான் ஹாஸ்பிடல்லயா இருக்கேன்?" கண்களைச் சுழற்றினாள்.

அப்போதுதான் மருத்துவ உபகரணங்களும் இடக்கையில் செருகப்பட்டிருந்த ஊசியும் புலப்பட்டது. அறை முழுக்க மருத்துவமனைக்கே உரிய நெடி.

"ஆமாம்மா... நேத்து நைட்டே வந்திட்டோம். உனக்கு ரொம்ப முடியாமப் போச்சே...!"

"என்ன? அப்போ... நைட்டெல்லாம் நீங்களும் இங்கேதான் இருந்தீங்களா?"

"பின்னே! உன்னை விட்டுட்டு எப்படிம்மா போக முடியும்?"

"அ... அண்ணன் எங்கே?"

"இவ்வளவு நேரமா இங்கேதான் இருந்தாங்க. இப்பத்தான் பிளட் டெஸ்ட் ரிப்போர்ட் வாங்கிட்டு வர்றேன்னு போனாங்க."

"எனக்கு எதுக்கு அண்ணி... அந்த டெஸ்ட்டெல்லாம்! இது சாதாரணக் காய்ச்சல். நேற்று முழுக்க மழையில



நனைஞ்சேன்ல... அதான். ரெண்டு மாத்திரை போட்டாலே போதும். ஏன் இங்கே கூட்டிட்டு வந்தீங்க?"

"என்னம்மா இப்படிக் கேட்கிற? நேத்து ராத்திரி உடம்பு என்னம்மா தூக்கிப் போட்டது? நெருப்பாக் கொதிச்சது. கண்ணைக் கூடத் திறக்க முடியாம இருந்தியே... இப்பல்லாம் விஷ ஜுரம் பரவுதுன்னு சொல்றாங்க. கண்ட மாத்திரையைப் போட்டுட்டு அலட்சியமா இருக்கக் கூடாது."

"இல்லை... நான்... இன்னிக்கு எனக்கு நிறைய புரோக்ராம் இருக்கு. பொக்கே ஆர்டர் இருக்கு. சுஜாவோட மேரேஜ் ஹால் டெக்கரேட் பண்ணனும்."

"அதெல்லாம் செய்ய ஆள் இருக்கும்மா... நீ பேசாம படுத்து ரெஸ்ட் எடு..." - என்றவாறே கையில் மருந்துகளோடு உள்ளே நுழைந்தான் மாதவன்.

"என்னங்க! ரிப்போர்ட் வாங்கிட்டீங்களா? என்ன சொன்னாங்க?"

"ஏதோ விஷக் காய்ச்சலாம். ஒரு வாரம் ரெஸ்ட் எடுக்கணுமாம். மாத்திரை மருந்து தந்திருக்காங்க. காய்ச்சல் திரும்பிடாம பார்த்துக்கணுமாம்."

"அண்ணா! எனக்கு ஒண்ணும் இல்லை. எனக்கு நிறைய வேலை இருக்கு. வா... நம்ம வீட்டுக்குப் போயிடலாம்."

"வேண்டாம்மா... நீ ரெஸ்ட் எடு. அண்ணி கூடவே இருப்பா... நான் போய் மத்த வேலைகளைக் கவனிச்சிக்கிறேன்."

"இல்லைண்ணா... ஃபிளவர் டெக்கரேஷன் வேலையெல்லாம் நான் போனாத்தான் சரியா வரும்."

"நானும் நல்லாவே செய்வேன். உனக்கு முன்னவே செய்யக் கத்துக்கிட்டவன். அதோட இந்த நிலையில உன்னை அனுப்பிச் சம்பாதிக்கிற அளவுக்கு நாம இன்னும் தாழ்ந்து போகலை..."

"அண்ணா! என்ன பேசுற நீ?"

"மறுபிறவி எடுத்த மாதிரி பொழைச்சு வந்திருக்கே... நேத்து ராத்திரி உன்னைப் பார்த்துட்டு டாக்டர் என்னைத் திட்டுறார். காய்ச்சல் இன்னும் முழுமையா விடலை. அதுக்குள்ளே வேலைக்குப் போறேன்னு சொன்னா... எப்படி?"

"இல்லண்ணா! சுஜா ரொம்ப ரிக்வெஸ்ட் பண்ணிக் கேட்டாள்."

"அதான்... நான் போறேன்னு சொல்றேனே... சிறப்பாகச் செய்து கொடுத்திட்டு வர்றேன். நீ அட்ரஸ் மட்டும் சொல்லு."

"அட்ரஸ்? நம்ம டேபிள் டிராயர்ல மாப்பிள்ளை வீட்டு இன்விடேஷன் இருக்கும். அதில அட்ரஸ் இருக்கு."

"சரி... நான் கிளம்புறேன். நீலா! குறிஞ்சியைக் கவனமாப் பார்த்துக்க..."

"சரிங்க. போற வழியில ஹோட்டல்ல சாப்பிட்டுட்டுப் போங்க."

"அதுக்கெல்லாம் நேரமில்லம்மா... கிளம்புறேன். இப்பப் போனாத்தான் சரியா இருக்கும்."

"ஏங்க! நேத்து நைட்ல இருந்தே எதுவும் சாப்பிடாம இருக்கீங்களே! வெறும் வயித்தோடு போய் எப்படி வேலை செய்ய முடியும்?" - என்றதும் திரும்பினான் மாதவன்.



"அடடா! நீயும் சாப்பிடாமத்தானே இருக்க... மறந்திட்டேன் பார்! இரு... கேன்டீன்ல போய் சாப்பாடு வாங்கிட்டு வர்றேன்."

"குறிஞ்சிக்கு டிஃபன் கொடுக்கலாமா?"

"நோ... நோ. ரெண்டு நாளைக்கு வெறும் நீர் ஆகாரம்தான் கொடுக்கணுமாம். டாக்டர் ஸ்ட்ரிக்ட்டா சொல்லிட்டார்."

"அப்போ நீங்க கிளம்புங்க. நான் அப்புறமா சாப்பிட்டுக்கிறேன்."

"மறந்திடாதே!"

"சரிங்க..."

"இந்தா இந்த மருந்து மூணு வேளை. இது நைட்டுக்கு மட்டும். கரெக்ட்டா கொடுத்திடு. நான் வேலை முடிஞ்சதும் வந்திடுறேன்."

"சரிங்க..."

"ஏதுவும் அவசரம்னா போன் பண்ணு. வரட்டுமா! குறிஞ்சி... டேக் கேர்!"

"அண்ணா! நாளைக்கு சுஜாவோட மேரேஜ். அதுக்காவது என்னை அனுப்புவியா?" - ஏக்கமாய்க் கேட்டாள்.

"ஜுரம் நிற்கட்டும். கூட்டிட்டுப் போறேன். எல்லாருமே போலாம்."

"நானுமா?" - திடுக்கிட்டாள் நீலா.

"ஆமா! அவங்க நம்ம ஃபேமிலி ஃபிரண்ட்ஸ் நீலா! நாம போகலைன்னா... அது அவ்வளவு நல்லா இருக்காது."

"இல்ல... நான் எதுக்கு? எனக்கு வெளியே போக விருப்பமில்லை."

"ஏன் அண்ணி?"

"வந்து சும்மாதான்... எனக்கு வீட்டில இருக்கத்தான் பிடிக்கும்."

"முதல்ல குறிஞ்சிக்கு குணமாகட்டும். பிறகு பார்க்கலாம். நான் கிளம்புறேன்..."

பேச்சை வளர்க்க விரும்பாமல் மாதவன் கிளம்பிவிட, குறிஞ்சி நீலாவின் முகத்தைப் பார்த்தாள்.

அழகான வட்ட முகம். மென்மையும் கனிவும் ததும்பிய முகம். லேசான பதட்டம் தெரிந்தது. சின்னப் பெண்தான். அண்ணனுக்கு வெகு பொருத்தமானவள்தான். இத்தனை வருடங்களில் இவள் முகத்தைக்கூட இத்தனை தெளிவாய்ப் பாராமல் இருந்திருக்கிறேனே...!

எவ்வளவு மடத்தனம்? ஒரே வீட்டில் இருந்து கொண்டு பாராமல்... பேசாமல் ஒதுக்கியிருக்கிறேனே... பாவம்! இவள் என்ன செய்தாள்? அண்ணனைக் கட்டிக் கொண்டது தவறா? எத்தனை வருடமாய் நேசித்தார்களோ? இவள் வீட்டில் என்ன பிரச்சனையோ?

அதனால்தான் யாருக்கும் சொல்லாமல் திருமணம் செய்து கொண்டார்களோ! இந்த அண்ணன் என்னிடம் ஒரு வார்த்தை சொல்லியிருக்கலாம். தன் வீட்டில் நடக்கும் முதல் கல்யாணம். அதை ஊர் கூட்டி செய்ய வேண்டாமா? ஊரைக் கூட கூட்ட வேண்டாம். பெற்ற தகப்பனும் உடன் பிறந்த ஒரே சகோதரியும் உடன் இருக்க வேண்டாமா?

பொறுப்பில்லாத தகப்பன். சிறு வயதுத் தங்கை. தட்டிக் கேட்க ஆளில்லை... என்ற துணிச்சலில் தானே இப்படி மாலையும் கழுத்துமாய் வந்து நிற்கிறான் என்ற கோபமே... இதுவரை இவளை நெருங்கவிடவில்லை.

அதோடு பெற்றவர்களைத் தவிக்க விட்டு நினைத்தவனுடன் ஓடி வந்ததை இன்னும் குறிஞ்சியால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. அது எத்தனை பெரிய பாவம்! பெற்றவர்களை... மொத்தக் குடும்பத்தினரை ஒட்டுமொத்தமாய்த் தவிக்க விட்டு... தன் சுகமே பெரிது என்று எப்படி இவர்களால் வாழ முடிகிறது?

மகளைத் தொலைத்துவிட்டு அந்தக் குடும்பம் கதறாதா? மகள் ஏற்படுத்தி விட்டுப் போன களங்கத்தைச் சுமக்க முடியாமல் வெளியே தலை காட்டாமல் உயிரை விட்டு விடமாட்டார்களா? இதையெல்லாம் ஏன் இந்தப் பெண்கள் உணரவில்லை.

அண்ணி... தன் வீட்டிற்கு வந்த பிறகு இன்று வரை ஒரு நாள் கூட வீட்டை விட்டு வெளியேறியதில்லை. அண்ணனுடன் இணைந்து வெளியில் சுற்றியதில்லை. கடைத் தெருவிற்குக் கூட... ஏன் வாசலில் நிற்கும் காய்கறி வண்டிக்குக்கூட வரமாட்டாள்.

நத்தை தன் கூட்டுக்குள் பதுங்கிக் கொள்வதைப் போல் வீட்டிற்குள்ளேயே ஒடுங்கிக் கொள்வாள். இன்றுதான் முதன் முறையாய் ஹாஸ்பிடலுக்கு வந்திருக்கிறாள். ஒரு

முறைகூட தாய், தகப்பனைப் பார்க்க வேண்டும் என்
போனதில்லை.

அவ்வப்போது அழுவதும் அண்ணன் சமாதான
செய்வதும் நடக்கும். ஆனால் எதற்காக என்று இன்று வ
தெரியாது. தெரிந்து கொள்ளவும் விரும்பியதில்லை
ஆனால் இன்று அந்த ஆர்வம் எழுந்தது. ஒருவேளை
பெற்றவர்களை எண்ணி அவர்களைக் காண வேண்டு
என்ற ஏக்கத்தில் அழுதிருப்பாளோ?

அண்ணனிடம் கேட்கப் பயந்து தனக்கு
மருகுகின்றாளோ? பேசிப் பார்க்கலாமா! ஒருவேளை அப்
ஒரு எண்ணமிருந்தால் நானே அதை நிறைவேற்றலாமே
அண்ணன் ஒன்றும் அத்தனை முரடனல்ல... மறுப்பதற்
அண்ணி வீணாய்ப் பயந்து கொண்டிருக்கிறாள்.

பேசிப் பார்க்கலாம் என்ற எண்ணத்தோடு நான
ஏற்படுத்திக் கொண்டே அழைத்தாள் குறிஞ்சி.

"அண்ணி!"

"ம்... என்னம்மா?"

"உட்காருங்க அண்ணி. உங்ககிட்ட கொஞ்ச
பேசணும்..."

"என்ன? எதுவும் வேணுமா?"

"ம்..."

"என்ன வேணும்?"

"சில தகவல்கள் வேணும்."

"எ... என்ன தகவல்?"



"உங்களைப் பத்தின தகவல்கள். உண்மையான தகவல் வேணும்."

"எ... என்ன? என்னைப் பத்தியா?" - கேட்கும்போதே குரல் தடுமாறியது. முகம் கலக்கமடைந்தது.

"ஆமா அண்ணி! உங்களுக்குக் கல்யாணமாகி மூணு வருஷமாகப் போகுது. ஆனா... இதுவரை உங்களைப் பத்தி எதையும் நான் கேட்டுக்கலை. என்னவோ இப்ப கேட்கணும்னு தோணுது. கேட்கலாமா?"

"கே... கேட்கலாம்."

"உங்க பேர்... அதாவது ஃபுல் நேம் என்ன அண்ணி?"

"நீலதாட்சாயிணி."

"ஓ... செல்லமா நீலாவா?"

"ம்..."

"உங்க அம்மா அப்பால்லாம் எங்கே இருக்காங்க?" - இந்தக் கேள்விக்குப் பதில் சொல்ல இயலாமல் நின்றாள் நீலா.

"சொல்லுங்க அண்ணி... நீங்க எங்க வீட்டுக்கு வந்து இவ்வளவு நாள்ல ஒருமுறைகூட உங்க அம்மா, அப்பாவைப் பார்க்கப் போகலையே... எப்படி அண்ணி... அப்படி இருக்க முடியுது?"

"நான் இப்படித்தான் இருந்தாகணும்..."

"ஏன்? நீங்க பண்ணினது பெரிய தப்புதான். நான் மறுக்கலை. ஆனா இத்தனை வருஷத்தில உங்க தவறைப்

பெரியவங்க மறந்திருக்கலாம் இல்லையா? மன்னிச்
ஏத்துக்கத் தயாரா இருந்திருக்கலாம். நீங்களும் அண்ணனு
ஒருமுறை அவங்களைப் பார்த்திட்டு வரலாமே!"

குறிஞ்சி இதமாய்க் கேட்க, நீலா குலுங்கி அ
ஆரம்பித்தாள்.

"அண்ணி! ஏன் அழறீங்க? நான் எதுவும் தப்
பேசிட்டேனா?"

"இல்லை... நான் செய்ததுதான் பெரிய தப்பு
திருத்தவே முடியாத... மன்னிக்க முடியாத தப்பு... பாவம்
இதுக்கு விமோசனமே கிடையாது."

"பெத்தவங்க கடவுளுக்குச் சமம் அண்ணி. நிச்சய
மன்னிச்சிடுவாங்க."

"இல்லை. எனக்குன்னு யாருமே இல்லை. நான் ஒ
அநாதை. நாதியற்றவள். இந்த உலகத்தில் வாழ
தகுதியில்லாதவ... என்னை வாழ வைத்த தெய்வம் உ
அண்ணன். அவர்தான் என் கடவுள். என் வாழ்நா
முழுக்க அவரோட கால்லதான் நான் விழுந்து கிடக்கணும்.

"அண்ணி!"

"குறிஞ்சி! தயவு செய்து என்னை வேறெதுவு
கேட்காதே. எனக்கு உன் அண்ணனோட நிழல் மட்டு
போதும். கிடைக்காத எதையும் தேடி அலையுறதில எந்த
பலனும் இல்லை. என் வாழ்க்கையோட ஆதாரமே உ
அண்ணன்தான்.

அவருக்காகத்தான் இந்த உயிர் இருக்கு. கடை
வரைக்கும் அவருக்காக... அவருடைய அன்புக்காக நா



வாழ்ந்தாகணும். மத்தபடி நீ நினைக்கிற மாதிரி எனக்கு எந்தச் சொந்த பந்தமும் கிடையாது. நான் அநாதை!" – முகத்தை மூடிக் கொண்டு அழுதவளைத் திகைப்பாய்ப் பார்த்தாள் குறிஞ்சி.

தன் அண்ணியின் மனதில் ஏதோ ஆழமான துயரம் பதிந்திருக்கிறது என்று புரிந்தது. விரும்பி மணந்த கணவனைக் கடவுளாக உயரத்தில் வைத்திருக்கிறாள். ஆனால் புதுமணத் தம்பதியராக இருவரும் கொஞ்சிக் குலாவிக் கண்டதில்லையே!

கணவன் மனைவி இருவரும் ஒருவர் மீது ஒருவர் அக்கறையோடு, அன்போடு பரிவோடு இருக்கிறார்கள். அது தெரிகிறது. ஆனால் நேசப் பிணைப்பு தென்படவில்லையே? எப்போதும் கண்ணீரோடு இருக்கும் அண்ணியின் பின்னணி என்ன? அண்ணன் திருமண வாழ்வில் என்ன நடக்கிறது?

நிச்சயம் ஏதோ மர்மம் இருக்கிறது? அது என்ன? இத்தனை நாளாய் கவனியாமல் இருந்து விட்டோமே... இனியும் அப்படியிருக்கக் கூடாது. என்ன நடந்தது என்று தெரிந்து கொள்ள வேண்டும். அடுத்து என்ன செய்தால் சரி வரும்.. என ஆராய வேண்டும். அண்ணியின் கண்ணீருக்குத் தீர்வு கண்டுபிடித்தே ஆகவேண்டும்.

அது என்னால் முடியும். என்னால் மட்டுமே முடியும். நிச்சயம் இந்த நிலையை மாற்றுவேன். மனதிற்குள் உறுதி பூண்டாள் குறிஞ்சி.

அத்தனை பிரச்சனைகளுக்கும் நாளையே ஒரு மாற்றம் பிறக்குமென்று அப்போது அவள் அறிந்திருக்கவில்லை.

தன் முன் கோபமாய் நின்றவனை தோள் பற்றி அமர வைத்தான் யுவராஜன். "அண்ணா! இப்ப ஏன் இவ்வளவு கோபப்படுறே? அம்மா காதுல விழுந்திடப் போகுது."

"அம்மாவைக் கூட எப்படி மறந்தாள்? எப்படி மறக்க முடிந்தது? என்னால இதை ஜீரணிக்கவே முடியலையே... நினைச்சா இரத்தமெல்லாம் கொதிக்குது."

"அண்ணா! ஏன் இவ்வளவு டென்ஷனாகிற? விடு நடந்தது நடந்து போச்சு. இனி அதைப்பத்திப் பேசி என்னாகப் போகுது?"

"முடியலையே... அவளை மாதிரி என்னால தூக்கியெறிய முடியலையே... யுவா! இன்னிக்கு என்ன விசேஷம்? இந்த வீட்டுல நடக்கிற முதல் கல்யாணம். எல்லா உறவும் கூடியிருக்கு. ஆனா... அவ? அவ மட்டும் இல்லையேடா...

அவ ஒருத்தி மட்டும் கூட இருந்தா எத்தனை நிறைவா இருக்கும்? நாம இப்படிக் கடமைக்காக சிரிச்சு... பேருக்கா சாப்பிட்டு நடமாடுவோமா? எவ்வளவு உற்சாகமா... கலகலப்போட ஊரையே ரெண்டாக்கியிருக்க மாட்டோம். போயிட்டாளே... நம்மை எல்லாம் குப்பையா நினைச் ஒதுக்கிட்டுப் போயிட்டாளே...!" – கண்கள் கசிந்தன.

"அண்ணா! ப்ளீஸ் கண்ட்ரோல் யுவர்செல்ஃப்."

"முடியலைடா. கல்யாணம் முடிவான நாள்ல இருந்து அவ நினைப்பு அதிகமா வருதுடா. கண்ணை மூடினா தூங்க முடியலை. அவ இல்லாம என் கல்யாண



நடக்கணுமான்னு கேள்வி வருதுடா. இந்தக் கல்யாணமே வேண்டாம்னு தோணுதுடா..."

"அண்ணா! என்ன இது?"

"யுவா! இப்ப அவ எங்கே இருப்பாள்? எனக்குக் கல்யாணம்னு அவளுக்குத் தெரியுமா? வருவாளா... வந்து எனக்கு அட்சதை போடுவாளா?"

"அண்ணா!"

"குழந்தை கூட பொறந்திருக்கும் இல்ல... ரெண்டு தாய்மாமனுங்க இருக்கோம். ஆனா என்ன பிரயோஜனம்? பக்கத்துல இருந்து பார்க்க முடியலையே! எங்கேடா போனா? நம்மளை விட்டு ரொம்ப தூரம் அவளால போக முடியாது யுவா! இங்கேதான் நம்ம பக்கத்திலதான் எங்கேயோ இருக்கா. என் உள்ளுணர்வு சொல்லுது. அவ இங்கேதான் எங்கேயோ இருக்கா!" – படபடப்பாய் உறுதியாய்ச் சொன்னவனைத் திகைப்பாய்ச் சற்றுப் பயமாய்ப் பார்த்தான் யுவராஜன்.

"அண்ணா! கொஞ்சம் அமைதியா இரு. ப்ளீஸ் உட்கார். என்ன அண்ணா... இத்தனை நாளா எங்களையெல்லாம் சமாதானப்படுத்துனியே... அவளை நினைக்கக் கூடாது. அவ பேரைக் கூட யாரும் சொல்லக் கூடாதுன்னு சட்டம் போட்டியே... இப்ப நீயே இப்படிக் கண்கலங்கினா எப்படி?"

"முடியலை யுவா! என்னால நடிக்க முடியலை. அவளை வெறுக்கிற மாதிரி என்னால நடிக்கக்கூட முடியலை. அவ நம்ம கண் இல்லையா? கண்ணைத்

தொலைச்சிட்டு குருடாத்தானே நிக்கிறோம். நம்மை விட்டுப் போக அவளுக்கு எப்படிடா மனசு வந்திச்சு?"

"எனக்கும் அதுதான் அண்ணா புரியவே இல்லை... அவ போனதை என்னால இன்னும் நம்பவும் முடியலை... நம்ம நீலு அப்படிப் போவாளா?"

"போயிட்டாளே... நம்மை விட்டுப் போயிட்டாளே... அதுவும் சும்மா போகலைடா... பெட்டி நிறைய நகை, பணத்தோட நம்ம குடும்ப மானம் மரியாதையையும் தூக்கிட்டே போயிட்டா. நம்ம குடும்ப கௌரவத்தைக் காத்துல பறக்க விட்டுட்டுப் போயிட்டா..." – உடைந்து போய் அழ ஆரம்பித்தான் கார்த்திக்.

யுவராஜன் தவித்துப் போனான். நீலா வீட்டை விட்டுப் போனதிலிருந்து முடங்கிப் போன அன்னையை... உடைந்து விட்ட தந்தையை... இடிந்து போன தன்னைத் தேற்றியவன் இவன். கண்களின் துளி நீரைக் கூட காட்டாமல் முகத்தில் கோபத்தை மட்டுமே தேக்கி வைத்துக் கொண்டு அனை வரையும் எழ வைத்தவன்.

அந்த வீட்டில் இருக்கும் வரை தங்கையின் நினைவுகள் அலைக்கழிக்கும் என்று நான்கே மாதத்தில் இந்த வீட்டை ஏற்பாடு செய்து குடும்பத்தோடு குடியேற வைத்தவன். அவளது சுவடுகள் எதுவும் இந்த வீட்டுக்குள் வரக்கூடாது என்று நீலாவின் புகைப்படத்தைக் கூட இங்கு எடுத்து வர அனுமதிக்கவில்லை.

அவனது கோபமும் கடுமையான பிடிவாதமும் அவன்மீது கோபத்தை ஏற்படுத்தினாலும்... அவனால்தான் அனைவரும் இயல்பு நிலைக்குத் திரும்ப ஆரம்பித்தன



என்பது உண்மை. ஆனால் அன்று அத்தனைக் கடுமையாய் நடந்து கொண்டவன் இன்று இப்படி உடைந்து போய் அழுகிறான் என்றால்...?

இவன் நெஞ்சில் இன்னும் பாசம் இருக்கிறது. தங்கையை அடியோடு வெறுத்துவிடவில்லை. தனக்கு ஒரு நல்லது நடக்கும்போது தங்கையும் உடன் இருக்க வேண்டும் என்று ஏங்குகிறான். அந்த ஏக்கத்தின் வெளிப்பாடுதான் இந்தக் கண்ணீர். மனம் நெகிழ அண்ணனைத் தோளோடு அணைத்துக் கொண்டான் யுவராஜன்.

"அண்ணா! என்ன இது குழந்தையாட்டம்? நீயே இப்படி உடைஞ்சு போனா எப்படி?"

"நானும் மனுஷன்தானேடா! இந்தத் தோள்ல எத்தனை நாள் போட்டுத் தூங்க வைச்சிருப்பேன்! இந்தக் கையால எத்தனை நாள் பால் சாதம் ஊட்டியிருப்பேன்! அவளோட ஒவ்வொரு வளர்ச்சியையும் படிப்படியா பார்த்துப் பூரிச்சுப் போனேனே... என்னால மட்டும் எப்படிடா அவளை மறக்க முடியும்?"

"ஆனா... அவ மறந்திட்டாளே அண்ணா! நம்மையெல்லாம் விட புதுசா வந்தவன்தான் அவளுக்கு முக்கியமாப் பட்டுட்டான் போலிருக்கு. நாமெல்லாம் தேவையில்லாமப் போயிட்டோம்."

"தம்பி! இந்தப் பாழாய்ப்போன கருமம் வந்ததால தான்டா அவளுக்கு நாம வேண்டாமப் போயிட்டோம். அதுதான் அவ கண்ணை மறைச்சிடுச்சி. அந்தக் கருமத்தால தான் நம்ம குடும்பமே சிதைஞ்சிப் போச்சு."

"அண்ணா!"

"இதோ பார் யுவா! உனக்கு ஒண்ணு சொல்றே கேட்டுக்கோ... எந்தச் சூழ்நிலையிலும் நீ இந்தக் கருமத்தி விழுந்திடாதேடா... அது விஷம்டா. அந்த விஷத்தி விழுந்திட்டா மீளவே முடியாது. உசுரையே குடிச்சிடும்!" - கண்கள் சிவக்க கார்த்திக் சொல்ல, திக்கென அதிர்ந்தா யுவராஜன்.

கண்கள் அனிச்சையாய் கட்டிலில் கிடந் பூச்செண்டிற்குப் போய்த் திரும்பியது. இதுவரை அதை கட்டிக் கொண்டு புலம்பியது நினைவிற்கு வந்து போனது.

"முதல்ல தேனா இருக்கும்டா... பூவா மணக்கு சொர்க்கத்தில் நடக்கிற மாதிரி தோணும். தன்னைத் தவி வேற எதைப் பற்றியும் கவலைப்படாது. ஆனா போக போக அது ஒரு மரணக் குகைன்னு தெரிய வரும். ஆன அதுக்குள்ள போன பிறகு திரும்ப முடியாது.

திரும்பவும் விடாது. அப்படியே தனக்குள் மூழ்கடிச்சிடும். அப்புறம் இப்ப நீலாவை இழந் தவிக்கிறோமே... இதே மாதிரி தவிக்க வேண்டியிருக்கு ஆனா இன்னொரு இழப்பை இந்தக் குடும்பம் தாங்காதுடா அதனாலதான் சொல்றேன். நீயும் என்னை மாதிரி எச்சரிக்கையா நடந்துக்க..."

யுவராஜனின் முகம் இருண்டது. "ச... சரிண்ணா!"

"நம்ம அம்மா, அப்பா பார்த்த பொண்ணை சந்தோஷமா ஏத்துக்கிட்டு அவளையே விரும்புவோம் அப்பத்தான் வாழ்க்கை இனிக்கும். அதுவரை உனக்



எந்த எண்ணமும் வரக்கூடாது. மனசை அலைபாய விட்டுடாதே... சரியா?"

"சரிண்ணா!"

"சரி... வா. அம்மா அப்பவே தேடிட்டு இருந்தாங்க!" - என்றவாறு முகத்தை அழுத்தமாய்த் துடைத்துக் கொண்டான் கார்த்திக்.

"நீ போண்ணா! நான் குளிச்சிட்டு வந்திடுறேன்."

"பரவாயில்லை. நான் வெயிட் பண்றேன். நீ குளிச்சிட்டு வா...." - என்றவாறு கட்டிலில் அமர்ந்து கொண்டான். யுவராஜனின் மனம் வெகுவாய்ப் பாதிக்கப்பட்டிருந்தது. தன் அண்ணன் சொன்ன ஒவ்வொரு வார்த்தைகளும் இதயத்தில் ஆணியாய் இறங்கின. சற்று முன் வரை மனதில் இருந்த இனம் புரியாத உணர்வு சுத்தமாய் மறைந்து போயிருந்தது.

'அது ஒரு மரணக் குகை. அதுக்குள்ள போன பிறகு திரும்ப முடியாது.

அது விஷம்டா... அதுல விழுந்திட்டா மீளவே முடியாது. உசுரையே குடிச்சிடும்.

இன்னொரு இழப்பை இந்தக் குடும்பம் தாங்காதுடா!

எந்தச் சூழ்நிலையிலும் நீ இந்தக் கருமத்தில விழுந்திடாதேடா!

மனசை அலைபாய விட்டுடாதே!' - அண்ணனின் எச்சரிக்கை மீண்டும் மீண்டும் காதில் எதிரொலித்தது. அந்த வார்த்தைகளை அவனால் அலட்சியப்படுத்த முடியவில்லை.

ஏனென்றால் ஒரு இழப்பையே தாங்க முடியாமல் பெற்றவர்கள் படும் பாட்டை தினமும் அனுபவபூர்வமாய் உணர்கின்றானே... நீண்ட பெருமூச்சுடன் கட்டிலில் கிடந்த பூச்செண்டை எடுத்து மூலையில் இருந்த குப்பை கூடையில் போட்டுவிட்டு குளியலறைக்குள் நுழைந்தான்.

தம்பியின் செயல்பாடுகள் வித்தியாசமாய் இருக்க, குழப்பமாய்ப் பார்த்தான் கார்த்திக். எழுந்து சென்று குப்பை கூடையைப் பார்த்தான். அழகிய ரோஜாக்களால் செய்யப்பட்ட மலர்ச்செண்டு. 'இதை ஏன் குப்பையில் வீசினான்?' – மூடியிருந்த குளியலறையையும் மலர்ச் செண்டையும் மாறி மாறிப் பார்த்தான்.

தம்பியின் மனதில் ஏதேனும் இருக்கிறதா? யாரையேனும் விரும்புகிறானோ? நினைப்பே கலக்கத்தை ஏற்படுத்த... கார்த்திக்கின் மனம் தவிப்பாய் அடித்துக் கொண்டது.

## 8

இரவில் கண்ட கனவு
மறந்து போகலாம் – ஆனால்
இதயம் தொட்ட உன் நினைவு
என்றும் மறைவதில்லை!

இரவு வரை வீட்டிற்கு வராமல் மண்டப வேலை களுடன் வெளிவேலைகளையும் இழுத்துப் போட்டுக் கொண்டு செய்ததில் மனதில் தோன்றிய சிறிய சலனம் சுத்தமாய் மறைந்து போயிருந்தது. அந்தச் சலனத்தை அதிகரிக்க விடாமல் குறிஞ்சிக்குப் பதிலாக மாதவனும் வேறு



சிலரும் வந்து அலங்கார வேலையைத் தொடர, நிம்மதி மூச்சோடு விலகிக் கொண்டான்.

தன் தங்கை ஏன் வரவில்லை என்று கேட்பான் என எதிர்பார்த்த மாதவனும் நிம்மதியாய் தன் வேலையைக் கவனித்தான். தங்கையைப் பற்றிய விசாரிப்பும் இல்லை.

அவன் முகத்தில் எந்த ஏமாற்றமும் இல்லை. அப்படி யென்றால் நான் நினைத்தது போல் எதுவும் இல்லையோ?

நானாகத்தான் வீணான கற்பனையில் பயந்து விட்டேனா? என் தங்கையை நானே சந்தேகிக்கலாமா? ச்சே! இனி இந்த மாதிரி எந்த எண்ணமும் வரக்கூடாது. தனக்குத் தானே சொல்லிக் கொண்ட மாதவன் வேலையை முடித்தபோது பெண் அழைப்பு முடிந்து அலங்கார தேவதையாய் சுஜாதா மண்டபத்திற்குள் உறவினர் புடைசூழ மேளதாளத்துடன் நுழைந்தாள்.

ஓரமாய் நின்று பார்த்த மாதவனின் மனம் நெகிழ்ந்தது. தன் தங்கைக்கும் இதே போல் திருமணம் நடக்கும். இத்தனை ஆடம்பரமாய் செய்யா விட்டாலும் தன்னால் இயன்ற வரை சிறப்பாய்ச் செய்ய வேண்டும். பொருத்தமான மாப்பிள்ளையாய் பார்க்க வேண்டும். சீர் செய்ய வேண்டும்.

அம்மாடி! கல்யாணம் செய்வது என்ன சாதாரண காரியமா? எவ்வளவு கூட்டம்? இத்தனை பேருக்கும் விருந்து படைக்க வேண்டும்.

ஒருவரும் முகம் கோணாமல் இருக்கும்படி உபசரிக்க வேண்டும்.

கல்யாண மண்டபம், நாதஸ்வரம், மேளம், அலங்காரம், பெண் அலங்காரம், பட்டுப் புடவை, நகைகள் சாப்பாட்டுச் செலவு, தண்ணீர், குளிர்பானம், சமையல்கார சம்பளம், சீர்வரிசைப் பொருட்கள், என எவ்வள வேலைகள்... செலவுகள் இருக்கிறது? எப்படியும் ஒரு ஐந் லட்சம்... ம்ஹூம்... விலைவாசி ஏற்றத்திற்கு பத்து லட்ச இருந்தாலும் போதாதே!

இத்தனை காலமாய் இதையெல்லாம் யோசிக்காம இருந்து விட்டேனே? இதற்குத்தான் இந்த மாதி கல்யாணங்களுக்குப் போக வேண்டும். கவனமா அனைத்தையும் பார்த்துக் கொண்டான். இனி அலட்சியமா இருக்கக் கூடாது. சீக்கிரமாய் பணம் சேர்த்து தங்கையின் கல்யாணத்துக்கு ஏற்பாடு செய்ய வேண்டும். தேவையற் செலவுகளை அடியோடு நிறுத்த வேண்டும்.

தங்கையின் வயதுதான் இந்த சுஜாதாவிற்கும். இன்று கல்யாணப் பெண்ணாய் இருக்கிறாள். த தங்கையும் கல்யாண வயதை அடைந்து விட்டாள் என அப்போதுதான் உணர்ந்தான் மாதவன். குறிஞ்சிக்கு சீக்கிரமாய்த் திருமணம் செய்து விட வேண்டும்.

மனதில் தோன்றிய முடிவோடு மீதமிருந்த பூக்களை கூடையில் சேகரித்துக் கொண்டு புறப்படுகையி சுஜாதாவின் அம்மா வந்து நின்றாள்.

"மாதவா! என்னப்பா நீ மட்டும் வந்து நிற்கிற! குறிஞ் எங்கே?"

"அவளுக்குக் கொஞ்சம் உடம்பு சரியில்லம்மா அதான் நான் மட்டும் வந்தேன்..." - மாதவன் மெதுவாக சொன்னபோதும் அண்ணனை அழைத்துக் கொண்



மணமேடையை நெருங்கிய யுவராஜனின் காதுகளில் தெளிவாய் விழ.. மனம் லேசாய்ப் பதறியது.

'என்ன ஆயிற்று அவளுக்கு? நேற்று வரை நன்றாகத்தானே இருந்தாள்! திடீரென என்ன ஆனது? அதனால்தான் இன்று வரவில்லையா? உடம்பிற்கு என்ன?' - ஒரே நொடியில் பல கேள்விகள் தோன்றிட... மனதைத் தட்டி அடக்கினான்.

'நீ ஏன் பதறுகிறாய்? அவளுக்கும் உனக்கும் என்ன சம்பந்தம்? போ... அவர்கள் பேசுவதைக் காதில் வாங்காமல் போ...' - மூளை உத்தரவிட, காதுகள் அதற்குக் கட்டுப்படாமல் இன்னும் கூர்மையாயின. அந்த அம்மாளின் குரல் தெளிவாய்க் கேட்டது.

"ஏம்ப்பா! என்னாச்சு? நேற்று காலையில கூட பார்த்தேனே?"

"ஆமாம்மா... நைட் மழை பெய்ததில கொஞ்சம் நனைஞ்சிட்டா. அது ஜுரம் கண்டு எழ முடியாம ஆகிப் போச்சு. இப்போ ஹாஸ்பிடல்லதான் இருக்கா. வேலை முடிஞ்சிடுச்சி. நானும் போகணும்."

யுவராஜனின் மனம் வேகமாய் அடித்துக் கொண்டது. மருத்துவமனையில் வைக்கும் அளவுக்கு அதிக ஜுரமா? ஐயோ! நேற்று எத்தனை மணி நேரமாய் நனைந்து கொண்டிருந்தாள்? இப்போது எப்படி இருக்கிறாளோ? பதறிய மனதை வெளிக்காட்டாமல் அண்ணனை மேடையில் ஏற்றி மணப்பெண்ணின் அருகே நிற்க வைத்தாள்.

"அண்ணா! நான் இப்ப வந்திடுறேன். கொஞ்சம் வேலை இருக்கு."

"டேய்! என்னை விட்டுட்டு எங்கேடா போற? எ கூடவே நில்லு."

"அண்ணா! நான் நின்னா மத்த வேலையை யா பார்க்கிறது? அதோட அண்ணிக்கு உன்கூட பேச நிறை விஷயங்கள் இருக்கும். நான் எதற்கு நந்தி மாதிரி!"

"ஏய்! பரவாயில்லைடி... மாப்பிள்ளையோட தம் ரொம்ப நாசூக்கா நடந்துக்கிறார்." - மணப்பெண்ணி அருகே நின்ற தோழிப் பெண்கள் கிசுகிசுக்க... யுவராஜ புன்னகைத்தான்.

"ஹலோ! நீங்களும் இதே மாதிரி நடந்துக்கங்க..."

"வாட்?"

"எங்க அண்ணி அண்ணனோட ஃப்ரீயா பேசட்டு கொஞ்சம் எட்டியே நில்லுங்க."

"பார்த்தியா சுஜா! உன் மச்சினன் என் சொல்றார்ன்னு?"

"அவர் சரியாத்தான் சொல்றார்..." - என்றா மெல்லிய குரலில்.

"அடிப்பாவி! இப்பவே அவங்க பக்கம் சாய்ஞ்சிட்டிய அப்போ நாங்க எதுக்கு? வாங்கடி போகலாம்..." - தோழி கூட்டம் முறுக்கிக் கொள்ள, சுஜாதா பதட்டமாய் அவர்கள கையைப் பற்றிக் கொண்டாள்.

"ஏய்! சும்மா விளையாட்டுக்குச் சொன்னேன் போயிடாதீங்கப்பா... தனியா நிற்க கூச்சமா இருக்கு



"அப்படி வா வழிக்கு...!" - என்ற நேரம் அரவிந்தன் மூன்று நண்பர்களுடன் மேடையேறினான்.

"என்ன லேடீஸ்! மாப்பிள்ளை தனியா நின்னா உடனே உங்க ராகிங்கை ஆரம்பிச்சிடுவீங்களா? இதோ நாங்க வந்திட்டோம். எங்ககிட்ட உங்க திறமையைக் காட்டுங்கள் பார்க்கலாம்..." - அழகாய் அசத்தலான ஆர்ப்பாட்டமான புன்னகையுடன் வந்தவனைக் கண்டதும் பெண்களின் கேலியும் கிண்டலும் அதிகமாக... அந்த இடைவெளியில் வேகமாய் மேடையை விட்டு இறங்கினான் யுவராஜன்.

மாதவன் நின்ற இடத்திற்கு வருவதற்குள் மாதவன் போயிருந்தான். ஏமாற்றமாய்த் திரும்பியவன் சுஜாவின் அன்னையைக் கண்டதும் வேகமாய் அவளிடம் சென்றான்.

"அத்தே! இப்ப பேசிட்டு நின்னீங்களே... அந்த ஃபிளவர் டெக்கரேட் பண்ணினவர் எங்கே?"

"மாதவனா! அவன் போயிட்டானே..."

"போயிட்டாரா?"

"என்ன தம்பி! எதுக்குப்பா அவரைத் தேடுற?"

"இ... இல்லை... நைட்டுக்குத்தான் இந்த அலங்காரமா? காலையிலேயும் இதுதானான்னு கேட்கத்தான்."

"அதெப்படி? காலையில இதைவிட கிராண்டா புதுவித அலங்காரத்துக்குச் சொல்லியிருக்கேன். இன்னும் கொஞ்ச நேரத்தில வந்திடுவான். விடிய விடிய அவனுக்கு வேலையிருக்கும்."

"வீட்டுக்கா போயிருக்கார்?"

"இல்லைப்பா! அவன் தங்கையை ஹாஸ்பிடல்ல வைச்சிருக்குதாம். அதான் ஒரு நடை பார்த்திட்டு வந்திடுறேன்னு போனான்."

"காலையில முகூர்த்தத்துக்கு வந்திடுவாங்களா?" தயக்கமாய்க் கேட்டான்.

"யாரு?"

"இவங்க ஃபேமிலிதான்."

"இவங்க குடும்பம் உனக்குத் தெரியுமா?"

"தெ... தெரியாது. அண்ணி சொல்லியிருக்காங்க. அதான் கேட்டேன்."

"அப்படியா! ஆமா ரெண்டு பேருமே சின்ன வயசில இருந்தே ஃபிரண்ட்ஸ். எப்படியும் வந்திடுவேன்னு குறிஞ்சி சொல்றாளாம். காய்ச்சல் சரியாகிட்டா கூட்டிட்டு வர்றேன். இல்லைன்னா... நானும் என் மனைவியும் வர்றோம்னு சொல்லிட்டுப் போறான்."

"டேய் யுவா! வாடா... ஒரு க்ரூப் போட்டோ எடுத்துக்கலாம்!" - மேடையில் இருந்து அரவிந்தன் அழைக்க, புன்னகையுடன் தலையசைத்தான்.

"வர்றேன். சரி அத்தே! நீங்க வந்தவங்களைக் கவனிங்க..." - என்றவாறு நகர்ந்து மேடையேறினான். மேடையில் கலகலப்பு அதிகமாய் இருந்தது. அரவிந்தன் குரூப் வந்துவிட்டால் கலகலப்பிற்குப் பஞ்சம் இருக்காது. கேலியும் கிண்டலும் பாட்டுமாய் அமர்க்களப்படும்.



ஆனால் இன்று மனம் அதில் ஈடுபடவில்லை. மூளை எத்தனை முறை எச்சரித்தும் மனம் அதைக் கேட்பதாக இல்லை. அவளுக்கு என்ன ஆயிற்று? இப்போது எப்படி இருக்கிறாள்? ரொம்பக் கஷ்டப்படுகிறாளோ என எண்ணித் தவித்தது.

முகத்தில் குழப்பமும் வருத்தமுமாய் நின்ற தம்பியை அந்தக் கூட்டத்திலும் கவனித்தான் கார்த்திக். காலையில் குப்பைக் கூடையில் கிடந்த பூச்செண்டு நினைவில் வந்தது. தம்பியின் முகம்கூட அதேபோல் வாடியிருக்கிறதே! பிறர் அறியாமல் தமபியின் கைபற்றி தன்னிடம் அழைத்தான்.

"என்ன அண்ணா?"

"யுவா! என்னடா... முகமெல்லாம் ஒருமாதிரியா இருக்கு?" - யுவராஜன் சட்டெனச் சுதாரித்தான். அண்ணன் தன்னை வெகுவாய்க் கவனிக்கிறான் என்று புரிந்தது. சட்டென்று சமாளித்தான்.

"இல்லண்ணா! அண்ணிக்கும் உனக்கும் பிரஸண்ட் பண்ண ரிங் ஆர்டர் கொடுத்திருந்தேன். அது இன்னும் கைக்கு வந்து சேரலை. அதான் டென்ஷனா இருக்கு."

"ப்பூ! இதுக்கா இப்படி இருக்கே... நான் என்னவோ ஏதோன்னு பயந்திட்டேன்."

"என்ன நினைச்சே அண்ணா?"

"வேற எதையோ நினைச்சுக் குழம்புகிறாயோன்னு.."

"சேச்சே! எதையும் நினைச்சுக் குழம்பலை. காலையில கல்யாணம் நடந்து முடியுற வரைக்கும் டென்ஷனாத்தான் இருக்கும். அதனால நீ என்னைக் கவனிக்கிறதை விட்டுட்டு

உன் வொய்ஃப்பைக் கவனி. இனிமே அதுதான் உ வேலை.”

“சொல்லிக் கொடுடா. உன் அண்ணன் அறி யத்துக்கு வெட்கப்படுறார். பொண்ணைப் பார்த்தா பாவ இருக்கு...” - சுஜாதாவை ஓரக்கண்ணால் பார்த்த அரவிந்தன் சொல்ல, யுவராஜன் அவனை நாசூக்க தன்புறம் இழுத்தான்.

“என் அண்ணியை அண்ணன் கவனித்துக் கொள்வ நீ வா... உனக்கு டைனிங் ஹாலில் வேலை இருக்கிறது

“என்னது? டைனிங் ஹால்லயா? அங்கே என வேலை?”

“பந்தி போட வேண்டாமா? நீதான் பரிமாறணும்.”

“நான் எதுக்குடா? அதான் கேட்டரிங் சர்வீஸ்க்கார இருக்காங்களே!”

“அவங்க இருந்தாலும் நாம சும்மா இருக்கலாம உறவுக்காரங்களைக் கவனிக்கணுமே... இல்லன்னா அதை ஒரு குறையாச் சொல்வாங்க. வா... வா...”

“டேய் யுவா! இது அநியாயம்டா!”

“எது?”

“மேடையில் பார். எவ்வளவு பட்டர்ஃபிளைஸ் க கலரா நிக்குது. அதை விட்டுட்டு பந்தி வைக்கிறது கூப்பிடுறியே... இது அநியாயம் இல்லையா!”

“அரவிந்த்! உன் ஜொள்ளு லொள்ளு எல்லாத்தை மூட்டை கட்டி வை. அவங்க எல்லாரும் அண்ணியே ஃபிரண்ட்ஸ்.”



“ஸோ வாட்?”

“என்ன ஸோ வாட்? நீ பாட்டுக்கு எதையாவது பேசி வைச்சி வம்பாக்கிடாதே. உன்னை வைச்சி எங்களையும் தப்பா நினைச்சிடுவாங்க. ஸோ... நீ என்கூட டைனிங் ஹாலுக்கு வர்ற?” - என்றவாறு நண்பனின் கையைப் பற்றி இழுத்துக் கொண்டு போனான் யுவராஜன்.

“ஹாய் பட்டர்ஃபிளைஸ்! சீக்கிரமா சாப்பிட வாங்க. ஐ அம் வெயிட்டிங் ஃபார் யூ!” - என்றவாறே அரவிந்தன் கையசைக்க... நெற்றியில் அறைந்து கொண்டான் யுவராஜன்.

“நீ திருந்தவே மாட்டே!”

“**டா**க்டர்! என் தங்கைக்கு இப்போ எப்படி இருக்கு?” - தன் முன் வந்து நின்றவனை ஏறிட்டார், அந்த நடுத்தர வயது மருத்துவர்.

“யாரு? குறிஞ்சியோட பிரதரா?”

“யெஸ் டாக்டர்.”

“ஒண்ணும் பயமில்லை. இதுவரை ஜுரம் திரும்பல்ல... நாளைக்கும் இப்படியே இருந்தா டிஸ்சார்ஜ் பண்ணிடுறேன். பட்! மாத்திரை மருந்து நாலு நாள் கண்டிப்பா சாப்பிடணும். ஒன் வீக் கம்ப்ளீட்டா ரெஸ்ட் எடுக்கணும்.”

“அப்போ நாளைக்கும் ஹாஸ்பிடல்லதான் இருக்கணுமா டாக்டர்?”

“யெஸ். கண்டிப்பா இருக்கணும். ஏன் கேட்கிறீங்க?”

"காலையில ஒரு கல்யாணம் இருக்கு. குறிஞ்சியோட பெஸ்ட் ஃபிரண்ட் கல்யாணம். போகணும்னு அடம் பிடிக்கிறாள்."

"நோ... நோ. இப்ப அவங்க உடம்பு இருக்கிற நிலையில கண்டிப்பா ஸ்ட்ரெயின் பண்ணிக்கக் கூடாது. ரெஸ்ட் எடுத்தே ஆகணும்."

"நானும் இதைத்தான் சொல்றேன். கேட்க மாட்டேங்கிறா!"

"என்ன ஸார் இது? ஹெல்த் மேல நமக்கே அக்கறை இருக்க வேண்டாமா! அவங்க என்ன சின்னக் குழந்தையா? இப்ப அவசரப்பட்டு வீட்டுக்குப் போயிட்டு நாளைக்கே ஜுரம் அதிகமாயிடுச்சின்னா... நீங்க என்னைக் குற்றம் சொல்லக் கூடாது."

"ஸாரி ஸார்!"

"என்கிட்ட ஏன் ஸாரி கேட்கிறீங்க? நீங்க போறதா இருந்தா போங்க. இதுல நான் ஒண்ணும் சொல்ல முடியாது."

"இல்லை ஸார். அவ இங்கேயே இருக்கட்டும். மார்னிங் நானும் என் மனைவியும் போயிட்டு வந்திடுறோம். என் தங்கை தனியா இருப்பா..."

"நோ ப்ராப்ளம். இங்கே சிஸ்டர்ஸ் இருக்காங்க. கவனிச்சிப்பாங்க... நீங்க தாராளமா போயிட்டு வாங்க."

"தேங்க் யூ டாக்டர்! நான் கிளம்புறேன்."

"ஓ.கே." – என்றவர் தன் பணியில் மூழ்கிவிட, குறிஞ்சி இருந்த அறைக்கு வந்தான்.



படுக்காமல் அமர்ந்திருந்த குறிஞ்சி ஆவலாய்க் கேட்டாள்.

"அண்ணா! டாக்டர் என்ன சொன்னார்? வீட்டுக்குப் போயிடலாமா?"

"நான்தான் சொன்னேனில்ல... கேட்டியா?"

"ஏங்க! டாக்டர் ரொம்ப திட்டிட்டாரா?" – தயக்கமாய்க் கேட்டாள் நீலா.

"பின்னே... நம்ம ஹெல்த் மேல நமக்குத்தானே அக்கறை வேணும்ங்கிறார். கண்டிப்பாக ரெஸ்ட் எடுத்தாகணும். அலைஞ்சா காய்ச்சல் அதிகமாகும்கிறார்."

"ஐயோ... குறிஞ்சி! டாக்டர் சொல்றதைப் பார்த்தா பயமா இருக்கே... நீ கண்டிப்பா போகணுமா? ரிசப்ஷன் வெச்சா போயிட்டு வாயேன்."

"இல்ல அண்ணி. ரெண்டு பேருமே உள்ளூர்க்காரங்க. தனியா ரிசப்ஷன் வைக்கலை."

"அப்போ கல்யாணம் முடிஞ்ச பிறகு ஒரு நாள் அவ வீட்டுக்குப் போயிட்டு வந்திடு. விஷயத்தைச் சொல்லி ஸாரி கேட்டுடு..."

"நான் இன்னிக்கே சொல்லிட்டேன். நீ ஹாஸ்பிடல்ல இருக்கிறதா சொன்னேன். உடம்பைக் கவனிச்சுக்கச் சொல்லுங்கண்ணா... நான் பிறகு வந்து பார்க்கிறேன்னு சொன்னாள்."

"சுஜாவே சொன்னாளா அண்ணா?"

"ஆமா. அவ அம்மாகிட்டயும் பேசினேன். நீலா! நாளைக்கு நாம மட்டும் போயிட்டு வந்திடலாம்."

"நா... நானா?"

"திரும்பவும் ஆரம்பிச்சிடாதே! நேற்றே சொன்னேனே... ரொம்ப வேண்டியவங்க... நாம போகணும்னு..."

"நான்... எப்படி... என்கிட்ட... நல்லதா பட்டுப் புடவை, நகை எதுவுமே இல்லையே! பெரிய இடத்துக் கல்யாணம்னா நாமளும் அதுக்கேத்த மாதிரி போக வேண்டாமா?" - என்றதும் அண்ணன் தங்கை இருவரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர்.

"நீலா! நீ... இதுக்காகத்தான் வரமாட்டேன்னு சொன்னியா?"

"ஆமாங்க! ஆம்பிளைங்க ஒரு சட்டையும் பேண்ட்டையும் மாட்டிட்டுப் போயிடுவீங்க. ஆனா நாங்க கை கழுத்துன்னு எதுவும் போடாம போய் நிக்க முடியாதே!"

"ச்சே... இத்தனை நாளா இதை யோசிக்கலையே?" - தலையில் தட்டினான் மாதவன்.

"அண்ணா! நீ இதுவரை அண்ணிக்கு எதுவுமே வாங்கித் தரலியா?" - கோபமும் வியப்புமாய்க் கேட்டாள் குறிஞ்சி.

"அது... அவ இதுவரைக்கும் எதுவும் கேட்கலையே?"

"ரொம்ப நல்லா இருக்கு. கேட்டாத்தான் வாங்கிக் கொடுப்பியா? மனைவிக்கு என்ன தேவைன்னு பார்த்து வாங்கிக் கொடுக்க மாட்டியா? ஏன் அண்ணி! அவன்தான் வேலை வேலைன்னு அலைவான். நீங்களாவது கேட்க லாமில்ல...?"

"நான்... எப்படிக் கேட்கிறது?"



"இவன் உங்க புருஷன்தானே?" - குறிஞ்சி கேலியாய்க் கேட்க, திக்கென நிமிர்ந்தாள் நீலா. "ம்..."

"இவன் உங்க புருஷன்தானே?"

"ம்... ஆமாம்."

"பின்னே... இவன்கிட்ட கேட்காம யார்கிட்ட போய்க் கேட்பீங்க? ஆம்பிளைங்களா வாங்கித் தருவாங்கன்னு எதிர்பார்க்கக் கூடாது அண்ணி. தீபாவளி. பொங்கல், வெட்டிங் டே, பர்த்டேன்னு என்னென்ன விசேஷம் வருதோ அதையெல்லாம் காரணம் காட்டி நாமளே கேட்டு வாங்கிக்கணும். புரியுதா!"

"ம்... புரியுது!" - தலையாட்டினாள்.

"என்ன புரியுது?"

"இனிமே கேட்டு வாங்கிக்கிறேன்."

"சரி. இப்போ நாளைக்கு ஆக வேண்டியதைப் பார்க்கலாம். வீட்டுக்குப் போய் என் பீரோவில இருக்கிற புடவையில நல்லதா ஒரு பட்டு சாரி எடுத்துக் கட்டிட்டுப் போங்க. பீரோ லாக்கர்ல அம்மாவோட நகைங்க இருக்கும். உங்களுக்குப் பிடிச்சதைப் போட்டுக்கங்க..."

"இல்ல... வேண்டாம்!" - அவசரமாய் மறுத்தாள்.

"அண்ணி! அதெல்லாம் உங்க மாமியார் நகைங்க.... அம்மா உயிரோட இருந்திருந்தா நீங்க வந்த அன்னிக்கே தந்திருப்பாங்க. நான்தான் கவனிக்காம இருந்திட்டேன். எந்தக் கூச்சமும் இல்லாம எடுத்துப் போடுங்க..."

"இல்லை... இருக்கட்டும். எனக்கு இந்தத் தாலியே போதும்."

"அண்ணா! இது சரிப்படாது. நீயே எடுத்துக் கொ... பீரோ சாவி எங்கே இருக்குன்னு தெரியுமில்ல!"

"தெரியும்மா..."

"அண்ணா! பீரோவில மேல் தட்டுல ஒரு கோல்ட... கலர் பட்டு சாரி இருக்கும். சுஜா மேரேஜுக்குக் கட்டுறதுக்கா... எடுத்தேன். அதை எடுத்துக் கொடு. பிளவுஸ் எல்லாம் தைக்... வைச்சிருக்கேன். அண்ணிக்கு கரெக்ட்டா இருக்கும்."

"சரிம்மா... நீ படுத்துக்க... காலையில பேசிக்கலாம்."

"அண்ணா! நீ எப்போ போகணும்?"

"டயமாச்சு... போக வேண்டியதுதான். வேலை மு... நேரமாகிடும். நீலா! நீ ஆறு மணிக்கெல்லாம் வீட்டுக்கு... போய் குளிச்சிட்டு ரெடியாய் இரு. நான் வந்து அழைச்சிட்டு... போறேன்."

"குறிஞ்சிக்குத் துணையா இருந்துக்கிறேங்க..."

"என்னை நர்ஸ் கவனிச்சிப்பாங்க அண்ணி! நீங்... போயிட்டு வாங்க. சுஜாகிட்ட சொல்லுங்க."

"ச... சரி!" - அரை மனதாய் தலையாட்டினாள் நீலா.

"சரிம்மா... நான் கிளம்புறேன். நீங்க தூங்கு... மாத்திரை போட்டியா குறிஞ்சி?"

"ம்... போட்டாச்சு அண்ணா?"

"நீலா! நீ சாப்பிட்டியா?"

"ம்... டிபன் சாப்பிட்டேங்க."

"சரி... பத்திரம். நான் கிளம்புறேன். நீலா! ... காலையில ஆட்டோ பிடிச்சி வீட்டுக்குப் போயிடு. நான்... வர்றதுக்குள்ள ரெடியாயிடு."



"சரிங்க..." - கணவனை வழியனுப்பி வைத்த பிறகும், தயக்கமாகவே இருந்தது. மருந்தின் உதவியால் குறிஞ்சி உறங்கத் துவங்க, ஸ்டூலில் அமர்ந்து கொட்டக் கொட்ட விழித்திருந்தாள் நீலா.

'இந்தத் திருமணத்திற்குப் போகத்தான் வேண்டுமா? தெரிந்தவர்களின் கண்ணில் பட்டால்! இத்தனை நாளாய் பதுங்கி வாழ்ந்தாயிற்று. முதன் முறையாய் நாளை வெளி உலகைக் காணப் போகிறேன். வெளி மனிதர்கள் என்னை அடையாளம் கண்டு கொள்வார்களோ! ஏளனமாய் நகைப்பார்களா? கூடிக் கூடிப் பேசுவார்களோ?

இதோ நிற்கிறாளே... இவ யார் தெரியுமா? கைலாசம் பொண்ணு... எவன் கூடவோ ஓடிப் போனாளே அவதான். பாரேன்! கொஞ்சமும் கூச்சமில்லாம வெளியே சுத்துறதை... குடும்பமே காலி பண்ணிட்டுப் போயிடுச்சு. எல்லாம் இவளாலதான்! - எனப் பழிப்பார்களோ?

சமூகத்தில் உயர்ந்த அந்தஸ்து உடையவர் அப்பா. அந்த வீட்டிற்கே எஜமானர்அப்பா! தோட்டம் முழுக்கப் பூத்துக் குலுங்கும் மலர்வனம். அனைத்து வகைப் பூக்களையும் தேடிப் பிடித்து வாங்கி, அதைக் கவனமாய்ப் பராமரித்து பூப்பூக்க வைத்த பெரிய அண்ணன் எப்படி அதையெல்லாம் விட்டுச் செல்ல முடிவெடுத்தான்.

பெட்டி நிறைய நகைகளோடும் பணத்தோடும் புத்தம் புதிய உடைகளோடும் வீட்டை விட்டு வெளியேறி வந்து நான்கே நாட்களில் மொத்தத்தையும் இழந்து, தேடி அலைந்து வேறு போக்கிடமின்றி மீண்டும் பிறந்த வீட்டுக்கே சென்றுவிடலாம் என்று இருட்டிய பிறகு வீட்டைத் தேடிச்

சென்றவளுக்கு இருளடைந்த பூட்டிய வீடுதானே தனியாய் நின்றது.

அதற்குப் பிறகுதானே வாழ வழி தெரியாதவளாய் பதுங்கக் கூடு இல்லாமல் இந்தப் பூமியில் வாழ பயந்துதானே தற்கொலை முடிவை எடுத்தாள். விடிவதற்கு முன்பாய் சென்று தற்கொலைப் பாறையில் ஏறியும் கீழே விழப் போகும் சமயம் ஒருவர் பார்த்து விட்டார். அந்த ஒருவரால் காப்பாற்றப்பட்டு உடல் தேறி, அவரது அன்பான அறிவுரைகளால் மனமும் தேறி பின் அவருக்கே மனைவியாகி... அவருடைய பாதுகாப்பில் இத்தனை நாள் வாழ்ந்து விட்டோம்.

இப்படியே கடைசி வரை வாழ்ந்து விடலாம் என நினைத்திருக்க... நாளை முதல் கடைக்கு வா... என்கிறார். இந்தத் திருமணத்திற்கு சென்றே ஆக வேண்டும் என்கிறாரே! எப்படிச் செல்வது? தெரிந்தவர்களின் கண்ணில் பட்டால் என்ன செய்வது? எப்படித் தவிப்பது?

குழப்பமாய் சிந்தித்ததில் தலை வலித்தது. உறக்கத்தைச் சுத்தமாய்த் தொலைத்து விடியும் வரை சிந்தித்துக் கொண்டே அறைக்குள் நடை போட்டாள். பொழுது விடியத் துவங்க, மனமே இன்றி வீட்டுக்குப் புறப்பட்டாள். குறிஞ்சி சொன்னவற்றிற்கெல்லாம் மௌனமாய் தலையசைத்து விட்டு வெளியேறினாள்.

என்னவென்று சொல்ல முடியாத உணர்வு ஆட்டிப் படைத்தது. என்ன இது? ஏன் இப்படி உடம்பெல்லாம் பதறுகிறது? நான் ஏன் இப்படிப் பயந்து நடுங்குகிறேன்? இத்தனை வருடங்களில் இன்றுதான் வெளியே அழைத்துச் செல்ல வற்புறுத்துகிறார். இதற்கு மேலும் மறுப்பது சரியல்ல!



எது எப்படி ஆனாலும் சரி. இன்று அவரோடு மனநிறைவோடு வெளியே புறப்பட வேண்டும். வேறு எதைப் பற்றியும் சிந்திக்கக் கூடாது. கசப்பான நிகழ்வுகளை நினைத்துக் கொண்டு கிடைத்த இனிமையான வாழ்வை வீணாக்கி விடக் கூடாது. இனி இதுதான் நம் வாழ்க்கை.

என் கணவனோடு நான் வெளியே செல்ல ஏன் தயங்க வேண்டும்? ஏன் பயப்பட வேண்டும்? மனதைத் தெளிவாக்கிக் கொண்டு மருத்துவமனையை விட்டு வெளியேறினாள். வரிசையாய் நின்றிருந்த ஆட்டோவில் ஒன்றை வாடகை பேசிவிட்டு ஏறி அமர்ந்தாள்.

விடிய ஆரம்பித்த பிறகும் இன்னும் வெளிச்சம் வரவில்லை. இரவில் பெய்த மழையால் சாலையோரம் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. குளிர் வாட்டியெடுத்தது. புடவைத் தலைப்பால் போர்த்திக் கொண்டாள்.

"கொஞ்சம் சீக்கிரமா போங்க ஸார்! கல்யாண வீட்டுக்குப் போகணும்."

"சரிங்கம்மா..." - என்றவாறு ஆட்டோ சீற, பத்தே நிமிடத்தில் வீடு வந்தது. தனக்கு முன்பாக வீடு வந்து குளித்து ரெடியாய் நின்றான் மாதவன்.

"என்ன நீலா... இவ்வளவு லேட்டா வர்ற? சீக்கிரமா ரெடியாகு. டயமாச்சு... நான் ஆட்டோவைக் கட் பண்றேன். க்விக்!"

"இதோங்க... பத்தே நிமிஷம்!" - பெற்றவர்களையும் உடன்பிறந்தவர்களையும் பார்க்கப் போவதை அறியாமல் உற்சாகமாய் ஓடினாள்.

# 9

உரிமை கொள்ள உறவுகள்
ஆயிரம் இருந்தாலும் உள்ளத்தைப்
புரிந்து கொள்ள ஒரே ஒரு
உயிர் போதும் உன்னைப் போல!

**தி**ருமண மண்டபம் முழுக்கக் கூட்டம் மொய்த் கொண்டிருந்தது. வாசலில் கட்டியிருந்த ஒலிபெருக்கிய மேளதாளங்கள் முழங்கிக் கொண்டிருக்க, மாதவன் தன ஆம்னியை நெரிசலான வாகனங்களுக்கு இடை நிறுத்திவிட்டு இறங்கினான்.

"நீலா! சீக்கிரம் வா. முகூர்த்த நேரம் நெருங்கிடுச்சி

"இதோ வர்றேங்க..." - இடப்பக்கக் கதவைத் திற இறங்கியவளின் கண்கள் பரபரத்தன. யாரேனும் தன்னை உற்றுக் கவனிக்கிறார்களா? உயர்தட்டு வர்க்க ஜனங்க வருவதும் போவதுமாய் இருக்க, குனிந்து தன்னை ஒ முறை பார்த்துக் கொண்டாள்.

தங்கநிற காஞ்சிப் பட்டில் அரக்கு நிற பார்டு கூடிய ஜரிகை. அதே நிற ப்ளவுஸ். குறிஞ்சிக்காக தைக் பட்டிருந்தாலும் வெகு பாந்தமாய்ப் பொருந்தியிருந் மெலிதான நகைகள். தலையில் கணவன் வாங்கித் த மல்லிகைச் சரம். அவசரமான ஒப்பனையிலும் செ அழகாய் இருந்தாள்.

"என்ன நீலா நின்னுட்ட? வா..."

" என்னங்க! நான்... எப்படி இருக்கேன்?"

"உனக்கென்ன தங்கச் சிலையாட்டம் இருக்கே... வ உள்ளே போகலாம்."



"ரொம்ப சிம்பிளா இருக்கேனா?"

"இதுதாம்மா அழகு. வாம்மா... தாலி கட்டின பிறகுதான் உள்ளே வருவியா?"

"இல்லங்க. வந்திட்டேன்..." - என்றவள் கணவனுடன் இணைந்து நடக்க, அதுவரை வாசலில் நின்று வந்தவர்களை வரவேற்றுக் கொண்டிருந்த கைலாசத்தை அவரது மனைவி வந்து அழைத்தாள்.

"என்னங்க... முகூர்த்தத்துக்கு நேரமாச்சு. வாங்க... தாலியைத் தொட்டுக் கொடுங்க."

"இதோ வந்திட்டேன்..." - பட்டு வேஷ்டி பரபரக்க மனைவியோடு உள்ளே செல்ல, கணவனோடு வாசலில் ஏறினாள் நீலு. வாசலில் இருபுறமும் இராட்சதக் காற்றாடிகள் பன்னீரைத் தூவிக் கொண்டிருக்க, சின்ன சிலிர்ப்போடு அதை ரசித்தாள்.

கற்கண்டு, குங்குமம், சந்தனம், ரோஜாப் பூக்கள் என வரிசையாய் வரவேற்பு மேஜையில் வீற்றிருக்க, குங்குமத்தை எடுத்து நெற்றியிலும் வகிட்டிலும் இட்டுக் கொண்டாள்.

திருமண வீட்டிற்கே உரிய பரபரப்பு, கலகலப்பு, சலசலப்பு. இவற்றின் நடுவே புகுந்து கிடைத்த இருக்கையில் அமர்ந்து கொண்டனர். அந்த ஹால் முழுக்கக் கூட்டம். நின்று கொண்டும் நடந்து கொண்டும் அமர்ந்து கொண்டும் அரட்டையடித்துக் கொண்டும் இருக்க, நீலா மணமேடையை நோக்கினாள்.

ஏராளமானோர் சூழ்ந்திருக்க, மணமக்களின் முகமோ மணமேடையோ கண்ணில் படவில்லை. போதாக்குறைக்கு

...டியோ எடுப்பவர்களும் போட்டோகிராபர்களும் மறைத்து கொள்ள, சலிப்பாய் கணவனிடம் திரும்பினாள்.

"என்னங்க! எனக்கு எதுவுமே தெரியலைங்க..."

"முதல் வரிசையில உள்ளவங்களுக்கே தெரியல இங்கே எப்படித் தெரியும்?"

"அப்போ தாலி கட்டுறதை எல்லாம் பார்க்க முடியாதா?"

"ரெண்டு பக்கமும் வரிசையா டி.வி. வைச்சிருக்கா பாரு... அதுல பார்த்துக்க." - ஆவலாய் டி.வி... பார்த்தவளின் முகம் ஏமாற்றமாய்த் திரும்பியது.

"ஏங்க! இதுல மணவறை தெரியலை. வாசல் இருந்து வர்றவங்கதான் தெரியுறாங்க. நாம கொஞ்ச முன்னால போய் உட்காருவோமா?"

"நீலா! ஏன் இவ்வளவு அவசரப்படுறே? கல்யாண முடிஞ்சதும் எல்லாக் கூட்டமும் டைனிங் ஹாலுக்கு போயிடும். அப்ப மாப்பிள்ளையையும் பொண்ணையு நல்லாப் பார்த்துக்க. சரியா?"

"நான் ஒண்ணும் அவங்களைப் பார்க்க அவச படலை."

"வேற?"

"நீங்க செய்த மேடை அலங்காரத்தைப் பார்க்கத்தா ஆசைப்பட்டேன்..." - என்றவளைக் கண்கள் விரிய பார்த்துப் புன்னகைத்தான்.

"டோண்ட் வொர்ரி. கிஃப்ட் கொடுக்க ஸ்டேஜுக்கு போவோமில்ல... அப்போ நல்லாப் பார்த்துக்க."



"ம்... சரி!" - சமர்த்தாய் தலையாட்டியபோது யாரோ ஒருவர் அட்சதையோடு நெருங்கினார். மற்றவர்களைப் போல் தானும் கொஞ்சம் மஞ்சள் அரிசிகளை அள்ளிக் கொண்டாள். மனம் சுருங்கியது.

இதுதான் கல்யாணம்.

ஊர் கூடி நின்று அட்சதை தூவி வாழ்த்த... பெற்றவர் களின் கண்கள் பனிக்க... புரோகிதர்களின் வேதமந்திரங் களோடு மேளதாளங்கள் முழங்க கழுத்தில் தாலியேறுவது தான் திருமணம்.

ஆனால் என் திருமணத்தில் இப்படி எதுவும் நடக்கவில்லையே! எங்கள் இருவரைத் தவிர வேறு யாருமில்லை. எந்தச் சூழலில் தங்களது திருமணம் நடந்தது என்பதை மனம் கனக்க நினைக்கும்போது கெட்டிமேளம் உச்சஸ்தாயியில் முழங்கியது. அனைவரும் எழுந்து நின்று அட்சதை தூவ, அது மேடையை நெருங்காமல் முன்னே அமர்ந்திருந்தவர்களின் மீது சிதறியது.

மாதவன் மனைவியை இடித்தான். "என்ன பண்றே நீ? அட்சதை போடு."

"அட்சதை அரிசி புனிதமானதுங்க. அது தரையில விழுந்தா மத்தவங்க கால்ல படுமே... இங்கே இருந்து போட்டா மணமக்கள் மேல விழாது."

"அதுக்கு? இதை வீட்டுக்கு எடுத்துப் போகப் போறியா?"

"ம்ஹூம். எப்படியும் கிஃப்ட் கொடுக்கப் போவோ மில்ல... அப்போ அவங்க மேல தூவிடுவேன்."

"அடடா! கிஃப்ட்ன்னதும் தான் ஞாபகம் வருது. குறிஞ்சி சுஜாதாவுக்கு ஒரு ரெட் ரோஸ் பொக்கே பிரஸண்ட் பண்ணச் சொன்னாளே!"

"ஆமா! நீங்க கொண்டு வரலையா?"

"காவேரிகிட்ட செய்யச் சொல்லிட்டு வீட்டுக்கு வந்தேன். வரும்போது கடை வழியா வந்திடலாம்னு நினைச்சேன். நீ புறப்பட லேட்டானதும் அவசரமா வந்ததுல அது மறந்து போச்சே...!"

"இப்ப என்னங்க பண்றது?"

"நீலா! இப்பத்தான் தாலி கட்டியிருக்காங்க. கிஃப்ட் கொடுக்க எப்படியும் நேரமாகும். நான் போய் எடுத்திட்டு வந்திடவா?"

"ஐயோ! என்னைத் தனியா விட்டுட்டா போறீங்க?" - பதறினாள்.

"நீ இப்படியே உட்கார்ந்திரு. டென் மினிட்ஸ்ல வந்திடுவேன்."

"நானும் வர்றேன். சேர்ந்தே போயிட்டு வருவோம்."

"நீ எதுக்கும்மா? நான்தான் உடனே வந்திடுவேனே... நீ உட்கார்ந்து கல்யாணத்தைப் பார்த்திட்டு இரு."

"ம்ஹூம். எனக்கு இங்கே யாரையும் தெரியாது. தனியா இருக்கப் பயம்மா இருக்கும். நானும் வர்றேன்..." குழந்தையாய் சிணுங்கியவளிடம் மறுக்க முடியாமல் மணமேடையைத் திரும்பிப் பார்த்தான்.

கூட்டம் இன்னும் கலையவில்லை. மேளவாத்தியங்கள் தங்களது பணியை நிறுத்தியிருக்க, மேடையின் வலப்



புறமாய் அமைந்திருந்த இசைக் குழு தங்களது வாத்தியங்களை சரி செய்து கச்சேரிக்கு ஆயத்தமாகிக் கொண்டிருந்தனர்.

பரிசுகளைக் கொடுத்து விட்டுச் செல்ல ஒரு கூட்டம் மேடையை நோக்கிப் படையெடுத்துக் கொண்டிருந்தது. இந்தக் கூட்டத்தில் இவளை ஏன் தனியாய் விட்டுச் செல்ல வேண்டும்?

மனைவியிடம் திரும்பினான். "சரி வா... போயிட்டு வந்திடலாம்!" என்றதும் உற்சாகமாய் எழுந்தாள்.

கணவனுடன் நடந்து வாசலை நெருங்கியபோது யாரோ கையைப் பற்ற, திடுக்கிட்டு பதறித் திரும்பினாள்.

சுஜாதாவின் அம்மா நின்று கொண்டிருந்தாள்.

"என்ன... ரெண்டு பேரும் கிளம்புறீங்க? வாங்க சாப்பிட்டுப் போகலாம்."

நீலா மாதவனைப் பார்க்க, மாதவன் புன்னகைத்தான். "அம்மா! நாங்க வீட்டுக்குப் போகலை. சுஜாவுக்கு பொக்கே எடுத்திட்டு வர மறந்திட்டேன். அதான் எடுத்திட்டு வரலாம்னு கிளம்புறோம்."

"நீ போய் எடுத்திட்டு வாப்பா. இவ இங்கே இருக்கட்டும்."

"நானும் அதைத்தான் சொன்னேன். பயப்படுறா!"

"பயமா! எதுக்குப் பயப்படணும்? நாங்கள்லாம் இல்ல... நீ போ மாதவா! நான் பார்த்துக்கிறேன். சுஜாதா பக்கத்தில் நிற்க யாரும் இல்லை. இவளைக் கூட்டிட்டுப் போறேன்..."

மாதவன் மனைவியைப் பார்க்க, அவ
அவஸ்தையாய் தலையசைத்தாள்.

"போ நீலா. நான் இப்ப வந்திடுறேன்."

"அவன் வரட்டும். நீ வாம்மா..." – என்றவள் அவளை
அழைத்துக் கொண்டு மேடையை நெருங்க, வாசலை
நோக்கிச் சென்ற கணவனைத் திரும்பிப் பார்த்துக் கொண்டு
சென்றாள் நீலா.

"மாதவனுக்குக் கல்யாணம் ஆனதுதான் தெரியும்
இதுவரை உன்னை வெளியே எங்கேயுமே பார்க்கலியே.
மாதவன் அழைச்சிட்டுப் போக மாட்டானா?"

"அப்படியெல்லாம் இல்லை ஆன்ட்டி. நான்தான்
போறதில்ல..."

"ஏம்மா?"

"சு... சும்மாதான்..." – அவஸ்தையாய் மேடையை
நெருங்கிய விநாடி உடல் முழுக்க நகைகளாய் ஒ
அம்மாள் எதிரில் வந்தாள்.

"ஏய்! பாக்யா எப்படியிருக்கே? பார்த்து எவ்வளவு
நாளாச்சு?" – ஆர்ப்பாட்டமாய்க் கேட்டுக் கொண்டு
சுஜாதாவின் அம்மாவைப் பற்றிக் கொள்ள,

"அடடே! எப்போ வந்தே கமலா?" – என இருவரு
ஒருவரையொருவர் கட்டிக் கொள்ள, நீலா தனிமையில்
விடப்பட்டாள்.

அவர்கள் இருவரும் பேசிக்கொண்டே மேடையில்
ஏறிவிட, தவிப்பாய் நின்று கொண்டிருந்தவளை முதலில்
பார்த்தது யுவராஜன்.



மேடையில் நின்று மணமக்கள் அக்னியை வலம் வர அண்ணனோடு இணைந்து வந்தவனின் கண்கள் வெகு திடீரென கீழே செல்ல, மேடையருகே நின்று கூட்டத்தில் காணாமல் போன குழந்தையைப் போல விழித்துக் கொண்டிருந்தவளைப் பார்த்ததும் புருவம் சுருக்கினான்.

எதிரே வீசிய ஃப்ளாஷ் ஒளிகள் கண்களைக் கூசச் செய்ய, சற்று நகர்ந்து வந்து பார்த்தவனின் கண்களில் நெருப்பு பொறி பறந்தது. மளமளவென மேடையை விட்டு இறங்கியவன் நேராய்த் தங்கையை நெருங்கினான்.

"இங்கே என்ன பண்ணிட்டு இருக்கே?"

வெகு அருகே கேட்ட கோபமான குரலில் அரண்டு போய் திரும்பியவள்... திகைப்பாய் விழிகளை விரித்தாள். மூச்சு விடவும் தோன்றவில்லை. கண்கள் யுவராஜனின் முகத்தில் நிலைத்துப் போனது.

பரிவும் கனிவும் குறும்பும் நிறைந்த முகத்தில் ஏன் இத்தனை வெறுப்பு? கசப்பு. எப்போதும் குடிகொண்டிருக்கும் புன்னகை எங்கே போயிற்று? வெகு நாட்களுக்குப் பிறகு தன் உடன்பிறந்தவனைக் கண்டதும் கண்களில் நீர் சுரந்தது. உதடு துடிக்க அழைத்தாள்.

"அ...ண்...ணா...!"

சட்டெனக் கையை உயர்த்தித் தடுத்தான். "யார் நீ? இங்கே என்ன பண்றே?" – யுவராஜனின் கேள்வியில் பலமாய் அதிர்ந்தாள்.

"அ... அண்ணா! நான்... நான் நீலா..."

"ஸாரி! நீ யாருன்னு எங்க யாருக்கும் தெரியாது. வெளியே போ."

கண்ணீர் பொங்கி வழிந்தது.

"அண்ணா..." - கண்ணீர் பொங்கி வழிந்தது.

"சீ! வாயை மூடு. கல்யாண வீட்டில வந்து ஏன் கண்ணீர் வடிக்கிற? உன்னாலே நாங்க வடிச்ச கண்ணீர் போதாதா? இப்பத்தான் கொஞ்சம் தேறி வர்றோம். அதைக் கெடுப்பதற்கென்றே வந்தாயா? போ வெளியே!" - அடுத்தவருக்கு கேட்காத தொனியில் உறுமினான்.

"அண்ணா! நான்... தப்பு பண்ணிட்டேண்ணா... உங்களையெல்லாம் விட்டுட்டு...!"

"ஏய்! நீ யாருன்னே தெரியாது. உன் கதையைக் கேட்க வேண்டிய அவசியமும் இல்லை. வெளியே போ. எனக்கு ஆயிரம் வேலை இருக்கு."

"அண்ணா! ஏண்ணா என்னை விரட்டுற?"

"இதோ பார். இன்னிக்கு என் அண்ணனுக்குக் கல்யாணம்..." - யுவராஜன் சொல்லத் திடுக்கிட்டுப் போனாள்.

"எ... என்ன?" - கண்கள் தானாய் மணமேடைக்குச் செல்ல, புத்தம் புதிய மனைவியுடன் போட்டோவிற்கு போஸ் கொடுத்துக் கொண்டிருந்தான் கார்த்திக்.

கழுத்து நிறைய மாலையோடு கல்யாணக் கோலத்தில் அவனைப் பார்க்கும் போது நெஞ்சம் விம்மியது. 'இது என் அண்ணன் திருமணமா? கடவுளே! இந்தக் காட்சியைக் காணத்தான் என்னை இங்கு வரவழைத்தாயா?' - கண்களில் நீர் நிற்காமல் வழிய, அதைத் துடைக்கவும் தோன்றாமல் சிலையாய் நின்றாள்.

"அவனை இந்தக் கல்யாணத்திற்குச் சம்மதிக்க வெச்சதே பெரும்பாடு... உன்னை



நினைச்சு அழுதிட்டு இருந்தான். இப்ப அவன் கண்ணில பட்டுடாதே... போயிடு... போ!"

நீலா அசையாமல் நின்றாள். திடீரென ஏதோ தோன்ற வலது கை உள்ளங்கையை விரித்துப் பார்த்தாள். அட்சதை அரிசி இருந்தது. கண்ணீரோடு அதை மேடையில் இருந்த அண்ணனை நோக்கித் தூவினாள்.

யுவராஜன் அதட்டினான். "என்ன பண்றே நீ?"

"நான் போயிடுறேண்ணா... இது அண்ணன் கல்யாணம்னு தெரியாமத்தான் வந்திட்டேன். மன்னிச்சிடுண்ணா...!"

தங்கையின் கண்ணீரைக் காண சகியாமல் முகத்தைத் திருப்பிக் கொண்டான். அவனது கண்களும் கலங்கியது. பற்களைக் கடித்து தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டான்.

அதே நேரம் கார்த்திகேயன் குழப்பமாய் வியப்பாய் சுற்றிலும் பார்வையைச் சுழற்றினான். யார் தன்மீது இத்தனை தாமதமாய் அட்சதை தூவியது. கண்கள் ஆர்வமாய்த் தேட, மேடையின் கீழே யுவராஜன் ஏதோ ஒரு பெண்ணிடம் பேசிக் கொண்டிருப்பது தெரிந்தது.

அந்தப் பெண்ணின் முகம் தெரியவில்லை. ஆனால் யுவராஜனின் முகம் தெளிவாய்த் தெரிந்தது. அந்த முகத்தில் தொனித்த கடுமை தெரிந்தது. கலங்கியிருந்த கண்கள் தெரிந்தது. முகத்தின் கடுமை சற்றும் மாறாமல் கைநீட்டி அவளை வெளியே போகச் சொல்லிக் கொண்

கார்த்திக்கின் முகம் மாறியது. 'யார் இவள்? என் தம்பியைக் கோபப்பட வைப்பவள். கலங்க வைப்பவள். ஒருவேளை... நேற்று குப்பையில் வீசிய பூங்கொத்திற்கும் இவளுக்கும் ஏதேனும் சம்பந்தம் இருக்குமோ!'

"மாப்பிள்ளை ஸார்... இங்க கேமிராவைப் பாருங்க."

"ஒன் மினிட்!" - என்றவன் சற்று முன்னே வந்து குரல் கொடுத்தான்.

"யுவா! யார் அது?" - சற்று உரக்கவே அழைக்க... அந்தக் குரலில் இருவரும் திரும்பினர். நீலாவின் முகத்தில் கண்ணீர். யுவராஜனின் முகத்தில் பதட்டம். கார்த்திக் அவளை உற்றுப் பார்த்தான்.

தொடர்ந்து கண்களைக் கூசும் விளக்கு வெளிச்சத்தில் நின்றதால் இருட்டாகவே தெரிந்தது. கீழே நின்றவளின் உருவம் புலப்படவில்லை. கண்களைக் கூர்மையாக்கிப் பார்த்தான்.

தங்கையின் உருவம் தெரிய ஆரம்பிக்க, கார்த்திக்கின் உடல் ஒருமுறை அதிர்ந்தது. நிற்க முடியாமல் தள்ளாடினான். மற்றவர்கள் பதற சட்டென ஒ... போட்டோகிராபர் பற்றிக் கொண்டான்.

"அண்ணா!" - பதறினான் யுவராஜன்.

"யு... யுவா! இது... இது நம்ம..."

"இல்லண்ணா.... யாரோ அட்ரஸ் மாறி வந்திட்டாங்க. அதான் பேசி அனுப்பிட்டு இருக்கேன்." - யுவராஜன் சாதாரணமாகவே சொல்ல, கார்த்திக் பதறித் தடுத்தான்.



"இல்லை... அவங்க எனக்குத் தெரிஞ்சவங்கதான். மேலே கூட்டிட்டு வா."

"அண்ணா!"

"கூட்டிட்டு வா யுவா! ப்ளீஸ்..." - அண்ணனின் கட்டளைக்குப் பணிந்து நீலாவைக் கடுப்பாய்ப் பார்த்தான். "கூப்பிடுறாங்கள்ல... போ!"

"அண்ணா! அ... அவர்... வந்திடட்டுமே!"

"ஓ! அவனும் வந்திருக்கானா? எங்கே இருக்கான்? உன்னை முன்னால அனுப்பிட்டு எங்கே ஒளிஞ்சுட்டு இருக்கான்... பொட்டப்பய!"

"அண்ணா! மரியாதையாப் பேசு..." - சீறினாள் நீலா. அவளது குரலில் ஒரு சிலர் திரும்ப, பற்களைக் கடித்தான் யுவராஜன்.

"என்ன கோபம் வருதா? அவ்வளவு ரோஷம் இருக்கிறவ இங்க ஏன் வந்தே? இத்தனை வருஷமா இல்லாத பாசம் இப்ப எங்கிருந்து வந்தது. அவன் சொல்லி அனுப்பினானா? எல்லாரும் கோபத்தை மறந்திருப்பாங்க...

கல்யாண பிஸியில இருப்பாங்க. இப்பப் போனா ஈஸியா ஒப்புக்கலாம்னு சொன்னானா?" - மனதில் மண்டியிருந்த ஆத்திரம் பேச்சாய் வெளிப்பட நீலாவின் முகம் கோபச் சிவப்பானது.

"உங்களை ஒட்டி உறிஞ்ச வேண்டிய அவசியம் எங்களுக்கில்லை. நாங்கள் ஒன்றும் சாப்பாட்டுக்கு வழியில்லாமல் இங்கு வரவில்லை."

"பிறகேன் வந்தாய்?"

"நான் என் நாத்தனாரின் தோழியின் கல்யாணத்திற்கு வந்தேன். அவர் பரிசுப் பொருளை எடுத்து வரப் போயிருக்கிறார்!" - நீலாவும் எடுப்பாகவே சொல்ல, அவர்களைச் சுற்றிலும் கூட்டம் கூட ஆரம்பித்தது.

கார்த்திக் மேடையை விட்டுக் கீழே இறங்கி வர, அவன் பின்னே சுஜாதா ஓடி வந்தாள்.

அங்கே சிறு சலசலப்பு ஏற்பட வந்தவர்களைச் சாப்பிட அழைத்துச் சென்று கொண்டிருந்த கைலாசம் பதட்டமாய் ஓடி வந்தார். கீழே இறங்கி வந்த சுஜாதா நீலாவைக் கண்டதும் முகம் மாறினாள்.

"என்னங்க! இவங்க மாதவன் அண்ணாவோட வொய்ஃப். இவங்ககூட என்ன தகராறு?"

"யாரு? மாதவனா... யாரது?"

"அதாங்க... என் ஃபிரண்ட் குறிஞ்சியோட அண்ணன்!"

அண்ணன், தம்பி இருவரின் முகமும் மாறியது. "யாரு? இந்த ஃபிளவர் டெக்கரேட் பண்ணினவனா?"

"ஆமா!" - சுஜாதா சொல்ல, ஆவேசமாய்த் தங்கையின் புறம் திரும்பினான் யுவராஜன்.

"என்ன... அவனா? அவன் கூடவா போனாய்? போயும் போயும் ஒரு பூக்காரனுக்காகவா எங்களையெல்லாம் உதறிவிட்டுப் போனாய்?

அப்பா... பார்த்தீங்களாப்பா! உங்க பொண்ணு எங்கே போனாள்? யார் கூடப் போனான்னு பதறித் துடிச்சுத் தேடுனீங்களே... உங்க பொண்ணு ஒரு பூக்காரனோட



போயிருக்கா. இதே ஊர்லதான் இருந்திருக்கா... கொஞ்சம் நஞ்சம் இருந்த மானம் மரியாதையையும் வாங்கிட்டுப் போகலாம்னு நம்மைத் தேடி வந்திருக்கா."

மகளைக் கண்ட அதிர்ச்சியில் உறைந்து போய் நின்றார் கைலாசம்.

பேச்சு வராமல் நின்றவரை நெருங்கி அவரது காலில் விழுந்தாள் நீலா. "இல்லப்பா! நான் எந்த உள்நோக்கத்தோடவும் வரலைப்பா... இது அண்ணனோட கல்யாணம்னு எனக்கு இப்பத்தாம்ப்பா தெரிஞ்சது. அப்பா! அப்பா... பேசுங்கப்பா. என்கிட்ட ஒரே ஒரு வார்த்தை பேசுங்கப்பா. நான் தெரியாம தப்பு பண்ணிட்டேன்ப்பா...

அதுக்கான தண்டனையும் அனுபவிச்சிட்டேன்ப்பா... என்னை மன்னிச்சிட்டேன்னு சொல்லுங்கப்பா... அப்பா! பேசுங்கப்பா..." - காலில் விழுந்து கதறியவளைத் தொட்டுத் தூக்கவும் மனமின்றி அசையாமல் நின்றிருந்தார் கைலாசம்.

நேற்று வரை ஓடியாடிக் கொண்டிருந்த மனைவி... உறவினர்களின் பேச்சில் நொந்து மகளின் நிலையை எண்ணிக் கலங்கி இரவோடு இரவாய் படுக்கையில் விழுந்தது மனக்கண்ணில் நின்றது. பெற்ற பிள்ளையின் திருமணத்தைக் காணமுடியாமல் படுக்கையில் தள்ளியது. இவளது நினைவுகள்தானே!

இவளால் ஏற்பட்ட களங்கத்தின் பாரத்தைச் சுமக்க முடியாமல் தானே தன் இணை கிடந்து துடிக்கிறது. இதோ இன்று ஊரே கூடி நின்று வேடிக்கை பார்க்கிறதே... அனைவரின் முகத்திலும் ஏளனம் தொனிக்கிறதே... ஆறத் துவங்கிய காயத்தைக் குத்திக் கிளறி விட்டுப் போக வந்தாளா?

மனதைக் கல்லாக்கிக் கொண்டு மகனை அழைத்தார். "கார்த்தி! நீ ஏன் கீழே இறங்கி வந்தாய்? மேடைக்குப் போ."

"அப்பா! இது..."

"சுஜாதா! உம் புருஷனை அழைச்சிட்டுப் போம்மா..."

"ச... சரிங்க மாமா!" - என்றவள் அதிர்ந்து நின்ற கணவனின் கரத்தைப் பற்றி அழைத்துச் சென்றாள்.

"எல்லாரும் ஏன் நிக்கிறீங்க? போங்க. போய்ச் சாப்பிடுங்க. வெஜ், நான்-வெஜ் எல்லாம் இருக்கு. போய்ச் சாப்பிடுங்க..." - சிரித்தவாறே அனுப்பி வைத்தார்.

நீலா தந்தையைத் திகைப்பாய்ப் பார்த்துக் கொண்டே எழுந்து நிற்க... அவளைத் திரும்பியும் பாராமல் சின்ன மகனிடம் திரும்பினார். "யுவா!"

"அப்பா...!"

"அம்மா அண்ணனைக் கல்யாணக் கோலத்தில பார்க்கணும்னு சொல்லிட்டே இருக்கா. நான் போய் அவளை அழைச்சிட்டு வர்றேன். நீ அதுக்குள்ள இங்க இருக்கிற வேண்டாததெல்லாம் வெளியேத்திடு."

"சரிப்பா..." - முகத்தில் அறை வாங்கியது போல் துடித்துப் போனாள் நிலா.

"அப்புறம் யுவா..."

"சொல்லுங்கப்பா!"

"எனக்கு ரெண்டே ரெண்டு புள்ளைங்கதான். நடுவுல வேற யாரும் சொந்தம் கொண்டாடிட்டு வர வேண்டாம். அப்படி வந்தா நான் இருக்க மாட்டேன்."



"அப்பா!" - இருவரும் ஒரே குரலில் பதறினர்.

நீலா வாயை மூடிக் கொண்டாள்.

"அம்மா வரும்போது அவ கண்ல எதுவும் பட்டுட வேண்டாம் யுவா! அவளாவது கடைசி வரை என்கூட வாழட்டும். அவளையும் பிரிச்சுட வேண்டாம்ன்னு சொல்லுடா!" என்றவாறு பொங்கி வந்த துக்கத்தோடு சரசரவென வெளியேறினார்.

யுவராஜனின் கண்கள் கலங்கிச் சிவந்திருந்தன. கண்ணீரோடு நின்ற தங்கையைக் கசப்பாய் ஏறிட்டான். "கேட்டியா? அப்பா சொன்னதையெல்லாம் கேட்டியா? இப்படி யாரும் எதுவும் சொல்லிடக் கூடாதுன்னுதான் உன்னை முதல்லயே வெளியே போன்னு சொன்னேன்."

"அண்ணா!"

"வேண்டாம். இன்னும் இங்கே நிற்காதே. அம்மா வர்ற நேரம். அவங்க உன்னைப் பார்க்க வேண்டாம். போயிடு."

"அண்ணா! ப்ளீஸ் அண்ணா... அம்மாவை மட்டும் ஒரே ஒரு தரம் பார்த்துட்டுப் போயிடுறேண்ணா..."

"நீலா! அதுக்கெல்லாம் இது நேரமில்லை. மொதல்ல நீ வெளியே போ. பார்... மணமேடையில சந்தோஷமா நிற்க வேண்டியவன் உன்னைப் பார்த்து ஊமையா அழுதிட்டு நிற்கிறான் பார். இதுக்காகவா தேடி வந்தாய்?"

"இல்லண்ணா... இல்ல." - மறுப்பாய் தலையசைத்தாள்.

"நேற்று வரை அம்மா நல்லாத்தான் இருந்தாங்க. ஆனா வந்த உறவுக்காரங்க எல்லாம் உன்னைப் பத்தி

பேசிப் பேசி அம்மாவுக்கு ஹார்ட் அட்டாக்
விசாரிச்சு பேசிப் பேசி அம்மாவுக்கு ஹார்ட் அட்டா...
வரவைச்சிட்டாங்க."

"ஐயோ!"

"இப்ப அம்மா உடம்பு ரொம்ப மோசமா இருக்கு... இந்தக் கோலத்தில உன்னைப் பார்த்தா நிச்சயமா அவங்... ஹார்ட் நின்னுடும். நீ அதைப் பார்க்கணுமா?"

"ஐயோ!" - கத்திக் கொண்டே காதுகளைப் பொத்தி... கொண்டாள். "வேண்டாண்ணா... இப்படியெல்லாம் பேசாதே... என் நெஞ்சே வெடிச்சிடும் போலிருக்கே! நான் வீட்டை விட்டு வெளியே வந்தது தப்பு. உங்களையெல்லாம் தூக்... யெறிஞ்சது தப்பு. இப்போ உங்களைப் பார்த்தது பெரி... தப்பு.

எல்லாத் தப்புக்கும் சேர்த்து என்னை மன்னிச்சிடுங்... இனிமே உங்க கண்ணில படவே மாட்டேன். இதுக்... மேலயும் உங்களைத் தலைகுனிய வைக்க மாட்டே... இனிமே என்னால யாருக்கும் ஒரு அவமானம் வராத... வரவே வராது!" - என்றவாறு விடுவிடுவெ... வெளியேறினாள்.

கண்ணீரோடு அவள் போவதைத் தடுக்க இயலாம... கண்கள் நிறைய நீரோடு பார்த்துக் கொண்டு நின்றா... யுவராஜன்.

"இதுதான் மாப்பிள்ளையோட தங்கையாம். எவ... கூடவோ ஓடிப் போயிட்டாளாம்."

"ஓடிப் போனவ ஏன் திரும்பி வந்திருக்கா? கூட்டிட்... போனவன் விட்டுட்டுப் போயிட்டானோ?"



"இருக்கும்... இருக்கும். இப்படி தறுதலையா போறதுங்க நடுத்தெருவுல நிக்கிறதைப் பார்த்திருக்கோமே... அப்படியும் புத்தி வர மாட்டேங்குதே..."

"கூட்டிட்டுப் போனவன் யாராம்?"

"எவனாவது கஷ்டப்பட்டவனா இருக்கும். அவ கோலத்தைப் பார்த்தா தெரியலை? மாசக்கணக்கா பட்டினி கிடந்தவ மாதிரி இருக்காளே... பாவம் சாப்பாட்டுக்கு வழியில்லாம திரும்பி வந்திருப்பாளோ?"

"ஏய்! அப்படியெல்லாம் சொல்லாதே.... பட்டுப் புடவை கட்டிண்டு வந்திருக்காளே... அண்ணன் கல்யாணத்தைப் பார்க்கக் கூட வந்திருக்கலாமில்ல...!"

"போனவ அப்படியே போக வேண்டியதுதானே... ஏன் இப்படி வந்து அசிங்கப்பட்டு மத்தவங்களையும் அசிங்கப்படுத்தணும்... இவளையெல்லாம் அடிச்சே விரட்டணும்!" - வாசலை அடையும் முன் தன்னைப் பற்றிய அவதூறுகளைக் கேட்க இயலாமல் காதுகளை மூடிக்கொண்டே ஓடியவள் திடுக்கிட்டு நின்றாள்.

அப்போதுதான் கையில் சிவப்பு நிற ரோஜாக்களால் ஆன பூச்செண்டை எடுத்துக் கொண்டு உள்ளே வந்தான் மாதவன். மனைவியைப் புன்னகையோடு நோக்கியவன் அவளது கண்ணீரைக் கண்டதும் முகம் மாறினான்.

கணவனைக் கண்டதும் கண்ணீர் உடைப்பெடுத்துக் கொள்ள ஓடி வந்து கணவனைக் கட்டிக் கொண்டு விம்மி வெடித்துக் கதறத் துவங்கினாள்.

# 10

உலகத்தில் உனக்கென யாரும்
இல்லாமல் இருக்கலாம் - ஆனால்
யாரோ ஒருவருக்கு நீயே
உலகமாய் இருக்கலாம்!

"நீலா கார்டன்' - எனப் பெயர் தாங்கி நின்ற பெரிய வீட்டின் முன்புற கார்டனில் சாய்வு நாற்காலியில் சாய்ந்திருந்தான் யுவராஜன். கண்ணோரமாய்த் துளி கண்ணீர் தேங்கி நின்றது. மனம் கனக்க அந்த வீட்டைப் பார்த்தான்.

நீலா பிறந்த வீடு. தவழ்ந்து விளையாடிய வீடு. துள்ளிக் குதித்துப் பறந்து திரிந்த வீடு. இன்று வெறுமையான கூடாய் காட்சியளித்தது. எப்படி இருந்த வீடு இது! கலகலப்பிற்கு ஒருபோதும் பஞ்சம் இருந்ததில்லை. எப்போதும் பாட்டும் கூத்துமாய் களை கட்டிய வீடு இது. யா[illegible] கண் பட்டது?

கடைக்குட்டியாய் பிறந்த நீலதாட்சாயிணியின் மீது அனைவருக்கும் கொள்ளைப் பிரியம். ஒருவரும் அவளை அழவிட மாட்டார்கள். ஆனால் இன்று ஊர் கூடி நிற்கும் வேளையில் தன் தங்கையை அழவிட்டோமே என நெஞ்சம் பதைத்தது. துரும்பாய் வந்து நின்றவளைக் கண்ட கண்கள் கலங்கித் தவித்தது.

ஏன் போனாய் நீலா? உனக்கு இங்கு என்ன குறை என்று இந்த மாளிகையை விட்டு வெளியேறினாய்? பள்ளியில் படிக்கும் காலங்களில் தினம் ஒரு கோரிக்கை யோடு குறையோடுதான் வருவாள் நீலா.

"அண்ணா! மகி வீட்ல கோல்டன் கலர்ல ரோஸ் [illegible]



முடியாதுன்னு அலட்டிக்கிறா... எனக்கு அந்த ரோஸ் வேணும் அண்ணா... ஒரு செடி இல்ல... பத்து செடி வேணும். இன்னிக்கே...!"

அன்றே அலைந்து திரிந்து ரோஜாச் செடியோடு வந்து நிற்பான் கார்த்திக். மறுநாள் அந்தக் கோல்டன் ரோஜா அவளது கூந்தலை அலங்கரிக்கும்போது அனைவரின் முகமும் பிரகாசிக்கும்.

"அப்பா! நான்தான் வளர்ந்திட்டேனே... எனக்கு ஸ்கூட்டி பெப் வாங்கித் தாங்க. ஸ்கூல் வேன்ல ரொம்ப கூட்டம்ப்பா... ஃப்ரீயா மூச்சுக்கூட விட முடியலை!"

மறுநாள் அவள் தூங்கியெழும்போது புத்தம் புதிய ஸ்கூட்டி பெப் வாசலில் நிற்கும்.

"அண்ணா! ஸ்கூல் போற வழியில ஒரு பிளே கிரௌண்ட் இருக்குல்ல... அதுல தினமும் நாலைஞ்சு காலிப்பசங்க உட்கார்ந்திட்டு நான் போகும் போதும் வரும்போதும் கிண்டல் பண்றாங்கண்ணா...!"

அதன் பிறகு இன்று வரை அந்த கிரௌண்டில் எந்தப் பசங்களும் அமர்வதில்லை.

"அண்ணா! நம்ம வீட்டைச் சுற்றி எவ்வளவு இடம் இருக்குது. இதுல ஆர்க்கிட் தோட்டம் போட்டா எப்படி இருக்கும்? "

"ஆர்க்கிட்டா! அது ரொம்ப கேர்ஃபுல்லா பார்க்கணுமே?"

"பாருங்கண்ணா... ஒண்ணுக்கு ரெண்டு பேர் இருக்கீங்களே... பாருங்க. அதுல நிறைய லாபமும் கிடைக்குமாம்.

அந்தப் பூ எத்தனை அழகு தெரியுமாண்ணா? நைஸ் கலர். ஸோ பியூட்டிஃபுல்."

"நீ எங்கேடா பார்த்தே?"

"அரவிந்த் வீட்ல இருக்குண்ணா... தினமும் அந்த வழியாத்தானே ஸ்கூலுக்குப் போறேன். தினமும் பார்ப்பேன்."

"யாரை?"

"ஆர்க்கிட்டை அண்ணா... ரொம்ப அழகுண்ணா!"

"சரி... இனிமே இப்படி அடுத்த வீட்டை வேடிக்கைப் பார்க்காதே. நம்ம வீட்லயே பார்த்துக்கலாம்..." – என்றதோடு நில்லாமல் அண்ணனும் தம்பியுமாய்ச் சேர்ந்து படிப்படியாய் இந்த கார்டனை உருவாக்கினர்.

இன்று கண்ணுக்கெட்டிய தூரம் வரை பூக்கள் பூத்துக் கிடக்கின்றன. ரசிப்பதற்கோ பறிப்பதற்கோ ஆளின்றி வாடி உதிர்கின்றன. ஆனால் அம்மா மட்டும் அவ்வப்போது எச்சரிப்பாள்.

"அப்பா! பெண் குழந்தைக்குப் போதுமான செல்லம் கொடுத்தாப் போதும்ப்பா... அதிகமாகக் கொடுத்து அவளைக் கெடுத்துடாதீங்க. செல்லமும் கொடுக்கணும். அதே சமயம் கண்டிப்பும் இருக்கணும். இல்லைன்னா பயம் விட்டுப் போயிடும்!" என்பார்.

அம்மாவின் வார்த்தைகளை மதித்திருக்க வேண்டும். தங்கையின் காது கொடுத்தாவது கேட்டிருக்க வேண்டும். தங்கையின் மீதிருந்த அபரிமிதமான அன்பு கண்ணை மட்டுமல்ல... காதையும் சேர்த்து மறைத்து விட்டது.



வளர்ந்து மேல் படிப்பை ஆரம்பித்த பிறகு தங்கையின் நடவடிக்கைகளில் மாற்றம் உணர ஆரம்பித்தபோது எல்லாம் கைமீறிப் போயிருந்தது. வீட்டிற்குச் சரியான நேரத்தில் வருவதில்லை. விடுமுறை நாட்களில் கூட வீடு தங்குவதில்லை.

அனைவரும் ஒன்றாய் அமர்ந்து கேலியும் கிண்டலுமாய் சாப்பிட்ட நாட்கள் குறைந்தன. 'ஃபிரெண்ட்ஸோட வெளியே போயிருந்தேன். பிட்ஸாவும் கட்லெட்டும் சாப்பிட்டது வயிறு ஃபுல்லாயிடுச்சு. எனக்குச் சாப்பாடு வேண்டாம்.'

'ப்ரியாவோட பர்த்டே பார்ட்டிக்குப் போயிட்டு வந்தேன். நைட் டின்னர் வேண்டாம்.'

'பசியில்ல. கொஞ்சம் தனியா இருக்க விடுங்க...' – என்றவாறு தனது அறைக்குள் அடைந்து கிடக்கும் போதுதான் லேசாய் சந்தேகம் எழுந்தது.

அப்போதாவது கொஞ்சம் அதட்டிக் கேட்டிருக்கலாம். அவளது நடவடிக்கைகளைக் கூர்ந்து கவனித்துக் கண்டித்திருக்கலாம். செல்லம் கொஞ்சியே பழகியவர்களால் அதட்டிப் பேச இயலவில்லை. அந்தச் சின்னஞ்சிறிய பூமுகத்தில் வருத்தத்தையோ கண்ணீரையோ பார்க்கும் துணிவு ஒருவருக்கும் இல்லாமல் போனது.

அதுவே நீலாவிற்கு வசதியாகவும் போனது. தான் செய்வது சரியா... தவறா... என யூகித்தறியும் வயதோ பொறுமையோ இல்லாத பருவம் அது. அதனால் தன் மனம் கவர்ந்தவனுடன் சுற்றுவதை மட்டுமே பொழுது போக்காய் கொண்டிருந்தாள்.

படிப்பு மீதிருந்த கவனம் சிதறிப் போய் நாளடைவில் கல்லூரியே மறந்து போனது.

மறக்கடித்து விட்டிருந்தான் அவன். தொடர்ச்சியாய் விடுமுறை எடுத்ததால் கல்லூரியில் இருந்து தகவல் வர... சுத்தமாய் ஆடிப்போனார்கள். கல்லூரிக்குச் சென்று ஏதேதோ காரணம் சொல்லிச் சமாளித்துவிட்டு தங்கையின் வருகைக்காக அனைவரும் வீட்டில் காத்திருக்க, அன்று வெகுநேரம் கழித்தே களைப்பாய் வீடு வந்து சேர்ந்தாள்.

அனைவரையும் மொத்தமாய்ப் பார்த்ததும் லேசாய் துணுக்குற்றாலும் தனது வசீகரப் புன்னகையால் அதைச் சமாளித்தாள்.

"என்ன அதிசயம்? இன்னிக்கு மும்மூர்த்திகளும் வீட்டில இருக்கீங்க. மழைதான் வரப் போகுது!" - என்ற வாறே தன் அறையை நோக்கி நடந்தவளைத் தாயின் குரல் நிறுத்தியது.

"ஏய் நில்லுடி!" - அன்னையின் கோபக் குரலில் திடுக்கிட்டு நின்றாள்.

"என்னம்மா?"

"எங்கே போயிட்டு வர்றே?"

"இதென்ன கேள்வி! காலேஜுக்குத்தான்."

"எந்த ஊர்லம்மா நைட் பத்தரை வரைக்கும் காலேஜ் நடக்குது?" - கைலாசம் பொறுமையாகவே கேட்டார்.

நீலாவின் முகம் மாறியது. "இல்லப்பா! காலேஜ் முடிஞ்சதும் அப்படியே கோமு வீட்ல போய் படிச்சிட்டு வந்தேன்."



"இப்பல்லாம் ரொம்ப ரிஸ்க் எடுத்து படிக்கிற போலிருக்கு..." - கார்த்திக் அழுத்தமான குரலில் கேட்க, சற்றுத் தடுமாறினாள்.

"ஆ... ஆமாண்ணா! ஃபைனல் இயர் ஆச்சே... நல்லாப் படிச்சாத்தானே ஃபர்ஸ்ட் கிளாஸ்ல பாஸ் பண்ண முடியும்?"

"இப்பல்லாம் உன் ஸ்கூட்டி வீட்லதான் நிக்குது. காலேஜுக்கு எப்படிம்மா போறே?"

"அது... அது... சில சமயம் காலேஜ் பஸ்ல போவேன். இல்லைன்னா ஆட்டோவில...!"

"நீ ஏன்ம்மா ஆட்டோவில போகணும். நாளையில இருந்து நானே கார்ல கூட்டிட்டுப் போறேன்!" - முகத்தில் எந்த உணர்வும் இன்றி சொன்ன யுவராஜனை உற்றுப் பார்த்தாள். முகம் கலக்கமடைந்தது.

'இன்று ஒருவரின் முகமும் சரியில்லையே... பேச்சுக்கூட வேறு மாதிரிதான் இருக்கிறது. வழக்கமாய்த் தன்னைக் கண்டதும் கன்னத்தில் லேசாய்த் தட்டிவிட்டு 'சாப்பிட்டியாடா?' - எனக் கேட்பவர்கள் இன்று ஏதோ விசாரணை செய்வது போல் பேசுகிறார்களே...

ஏதோ நடந்திருக்கிறது? அவருடன் வெளியில் போகும்போது யார் கண்ணில் பட்டிருக்குமோ? அதற்கு வாய்ப்பில்லையே...! எச்சரிக்கையாகத்தானே இருந்தோம். பிறகெப்படித் தெரியும்?

...ம்மா பேச்சையே காணோம்? என் கூட கார்ல

"உனக்கெதுக்கண்ணா சிரமம்? உனக்கு ஆயிரம் வேலை இருக்கும்."

"உன்னை விட முக்கியமான வேலை எதுவும் இல்லை..." - என்றான் பட்டென.

"அதுக்கில்ல அண்ணா... ஃபிரெண்ட்ஸோட போனா ஜாலியா பேசிட்டுப் போவோம். உன்கிட்ட என்ன பேசுறது? போரடிக்காதா?" - நீலாவின் பதிலில் மொத்தமாய் அதிர்ந்தனர்.

"என்ன... அண்ணன் கூடப் போனா உனக்குப் போரடிக்குமா? விடிய விடிய உட்கார்ந்து அரட்டை அடிப்பியே!"

"அதெல்லாம் அப்போம்மா..."

"இப்ப என்ன வந்தது?"

"இப்ப... நான் என்ன சின்னப் பொண்ணா? எனக்கு எவ்வளவோ வேலை இருக்கும்."

விரக்தியாய் புன்னகைத்தார் கைலாசம். "தாட்சா! நாமதான் நம்ம புள்ளையை இன்னும் சின்னப் பொண்ணா நினைச்சிட்டு இருக்கோம். ஆனா அது வளர்ந்திடுச்சுடி."

"என்னப்பா... ஒரு மாதிரி பேசுறீங்க?"

"இல்லைம்மா... நாங்க எப்பவும் போலத்தான் இருக்கோம்."

"அப்போ நான் மாறிட்டேனா?"

"ஏன்? உனக்கே தெரியலையா!" - கார்த்திக் வெடுக்கெனக் கேட்க, நீலாவின் மூக்கு வி



"இப்ப எதுக்காக எல்லாரும் என்னை நிக்க வெச்சு கேள்வி கேட்கிறீங்க? அப்படி என்ன பண்ணிட்டேன் நான்?"

"ஏய்! இப்ப ஏன்டி கத்துற?"

"கத்தாம...? வெளியே போயிட்டு வந்தவளை வீட்டுக்குள்ள கூட விடாம விசாரிச்சா... என்ன அர்த்தம்?" - சிடுசிடுத்தவளைக் கண்டு கலங்கினர்.

"நீலா! இப்ப ஏன்டா உனக்கு இவ்வளவு கோபம் வருது?"

"அண்ணா! எனக்கு எப்பவுமே இப்படிக் கேள்வி கேட்கிறது பிடிக்காது. ஐ அம் சோ டயர்ட். லீவ் மீ அலோன்."

"நில்லு! நீ இன்னும் உண்மையான பதிலைச் சொல்லவே இல்லையே!" - யுவராஜின் வார்த்தையில் கடுமை கூடியது.

"என்ன?"

"எங்கே போயிட்டு வர்றேன்னு கேட்டோமே...!"

"அதான் சொன்னேனே... காலேஜுக்கு..." - சொல்லி முடிக்கும் முன் தங்கையின் கன்னத்தில் பளாரென அறைந்தான். பொறி கலங்கிப் போனாள் நீலா.

மற்றவர்களும் இதைச் சற்றும் எதிர்பாராமல் வாயடைத்துப் போய் நிற்க, சீறினான் யுவராஜன்.

"பொய்யா சொல்றே? எங்கே இருந்து வந்தது இந்தப் பழக்கம்? சொல்லு... எங்கே போயிட்டு வர்றே? திரும்பவும் காலேஜுக்குன்னு சொன்னே... பல்லைத் தட்டுவேன்.

நாங்களே உங்க காலேஜுக்குப் போயிட்டுத்தான் வந்திருக்கோம்!" - என்றதும் ஆடிப் போனாள்.

முகம் குப்பென வியர்த்தது. கை கால்கள் உதற, அதை விடவும் அண்ணன் அடித்த வலியும் அவமானமும் கோபத்தைத் தட்டி எழுப்பியது.

"ஓஹோ! துப்பறிஞ்சிட்டு வந்தீங்களாக்கும்?"

"நாங்க போகலை... உன் காலேஜுல இருந்து எங்களுக்குத் தகவல் வந்திருந்தது. மாசக் கணக்கா லீவு போட்டிருக்க. சொல்லு! எங்கே போனாய்? யார் கூடப் போனே? சொல்லு..." - கோபமாய்க் கேட்டவனைப் பார்த்து பயமாய் எச்சில் விழுங்கினாள்.

"அது... நான்.. நான் ஒருத்தரை விரும்புறேன்."

"என்ன?" - குடும்பம் மொத்தமுமாய் அதிர்ந்து துடித்தது. மற்றவர்கள் பேச்சற்றுப் போய் நிற்க, தாட்சாயிணி முன்னே வந்து மகளைத் தன்புறமாய்த் திருப்பினாள்.

"என்னடி சொல்றே?"

"அவரும் என்னை விரும்புறார். சீக்கிரமே பெண் கேட்டு வர்றதாச் சொன்னார்."

"ஏய்! என்னடி இது? யாருடி அவன்?"

"எல்லாம் தெரிஞ்சவர்தான்."

"யாருடி?"

"ஸாரிம்மா... தானே பெண் கேட்டு வரும் வரை வீட்ல யார்கிட்டயும் சொல்லக் கூடாதுன்னு என்கிட்ட பிராமிஸ் வாங்கியிருக்கிறார்."



"எதுக்குடி?"

"அதை அவர்கிட்டதான் கேட்கணும்..." - மகளின் அலட்சியமான பதிலில் நெஞ்சை அடைக்க... நெஞ்சைப் பற்றிக் கொண்டாள் தாட்சாயிணி.

"நீலா! என்னம்மா... இதெல்லாம்? நீ குழந்தைடா. உனக்கு வெளி உலகம் புரியாது. அதுக்கான வயசோ பக்குவமோ உனக்கு இல்லைம்மா..." - கார்த்திக் பதமாய்ச் சொல்ல கை உயர்த்தித் தடுத்தாள்.

"அண்ணா! நான் ஒண்ணும் குழந்தை இல்லை. எனக்கு எல்லாம் தெரியும்."

"தப்புடா... இந்த வயசில படிப்பு மட்டும்தான் உனக்கு முக்கியம். மத்ததில கவனம் போனா வாழ்க்கையே கேள்விக்குறியாகிடும். அறியாத வயசில பார்க்கிறதெல்லாம் அழகாத் தெரியும். உண்மையாத் தோணும். ஆனா அதெல்லாம் மாயை நீலாம்மா..."

"சொன்னார். அவர் சொன்னார். உன் அண்ணனுங்க ஞானி மாதிரி பேசிட்டு இருப்பானுங்க. அதனால அவனுங்ககிட்ட பேசுறதை அவாய்ட் பண்ணிடுன்னு சொன்னார். அது சரியாப் போச்சு!"

"நீலு!" - பலமாய் அதிர்ந்தான் கார்த்திக்.

"இதோ பாருங்க. யார் என்ன சொன்னாலும் சரி. எனக்கு அவர்தான் வேணும். என் முடிவுல எந்த மாற்றமும் இல்லை. அவரா பெண் கேட்டு வரும் வரை நீங்க வெயிட் பண்ணித்தான் ஆகணும். சும்மா என்னைக் கேள்வி கேட்டு டார்ச்சர் பண்ணாதீங்க?"

"அடி சின்னக் கழுதை! என்ன பேச்சு பேசுறே?" - என அடிக்கப் பாய்ந்தவனை பற்றிக் கொண்டார் கைலாசம்.

"வேண்டாம்ப்பா! அவ நம்ம பேச்சைக் கேட்கிற ஸ்டேஜைத் தாண்டிட்டா. இனி நாம பேசிப் பயனில்லை."

"அதுக்காக இவளை இப்படியே விட்டுடலாம்றீங்களா?"

"பொறுமையா இருன்னு சொல்றேன். அவன்தான் பெண் கேட்டு வர்றேன்னு சொல்லியிருக்கானாமே... வரட்டும் பிறகு பார்க்கலாம்."

"என்னப்பா நீங்க? அவதான் முட்டாள்தனமா பேசுறான்னா நீங்களும் அதை நம்புறீங்களா?"

"என்ன முட்டாள்தனமா பேசிட்டேன் நான்?"

"ஆமான்டி... நீ பேசினது எல்லாமே முட்டாள் தனம்தான். பெண் கேட்டு வர்றவன் எதுக்காகத் தன்னை வெளிக்காட்டிக்க பயப்படணும்? வெளியே சொல்லிடா தேன்னு உன்கிட்ட எதுக்காக சத்தியம் வாங்கணும்?"

"அது... சஸ்பென்ஸா இருக்கட்டும்னு நினைச்சிருப்பார்."

"மண்ணாங்கட்டி! உன்கிட்ட பழகிட்டு நீ சலிச்சுப் போயிட்டா தடயமே இல்லாம கழட்டி விட்டுடலாம்னுதான் ப்ளான் பண்ணிட்டு இருக்கான் அவன். இதைக் கூட புரிஞ்சுக்க முடியாத முட்டாள்தானே நீ?"

"சும்மா கத்தாதேண்ணா... அவர் ஒண்ணும் என்னை ஏமாத்த மாட்டார். சின்ன வயசில இருந்தே என்னை விரும்புறாராம். அவரே சொன்னார்."



"சின்ன வயசில இருந்தா?" - யுவராஜன் அவசரமாய் யோசித்தான். 'யாராய் இருக்கும்?'

"உனக்கும் தெரிஞ்சவர்தான். பெண் கேட்டு வரும்போது எல்லாரும் ஷாக்காகி நிற்கப் போறீங்க பாருங்க!"

"நாங்க நிற்பது இருக்கட்டும். உன்னைத் தெருவில் நிறுத்தாமல் இருந்தால் சரி..." - மூச்சை இழுத்துப் பிடித்துக் கொண்டே தாட்சாயிணி சொல்ல, ஆவேசமானாள் நீலா.

"அம்மா! பொண்ணுக்கே சாபம் கொடுக்குறீங்களா?"

"சாபம் இல்லைடி. நடந்திட்டு இருக்கிற கொடுமைகளைச் சொல்றேன். கண்டதே காட்சி கொண்டதே கோலம்னு உன்னாட்டம் தறிகெட்டுப் போனதெல்லாம் வாழவும் முடியாம... பெத்தவங்ககிட்ட சேரவும் முடியாம வீதியில நின்னு தவிக்கிறதைப் பார்த்திட்டுத் தானே இருக்கேன்."

"நான் ஒண்ணும் அஞ்சுக்கும் பத்துக்கும் அல்லாடுற ஃபேமிலியில பொறக்கலை... போற இடத்திலேயும் வசதிக்குக் குறைவில்லை. அவர் என்னை ராணி மாதிரி வெச்சுக்குவார். இப்பவே எனக்கு நூறு சவரன் நகை செய்து வைச்சிருக்கீங்க. இன்னும் செய்வீங்களே... பிறகேன் நான் கஷ்டப்படப் போகிறேன்?"

"இரு... இரு... யார் சொன்னது உனக்கு நூறு சவரன் நகை இருக்குன்னு...?" - கார்த்திக் சீரியஸாய்க் கேட்டான்.

"நீதானே அண்ணா சொன்னாய்?"

"நானா? எப்போ?"

...தோ வரன் வந்ததே... அப்போ அப்பாகிட்ட சொன்னியே... நூறு சவரன் இருக்குன்னு... கூடுதலா வேணும்னாலும் போடலாம்ன்னு சொன்னியே!"

"இதெல்லாம் உன் அவருக்குத் தெரியுமா?"

"ம்... தெரியும். நான்தான் சொன்னேன். ரொம்ப சந்தோஷப்பட்டார்."

"யுவா சொன்னது ஹன்ட்ரட் பர்ஸன்ட் சரி. உன்னை மாதிரி ஒரு முட்டாள் கிடைச்சா யார்தான் ஏமாத்த மாட்டான்."

"அண்ணா!"

"இதோ பார். நூறு சவரன் போடுறோம்னு சொன்னது நாங்க பார்க்கிற மாப்பிள்ளைக்கு. நீயா தேடிக்கிட்ட பொறம்போக்குக்கு நாங்க ஏன் கொடுக்கணும்?"

"அதானே! உன்னை விரும்புகிறவன் கிட்டதான் வசதி இருக்கே... அவனே உனக்கு நகை செய்து போடட்டும். நாங்க ஏன் போடணும்?" - யுவராஜன் சேர்ந்து சொல்ல... கோபத்தில் முகம் சிவந்தாள் நீலா.

"அப்பா! ரெண்டு பேரும் என்ன சொல்றாங்க பார்த்தீங்களா? எனக்கு எதுவும் செய்ய மாட்டாங்களாம். நான் என்ன ஒண்ணுமில்லாதவளா? இதை அவர்கிட்ட சொன்னா என்னை எப்படி மதிப்பார்? நம்ம குடும்பத்தைப் பற்றி... உங்களைப் பற்றி என்ன நினைப்பார்?"

"இதோ பாரும்மா! அவர் உன்னை விரும்புறாரா? உன் பணத்தை விரும்புகிறாரா?"

"சேச்சே! என்னை மட்டும்தான் விரும்புகிறார்."

"பிறகேன்... நீ கவலைப்படுகிறாய்?"

"அதுக்காக... என்னை வெறுங்கழுத்தோட அனுப்பிடுவீங்களா?"

"நீலா! முதல்ல உன் படிப்பு முடியட்டும். அதுவரை இப்படி வெளியே சுத்தாம பொறுப்பா படி. அதுக்குப் பிறகு..."

"இல்லைப்பா! எனக்குப் படிக்கிறதுல ஆர்வம் இல்லை..."

"அம்மாடி! அப்படிச் சொல்லாதே. எக்காரணம் கொண்டும் படிப்பை நிறுத்தக் கூடாது. அதுதான் உன் எதிர்கால வாழ்க்கைக்கு ஆதாரம்."

"இல்லைப்பா! என்னோட எதிர்காலம், வாழ்க்கை, ஆதாரம் எல்லாமே அவர்தான்..."

"நீலாம்மா! கொஞ்சம் பொறுமையா அப்பா சொல்றதைக் கேளு."

"ஸாரிப்பா! நீங்க எல்லாரும் எதையாவது பேசி என் மனசை மாத்த முயற்சி செய்யாதீங்க. யார் என்ன சொன்னாலும் என் முடிவுல எந்த மாற்றமும் இல்லை..." - உறுதியாய்ப் பிடிவாதமாய் சொன்னவளை அனைவரும் திகைப்பாய்ப் பார்த்தனர்.

யுவராஜன் தோளைக் குலுக்கினான்.

"அப்பா! இது அவ லைஃப். அவளே முடிவு பண்ணிட்டா. இனி நாம பேசுறதால எதுவும் மாறப் போறதில்லை. நாம நம்ம மரியாதையைக் காப்பாத்திக்கணும். நாளைக்கே அவளைப் பெண் கேட்க வரச் சொல்லுங்க."

"யுவா! என்ன சொல்ற நீ? அவ படிப்பு..."

"அதைப் பத்தி அவளுக்கே அக்கறையில்லை... யேப்பா... நமக்கென்ன வந்தது?"

"அப்படி விட முடியாது ராஜா. அவ குழந்தை அவளுக்கு நல்லது கெட்டது புரியாது. நாமதான் எடுத்து சொல்லணும்."

"கேட்கலையே... தெரிஞ்சே புதைகுழியில விழணும்னு சொல்றா? நாம வேண்டாம்னு சொன்னா அவளுக்கு விரோதியா தெரிவோம்ப்பா... நடக்கிறது நடக்கட்டும் அவனைப் பெண் கேட்டு வரச் சொல்லுங்க."

"தேங்க் யூ அண்ணா! நாளைக்கே வரச் சொல்றேன்."

"மறக்காம நாங்க சொன்னதையும் சொல்லிடு."

"எதை?"

"பணம், நகைன்னு எதையும் எதிர்பார்க்கல கூடாதுன்னு..."

"உங்க பணத்தை அவர் விரும்பலை. என்னைத்தான் விரும்புறார்."

"நீ சொல்வது உண்மையாக இருந்தால் எங்களுக்கும் சந்தோஷம்தான். பார்க்கலாம்..."

"நிச்சயமா பார்க்கத்தான் போறீங்க?" – என்றவளின் உறுதியை நம்பி அதன்பின் அவளிடம் எதையும் பேசவில்லை. அன்று இரவு ஒருவருக்கும் பசியும் இல்லை உறக்கமும் இல்லை.

நீலா மட்டும் ரொம்ப உற்சாகமாக இருந்தாள் யாரிடமோ வெகு நேரமாய் போனில் பேசிக் கொண் டிருந்தாள்.



அவளது உற்சாகம் அனைவரையும் பயமுறுத்தியது.

ஒருவேளை அவன் நல்லவனாகக் கூட இருக்கலாம். வரட்டும்... வந்து பார்த்த பிறகு முடிவு எடுக்கலாம் என்ற முடிவுடன் அவரவர் அறையில் முடங்கிக் கொண்டனர்.

அப்போது பனிப்பொழிவு அதிகமாய் இருந்த நேரம். விடிந்து வெகுநேரம் வரை குளிர் வாட்டியெடுக்க, மிகத் தாமதமாய் அறையை விட்டு வெளியே வருகையில் தாட்சாயிணி கையில் வெள்ளைக் காகிதத்துடன் தரையில் அமர்ந்திருந்தாள். அனைவரும் பதறிப் போய் தாயை நெருங்க, மௌனமாய் அதை நீட்டினாள்.

விரல்கள் நடுங்க அதை வாங்கினான் கார்த்திக். இரண்டே வரிகள் கொண்ட கடிதம்.

'உங்கள் மீது நம்பிக்கை இல்லை. அதனால் என் மனம் நிறைந்தவருடன் வாழப் போகிறேன். யாரும் தேட வேண்டாம்.'

திரும்பத் திரும்பப் படித்தான். பலமுறை படித்த பின்பே அக்கடிதத்தின் பொருள் மூளையில் பதிய, அப்படியே தரையில் விழுந்து தாயைக் கட்டிக் கொண்டு தான் ஒரு ஆண் என்பதையும் மறந்து அழுதான் கார்த்திக்.

அந்த அழுகையை இன்று வரை மறக்க முடியவில்லை. அதன்பின் தாட்சாயிணி இதய நோயாளியாய் மாறினாள். மனைவியைக் கவனிப்பதை மட்டுமே தன் கடமையாக மாற்றிக் கொண்டார் கைலாசம்.

கார்த்திக்கும் யுவராஜனும் திண்டாடிப் போயினர்.

வெளியில் எங்கும் தலைகாட்ட முடியாமல் கூனிக் ... பார்ப்பவர்கள் எல்லாம் கேட்கும் கேள்வியை

எதிர்கொள்ள இயலாமல் அவர்களது ஏளனப் பார்வை தாங்க இயலாமல் புழுங்கித் தவித்தனர். அம்மா நிரந்த நோயாளியாகி விட, முதலில் தெளிந்தவன் கார்த்திக் தான்.

"இந்த வீட்டில் இருக்கும் வரை அவள் நினைவுகள் மறையாது. அது மறையாமல் அம்மாவால் பழையபடி நடமாட முடியாது. நமக்கு அம்மா வேண்டும். கடைசி வரை வேண்டும்..." - என வைராக்கியமாய்த் தேடி அலைந்து நகரின் மத்தியப் பகுதியில் வீட்டை வாங்கி மொத்தமாய் மாற்றிவிட்டான்.

புது வீட்டில் ஒரு இடத்தில் கூட தங்கையின் புகைப் படமோ அவளது பொருட்களோ இருக்கக் கூடாது என்று வெகு கவனமாய் இருந்தான். அதற்கு நல்ல பலனும் கிடைத்தது. தாட்சாயிணி மெல்ல தேறி எழுந்தாள். முதலில் வீட்டிற்குள் பிறகு கோவில் வரை என நடமாடத் துவங்கினாள்.

இருப்பினும் அவ்வப்போது அவள் முகம் வாடுவதும் சோர்வதுமாக இருக்கக் கண்டு இன்னொரு பெண் இந்த வீட்டிற்கு வந்தால் மருமகள், பேரக் குழந்தைகள் என அம்மா உற்சாகமாய் மாறிவிடுவாள் என்ற நம்பிக்கையில் கார்த்திக்கிடம் போராடி சம்மதிக்க வைத்து... இதோ திருமணமும் நல்லபடியாய் முடிந்தாயிற்று.

இவள் மட்டும் வராமல் இருந்திருந்தால் அண்ணன் இந்த நேரம் சந்தோஷமாய் தேன் நிலவு கொண்டாடப் போயிருப்பான். மொத்த நிம்மதியையும் அழிக்க என்றே வந்தாளா?

யாரவன்? அவளுடைய அவர் அந்தப் பூக்காரனா? ச்சே! அவனை நம்பியா அத்தனை பண...



அள்ளிக் கொண்டு சென்றாள்? அந்த நகைகள் என்ன ஆனது? அவளது கழுத்தில் நகை இருந்தது போல் தெரியவில்லையே... எல்லாத்தையும் விற்று விட்டானா?

இரண்டு நாட்களாய் கூட நின்று வேலை செய்தானே... ஒரு வார்த்தை சொன்னானா? என்ன நெஞ்சழுத்தம்? - பற்களைக் கடித்தான் யுவராஜன். அருகே கேட்ட காலடி ஓசையில் கலைந்து நிமிர்ந்தான்.

# 11

சின்னச் சின்ன விஷயங்கள்
கூட சந்தோஷத்தைத் தரும்
ஆனால் சந்தோஷம் என்பது
சின்ன விஷயம் அல்ல!

தன்னை நெருங்கி வந்த காலடி ஓசையில் கலைந்து திரும்பினான் யுவராஜன். கங்கம்மா வந்து கொண் டிருந்தாள். கையில் யுவராஜனின் செல்போன்.

"தம்பி! போன் ரொம்ப நேரமா அடிச்சிட்டே இருக்கு தம்பி!"

"ஓ... ஸாரி. நான் கவனிக்கலை!" - என போனை வாங்கிப் பார்த்தான். கார்த்திக் தான் பண்ணியிருந்தான். தொடர்ந்து ஏழு முறை பண்ணியிருந்தான். என்ன அவசரம்? அவசரமாய் அவனது எண்ணைத் தொடர்பு கொண்டான். முதல் ரிங்கிலேயே போனை எடுத்தான் கார்த்திக்.

"யுவா! எங்கேடா இருக்கிற? எத்தனை வாட்டி போன் பண்ணேன். ஆன்ஸர் பண்ண மாட்டேங்கிற?"

"ஸாரிண்ணா... போனை ஹால்ல வைச்சிட்டு கார்டன்ல உட்கார்ந்திட்டு இருந்தேன்."

"கார்டன்லயா! யூ மீன் நம்ம பழைய வீட்டிலயா இருக்கே?"

"ம்..."

"அங்கே ஏன்டா போனாய்?"

"சும்மாதான்..." - சொல்லும்போதே தொண்டை அடைத்தது. தம்பியின் குரலை வைத்தே அவனது மனநிலையைப் புரிந்து கொண்டான் கார்த்திக்.

"யுவா! நீ உடனே கிளம்பி வீட்டுக்கு வா."

"ஏண்ணா?"

"எல்லாரும் மலைக் கோயிலுக்குக் கிளம்பிட்டு இருக்கோம். நீயும் வா."

"நான் எதுக்கண்ணா? நீங்க போயிட்டு வாங்க."

"யுவா! கல்யாணம் முடிஞ்சி முதன்முறையா கோவிலுக்குப் போறோம். ஃபேமிலியோட போலாம்னு உன் அண்ணி ஆசைப்படுறா!"

"இல்லண்ணா... நீங்க போயிட்டு வாங்க. எனக்கு எங்கேயும் வர விருப்பமில்லை."

"சொன்னாக் கேள் யுவா! ஏன் இப்படி அந்த வீட்டில போய் உட்கார்ந்து வேதனையைக் கூட்டிக்கிற! கிளம்பி வாடா."

"அண்ணா! நான் கொஞ்ச நேரம் தனிமையில இருக்கணும். ப்ளீஸ் என்னைத் தொந்தரவு பண்ணாதே.



நீங்க போயிட்டு வாங்க. எனக்குக் கடவுள் நம்பிக்கையெல்லாம் இல்லை."

"இப்படிச் சொன்னா எப்படி யுவா? கடவுள் இல்லாம எதுவுமே இல்லை. எல்லாம் மேலே இருக்கிறவர் விருப்பப்படிதான் நடக்கணும்..." - திடீரெனக் கேட்ட சுஜாதாவின் குரலில் நிமிர்ந்து அமர்ந்தான்.

"அண்ணி! நீங்களா?"

"நானேதான். நாங்க எல்லாரும் ரெடி. இன்னும் பத்து நிமிஷம் வெயிட் பண்ணுவோம். அதுக்குள்ள நீங்க இங்கே வந்தாகணும். இல்ல... நாங்க அங்கே வந்திடுவோம்."

"நீங்க போயிட்டு வாங்களேன் அண்ணி! நான் எதுக்கு?"

"ம்ஹூம்... இது சரிப்படாது. நாங்களே அங்கே வர்றோம்."

"இல்லை... வேண்டாம். நான்... நானே வர்றேன்."

"வெரிகுட் இன்னும் டென் மினிட்ஸ்ல நீங்க இருக்கணும். ஓ.கே.வா!"

"ஓ.கே." - என்றவாறு போனை வைத்தான்.

கங்கம்மா இன்னும் அங்கேயே நின்று கொண்டிருக்க... நிமிர்ந்தான்.

"என்ன கங்கம்மா?"

"தம்பி! இது நம்ம வீட்டுப் பாத்ரூம்ல இருந்தது தம்பி!" - என்றவாறு கையிலிருந்த பொருளை நீட்டினாள்.

"என்னது?" – குழப்பமாய் வாங்கிப் பார்த்தவனை விழிகள் விரிந்தன.

அது ஒரு லேடீஸ் வாட்ச். கறுப்பு நிற மெல்லிய பட்டையுடன் கூடிய தங்கநிற வாட்ச். டைமன் சைஸில் இருந்த வாட்சை வாங்கித் திருப்பிப் பார்த்தான்.

"எங்கே இருந்தது?"

"வெளியே இருக்கிற பாத்ரூம்ல இருந்தது தம்பி!"

"யாருடையதாய் இருக்கும்?"

"தம்பி! அன்னிக்கு ராத்திரி கூட்டியாந்தீங்களே.. அந்தப் பெண்ணோடதா இருக்குமோ!" – கங்கம்மா சொல்ல குப்பென மலர்ந்தான்.

நான்கு நாட்களாய் அடியோடு மறந்து போயிருந்த நினைவுகள் லேசாய் மேலெழுந்தன. அவளைப் பார்த்த முதல் நிமிடம் நினைவு வர, அந்தக் கைக்கடிகாரத்தை பத்திரமாய் உள்ளங்கையில் மூடிக் கொண்டான்.

"ஆமா! அவ வாட்ச்தான். நான் கொடுத்திடுறேன்."

"சரிங்க தம்பி! காபி எடுத்திட்டு வரவா?"

"வேண்டாம் கங்கம்மா. நான் கிளம்புறேன். மலைக்கோயிலுக்குப் போக எல்லாரும் ரெடியா இருக்காங்களாம். நான் போயிட்டு வர்றேன்."

"கோவிலுக்குப் போறீங்களா? ஒரு நிமிஷம் தம்பி!" - என்றவள் வீட்டிற்குள் சென்று திரும்புகையில் சிறு கூடை நிறைய பூக்கள். வண்ணவண்ணமாய் நறுமணம் பரப்பி கொண்டிருந்தது.



"என்ன கங்கம்மா இது?"

"மலைக்கோவிலுக்குப் போகும் போதெல்லாம் சின்னம்மா நம்ம தோட்டத்துப் பூக்களை இந்தக் கூடையிலதான் எடுத்திட்டுப் போவாங்க. இதைப் புதுசா வந்திருக்கிற சின்னம்மாகிட்ட கொடுங்கய்யா. இது எல்லாமே பூஜைக்கு உகந்த பூதான்."

மனம் கனக்க வாங்கிக் கொண்டான். "சரி... வர்றேன்!" - என்றவாறு காரில் ஏறி பூக்கூடையை இருக்கையில் வைத்தான். கையில் இருந்த வாட்ச்சை சட்டை பையினுள் போட்டுவிட்டுக் காரையெடுத்தான்.

சிறிது தூரம் செல்லும் போதே இதயத்தின் அருகே "குக்குக்..." – என ஓசை கேட்டது. குழப்பமாய் கை வைக்க பையில் இருந்த வாட்ச் நெருடியது. காரின் வேகத்தைக் குறைத்து வாட்சை வெளியே எடுத்துப் பார்த்தான்.

நான்கு மணி ஆகியிருந்தது என்பதை அறிவிக்கவே அந்த இசை போலும். இசையோடு சேர்ந்து வாட்ச் நீலநிறமாய் ஒளிர்ந்தது. மெலிதான புன்னகையோடு மீண்டும் அதைப் பையினுள் போட்டுவிட்டுச் சாலையில் கவனத்தைச் செலுத்த மனம் தானாய் குறிஞ்சியை நாடியது.

அவளுக்கும் தெரிந்திருக்குமோ? இந்த வீட்டுப் பெண்தான் தன் அண்ணனுடன் ஓடி வந்தவள் என்று! அதனால்தான் அன்று அத்தனை முறை அழைத்தும் வீட்டிற்குள் வராமல் சாதித்தாளோ? நான் கூட ஏதோ நினைத்தேனே... அவள் காரணமாய்த்தான் மறுத்திருக் கிறாள்.

அன்று மாதவனின் முகம்கூட சரியில்லையே... தங்கையிடம் சிடுசிடுத்தவாறே உடனே புறப்பட்டு விட்டானே... என்னிடம் மரியாதைக்காகக் கூட ஒரு புன்னகை சிந்தவில்லை. அப்படியென்றால் அண்ணன், தங்கை இருவருக்குமே நீலா என் தங்கை என்று தெரிந்தும் என்னிடம் மறைத்திருக்கிறார்கள்.

ஒன்றும் அறியாத அப்பாவி போல் உத்தமசிகாமணி போல் நடித்துவிட்டுப் போனார்களே... நானும் நம்பினேனே... ச்சே! அன்று சுகவனம் கார்டனில் இருந்து வெளிவரும்போது எவ்வளவு சாமர்த்தியமாய்ப் பேசினாள். குடும்பத்தினரைப் பற்றிப் பேசும்போது தவறியும் கூட தன் அண்ணியைப் பற்றி மூச்சுவிடவில்லை.

என்ன கள்ளத்தனம்? இவளையா பார்த்ததும் மையல் கொண்டேன்! ச்சே... நீலாவை ஏமாளி முட்டாள் என்றேனே... நான்தான் முட்டாளாய் இருந்திருக்கிறேன்.

தன் மீதே வெறுப்பு வர தன் கோபத்தையெல்லாம் ஆக்ஸிலேட்டரில் காட்ட, கார் சீறிப் பாய்ந்தது.

இரண்டே நிமிடத்தில் வீட்டை நெருங்கிவிட, காரின் வேகத்தைப் பார்த்து எதிரே வந்த ஸ்கூட்டி மிரண்டு சாலையின் ஓரமாய் இறங்கி... மழை பெய்ததால் பொதிந்து போயிருந்த மணலில் ஸ்கூட்டியின் முன்பக்கச் சக்கரம் மாட்டிக் கொண்டு வண்டியைச் சாய்த்தது. அதை ஓட்டி வந்த பெண் சமாளித்து, காலை ஊன்றி நின்றபோதும் வண்டி சரிந்தது.

தன் வீட்டு வாசல் முன்னே இந்தச் சம்பவம் நடக்க... பிரேக்கை அழுத்திக் காரை நிறுத்தினான்.



'க்ரீச்'சென்ற சத்தத்தில் கோபமாய் நிமிர்ந்த குறிஞ்சியும் பதட்டமாய்க் காரை விட்டு இறங்கிய யுவராஜனும் ஒருவரையொருவர் பார்த்துக் கொள்ள இருவரின் இதயமும் தாளிட்டது.

நினைத்த நிமிடமே எதிரில் வந்து நின்றவளைக் கண்டதும் யுவராஜன் பேச்சின்றி நிற்க, கோபம் மறைந்து பூவாய் மலர்ந்து சிரித்தாள் குறிஞ்சி.

"ஹலோ ஸார்! நீங்களா? நல்லவேளை தப்பிச்சிட்டீங்க?"

"என்ன?"

"ஆமா! வேற யாராவது இருந்தா கிழிகிழின்னு கிழிச்சிருப்பேன்."

"எதுக்கு?"

"எதுக்கா? ஏன் ஸார்... வண்டியை இவ்வளவு வேகமாகவா ஓட்டுறது? நான் மட்டும் பேலன்ஸ் பண்ணலைன்னா என்ன ஆகியிருக்கும்?"

"என்ன ஆகியிருக்கும்?"

"கொலைக் கேஸ் ஆகியிருக்கும் ஸார்! வந்த வேகத்தில் என் மேல மோதியிருந்தா... நான் ஸ்பாட்லேயே அவுட் ஆகியிருப்பேன். ஓ! ஸாரி... உங்களுக்கு இப்படிப் பேசினா பிடிக்காது இல்ல..." - புன்னகையோடு அவள் கேட்க, அந்த மழை நாள் இரவை அன்று நடந்த உரையாடல்களை இவளும் மறக்கவில்லை என்று புரிந்தது.

"என்ன ஸார்! அப்படியே நிற்கிறீங்க! இங்கே வாங்க..." - குறிஞ்சி இயல்பாய் அழைக்கத் திடுக்கிட்டான்.

"என்ன?"

"அட வாங்க ஸார்! என் வண்டியை எடுத்து நிமிர்த்தி விடுங்க."

"வாட்?"

"என்ன வாட்? நீங்கதானே தள்ளி விட்டீங்க... நீங்க மெதுவா வந்திருந்தா நான் மண்ணுல இறங்கியிருப்பேனா? உங்களாலதான் வண்டி மண்ணில பதிஞ்சுடுச்சு. வந்து தூக்கி விடுங்க..." - அவள் புன்னகை முகமாகவே சொல்ல, கடுப்பானாள் யுவராஜன்.

"ஏன் வண்டியை ஓட்ட மட்டும்தான் தெரியுமா? மண்ணில இறங்கினா தள்ளத் தெரியாதா?"

"அதெல்லாம் தெரியும் ஸார். ஆனா இன்னிக்கு முடியாது. என் கையைப் பாருங்க..." - என்றவாறு இரு கரங்களையும் அவன் முன்னே நீட்டினாள். குழப்பமாய்ப் பார்த்தவனின் முகம் மாறியது.

இரண்டு புறங்கைகளும் உப்பிப் போயிருந்தன. பதட்டமாய் அவளை ஏறிட்டான்.

"ஏ... என்ன இது?"

"இதுவா? அன்னிக்கு மழையில நனைஞ்சோமே... அன்னிக்குப் பிடிச்ச ஜுரம் நாலு நாளா வாட்டி எடுத்திச்சு. இரண்டு கையிலயும் மாறி மாறி ட்ரிப்ஸ் ஏத்துனதுல கையே வீங்கிப் போச்சு. இந்தக் கையோட எப்படி ஸார் வண்டியைத் தள்ள முடியும்? அதுவும் மண் வேற ரொம்ப ஈரமா இருக்கு..."



"ஸ... ஸாரி. ஐ அம் ஸோ ஸாரி!" - என்றவாறு சாய்ந்து கிடந்த வண்டியை நிமிர்த்தி மெதுவாய் நகர்த்தி ஸ்டாண்ட் இட்டு நிறுத்தினான்.

கீழே கிடந்த கைப்பை, திருமண அழைப்பிதழ் போன்றவற்றை எடுக்கக் குனிந்தவனைத் தடுத்தாள் குறிஞ்சி.

"நோ தேங்க்ஸ் ஸார்! நானே எடுத்துக்கிறேன்..." - என்றவாறு எடுத்துக் கொண்டாள்.

"இந்த நிலைமையில ஏன் டிரைவ் பண்ணணும்? ரெஸ்ட் எடுக்கலாமே!"

"எத்தனை நாள் ஸார் ரெஸ்ட் எடுக்கிறது! சுத்தப் போர். அதான் உங்க வீட்டைத் தேடிப் பிடிச்சு வந்திட்டேன்..." - என்றவள் திருமண அழைப்பிதழைக் காட்டிக் கொண்டே.

லேசாய் நெகிழ்ந்திருந்த யுவராஜனின் முகம் மீண்டும் இறுகியது. "எங்க வீட்டுக்கா... எதுக்கு?"

"என்ன ஸார் இது? வீடு தேடி வந்தவளை வான்னு கூப்பிடாம எதுக்குன்னு கேட்கிறீங்க? அதுவும் இத்தனை விறைப்பா?"

"இங்க வரவேண்டிய அவசியம் இல்லையே!"

"இருக்கு ஸார். உங்க வீட்டுக்கு அடிக்கடி வரவேண்டிய அவசியம் இருக்கு."

"என்ன? எ...துக்கு?"

"ஏன்னா இந்த வீட்டு மருமக என்னோட பெஸ்ட் ஃபிரண்ட். அவளைப் பார்க்காம என்னால இருக்க முடியாது.

ஸோ! எப்படியும் தினமும் ஒருமுறை இங் ஆஜராகிடுவேன். நீங்க சகிச்சுத்தான் ஆகணும்."

"ஏன்? வீட்டில தட்டிக் கேட்க ஆளே கிடையாதா?" யுவராஜனின் கேள்வியில் புன்னகையைத் தொலைத்தா குறிஞ்சி. லேசாய் முகம் மாறியது.

"ஸ... ஸார்! என்ன கேட்டீங்க?"

"வயசுப் பொண்ணை இப்படி கண்ட இடத்துக்கு அனுப்புறானே... உன் அண்ணன்! என்ன ஏதுன்னு கேட் வீட்டில யாரும் இல்லையான்னு கேட்டேன்!"

"ஸார்! என்ன ஒரு மாதிரி பேசுறீங்க?"

"உங்களை மாதிரி ஆளுங்ககிட்ட இப்படித்தான் பே முடியும். பொறுப்பில்லாத அப்பனை நம்பிப் பிரயோஜ மில்லை. பேசாம நீயும் என்னை மாதிரி வசதியான வீட்டு பையனைப் பார்த்து செட்டில் ஆயிடுன்னு உன் அண்ணன் சொல்லி அனுப்பினானா!"

உஷ்ணமாய் நிமிர்ந்தாள் குறிஞ்சி. கண்களில் கோபக்கனல் தெறித்தது.

"மிஸ்டர்! என்ன உளர்றீங்க? கொஞ்சம் மரியாதையாய் பேசுங்க."

"உனக்கு என்னடி மரியாதை? ஃபிராடு பண்ற குடும்பத்தில பொறந்தவதானே... நீ! உன் அண்ணன் ஒரு ஃபோர் ட்வென்ட்டி. நீ ஒரு..."

"யூ ஸ்டாப் இட். எங்க அண்ணனைப் பற்றி பேச நீங்க யாரு? மிஸ்டர் மைண்ட் யுவர் வேர்ட்ஸ்!"



"வசதியான வீட்டுப் பெண்ணை பணம், நகையோட இழுத்திட்டுப் போனவன் தானே உன் அண்ணன். அவன் தங்கை நீ...! நீ மட்டும் ஒழுக்கமா இருப்பியா?"

"ஹேய்! என் ஒழுக்கத்தைப் பற்றி நீ பேசவேண்டாம். என் அண்ணன் கல்யாணம் பண்ணிக்கிட்டது அவன் சொந்த விஷயம். அதைப் பற்றிப் பேச உனக்கு என்ன உரிமை இருக்கு?" - குறிஞ்சியும் ஆத்திரத்தில் ஒருமைக்கு மாற, கோபச்சிவப்போடு அவளை நெருங்கினான்.

"என்ன சொன்னே? அவன் சொந்த விஷயமா! நீயும் அவனும் இன்னும் என்னடி திட்டம் போட்டு வெச்சிருக்கீங்க? என்ன நினைப்புல அவளை அனுப்புனீங்க? கொண்டுட்டு வந்ததெல்லாம் போதாது. இன்னும் சுரண்டிட்டு வான்னு அனுப்புனீங்களா!

அதுக்காகத்தான் நீ நல்ல பிள்ளையா ஹாஸ்பிடல்ல படுத்துகிட்டியா? பச்சைப் புள்ளைடி அவ. அவளை அந்தக் கூட்டத்தில தனியா நிக்க விட்டுட்டு... குழந்தை மாதிரி அவ தவிச்சிட்டு நின்னதை நான் பார்த்தேன்டி... பார்த்தேன்!" - கண்கள் கசிய நிறுத்தினான் யுவராஜன்.

குறிஞ்சியின் முகம் அதிர்ந்தது. அவனது கண்களைக் கூர்ந்து பார்த்தாள். அந்தக் கண்ணீர் அவளை அலைக்கழித்தது. உதடு துடிக்கக் கேட்டாள்.

"யாரை... யாரைச் சொல்றீங்க?"

கோபமாய் நிமிர்ந்தான். "எதுவுமே தெரியாத மாதிரி எப்படி நடிக்க முடியுது உன்னால? இப்படி நடிச்சுத்தான் என் தங்கையை ஏமாத்துனீங்களா?" - அவனது கேள்வியில் விக்கித்துப் போனாள்.

"எ...ன்ன... உங்கள் தங்கையா? யா... யாரு?"

"நடிக்காதே. என் தங்கை யாருன்னு உனக்குத் தெரியாது!" – கேட்டுக் கொண்டே ஆத்திரமாய் நெருங் கியவனைப் பார்த்து நடுங்கிப் போனாள்.

"தெ...ரியாது. சத்...தியமா... தெரியாது."

"வாயை மூடு. சத்தியம்னா என்னன்னு தெரியுமா உனக்கு? அதை உச்சரிக்கவும் ஒரு தகுதி வேணும். உனக்கு அது கிடையாது."

"ஸ... ஸார்... எனக்கு உண்மையாவே எதுவும் புரியலை... நீங்க...?"

"போதும்... இந்த மாதிரி முகத்தை வைச்சுக்கிட்டு இன்னும் எத்தனை பேரை மயக்கப் போறீங்க? உன் அண்ணனும் இப்படித்தான் என் தங்கையை மயக்கினானா? உலகம் புரியாத ஒரு பொண்ணை எத்தனை சுலபமாய்க் கூட்டிட்டுப் போயிட்டான். ஆனா... அவளை இழந்து நாங்க துடிச்ச துடிப்பு..." – தலையில் இடி இறங்கியதைப் போல் உணர்ந்தாள் குறிஞ்சி.

'இவன் என் அண்ணியின் அண்ணனா! கடவுளே... அதற்காகத்தான் இப்படிக் கொதிக்கிறானா? அண்ணன் என்னிடம் ஒரு வார்த்தைகூடச் சொல்லவில்லையே! இத்தனை நாளாய்த் தேடிய விடை இன்று கிடைத்துவிட்டது. இவனை எப்படிச் சமாதானம் செய்வது?

ஒரே ஊரில் இருந்து கொண்டே இது நாள் வரை அண்ணி பதுங்கியதன் காரணம் புரிந்தது. இத்தனைக் கோபமான அண்ணனின் கண்ணில் படக்கூடாது என்றுதான் பதுங்கியிருக்கிறாள்.



இவனே இவ்வளவு ஆத்திரமாய் இருக்கும்போது இவன் வீட்டில் உள்ளவர்கள் எப்படியிருப்பார்கள்? அவர்களிடம் எப்படிப் பேசி அண்ணியை ஏற்றுக் கொள்ளச் செய்வது?

மற்றவர்களுக்குக் கோபம் இருந்தாலும் பெற்றவளுக்கு ஏக்கம் நிச்சயமாய் இருக்கும்.

பெற்ற மகளைக் காண ஏங்கிக் கொண்டுதான் இருப்பார். இவனிடம் பேசுவதைவிட இவன் அம்மாவிடம் பேசிப் பார்க்கலாம். அவர்கள் அண்ணியை நிச்சயம் மன்னிப்பார்கள்.'

"என்ன... நான் கேட்கிறது காதுல விழலை?" – அவன் சத்தமாய்க் கேட்டதும் மிரண்டு நிமிர்ந்தாள்.

"எ... என்ன கேட்டீங்க?"

"இங்கே என்ன நிலவரம்னு உன் அண்ணன் வேவு பார்த்திட்டு வரச் சொன்னானா?"

"இல்லை ஸார். நீங்க தப்பாப் புரிஞ்சிட்டு இருக்கீங்க. நான்..."

"யாரு? நான் தப்பா புரிஞ்சுக்கிட்டேனா? இதோ பார். அவன்கிட்ட சொல்லி வை. நீலாவோட தாலிக்காகத்தான் இன்னும் அவன் மேல கையை வைக்காம இருக்கோம். அவனை நேர்ல பார்த்தா கொலை விழும்னுதான் அவனைப் பார்க்க வராம இருக்கோம்.

போ... போய்ச் சொல்லு. அவன் வாழ்நாள் முழுக்க எங்க கண்லேயே படாம இருக்கணும்னு சொல்லி வை. போ..."

"ஏன் ஸார்! இவ்வளவு கோபப்படுறீங்க? என்னவோ எங்க அண்ணன் மேல மட்டும்தான் தப்புங்கிற மாதிரி பேசுறீங்க!"

"என்ன?"

"உங்க தங்கையை என் அண்ணன் ஒண்ணும் தூக்கிட்டு வரலையே... அவங்களா விரும்பித்தானே வந்தாங்க!"

"ஏய்... நீ!"

"நிறுத்துங்க ஸார்... நீங்க உங்க தங்கையை என்ன கொடுமைப் படுத்துனீங்களோ! அது தாங்காம அவங்க வீட்டை விட்டு வந்ததுக்கு என் அண்ணன் எப்படிப் பொறுப்பாகும்?" - எனக் கேட்டவளின் கழுத்தைக் கப்பெனப் பற்றினான் யுவராஜன்.

கண்கள் சிவக்க, பற்கள் அரைபட, கைகள் இறுகின.

மூச்சுக்குத் திணறினாள் குறிஞ்சி. "விடுங்க... விடு...ங்க!" - அவனது கைகளைப் பற்றி பலமாய் உதறினாள்.

அவன் கைகளை விலக்கிவிட, இருமலோடு தொண்டை நீவினாள். கண்களில் நீர் வழிந்தது.

"ச்சே! மனுஷனா நீங்க! மிருகம். கொலைகார மிருகம். இப்பப் புரியுது. உங்க தங்கை ஓடிப் போனதுக்குக் காரணம் நீங்கதான். உங்களை மாதிரி ஒருத்தன் கூட இருக்கிறதை விட மனசுக்குப் பிடிச்சவனோட வாழலாம்னு எங்க வீட்டுக்கு வந்திருக்காங்க."



பளாரென அறைந்தான். "என்னடி சொன்னே? நான் மிருகமா?"

"ஆமா மிருகம்தான். ஒரு பொண்ணை நடுத்தெருவில் நிற்க வைத்து அடிப்பவனுக்கு பெயர் என்ன? எந்த உரிமையில் என்னை அடித்தீர்கள்? நீங்கள் யார் எனக்கு?" - கண்ணில் நீர் தெறிக்க... அவள் கேட்ட பிறகே தன்னிலை உணர்ந்தான் யுவராஜன். சட்டென சுதாரித்து விலகி நின்றான்.

அவமானமாய் இருந்தது. ஒரு பெண்ணைக் கை நீட்டி அடித்தேனா! அதுவும் வீதியில் நின்று...

ச்சே! நான் ஏன் இப்படி மாறிப் போனேன்? சதா சர்வகாலமும் நீலாவின் பிரிவைப் பற்றியும் அவளது கண்ணீரையும் பற்றியே சிந்தித்ததில் என் மூளை குழம்பி விட்டதா? நான் எப்படிக் கை நீட்டலாம்?

அதுவும் நான்கு நாட்களாய் உடல்நலமில்லாமல் மருத்துவமனையில் படுத்திருந்து வந்தவளிடம் இப்படி முரட்டுத்தனமாய் நடந்து கொண்டேனே... பாவம்! சின்னப் பெண். ரொம்ப வலித்திருக்குமே... உள்ளம் பதற மெல்ல அவளது கன்னத்தைப் பார்த்தான்.

பட்டுப் போன்ற கன்னம் கன்றிச் சிவந்திருக்க... அவனது விரல்களின் பதிவு தெளிவாகத் தெரிந்தது. துடித்துப் போனான். அவளை அறைந்த வலக்கரத்தை இறுக மூடி அருகே இருந்த மரத்தில் மோதினான். அவனது செயலில் பதறினாள் குறிஞ்சி.

மீண்டும் மீண்டும் அவன் மோத பதறி அவனது கரத்தைப் பற்றினாள்.

...என்ன பண்றீங்க?"

"விடு என்னை... நான்... நான் மிருகம்!"

"இல்லை ஸார். ஸாரி ஸார்! நான்தான் ஏதோ கோபத்தில சொல்லிட்டேன்..."

கார் சத்தம் வந்து வெகுநேரமாகியும் தம்பி இறங்கி வரவில்லையே என்றவாறு, வெளியே வந்த கார்த்திக் கார் வீட்டிற்கு வெளியே நிற்க... குழப்பமாய் வெளியே வந்தான்.

"யுவா! யாருடா இது? ஏன் வெளியே நின்னு பேசிட்டு இருக்க?"

"இது... இது..." - யுவராஜன் தடுமாற... குறிஞ்சி முந்திக் கொண்டாள்.

"வணக்கம் ஸார். நான் சுஜாதாவோட ஃபிரண்ட். அவளைப் பார்த்துட்டு போலாம்னு வந்தேன். ஸார் கிட்டதான் அட்ரஸ் கேட்டுட்டு இருந்தேன்."

"ஓ! வாங்க வாங்க. சுஜா உள்ளேதான் இருக்கா. ப்ளீஸ் கம்!"

"தேங்க் யூ ஸார்!" - என்றவள் ஸ்கூட்டியின் சீட்டை உயர்த்தி பாக்ஸில் இருந்த இரத்தச் சிவப்புநிற ரோஜாக்களால் செய்யப்பட்ட பூங்கொத்தை எடுக்க, கார்த்திக்கின் முகம் மாறியது. இது... இது யார்? இவளை நான் பார்த்திருக்கிறேனே...!

"மை காட்! யுவா... இது அந்த ஃபிளவர் டெக்கரேட் பண்ணினவனோட தங்கைதானே!"

யுவராஜன் மௌனமாய்த் தலையாட்டினான். கோபமாய்த் திரும்பினான்.



"இவளுக்கு இங்கே என்ன வேலை? ஹலோ ஒன் மினிட்!" - கார்த்திக் குரல் கொடுக்க, வாசல் வரை சென்ற குறிஞ்சி நின்று திரும்பினாள்.

"என்ன ஸார்?"

"என்ன... இவ்வளவு தூரம் வந்திருக்கீங்க?"

"சுஜா என்னோட க்ளோஸ் ஃபிரண்ட் ஸார். அவ கல்யாணத்தப்ப எனக்கு உடம்பு முடியாமப் போச்சு. அதனால வர முடியலை. ஸோ.. பார்த்திட்டு விஷ் பண்ணிட்டுப் போலாம்னு வந்தேன்."

"உங்க வாழ்த்து எங்களுக்குத் தேவையில்லை. கிளம்பு!"

"ஸார்!"

"உன் அண்ணன் அனுப்பினானா? இங்கே என்ன நிலவரம்னு பார்த்திட்டுப் போக வந்தியா?"

"ஏன் ஸார்! ரெண்டு பேருமே இப்படிக் கேட்கிறீங்க? நான் இங்கு வந்து இறங்கும் வரை இது என் அண்ணி வீடுன்னு தெரியாது. இப்ப இவர் சொன்ன பிறகுதான் தெரியும். அதோட எங்க அண்ணன் ஏன் இங்கே உள்ள நிலவரத்தைப் பார்த்திட்டு வரச் சொல்லணும்?

அவனுக்கு இருக்கிற வேலையைக் கவனிக்கவே அவனுக்கு நேரம் போதாது. இதுல அவன் ஏன் அடுத்தவங்க விஷயத்தைப் பார்க்கப் போறான். எங்க அண்ணன் ரொம்ப நல்லவன் ஸார். உங்க தங்கையைப் பூ மாதிரி பார்த்துக்கிறான். உங்க தங்கச்சி ரொம்ப சந்தோஷமாத்தான் வாழுறாங்க."

"அப்படின்னு சொல்லச் சொன்னானா அந்தப் பய?"

"இதோ பாருங்க ஸார்! அவங்க செய்தது தப்புதான். பெரிய தப்பு. அதை நான் நியாயப்படுத்தலை. ஆனா நடந்து முடிஞ்சதைப் பற்றி பேசுறதைவிட இனிமே நடக்கப் போறதைப் பற்றிப் பேசறதுதானே புத்திசாலித்தனம்!"

"ஓஹோ! இனிமே என்ன நடக்கணும்?"

"அண்ணன் அண்ணியைத் தங்கமா தாங்கினாலும் அண்ணி அடிக்கடி உங்க நினைப்பால அழுதிட்டே இருக்காங்க. சரியாச் சாப்பிடுறதில்லை. தூங்குறதில்லை. நோய்வாய்ப்பட்ட மாதிரி இளைச்சிட்டே போறாங்க. நீங்கள்லாம் உங்க கோபத்தை விட்டுட்டு மனசு மாறி..."

"மனசு மாறி?"

"மனசு மாறி... அண்ணியைச் சேர்த்துக்கிட்டீங்கன்னா அண்ணியோட மனவேதனை குறைஞ்சிடும். அவங்களோட குற்றஉணர்வும் போயிடும். அதற்குப் பிறகாவது அவங்க சந்தோஷமா வாழுவாங்க... இல்லையா? வயசுக் கோளாறுல தெரியாம தப்பு பண்ணிட்டாங்க.

நீங்கதான் பெரிய மனசு பண்ணி அவங்களை மன்னிக்கணும். அண்ணி பாவம் ஸார்! எப்பவும் அழுதிட்டே இருக்காங்க. ப்ளீஸ் ஸார்! உங்க தங்கைக்காக உங்க கோபத்தை விட்டுட்டுக் கொஞ்சம் இறங்கி வாங்க ஸார்! எங்க வீட்டுக்கு வந்து அண்ணிகிட்ட பேசுங்க ஸார்... இல்லைன்னா நான் வேணும்னா அவங்களை இங்கே கூட்டிட்டு வரவா?"

"எதுக்கு?"



அதுவரை அமைதியாய் நின்ற யுவராஜனின் கேள்வியில் அனல் பறந்தது.

## 12

நீ சாய்ந்து கொள்ளும் தோள் நான்
உன்னைத் தாங்கிக் கொள்ளும்
மடி நான் உன்னைத் தொடர்ந்து வரும்
நிழல் நான் – உன்
கண்ணின் இமை நான்!

**கா**ரை விட்டு இறங்கினான் மாதவன். பின்பக்கக் கதவைத் திறந்து மூங்கில் கூடையில் இருந்த பூக்களைக் கடைக்குள் கொண்டு போய் வைத்தவாறே குரல் கொடுத்தான்.

"குறிஞ்சி! நீ கேட்ட பூ எல்லாம் வாங்கிட்டு வந்திட்டேன்."

"ஸார்! அவங்க இங்கே இல்லை ஸார்!" – பூக்கள் வாடாமல் இருக்க பதப்படுத்திக் கொண்டிருந்த காவேரி பதில் அளித்தாள்.

"இல்லையா! எங்கே போயிட்டா?"

"வெளியே போகணும்னு சொன்னாங்க ஸார்... எங்கேன்னு சொல்லலை!"

"உடம்பு இன்னும் சரியாகலையே... அதுக்குள்ளே எங்கே போனாள்?"

"கொஞ்ச நேரத்தில வந்திடுறேன்னு சொல்லிட்டுப் ... ஸார்!"

"வண்டியிலயா போனா?"

"ஆமா ஸார்!"

"கையெல்லாம் வீங்கியிருந்ததே... ஏன் வண்டியை எடுத்தாள். வீட்டில இரு என்றால் இருக்க மாட்டாள். ரெண்டு எடு என்றால் எடுக்க மாட்டாள். சொன்ன பேச்சு எதையும் கேட்பதில்லை. வரட்டும்..." – என்றவாறு டேபிளை நெருங்கினான்.

"மாதவா!" – வாசல்புறமாய் குரல் கேட்கத் திரும்பினான். நல்லசிவம் நின்று கொண்டிருந்தார். வேகமாய் வெளியே வந்தான்.

"அப்பா! உங்களை எத்தனை தரம் சொல்லியிருக்கேன். கடைப்பக்கம் வர வேண்டாம்னு... அதான் காலையிலேயே காசு கொடுத்தேனே...!"

"மாதவா! காசை எப்படியோ தொலைச்சிட்டேன்டா."

"ம்... இப்ப பொய்யும் பேச ஆரம்பிச்சிட்டீங்களா? இப்படியே ஒவ்வொரு கெட்ட பழக்கமா கத்துக்கிட்டு வாங்க. ரொம்ப நல்லா இருக்கும்."

"மாதவா!"

"அப்பா! உங்களுக்குப் பணம் தர்றதே தப்பு. அடுத்தவங்ககிட்ட கையேந்துறீங்களேன்னு தர்றேன். அதைக் குடிச்சிட்டு இப்போ செகண்ட் ஷிஃப்ட்டுக்கு பணம் கேட்டு வந்திருக்கீங்களா?"

"இல்லை மாதவா! நான் சொல்றதைக் கேளு."

"கேட்க மாட்டேன். நீங்க பரிதாபமா பேசி காரியத்தைச் சாதிக்கலாம்னு நினைக்காதீங்க. கிளம்புங்க..."



"ஏன்டா இப்படி விரட்டுறே? இது என் கடைதானே!" – என்ற தந்தையை ஆவலாய் ஏறிட்டான். இத்தனை வருடங்களில் இந்தப் பக்கமே வராதவர் இன்று வந்து இத்தனை தெளிவாய் என் கடைதான் என்கிறாரே... இதையும் விற்றுவிடப் போகிறாரா!

"என்னப்பா? என் கடைன்னு... சொந்தம் கொண்டாடுறீங்க...! என்ன... இதை யார்கிட்டயாவது விலை பேசிட்டீங்களா?"

"சேச்சே! சோறு போடுற தாயை யாராவது விற்பாங்களா? இது கடை இல்லைப்பா... நமக்குப் படியளக்கிற சாமி. நம்ம தாயி!"

"என்னப்பா! ஆச்சரியமா இருக்கு. ரொம்ப தெளிவாப் பேசுறீங்க... என்ன? இன்னிக்கு உங்க கடை லீவா! சரக்கு கிடைக்கலையா?"

"துட்டைத் தொலைச்சிட்டேன் மாதவா. அவன் கடனுக்குத் தரமாட்டேங்கிறான்."

"ஓஹோ! அதான் இத்தனை தெளிவா இருக்கீங்களா? துட்டு தொலைஞ்சதும் நல்லதுதாம்ப்பா... உங்களை இப்படி ஸ்டெடியா பார்த்து எவ்வளவு நாளாச்சி?"

"மாதவா! ஒரு நூறு ரூபா கொடேன்."

"ஏம்ப்பா?"

"செலவு இருக்கு."

"உங்க செலவு எதுன்னு எனக்குத் தெரியும். பத்து பைசா தரமாட்டேன்."

"மாதவா! என்னால குடிக்காமத் தூங்க முடியாதுடா. நான் கவலை மறந்து தூங்கணும்டா... காசு கொடு!" - என்றவரை நிதானமாய்ப் பார்த்தான்.

"ஏம்பா! நீ கவலையை மறந்து தூங்க தினமும் நூறு ரூபா தர்றேனே... நானும் குறிஞ்சியும் என்னிக்காவது அப்படித் தூங்கியிருப்போமா? எங்களைப் பத்தி ஒரே ஒரு நிமிஷமாவது நினைச்சுப் பார்த்தீங்களா?"

"ஏன் உங்களுக்கு என்ன கவலை? தூக்கம் வராம இருப்பதற்கு...!"

"உங்க கவலைதாம்ப்பா பெரிய கவலை. நீங்க பழையபடி மாறமாட்டீங்களாங்கிற கவலை. முழுநேரக் குடிகாரனோட மகளுக்கு வாழ்க்கை கொடுக்க எந்த மாப்பிள்ளை வருவான்கிற கவலை. என் தங்கை கல்யாணத்துக்குச் சம்மதிக்கணுமேங்கிற கவலை. அவ கல்யாணத்தை எப்படி நடத்தப் போறேன்கிற கவலை. அவளுக்கு இன்னும் நிறைய பணம் சேர்க்கணுமேங்கிற கவலை.

இப்படி சொல்லிட்டே போகலாம். ஆனா... இதுல எந்தக் கவலையும் இல்லாம தூங்குறதுக்காக குடிக்கிறேன்னு சொல்றீங்களேப்பா... உங்களுக்கே இது தப்பா தெரியலை. அபத்தமாப் படலை...!" - மகனின் கேள்விக்குப் பதிலின்றி நின்றார் நல்லசிவம்.

"இதுவரை மூணு இடத்தில மாப்பிள்ளை பார்த்தேன் குறிஞ்சிக்கு. அவங்கள்லாம் என்ன சொல்றாங்க தெரியுமா?"

"என்னவாம்?"



"கல்யாணம் செய்துக்க பொண்ணு மட்டும் நல்லா இருந்தாப் போதாது. பெண்ணோட குடும்பமும் நல்லதா இருக்கணும். உன் அப்பன் எப்பவும் குடிச்சிட்டு ரோட்டுல விழுந்து கிடக்கானே... உங்களுக்கு அது பழகிப் போயிருக்கலாம்.

நாளைக்கே உன் தங்கை என் வீட்டுக்கு மருமகளா வந்துட்டான்னு வை. எல்லாரும் எங்களை இல்ல கேலி செய்வாங்க. உங்க வீட்டுச் சம்பந்தி அந்த ரோட்டுல விழுந்து கிடக்கார். உன் மாமனார் குடிச்சிட்டு வாந்தி எடுக்கிறார்ன்னு எங்க கிட்டதானே சொல்வாங்க. எங்களுக்கு அதெல்லாம் சரி வராதுப்பா. வேற இடம் பாருன்னு சொல்றாங்க...

இதைப் பத்தியெல்லாம் உங்களுக்கு எந்தக் கவலையும் இல்லை. எப்பவோ செத்துப் போன அம்மாவைப் பத்திக் கவலைப்படுறேன்னு சொல்லி எங்க எல்லாரையும் கவலைப்பட வைக்கிறீங்கப்பா...!" - என்றான் குரல் கம்ம.

நல்லசிவம் இடிந்து போய் நின்றார். இதுவரை தன் சுகமே பெரிதென்று... எப்போது விடிகிறது... எப்போது அடைகிறது... என்றே தெரியாமல் போதையின் மயக்கத்தில் கிடந்திருக்கிறேனே... என் மனைவியைப் பற்றி கவலைப்பட்ட நான் என் பிள்ளைகளை எப்படி மறந்து போனேன்?

வாழ வேண்டிய பிள்ளைகள் இப்படி உழைத்துக் கொட்ட, எந்தக் குற்ற உணர்வும் இன்றி அந்தப் பணத்தைக் குடித்து வீணாக்கி இருக்கிறேனே? இதுவே வேற பிள்ளைகளாய் இருந்தால் அடித்து விரட்டியிருப்பார்கள்.

கூடாது என்று கேளாமலே பணத்தைக் கொடுத்தனுப்பு வார்களே!

இவர்களுக்கு நான் என்ன செய்தேன்? நல்லது செய்யாவிட்டாலும் அவர்களுக்கு நடக்கும் நல்லதிற்கு தடையாக நில்லாமல் இருக்கலாமே... இதைக் கூட உணரா முடியாதபடி மதுவுக்கு அடிமையாகி தெருவில் புரண்டு கொண்டிருந்தேனா?' - அசைவற்று நின்று கொண்டிருந்த தந்தையை அசைத்தான் மாதவன்.

"அப்பா! உங்ககிட்டதான் பேசுறேன். காதுல விழுதா?"

"ம்... என்னப்பா?"

"பேசாம வீட்டுக்குப் போய் சாப்பிட்டுப் படுங்க. எதுவா இருந்தாலும் நாளைக்குப் பார்த்துக்கலாம். போங்கப்பா..."

"ச... சரி!" - தளர்ந்து போனவராய் திரும்பி நடந்தவரைப் பார்க்கையில் கொஞ்சம் பரிதாபமாய்த் தோன்ற மனம் கேளாமல் அழைத்தான்.

"அப்பா!" - நின்று திரும்பினார்.

"என்னப்பா?"

"ஒரு நிமிஷம் இருங்க. நான் வேலையை முடிச்சிட்டு வர்றேன். சேர்ந்தே போயிடலாம். வாங்க... இப்படி உட்காருங்க."

"இல்லப்பா! நீ பொறுமையா வா. எனக்கு ரொம்பப் பசிக்குது. நான் முன்னே போறேன்!" - தந்தையின் நைந்த குரலில் பதறினான் மாதவன்.

"ஏம்பா! மத்தியானம் சாப்பிடலையா?"



"இல்லைய்யா... காசைத் தொலைச்சிட்டேன். தேடி அலைஞ்சதில ரொம்பப் பசி!" - நல்லசிவம் பரிதாபமாய்ச் சொல்ல, கண் கலங்கினான் மாதவன்.

"என்னப்பா... இது? சரி வாங்க. வீட்டுக்குப் போலாம். காவேரி! கடையைப் பார்த்துக்கம்மா... நான் இப்ப வந்திடுறேன்."

"சரிங்க ஸார்!"

"வாங்கப்பா போலாம்..." - என்றவன் தந்தையைக் காரில் ஏற்றிக் கொண்டு புறப்பட்டான்.

முன் இருக்கையில் தலை குனிந்து அமர்ந்திருந்தவரைப் பார்க்கையில் மனம் வலித்தது? எத்தனை கம்பீரமாய் நடமாடிய மனிதர்! நேரம் காலம் பாராமல் உழைத்தவர். இன்று இப்படி அடையாளம் தெரியாமல் மாறிப் போய் பெற்ற பிள்ளை முன் குறுகிப் போய் அமர்ந்திருக்கிறாரே!

"அப்பா!"

"என்னப்பா?"

"இனிமே தினமும் கடைக்கு வர்றீங்களா?" - தயக்கமாய்க் கேட்டவனை வியப்பாய்ப் பார்த்தார்.

"நானா?"

"ஆமாம்ப்பா.... உங்களை இப்படிப் பார்க்கவே கஷ்டமாயிருக்குப்பா. இந்தத் தாடியை ஷேவ் பண்ணச் சொல்லி காசு தந்தேனே... ஏன் பண்ணலை?"

"அ... அது... வந்து..."

...ங்களா? ஏம்பா இப்ப
இருக்கீங்க?"

"மன்னிச்சிடுய்யா. இனிமே ஷேவ் பண்ணிட்டு எந்
ஆபீஸுக்குப் போகப் போறேன்."

"நம்ம கடைக்கு வாங்கப்பா. வேலை செய்யாட்டிக்கூட பரவாயில்லை. சும்மா மேற்பார்வையிட்டாப் போதும். உங்களுக்கு இந்த எண்ணமெல்லாம் வராதுப்பா. அம்மா போனது எங்களுக்கும் ரொம்பக் கஷ்டம்தாம்ப்பா...

ஆனா அதைவிட உங்களை நினைச்சிக் கஷ்டப்படுறோம்ப்பா... குறிஞ்சிக்கும் வயசாகுது. அவளுக்கு நல்லபடியா கல்யாணம் பண்ணிக் கொடுக்கணுமே... நீங்கதானப்பா முன்னே நின்னு நடத்தி வைக்கணும்..."

"ம்... ம்..."

"அதுக்காகவாவது நீங்க மாறணும்ப்பா...!"

"சரிப்பா... முயற்சி பண்றேன்..." – என்றவரை நம்ப முடியாமல் பார்த்தான் மாதவன்.

"அப்பா?"

"ஆமாய்யா... இத்தனை நாளா பணத்தோட அருமையும் பெத்த பிள்ளைகளோட பெருமையும் புரியாம இருந்திருக்கேன். இத்தனை வருஷமா கூடவே இருந்து குடிச்சவனுங்க இன்னிக்கு என்கிட்ட துட்டு இல்லைன்னதும் குப்பை மாதிரி ஒதுக்கிட்டாங்க... மாதவா!

பசியில வயிறு எரிஞ்சது. ஒரு ரெண்டு ரூபா கூட என்னை நம்பித் தரலைய்யா... ஒரு காப்பி வாங்கித் தர அவனுக்கு மனசு வரல்ல... என்னைத் தெருநாயை விரட்டுற மாதிரி விரட்டியடிச்சாங்க..."



"அ...ப்...பா!"

"அப்பத்தான் என்னோட நிலைமை எனக்கே புரிஞ்சது. எப்பவுமே நாம நடந்துக்கிறதை வெச்சுத்தானே மரியாதை கிடைக்கும். நான் குடிகார நாய்தானே! நாய்க்கு இந்த மரியாதைதானே கிடைக்கும்!"

"அப்பா! அப்படியெல்லாம் சொல்லாதீங்கப்பா..."

"பொண்டாட்டிதான் இல்லாமப் போயிட்டா... நம்மளை நம்பி புள்ளைங்க இருக்கான்னு நினைக்காமப் போயிட்டேனே... அது எவ்வளவு பெரிய தப்பு. நான் மட்டும் பொறுப்பா இருந்திருந்தா இந்நேரம் குறிஞ்சிக்குக் கல்யாணம் பண்ணி குழந்தை கூட பிறந்திருக்கும்.

நீயும் உன் மனைவி கூட சந்தோஷமா வாழ்ந்து பேரன், பேத்தி பெத்துத் தந்திருப்பே... என்னாலதானே தினமும் தனியாப் படுக்கிறாய்!" – நல்லசிவம் கேட்க, தூக்கிவாரிப் போட்டது.

"அப்பா... நீங்க என்ன சொல்றீங்க?"

"எனக்குத் தெரியும்யா... தினமும் என்னைப் போதையிலதான் வீட்டில கொண்டு வந்து படுக்க வைக்கிற? ஆனா நீ... ஹால்லதானே படுக்கிற!"

"அதெல்லாம் ஒண்ணுமில்லப்பா... என்னிக்காவது ஒரு நாள் சும்மா காத்தோட்டமா படுப்பேன்."

"இல்லய்யா! எனக்குப் புரியுது. வீட்டில வயசுப் பொண்ணை வைச்சுக்கிட்டு உன்னால இயல்பா வாழ முடியாது. மனைவியோட ரூமைப் பூட்டிக்கத் தயங்குற... எனக்குப் புரியாம இல்லை..." – என்றதும் நிம்மதியாய் மூச்சை விட்டான் மாதவன்.

'நல்லவேளை! அப்பாவே பதிலும் சொல்லி விட்டார். இல்லையென்றால தேவையில்லாமல் பல பொய் சொல்ல வேண்டியிருக்கும்!' – தன்னைத் தானே ஆசுவாசப்படுத்திக் கொண்ட நேரம் கார் வீட்டை நெருங்கியது. நெருங்கும் போதே மாதவனின் முகம் சுருங்கியது.

வீட்டின் முன் சலசலப்பு. நான்கைந்து பெண்கள் கூடி நின்றனர். என்ன ஆயிற்று? வேகமாய் காரைச் செலுத்தி தன் வீட்டை அடைந்து பதட்டமாய் இறங்க, ஒரு பெண் திரும்பிப் பார்த்தாள்.

"அட! மாதவனே வந்திட்டான். யப்பா... மாதவா! இங்கே வந்து பாரேன்..."

"என்ன லஷ்மி அக்கா! என்ன ஆச்சு?" – பதட்டமாய் நெருங்க, குழப்பமான முகத்தோடு நல்லசிவமும் காரை விட்டு இறங்கினார்.

"மாதவா! வந்திட்டியாப்பா... உன் பொஞ்சாதியைப் பாரேன்..." – வயதான அம்மாள் அழுகுரலில் சொல்ல... துடிக்கும் மனதுடன் அவளது மடியைப் பார்த்தான். கண்கள் செருகிப் போயிருக்க மூச்சற்றுக் கிடந்தாள் நீலா.

"ஐயோ நீலா! என் நீலாவுக்கு என்ன ஆயிற்று?" - மண்டியிட்டு அமர்ந்து மனைவியை வாரியெடுத்து மடியில் சாய்த்துக் கொண்டான்.

"நீலாம்மா! என்னம்மா... என்னாச்சு உனக்கு? பாட்டி! என்ன நடந்தது? சொல்லுங்களேன்..."

"நான் என்னன்னு சொல்லுவேன் மாதவா! வழக்கமா அஞ்சு மணிக்கெல்லாம்



இன்னிக்குக் கொஞ்ச நேரமாகிப் போச்சு. இப்பத்தான் வந்தேன். இருட்டிப் போறதுக்குள்ள உன் வீட்டில விளக்கு எரியும்.

இன்னிக்கு எரியலை. வெளியே எங்கேயும் போயிட் டீங்கன்னு பார்த்தா... உள்ளார ஏதோ முனகல் கேட்டது. கதவு தொறந்துதான் கிடந்தது. சரி என்னன்னு பார்க்கலாம்னு உள்ளே வந்தா இந்தப் பொண்ணு இப்படிக் கிடக்குதுப்பா... நான் என்ன பண்ணுவேன்?"

கண்களில் கண்ணீர் சுரக்க மனைவியின் முகத்தை வருடினான். லேசாய் சுவாசம் மட்டுமே வந்து கொண்டிருக்க, உடம்பில் துளியும் அசைவில்லை. நல்லசிவம் மகனை எழுப்பினார்.

"மாதவா! புள்ளையத் தூக்கிட்டு வா. ஆஸ்பத்திரிக்குப் போவோம்."

"இருங்கய்யா... நம்ம ரகு பயலை அனுப்பி யிருக்கேன். டாக்டரை கூட்டிட்டு வந்திடுவான்!" – அந்தப் பெண்மணி சொல்லும்போதே இருசக்கர வாகன ஒலி கேட்டது.

"டாக்டர் வந்திட்டார். எல்லாரும் வழி விடுங்க..." – என்ற சலசலப்பைத் தொடர்ந்து அந்த இளம் டாக்டர் உள்ளே நுழைந்தார்.

"டாக்டர்! வாங்க... இது என் மனைவி. என்னன்னு தெரியலை. திடீர்ன்னு மயக்கமாகிட்டாங்க..." – கண்ணீரைத் துடைத்தவாறே சொன்னான்.

"...த்த வையுங்க..."

'நல்லவேளை! அப்பாவே பதிலும் சொல்லி விட்டார். இல்லையென்றால தேவையில்லாமல் பல பொய் சொல்ல வேண்டியிருக்கும்!' - தன்னைத் தானே ஆசுவாசப்படுத்திக் கொண்ட நேரம் கார் வீட்டை நெருங்கியது. நெருங்கும் போதே மாதவனின் முகம் சுருங்கியது.

வீட்டின் முன் சலசலப்பு. நான்கைந்து பெண்கள் கூடி நின்றனர். என்ன ஆயிற்று? வேகமாய் காரைச் செலுத்தி தன் வீட்டை அடைந்து பதட்டமாய் இறங்க, ஒரு பெண் திரும்பிப் பார்த்தாள்.

"அட! மாதவனே வந்திட்டான். யப்பா... மாதவா! இங்கே வந்து பாரேன்..."

"என்ன லஷ்மி அக்கா! என்ன ஆச்சு?" - பதட்டமாய் நெருங்க, குழப்பமான முகத்தோடு நல்லசிவமும் காரை விட்டு இறங்கினார்.

"மாதவா! வந்திட்டியாப்பா... உன் பொஞ்சாதியைப் பாரேன்..." - வயதான அம்மாள் அழுகுரலில் சொல்ல... துடிக்கும் மனதுடன் அவளது மடியைப் பார்த்தான். கண்கள் செருகிப் போயிருக்க மூச்சற்றுக் கிடந்தாள் நீலா.

"ஐயோ நீலா! என் நீலாவுக்கு என்ன ஆயிற்று?" - மண்டியிட்டு அமர்ந்து மனைவியை வாரியெடுத்து மடியில் சாய்த்துக் கொண்டான்.

"நீலாம்மா! என்னம்மா... என்னாச்சு உனக்கு? பாட்டி! என்ன நடந்தது? சொல்லுங்களேன்..."

"நான் என்னன்னு சொல்லுவேன் மாதவா! வழக்கமா அஞ்சு மணிக்கெல்லாம் பால் கொண்டு வருவேன்.



இன்னிக்குக் கொஞ்ச நேரமாகிப் போச்சு. இப்பத்தான் வந்தேன். இருட்டிப் போறதுக்குள்ள உன் வீட்டில விளக்கு எரியும்.

இன்னிக்கு எரியலை. வெளியே எங்கேயும் போயிட்டாங்கன்னு பார்த்தா... உள்ளார ஏதோ முனகல் கேட்டது. கதவு தொறந்துதான் கிடந்தது. சரி என்னன்னு பார்க்கலாம்னு உள்ளே வந்தா இந்தப் பொண்ணு இப்படிக் கிடக்குதுப்பா... நான் என்ன பண்ணுவேன்?"

கண்களில் கண்ணீர் சுரக்க மனைவியின் முகத்தை வருடினான். லேசாய் சுவாசம் மட்டுமே வந்து கொண்டிருக்க, உடம்பில் துளியும் அசைவில்லை. நல்லசிவம் மகனை எழுப்பினார்.

"மாதவா! புள்ளையத் தூக்கிட்டு வா. ஆஸ்பத்திரிக்குப் போவோம்."

"இருங்கய்யா... நம்ம ரகு பயலை அனுப்பியிருக்கேன். டாக்டரை கூட்டிட்டு வந்திடுவான்!" - அந்தப் பெண்மணி சொல்லும்போதே இருசக்கர வாகன ஒலி கேட்டது.

"டாக்டர் வந்திட்டார். எல்லாரும் வழி விடுங்க..." - என்ற சலசலப்பைத் தொடர்ந்து அந்த இளம் டாக்டர் உள்ளே நுழைந்தார்.

"டாக்டர்! வாங்க... இது என் மனைவி. என்னன்னு தெரியலை. திடீர்ன்னு மயக்கமாகிட்டாங்க..." - கண்ணீரைத் துடைத்தவாறே சொன்னான்.

"பெட்ல படுக்க வையுங்க..."

"இதோ டாக்டர்!" – என்றவாறு உள்அறைக்குள் தூ வந்து கட்டிலில் படுக்க வைத்து அவளது உடைகளை சீராக்கினான்.

ஃபேனை சுழலவிட்டான்.

மருத்துவர் உள்ளே வந்து நீலாவைப் பரிசோதிக்க.. தவிப்பாய்ப் பார்த்துக் கொண்டிருந்தான்.

"மேரேஜ் ஆகி எவ்வளவு நாளாச்சு?"

"ஒரு மூணு வருஷம் இருக்கும் ஸார்!"

"எத்தனை குழந்தைங்க?"

"இ... இன்னும் இல்லை ஸார்!" – தயக்கமாய் மாதவ சொல்ல, அவளது நாடித் துடிப்பைப் பரிசோதித்து கொண்டே கேட்டார்.

"இப்ப கன்சீவ் ஆகியிருக்காங்களா?"

"இல்லை ஸார்."

"என்ன? இவ்வளவு உறுதியாச் சொல்ற மாதவா! உனக்கென்ன கணக்குத் தெரியும்? அவ முகத்தை பார்த்தாலே தெரியுதே... இது மசக்கைதான்!" – ஒரு பெண்மணி சொல்ல, மறுப்பாய்த் தலையசைத்தான் மாதவன்.

"நோ டாக்டர். அப்படியெல்லாம் எதுவும் இல்லை அவ... நார்மலாத்தான் இருக்கா!"

"மிஸ்டர் மாதவன்! பல்ஸ் ரொம்ப கம்மியா இருக்கு உடனே ஹாஸ்பிடல்ல அட்மிட் பண்ணிடுங்க..."

"டாக்டர்!"



"ரொம்ப கிரிட்டிக்கல் பொஸிஷன்ல இருக்காங்க. உடனே ட்ரிப்ஸ் ஏற்றியாகணும். கமான் க்விக்!" – மருத்துவரின் அவசரம் பயத்தை ஏற்படுத்தியது. அவஸ்தையாய் முகத்தைத் துடைத்துக் கொண்டான் மாதவன்.

"டாக்டர்... என் நீலாவுக்கு... என்னாச்சி?"

"ஏன் ஸார்? இப்ப நின்னு இப்படி உருகுறீங்களே...? வீட்ல வொய்ஃப் சாப்பிட்டாங்களா இல்லையான்னு கூட பார்க்க மாட்டீங்களா?"

"டா...க்...டர்?"

"உங்க வொய்ஃப் சாப்பிட்டு எத்தனை நாளாச்சுன்னு தெரியுமா? அவங்க உடம்பைப் பாருங்க. நீர்ச்சத்து சுத்தமாக் குறைஞ்சிப் போச்சு. இப்படியே விட்டா அவங்க உயிரையே காப்பாத்த முடியாது."

"நோ..." – வீறிட்டான் மாதவன். "நோ... என் நீலா எனக்கு வேணும். இவ என் மனைவி. இவ என்னோட லைஃப். எனக்கு என் நீலா வேணும்."

"கன்ட்ரோல் யுவர்செல்ஃப். உடனே ஹாஸ்பிடலுக்குக் கொண்டு போகணும். இங்கே யார்கிட்டயாவது கார் இருக்கா?"

"என்கிட்டயே இருக்கு டாக்டர். இதோ ஒரு நிமிஷம்!" – வேகமாய்த் தன் அறைக்குள் நுழைந்து பீரோவைத் திறந்து பணத்தை எடுத்து பாக்கெட்டுக்குள் வைத்துக் கொண்டே ஓடி வந்தான். கட்டிலில் துவண்டு கிடந்தவளை இரு கரங்களால் அள்ளிக் கொண்டே தந்தையை நோக்கினான்.

"அப்பா! நீங்க வீட்ல இருங்க. நான் போயிட்டு வர்றேன்."

"நானும் வர்றேன்ப்பா... நீ தனியா என்ன செய்வே?"

"இல்லைப்பா... குறிஞ்சி வருவா. நீங்க வீட்டில இருங்க. நான் போன் பண்றேன். வீட்டிலயே இருங்க. எங்கேயும் போயிடாதீங்க..." – என்றவாறே வாசலை நோக்கி ஓடினான். மற்றவர்களும் வெளியேற, நல்லசிவம் தனியே நின்றார். வெகுநாட்களாய் போதையிலேயே கழிந்ததில் தன் வீட்டையே புதிதாய்ப் பார்த்தார். சுவரில் மாலையோடு காட்சியளித்த மனைவியின் புகைப்படத்தைப் பார்த்தார்.

மகனின் கண்ணீரும் துடிப்பும் மனதை வாட்டியது.

'காமாட்சி! நம் மருமகளுக்கு எதுவும் ஆகிவிடக் கூடாது. என்னைப் போல் நம் மகனும் துணையை இழந்து தவிக்கக் கூடாது. மருமகளைக் காப்பாற்றித் தந்துவிடு. நம் பிள்ளைகளை வாழ வை. நம் மகனை ஏன் இப்படித் துன்புறுத்துகிறாய்? எனக்காக... என் மகளுக்காக... தன் மனைவிக்காகவென்றே வாழ்கிறானே.... அவன் வாழ்வில் எப்போது நிம்மதி வரும்? அவன் வாழ்க்கை எப்போது மணம் வீசும்?

காமாட்சி! நம்ம புள்ளையைக் கைவிட்டுடாதே... நம்ம புள்ளை கண்ணீரோடு போகிறானே... நம்ம குடும்பத்தைத் தழைக்க வையும்மா...' – மனைவியின் புகைப்படத்தின் முன் மண்டியிட்டு அழத் துவங்கினார் நல்லசிவம்.

முகம் முழுக்கக் கோபத்தோடு கேட்டவனைச் சற்று பயமாய்ப் பார்த்தாள் குறிஞ்சி.



"ஸார்?"

"எதுக்குன்னு கேட்டேன்? அவளைக் கூட்டிட்டு வந்து... என்ன பிளான் போட்டிருக்கீங்க எல்லோரும்? ம்...!"

"பிளானா... நாங்களா?"

"ஆமா! முதல்ல என் தங்கையை அனுப்பி எங்களையெல்லாம் சலனப்படுத்தியாச்சு. அடுத்து உன்னை அனுப்பி சமாதானம் பேசச் சொல்லியிருக்கான். அடுத்து யாரு உன் அப்பாவா! ஓ! அவர்தான் வீட்டில தங்க மாட்டாருன்னு சொன்னியே!

அப்போ கடைசியா உன் அண்ணனே வருவான். வந்து என்ன பாவமன்னிப்பு கேட்கப் போறானா? மன்னிப்புக் கேட்டா அவன் செய்த பாவமெல்லாம் இல்லைன்னு ஆகிடுமா?"

"வெயிட்! எங்க அண்ணன் என்ன ஸார் பாவம் பண்ணினார்? உங்ககிட்ட மன்னிப்புக் கேட்பதற்கு?"

"அப்போ! உன் அண்ணன் செய்தது புண்ணிய காரியமா?"

"தப்புதான். ஆனா என் அண்ணன் மட்டும் அந்தத் தப்பைச் செய்யலை. உங்க தங்கையும் சேர்ந்துதான் செய்திருக்காங்க."

"அவ குழந்தை. அவளை ஏமாத்தினது உன் அண்ணன். அவன் சாவி கொடுத்த மாதிரிதானே இவ ஆடினா. பொறந்ததில இருந்து ஒரு நாள் கூட எங்களை எதிர்த்துப் பேசாதவ... என்னிக்கு உன் அண்ணனோட பழகினாளோ அப்ப இருந்தே தலைகீழா மாறிட்டா...

அவன் சொன்னதை அப்படியே நம்பினா. நம்ப வைச்சான். உன் அண்ணன் கிரிமினல். எவ்வளவு சாமர்த்தியமா அவன் பெயரைக் கூடச் சொல்ல விடாம வெச்சிருந்தான் தெரியுமா?

பொண்ணு கேட்டு வர்றேன்னு சொன்னவன் ஏன்டி வரலை? ஏன் இப்படி விடிந்தும் விடியாம இருந்த நேரத்தில திருட்டுத்தனமா கூட்டிட்டுப் போனான்?"

"ஸார்! நீங்க சொல்ற எதுவும் எனக்குத் தெரியாது. என் அண்ணன் கண்ட பொண்ணுங்களோட பேசியோ சிரிச்சோ நான் பார்த்தது இல்லை. அதோட கண்டபடி ஊர் சுத்த என் அண்ணனுக்கு நேரமும் கிடையாது."

"இதை நாங்க நம்பணும்? எத்தனை நாள் லேட் நைட்ல வந்து டிராப் பண்ணியிருக்கான் தெரியுமா?"

"நீங்க அப்பவே பிடிச்சி வைச்சு விசாரிச்சிருக் கலாமே...?"

"எங்கே? இந்த வீடு வரைக்கும் வர்றதுக்கு அவனுக்குத் தைரியம் இருக்குமா? தெருவில இறக்கிட்டுப் போயிடுவான்..."

"யுவா! இப்ப எதுக்கு மத்த பேச்செல்லாம்? நீ உள்ளே வா. தெருவில நின்னு ஏன் அசிங்கப்படணும்... வா."

"ஸார்... ஒரு நிமிஷம்."

"லுக்! நீ பொண்ணுங்கிறதால நாங்க ரொம்ப நிதானமா பேசிட்டு இருக்கோம். இப்படித் தெருவில நின்னு பேசுறது எங்களுக்குப் பிடிக்காது. கிளம்பு!"



"அப்போ வீட்டுக்குள்ள போய்ப் பேசுவோம். நான் உங்க அம்மாவைப் பார்க்கணும்!"

"எதுக்கு?"

"உங்ககிட்ட இல்லாத ஈரம் உங்க அம்மாகிட்ட இருக்குமே!"

"இருக்கு. நிறைய இருக்கு. அதான் நாலு நாளா படுக்கையில கிடந்தாங்க. இப்பத்தான் கஷ்டப்பட்டு எழ வைச்சிருக்கோம். நீ அவங்களை ஒரேயடியா படுக்க வைச்சிடலாம்னு பார்க்கிறியா?"

"ஸார்!"

"வாயை மூடிட்டுப் போடி. பெரிசா பேச வந்திட்டா..."

"யுவா! நீ போ உள்ளே... இதோ பாரும்மா! நீ யாரோ எவரோ? உனக்கும் எங்களுக்கும் எதற்கு வாக்குவாதம்? தெருவில உள்ளவங்க எங்களைத்தான் தப்பா நினைப் பாங்க... நீ கிளம்பு!"

"அப்போ கடைசி வரைக்கும் உங்க தங்கையை நீங்க மன்னிக்கவே மாட்டீங்களா?"

"தங்கையே இல்லைன்னு ஆகிப் போச்சு. அப்புறம் மன்னிப்பு என்ன மன்னிப்பு? உன் அண்ணன் கிட்ட போய்ச் சொல்லு... இனி இந்த மாதிரி டிராமா போட்டுட்டு வந்து நின்றால் போலீஸுக்குப் போக வேண்டியிருக்கும். ஏன்? அவ கொண்டு வந்த பணம், நகையெல்லாம் போதாதா? பெட்டி நிறையக் கொண்டு வந்தாளே...!

எல்லாத்தையும் வித்துத் தின்னாச்சா? இங்க இருந்து இன்னும் சுரண்டலாம்ன்னு நினைச்சீங்களோ?

குடும்பத்தோட உள்ளே தள்ள வேண்டியதிருக்கும். ஜாக்கிரதை!" - ஒற்றை விரலை நீட்டி கார்த்திக் எச்சரிக்க பேச்சற்றுப் போனாள் குறிஞ்சி.

பணம்? நகையா? அப்படி ஒன்றும் கொண்டு வரவில்லையே... காதில், கழுத்தில் எதுவுமில்லாமல் தானே வந்தாள். அண்ணன் கட்டிய மஞ்சள்கயிறும் கட்டிய சேலையோடும்தானே வந்தாள்! இப்போது அவள் காதில், கழுத்தில் கிடப்பது தன் அண்ணனின் சொந்தச் சம்பாத்தியத்தில் வாங்கியதாயிற்றே!

அப்படியென்றால் அண்ணி கொண்டு வந்ததாய் இவர்கள் சொல்லும் நகை எங்கே போனது?

கோபமாய் நிமிர்ந்தாள்.

## 13

காரணம் இல்லாமல் கண்ணீர்
வந்தால் அந்த நேசம்
உண்மையானது அல்ல உயிரானது!

தம்பியின் தோளைப் பற்றிக் கொண்டு வீட்டிற்குள் நுழைய முயன்றவனை அழுத்தமாய் அழைத்தாள் குறிஞ்சி.

"எக்ஸ்கியூஸ் மீ! ஒன் மினிட்."

கோபமாய் இருவரும் திரும்பினர். "என்ன?"

"என்ன சொன்னீங்க? உங்க தங்கை பெட்டி நிறைய பணத்தோட வந்தாங்களா?"

"பணம் மட்டுமில்ல... நூறு சவரன் நகை. அவளோட கல்யாணத்துக்காக நாங்க் சேர்த்து வெச்சது. அப்புறம் அவ



எப்பவுமே போட்டிருக்கும் நகை ஒரு இருபது சவரன் இருக்கும். எல்லாத்தையும் மொத்தமா எடுத்திட்டுப் போயிட்டா..."

"பொய். சுத்தப் பொய்!"

"வாட்? எது பொய் என்கிறாய்?" - சீறிக்கொண்டு முன்னே வந்தான் யுவராஜன்.

"நீங்கள் சொன்ன எல்லாமே பொய். ஏன்னா என் அண்ணன் அண்ணியோட எங்க வீட்டுக்கு வந்தப்போ அண்ணி காதில, கழுத்தில பொட்டுத் தங்கம் கிடையாது. வெறும் மஞ்சள் கயிறு மட்டும்தான் இருந்தது. மாத்துத் துணிகூட இல்லாம வெறும் கையோடதான் வந்தாங்க."

"என்ன சொன்னே?" - அடிக்கப் பாய்ந்தவனைப் பிடித்துக் கொண்டான் கார்த்திக். அதற்குள் வீட்டுக்குள் இருந்து மற்றவர்கள் வெளியே வர அக்கம்பக்கம் வீடுகளில் தலை தெரிய ஆரம்பித்தது.

பட்டுப் புடவையில் தலை நிறைய மல்லிகைப் பூவோடு வெளியே வந்த சுஜாதா தன் தோழியைக் கண்டதும் மலர்ந்து... பின் தயக்கமாய் தன் குடும்பத்தினரைப் பார்த்தாள்.

அனைவரின் முகமும் கடுப்புடன் இருக்க, பேசுவதா வேண்டாமா... எனத் தயங்கி நின்றபோது தாட்சாயிணி குரல் கொடுத்தாள்.

"சுஜா!"

"அத்தே?"

"உன் தோழியை வீட்டுக்குள்ள கூட்டிட்டுப் போ."

"அம்மா! என்னம்மா நீங்க..." - எனத் தொடங்கிய மகனைப் பார்வையால் அடக்கினாள்.

"என்னடா இது புதுப் பழக்கம்? வீடு தேடி வந்தவங்களை வாசல்ல நின்னு தகராறு பண்றது! எதுவா இருந்தாலும் உள்ளே வந்து பேசுங்க."

"அம்மா! உங்களுக்கு இவ யாருன்னு தெரியலை. தெரிஞ்சா..."

"தெரியும் யுவா. இப்பத்தான் சொன்னேன்..." - என்ற தந்தையைப் பார்த்தான்.

"ஏம்ப்பா சொன்னீங்க?"

"இதுல என்னப்பா இருக்கு! அம்மாவுக்குத் தெரியாம என்ன ரகசியம் வேண்டியிருக்கு? வாங்க உள்ளே போகலாம்..." - என்றவாறு அவர் முன்னே நடக்க, சுஜா தோழியைத் தயக்கமாய் அழைத்துச் சென்றாள்.

உள்ளே எழுந்த நடுக்கத்தோடு குறிஞ்சி வீட்டிற்குள் நுழைய... கண்களில் கோபக் கனலோடு அவளை வெறித்துக் கொண்டு நின்றனர் சகோதரர்கள். தாட்சாயிணி மகன்களைக் கனிவோடு பார்த்தாள்.

"நீங்களும் வாங்கப்பா!"

"அம்மா! இப்ப எதுக்கு அவளை உள்ளே கூப்பிட்டீங்க? தெருவோட அனுப்பி வைக்க வேண்டியவளை உள்ளே கூப்பிட்டு விருந்து வைக்கப் போறீங்களா?" - கடுகடுப்பாய்க் கேட்டான் கார்த்திக்.

"இல்லப்பா... நம்ம குடும்ப விஷயத்தை நாலு சுவத்துக்குள்ள வெச்சுப் பேசலாமே? தெருவில நின்னு பேச வேண்டிய காரியமா இது?"



"அதுக்கில்லம்மா... அவ...!"

"யுவா! இந்தப் பொண்ணு பார்க்க வந்தது உன் அண்ணியை..."

"இல்லம்மா. அதைச் சாக்கா வைச்சிட்டுச் சமாதானம் பேச வந்திருக்கா. அவன்தான் அனுப்பியிருப்பான். பொண்ணை அனுப்பி சமாதானம் பேச விட்டிருக்கானே... இதிலேயே அவன் யோக்கியதை தெரியலை!"

"கார்த்திக்! இப்படியெல்லாம் சட்டுன்னு ஒருத்தரைப் பத்திப் பேசக்கூடாது."

"அம்மா!"

"இதோ பாருங்கப்பா. நீங்க ரெண்டு பேருமே ஒரு விஷயத்தை மறந்திட்டீங்க. உன் தங்கையும் இவ அண்ணனும் ஒருவரையொருவர் விரும்பினாங்க. நம்மை மீறிக் கல்யாணமும் பண்ணிக்கிட்டாங்க. இதுல இந்தப் பொண்ணு மேல என்ன தப்பு இருக்கு? ஏன் இவமேல கோபப்படுறீங்க?"

"ஏம்மா.... ஒரே வீட்டில வாழுறாங்க. இவளுக்குத் தெரியாம இருக்குமா! தெரியவே தெரியாதுன்னு சாதிக்கிறாம்மா..."

"யுவா! நாமளும் ஒரே வீட்டிலதான் வாழ்ந்தோம். உன் தங்கை யாரை விரும்பினான்னு நமக்குத் தெரிஞ்சதா?" - தாட்சாயிணி நிதானமாய்க் கேட்க, இருவரும் அதிர்ந்து நிமிர்ந்தனர்.

"இவ்வளவு நேரம் அந்தப் பொண்ணுகிட்ட சண்டை போட்டிருக்கீங்களே! அந்தப் பொண்ணு உங்ககிட்ட சண்டைக்கு வந்தாளா?"

"எதுக்கு?"

"எதுக்கா? உங்க தங்கை எப்படி எங்க அண்ணனை மயக்கலாம்? எப்படித் திருட்டுக் கல்யாணம் பண்ணிக் கலாம்னு கேட்டாளா?"

"இ... இல்லை."

"அப்புறம் எப்படிடா அந்தச் சின்னப் பொண்ணுக்கிட்ட ரெண்டு பேரும் மல்லுக்கு நின்னீங்க?" - பெற்றவர்கள் கேட்க, இருவரும் பற்களைக் கடித்துக் கொண்டு மௌனமாய் நின்றனர்.

"வர வர... உங்க ரெண்டு பேருக்கும் ரொம்பக் கோபம் வருது. ஆத்திரம் நம்ம கண்ணை மறைக்கக் கூடாதுப்பா. எதையுமே நிதானமாக் கையாளணும்."

"ஸாரிம்மா!"

"மொதல்ல உள்ளே வாங்க. அந்தப் பொண்ணு எதுக்காக வந்திருக்கான்னு கேட்போம்..." - என்றவாறு மகன்களை அழைத்துக் கொண்டு உள்ளே சென்றாள்.

"வேற எதுக்கு வந்திருப்பா? பழையபடி சொந்தம் கொண்டாட அனுப்பியிருப்பான்."

"கார்த்திக் பேசாம வா... அவகிட்ட நானும் அப்பாவும் பேசிப்போம். நீங்க ரெண்டு பேரும் வாயைத் திறக்கக் கூடாது!" - என்றவாறே போர்டிகோவைக் கடந்து வீட்டின் படிக்கட்டில் ஏறிய தாயைக் கைபற்றி நிறுத்தினான் யுவராஜன்.

"அம்மா!"

"என்னடா?"



"உங்களுக்கு கோபமோ வருத்தமோ வரலையாம்மா?"

"ஏன்? எதுக்குக் கோபப்படணும்?"

"நீலா நம்மை விட்டுட்டுப் போனப்ப எங்களை யெல்லாம் விட நீங்கதாம்மா ரொம்ப நொறுங்கிப் போயிட் டீங்க. இப்ப இவ ஏன் வந்திருக்கான்னு உங்களுக்குக் கோபம் வரலையா?"

"இல்லைப்பா... எத்தனை அழுதாலும் துடிச்சாலும் நடந்தது எதையும் நம்மால மாத்த முடியாது. ஆனா இப்ப எம்பொண்ணு ஒரு இடத்தில நல்லபடியா வாழுறான்னு தெரிஞ்ச பிறகு அதை நினைச்சு நம்மை நாமே சமாதானப்படுத்திக்கணுமே தவிர கோபப்படக்கூடாது.

உன் தங்கை போனது பெரிய வருத்தம்தான்; அவமானம்தான். ஆனா அவ யாரையோ நம்பி ஏமாந் திடக்கூடாது... வாழ்க்கையைத் தொலைச்சிடக் கூடாதுன்னு தானே நாம அழுதோம்.

இப்ப அப்படி எதுவும் நடந்திடலையே... புருஷனோட நல்லபடியா வாழுறா. அந்தப் பையன்கூட ரொம்ப நல்ல பையனாத்தான் தெரிஞ்சான். எவ்வளவு சுறுசுறுப்பா பொறுப்பா வேலை செய்தான். நாம சாப்பிடச் சொன்னப்போ கூடச் சாப்பிடலையே... வொய்ஃப் காத்திட்டு இருப்பான்னு வீட்லதான் போய்ச் சாப்பிட்டு வந்தான்.

இவ்வளவு அன்பும் அக்கறையும் இருக்கிறவன் நம்ம பொண்ணை சந்தோஷமாத்தான் வைச்சிருப்பான். தம் பொண்ணு நல்ல புருஷனோட நல்லபடியா வாழ்ந்தா அதைவிட வேறு என்ன வேணும் ஒரு தாய்க்கு?" - என்ற போது அவளுடைய முகமும் குரலும் நெகிழ்ந்திருந்தது.

"யாரு? அவனா நல்லவன்! அப்படி நல்லவனா இருந்திருந்தா கல்யாண அலங்காரத்துக்கு வீட்டுக்கு வந்தானே... அப்பவே சொல்லியிருக்கலாமில்ல நான் யாருன்னு?"

"சொல்லியிருந்தா சும்மா விட்டிருப்பீங்களா? ஏன்டா சம்பந்தமே இல்லாத இந்தப் பொண்ணையே ரெண்டு பேரும் சேர்ந்து வாட்டி எடுத்திருக்கீங்க? கூடப் பொறந்த தங்கையைக் கல்யாண வீட்டில அத்தனைக் கூட்டத்தில அழவைச்சு விரட்டியிருக்கீங்க? அந்தப் பையனைச் சும்மா விட்டிருப்பீங்களா?

அதான் கல்யாண வீட்டில ஏன் ரகளை பண்ணனும்னு நினைச்சிக்கூட எதுவும் சொல்லாம அமைதியா இருந் திருப்பான். பழைய விஷயங்களை உறவுக்காரங்க முன்னாடி ஏன் கிளறணும்னு மௌனமா இருந்திருக்கலாம்."

"அவ்வளவு உத்தமன் ஏன் கல்யாணத்துக்கு நீலாவை அனுப்பணும்? நம்ம மானத்தை வாங்கணும்?"

"யுவா! தன்னோட அண்ணன் கல்யாணத்தைப் பார்த்தே ஆகணும்னு உன் தங்கை அடம் பிடிச்சிருப்பா. அவ பிடிவாதம் நமக்குத் தெரியாதா? அதனால கூட்டிட்டு வந்திருப்பார். அவளா வந்து உங்ககிட்ட பிரச்சனை பண்ணலையே?

கூட்டத்தோடு கூட்டமா இருந்து அண்ணன் கல்யாணத்தைப் பார்த்திட்டுப் போக வந்த பெண்ணை என் கண்ணில கூட காட்டாம அனுப்பிட்டீங்களேடா... அவளை ஒரு முறையாவது பார்த்திட மாட்டோமான்னு எவ்வளவு ஏங்கிப் போயிருக்கேன். இது என்ன ...



நான் நோயாளிதான் ஆனா எம் பொண்ணைப் பார்த்தா அந்த நிமிஷமே என் நோய் போயிடாதா? உங்களை மாதிரியே உங்க அப்பாவுக்குப் புத்தி கெட்டுப் போச்சு. அதான் எம்புள்ளையை ஊர் முன்னால அழ வைச்சிருக்கீங்க.

பாவம் குழந்தை! எல்லாரையும் பார்க்கணும்னு எவ்வளவு ஆசையோட வந்தாளோ? அவ மனசை நோகடிச்சி அனுப்பிட்டீங்களே... எத்தனை நாள் அழுதாளோ? எப்படி இருக்காளோ?" - தாயின் கண்கள் கசிந்ததும் சற்று முன் குறிஞ்சி சொன்னது நினைவுக்கு வந்தது.

'உங்ககிட்ட இல்லாத ஈரம் உங்க அம்மாகிட்ட இருக்குமே...'

உண்மை. சத்தியமான உண்மை. இந்த ஈரம் ஏன் எனக்கில்லாமல் போனது? அருமை பெருமையாய் வளர்த்தவளை நேரில் கண்டதும் உள்ளம் துடித்தது உண்மை. ஆனால் அன்பு வெளிப்படவில்லையே!

மாறாக... தங்களை உதறிவிட்டுப் போனவள் என்ற ஆத்திரமும் கசப்பும்தானே வந்தது.

ஆனால் இந்த அம்மா மகள் செய்த பிழைகள் அனைத்தையும் மறந்துவிட்டு அவளைப் பார்க்க முடிய வில்லையே எனக் கண்ணீர் வடிக்கிறாள். இதுதான் பெற்றவளுக்கும் மற்றவர்களுக்கும் உள்ள வித்தியாசமா! ஆயிரம் பேர் வந்தாலும் அன்னைக்கு சமமாகுமா?

தாய் ஒரு அற்புதப் படைப்பு. அவளுக்கு நிகர் யாருமே இல்லை. பொறுமையிலும் கனிவிலும் அன்பிலும்

அடைக்கலம் தருவதிலும் அவளுக்கு நிகர் ஒருவருமில்லை. வயிற்றில் இருக்கும்போதே குழந்தை எட்டி உதைக்கக் கற்றுக் கொள்கிறது. வளர்ந்த பிறகும் எட்டி உதைக்கிறது.

ஆனால் தாய் அந்த உதைப்பைச் சுகமாய் வாங்கிக் கொள்கிறாள். பொறுமையாய் ஏற்றுக் கொள்கிறாள். இவள்தான் தாய். அன்று எட்டி உதைத்து விட்டுப் போன பிள்ளையை எண்ணி ஏங்குகிறாள். மருகுகிறாள். இதுதான் பெத்த மனம் பித்து என்பதா?

பிள்ளைகளாகிய எங்கள் மனம் கல்லாய்த்தானே போனது. தங்கையை எண்ணி அம்மா துடித்தது தெரிந்தும்... தங்கை கெஞ்சியபோதும் இருவரையும் சந்திக்க விடாமல் விரட்டினேனே... இந்த மனம் கல்தானோ?

இந்தப் பிரச்சனையில் சிறிதும் சம்பந்தப்படாத குறிஞ்சியை எத்தனை இழிவாய்ப் பேசி அவள் குடும்பத்தை அவமதித்து அவளைக் கைநீட்டி அடித்து... ச்சே! ஆத்திரம் என் கண்ணை மறைத்துவிட்டதா? இது எவ்வளவு பெரிய தப்பு! தனக்குள் குமைந்தான் யுவராஜன்.

கண்களை ஒற்றிக் கொண்டே தாட்சாயிணி வீட்டிற்குள் நுழைய... கார்த்திக் மெதுவாய்த் தம்பியின் கரத்தைத் தொட்டான். "யுவா! நாம... தப்பு பண்ணிட்டோமோ?"

"எனக்கும் அப்படித்தான் தோணுதுண்ணா!"

"பாவம் நீலு! எவ்வளவு ஆசையா வந்திருந்தா... அவளைப் போய் அழ வைச்சிட்டோமே... ரொம்ப அழுதா இல்ல..."



"நான்தான்ணா... அவளை அழவைச்சேன். ம்ப்ச்! ரொம்பக் கெஞ்சினா. அம்மாவை ஒரே ஒரு வாட்டி பார்த்திட்டு போறேன்னு... நான்தான் விடலை!" - எனும்போது கண்கள் கலங்கின.

"அவ என் கல்யாணத்திற்கு வரணும். எனக்கு அட்சதை போடணும்னு ஆசைப்பட்டேன் யுவா! அது நடந்தது. ஆனா அவகிட்ட ஒரு வார்த்தை அன்பாப் பேச முடியலையே... இப்ப நினைச்சா வருத்தமா இருக்கு... ஆனா அப்போ கோபம்தான் வந்தது."

"அவளைப் பார்த்ததும் அவ நம்மையெல்லாம் தவிக்க விட்டுட்டுப் போனதுதான் நினைப்பு வந்திச்சி. அந்தக் காயம் நம்ம மனசில இன்னும் அப்படியேதானே இருக்கு. அந்த வேதனையைப் பேசிட்டேனே தவிர... அதை நினைச்சுத் தினமும் தவிக்கத்தான் செய்யறேன்.

அவ மட்டும் அப்படிச் செய்யலாமா? நாமதான் பெண் பார்க்க வரட்டும்னு அனுமதி கொடுத்தோமே... பிறகேன் நம்மை விட்டுட்டுப் போனா? நாம எவ்வளவு அவமானப்பட்டு வேதனைப்பட்டு நொந்து போனோம். அதையெல்லாம் யோசித்தாளா அவ?"

"அவளாப் போயிருக்க மாட்டா... யுவா! அவன்தான் கூப்பிட்டிருப்பான்."

"அவன் கூப்பிட்டா இவ போயிடலாமா? நம்மைப் பத்தி நம்ம குடும்பத்தைப் பத்தி யோசிக்க வேண்டாம்!"

"விடுடா தம்பி. பாவம் சின்னப் பொண்ணுதானே! விபரம் பத்தாது. அம்மா சொல்றதைப் பார்த்தா நம்மளோட

கோபம் எல்லாமே அபத்தமாப் படுது. இந்தக் கோபத்தா நம்ம குழந்தையோட மனசைக் காயப்படுத்திட்டோமே!"

"அண்ணா! அம்மாவுக்கு நம்ம நீலுவை பார்க்கணும்னு ரொம்ப ஆசை. பாவம்... நமக்குப் பயந் ஆசையை அடக்கிக்கிட்டு மனசுக்குள்ளேயே அழுதிட் இருக்காங்க..."

"ஆமா யுவா! அம்மாவோட கண்ணீரை நா துடைக்கணும். அதோட நம்ம நீலுவோட கண்ணீரையு நாம துடைச்சாகணும்..."

"அதுக்கு... முதல்ல நீலுவை நேர்ல சந்திக்கணு அதுக்கு முன்னால நம்ம கோபத்தையெல்லா குறைக்கணும்."

"கண்டிப்பா... மொதல்ல உள்ளே வா. என் நடக்குதுன்னு பார்ப்போம்..." - இருவரும் உள்ளே நுழைந் போது, குறிஞ்சியிடம் கைலாசம் கண்டிப்பான குரலி சொல்லிக் கொண்டிருந்தார்.

"இதோ பாரம்மா... நீ என் மருமகளின் தோழி என்பதற்காக மட்டும்தான் என் மனைவியின் வார்த்தைக்கா உன்னை உள்ளே அனுமதித்தேன். மத்தபடி நீ வேறு எந்த காரணத்திற்காக வந்தாலும் அது நடக்காது."

"ஸார்! நான் எந்த உள்நோக்கத்திற்காகவும் இங் வரவில்லை. உங்கள் பிள்ளை சொல்லும் வரை... இ எங்கள் அண்ணியின் பிறந்த வீடு என்று தெரியாது."

"இது யாருடைய பிறந்த வீடும் இல்லை. என் மகன்களின் வீடு."



"ஸார்! உங்க கோபம் புரியுது. அதுக்காக பெத்தப் பொண்ணு இல்லைன்னு ஆயிடுமா? உறவு விட்டுப் போயிடுமா?"

"அதெல்லாம் விட்டுப் போய் மூணு வருஷமாச்சு. நீ கிளம்பும்மா. நாங்க கோவிலுக்குப் போகணும்னு புறப்பட்டோம். உன்னால லேட்டாகிப் போச்சு."

"நான் கிளம்புறேன் ஸார். ஆனா கொஞ்சம் பொறுமையா நேரம் கிடைக்கும்போது யோசிச்சுப் பாருங்க ஸார்... அண்ணி எப்பவும் அழுதிட்டே இருக்காங்க. அதைப் பார்க்க முடியாமத்தான் நான் இவ்வளவு கெஞ்சறேன்..."

"அது அவளா தேர்ந்தெடுத்த வாழ்க்கை. அழறதும் சிரிக்கிறதும் அவ பாடு. நாங்கள் ஒண்ணும் செய்ய முடியாது."

"என்னங்க இப்படிச் சொல்றீங்க? இத்தனை நாளா பொண்ணு எங்கே இருக்கான்னு தெரியாம தவிச்சோம். இப்போ இருக்கிற இடம் தெரிஞ்சுப் போச்சே... ஒரே ஒரு தரம் பார்த்திட்டு வந்திடலாங்க..." - என்ற மனைவியைக் கோபமாய்ப் பார்த்தார்.

"என்ன தாட்சா! நடந்தது எல்லாம் மறந்து போச்சா... மறந்திட்டியா?"

"மறக்கலைங்க... ஆனா நம்ம புள்ளைதானேங்க.. தப்பு செய்தா மன்னிக்கிறதுதானே பெத்தவங்க இயல்பு."

"அவ தப்பு செய்யலைடி. துரோகம் செய்திருக்கா. அதுவும் நம்பிக்கைத் துரோகம். அவளை எவ்வளவு நம்பினேன். அவ ஆசைக்குத் தடை சொன்னேனா? எவனா இருந்தாலும் சரின்னு சம்மதிச்சேனில்ல... பெண் கேட்டு வரச் சொல்லுன்னு சொன்னேனில்ல..."

"சொ... சொன்னீங்க."

"பிறகேன் போனாள்? அந்தத் துணிவு அவளுக்கு எப்படி வந்தது? இவ... இவ அண்ணன் கொடுத்த துணிவு தானே!"

"என்னங்க..."

"என்னை நினைச்சிப் பார்க்க வேண்டாம். தோள்ல தூக்கி வளர்த்த எம் புள்ளைங்களை நினைச்சிப் பார்க்க வேண்டாம். பெத்தவ உன்னை நினைச்சிப் பார்த்தாளா? சொல்லு... பார்த்தாளா?"

"என்னங்க... அவ... குழந்தைங்க..."

"ம்... நானும் நம்ம புள்ளைங்களும் அப்படித்தான் நினைச்சிருந்தோம். ஆனா அதெல்லாம் எவ்வளவு பெரிய தப்புன்னு நமக்கு உணர வைச்சிட்டுப் போயிட்டாளே... எத்தனை துடிச்சிருப்போம்! எவ்வளவு நாள் அழுதிருப்போம்! எத்தனை நாள் சாப்பிடாம பட்டினி கிடந்திருப்போம்...

நீ எத்தனை நாள் நோயாளியா படுக்கையில கிடந்தே? இதே ஊர்லதானே இருந்திருக்கா... வந்தாளா? ஒரு முறையாவது வந்து பார்த்தாளா? ஏன் வரலை? அவன் மேல இருந்த மயக்கம்... அது தெளிய உம் பொண்ணுக்கு இவ்வளவு நாளாகியிருக்கு."

"அப்பா!" - கார்த்திக் தயக்கமாய் அழைத்தான்.

"இப்பக்கூட உன் மேல உள்ள பாசத்தாலயோ அண்ணன் கல்யாணத்தைப் பார்க்கணும்ங்கிற ஆசை யாலயோ அவ வரலை. இங்கிருந்து கொண்டு போன பணமெல்லாம் தீர்ந்திருக்கும். அந்தப் பிச்சைக்காரப் பய வீட்டில சாப்பாடு கிடைச்சிருக்காது. அதான் வந்திருப்பாள்."



"ஸார்! கொஞ்சம் மரியாதையாப் பேசுங்க. கட்டின வளுக்கு சாப்பாடு போடக்கூட வழியில்லாதவன் இல்ல... என் அண்ணன்!"

"நான் என் மனைவிகிட்ட பேசிட்டு இருக்கேன்."

"ஆனா பேசுறது என் அண்ணனைப் பத்தி!"

"பார்த்தியா! இவளே இப்படிப் பேசுறா? அப்ப இவ அண்ணன் எப்படிப்பட்டவனா இருப்பான்?"

"என் அண்ணனைப் பத்தி என்ன ஸார் தெரியும் உங்களுக்கு? கட்டின புடவையோட வந்த உங்க மகளுக்கு இதுவரை ஒரு குறை வைச்சதில்ல என் அண்ணன். அதட்டி ஒரு வார்த்தை பேசியதில்லை. அவனோட சுய சம்பாத்தியத்தால அவன் பொண்டாட்டிக்கு நகை செய்து போட்டிருக்கானே தவிர... உங்க பொண்ணு வரும்போது பொட்டுத் தங்கம்கூட கொண்டு வரலை.

ஏன் மாத்துத் துணி கூட எடுத்திட்டு வரல்ல... என் அம்மா புடவையைத்தான் கொடுத்தோம். என்னவோ பணம் பணம்கிறீங்களே! உங்க பொண்ணு ஒண்ணும் எங்க வீட்டுக்கு எதையும் அள்ளிட்டு வரலை. வீசின கையோட வெறும் கையோடத்தான் வந்தாங்க..." - குறிஞ்சி கோபத்தில் படபடக்க, யுவராஜனின் இளகிய மனம் மீண்டும் இறுகியது.

"ஏய்! யார்கிட்ட கதை விடுற? என் தங்கை ஒண்ணும் ஒன்றுமில்லாத வீட்டில் பொறக்கலை. மாத்துத் துணி கொண்டு வராததை நீ பார்த்தியா?"

"பார்த்தேன். என் கண்ணு முன்னாலதான் என் அண்ணன் மாலையும் கழுத்துமா வந்து நின்னான். உங்க

தங்கை காதுல ஒரு பிளாஸ்டிக் கம்மல் கூட இல்லை. ஏதோ பஞ்சத்தில அடிபட்ட அகதி மாதிரிதான் வந்து நின்னாங்க."

"வீட்டுக்குக் கொண்டு வந்தா உனக்கு பங்கு கொடுக்கணும்னு நினைச்சி உன் அண்ணன் எங்கேயாவது மறைச்சி வைச்சிருப்பான். உன் அண்ணன் கிட்ட போய்க் கேட்டுப் பாரும்மா..." - கைலாசம் எகத்தாளமாய்ச் சொல்ல, முகம் சிவந்து போனாள்.

"உங்க பொண்ணு நகையில எனக்கு ஏன் ஸார் பங்கு தரணும்?"

"என்னம்மா நீ! கூட்டுச் சேர்ந்துதானே திட்டம் போட்டிருப்பீங்க... அப்போ உனக்கும் பங்கு கொடுக்கணு மில்ல?"

"திட்டமா... என்ன திட்டம்?"

"பணக்கார வீட்டுப் பெண்ணை எப்படி மடக்குறது? எப்படி மயக்குறதுன்னு திட்டம் போட்டிருப்பீங்களே! ஏன்னா உன் அண்ணனைப் பார்த்தா அத்தனை திறமைசாலி மாதிரி தெரியலை. உன் பங்குதான் அதிகமாக இருக்கும்னு நினைக்கிறேன்!" - கைலாசத்தின் வார்த்தையில் குன்றிப் போனாள்.

யுவராஜனும் கார்த்திக்கும் கூட மிரண்டனர். அப்பாவிற்கு இப்படியெல்லாம் கூடப் பேசத் தெரியுமா? யுவராஜன் அவசரமாய் குரல் கொடுத்தான்.

"அப்பா! வீண்பேச்சு எதற்கு? அண்ணி! உங்க ஃபிரெண்ட்டை வெளியே போகச் சொல்லுங்க..."

"அவ போக மாட்டாள் யுவா! அவ ஏன் வந்திருக்கான்னு நான் சொல்லட்டுமா?"



கேட்க, மற்றவர்கள் குழப்பமாய் பார்க்க... குறிஞ்சி நிமிர்ந்து நின்றாள்.

"சொல்லுங்க ஸார்!"

"நீ உன் அண்ணிக்காக இங்கு வரவில்லையம்மா... என் பிள்ளைக்காக... என் இளைய மகனுக்காக வந்திருக்கிறாய்!" - அவர் அழுத்தம் திருத்தமாய்ச் சொல்ல, அனைவரும் அதிர்ந்தனர்.

குறிஞ்சி அசராமல் கேட்டாள். "என்ன... என்ன சொன்னீங்க?"

"உனக்கும் உன் அண்ணனுக்கும் இதுதானே வேலை!"

"எந்த வேலை?"

"எந்தப் பெரிய வீட்டில் பிள்ளைகள் இருக்கிறது? எப்படி வளைத்துப் போடலாம் என்று திட்டம் தீட்டுவது? அதற்காகத்தானே பூ அலங்காரம் செய்கிறேன்... என்று ஒவ்வொரு வீட்டிற்குள்ளும் நுழைகிறீர்கள்!" - எனவும் கொதித்துப் போனாள்.

"ஸார்! கொஞ்சம் வயசுக்குத் தகுந்த மாதிரி பேசுங்க. நீங்க சொல்ற மாதிரி நாங்க இருந்திருந்தா இருபத்தி நாலு வயசு வரைக்கும் கல்யாணமாகாம இருந்திருக்க மாட்டேன். எப்பவோ எவனையோ கல்யாணம் பண்ணிட்டுச் செட்டிலாயிருப்பேன்.

நாங்கள்லாம் உழைச்சுச் சாப்பிடுற ஜாதி. உட்கார்ந்து சாப்பிடுற உங்களை மாதிரி ஆட்களுக்குத்தான் இந்த மாதிரி கேவலமான எண்ணமெல்லாம் வரும். எங்களுக்கு வராது."

"குறிஞ்சி!" - யுவராஜன் அதட்டினான்.

"என்னய்யா! கோபம் வருதோ? உங்க அப்பாவை எதிர்த்துப் பேசியதும் கோபம் வருதோ! இவ்வளவு நேரம் இவர் பேசினதெல்லாம் உங்க காதில விழலையா? அடுத்தவன் பொண்ணுன்னா என்ன வேணா பேசுவீங்களா? நீங்க பேசுறதெல்லாம் கேட்டுட்டு சும்மா போக நான் ஒண்ணும் உங்க வீட்டு அடிமையில்லை.

இத்தனை நாளா உங்களையெல்லாம் பார்க்க முடியாம உங்க நினைப்புலதான் எங்க அண்ணி அழறாங்கன்னு நான் தப்பா நினைச்சிட்டேன். இப்பத்தான் புரியுது. இந்த வீட்டில இருந்து வெளியே வந்த சந்தோஷத்திலதான் அழுதிருக்காங்க... வீடா இது?"

"ஹேய்! மைண்ட் யுவர் வேர்ட்ஸ்."

"அப்பனுக்குத் தப்பாம பொறந்த புள்ள நீதான். நீ தெருவில வைச்சு அடிச்சி அவமானப்படுத்தின! உன் அப்பா வீட்டுக்குள்ள கூப்பிட்டு வைச்சு பேசிக் கேவலப்படுத்துறாரு... உங்க ரெண்டு பேருக்கும் பெரிசா ஒண்ணும் வித்தியாசமில்ல!" - வெறித்த பார்வையோடு குறிஞ்சி சொல்ல, தாட்சாயிணியும் சுஜாதாவும் துல்லியமாய் அதிர்ந்தனர்.

## 14

*சத்தமின்றி அழும் உயிர் எது*
*தெரியுமா? நேசிக்கும் இதயம்!*
*நீ நேசிப்பது உண்மையானால்*
*மட்டுமே உனக்கு அது புரியும்!*



தாட்சாயிணி நம்ப முடியாத பார்வையோடு மகனை நெருங்கினாள். அன்னையின் பார்வையைச் சந்திக்க இயலாமல் தடுமாறினான் யுவராஜன். மகனின் முகத்தைப் பற்றி நிமிர்த்தியவாறே கேட்டாள்.

"யுவா! இந்தப் பொண்ணு சொல்றது உண்மையா?"

"அ... அம்மா... அது!"

"நீ அவளை அடிச்சியா?"

"வந்து... ரொம்ப கோபப்படுகிற மாதிரி பேசினா... அதான்."

"கோபம் வந்தா அடுத்த வீட்டுப் பெண்ணை கைநீட்டி அடிப்பியா? எங்கே இருந்து கத்துக்கிட்ட இந்தப் பழக்கத்தை... முதல்ல அந்தப் பொண்ணுகிட்ட மன்னிப்புக் கேளு."

"அம்மா!"

"கேளுடா..."

"தாட்சா! உனக்கென்ன பைத்தியமா பிடிச்சிருக்கு. நம்ம புள்ள ஏன் அவகிட்ட மன்னிப்புக் கேட்கணும்?"

"கேட்கணும். தப்பு யார் செய்தாலும் மன்னிப்புக் கேட்கணும்."

"வேண்டாம்மா... யாரும் என்கிட்ட மன்னிப்பு கேட்க வேண்டாம். அதனால மட்டும் நடந்தது இல்லைன்னு ஆகிடுமா?"

"கேட்டியாடா! இந்தச் சின்னப் பொண்ணுக்கு உள்ள பொறுமையும் நிதானமும் எப்படிடா உங்களுக்கு இல்லாமப்

"அம்மா! பாதிக்கப்பட்டது நாம... நமக்குத்தான் ஆத்திரமும் கோபமும் வரும்."

"ஏன் ஸார்! எங்களுக்கு வராதா? வீட்டில வயசுக்கு வந்த பொண்ணை வைச்சிட்டுக் கொஞ்சமும் பொறுப்பில்லாம ஒரு பொண்ணைக் கூட்டிட்டு வந்தா கோபம் வராதா?"

"அதை நீ உன் அண்ணன்கிட்ட போய்க் காட்டணும்!"

"அதே மாதிரி நீங்களும் உங்க தங்கைகிட்ட மட்டும்தான் காட்டணும். அவசியமே இல்லாம என் மேலயோ என் அண்ணன் மேலயோ காட்டக்கூடாது."

"நாங்க என்ன உன் வீடு தேடி வந்து உன்கிட்ட சண்டை போட்டோமா? நீதான் எங்க வீடு தேடி வந்து எங்களைக் கோபப்பட வைக்கிற! போன்னு சொன்னாலும் கேட்காம நின்னு எங்களை வெறுப்பேத்திட்டு இருக்க... வெளியே போ!"

"யுவா! நான்தான் சொன்னேனேடா... அவ ஒண்ணும் அவ அண்ணிக்காக வக்காலத்து வாங்க வரலை! அவ அண்ணன்காரன் நம்ம வீட்டுக்கு வந்திருந்தான் இல்ல... நம்ம வீட்டை நம்ம அந்தஸ்தை... உங்களை எல்லாம் பார்த்திருப்பான். இனிமே பெண்டாட்டி மூலமா எதையும் வாங்க முடியாது.

அதனால தங்கையை இந்த வீட்டு மருமகளா அனுப்பிட்டா நாமளும் இந்த வீட்டோட ஒட்டிக்கலாம்னு நினைச்சி தங்கையைத் தூது அனுப்பியிருக்கான். அதான் கையில பொக்கேயோட கிளம்பி வந்திட்டா..."



"ஸார்! நீங்க திரும்பத் திரும்ப தப்பாவே பேசுறீங்க... நான் ஒண்ணும் நீங்க நினைக்கிற மாதிரி பொண்ணு இல்லை. உங்க புள்ளையை மயக்கிக் கைக்குள்ள போட்டுக் கணும்னு நினைச்சா இப்படி பகல் நேரத்தில நீங்க எல்லாரும் இருக்கும்போது வந்திருக்க மாட்டேன்.

போன வாரம் இருட்டுல மழையில தனியா சந்திச்சப்பவே... அந்த வேலையைச் செய்திருப்பேன். ஆனா நான் அப்படிப்பட்ட குடும்பத்தில பொறக்கலை. இப்படித் தகுதிக்கு மீறின இடத்துல வாழவும் ஆசைப்பட மாட்டேன்."

"ஏய் நிறுத்து! நீ பேசுறதைப் பார்த்தா எம் புள்ளையோட ஏற்கெனவே உனக்குப் பழக்கம் இருக்கா?"

"மன்னிக்கணும். உங்க புள்ளைதான் என்னைத் தேடி எங்க கடைக்கு வந்தாரு. நானா ஒண்ணும் தேடி வரலை!"

"யுவா! என்னடா இதெல்லாம்?"

"அப்பா! அண்ணனோட கல்யாணத்துக்கு ஃபிளவர் டெக்கரேஷனுக்கு ஆர்டர் கொடுக்கப் போனேன். அது இவ கடைதான்!"

"அவ்வளவுதானே... இவ என்ன மழை... இரவு... தனியான்றா...?"

"அது..." – யுவராஜன் சற்றுத் தடுமாற தாட்சாயிணி ஆத்திரமாய்க் குறுக்கே வந்தாள்.

"என்ன நினைச்சிட்டு இருக்கீங்க எல்லாரும்? அப்பாவும் புள்ளையும் என்ன பேசறோம்னு புரிஞ்சுதான் பேசுறீங்க[illegible]"

"இப்ப என்ன தப்பா பேசிட்டோம்?"

"எல்லாமே தப்பாத்தான் பேசுறீங்க. ஒரு வயசுப் பொண்ணை இப்படித்தான் தரக்குறைவாப் பேசுறதா? நீங்க பேசுறது சரியா? இதெல்லாம் நம்ம பொண்ணையும் பாதிக்கும்னு உங்களுக்குத் தோணவே இல்லையா?"

"என்ன உளர்ற?"

"நான் ஒண்ணும் உளரல்ல... நீங்கதான் எதைப் பத்தியும் சிந்திக்காம வாய்க்கு வந்தபடி பேசிட்டு இருக்கீங்க. இங்க நடந்ததெல்லாம் இந்தப் பொண்ணு வீட்டில போய் சொன்னா என்ன ஆகும்?"

"என்ன ஆகும்?" - அலட்சியமாய்க் கேட்டார் கைலாசம்.

"தன்னோட தங்கையைக் கண்டபடி பேசி அடிச்சு அவமானப்படுத்தியிருக்காங்கன்னு தெரிஞ்சா அவ அண்ணனுக்குக் கோபம் வராதா? சும்மா இருப்பானா?"

"என்ன பேசுற நீ? அவன் கோபப்பட்டு ஒண்ணும் ஆகப் போறதில்ல. என்ன... வந்து எங்களை அடிச்சிடு வானா?"

"உங்களை அடிக்கிறானோ இல்லையோ அந்தக் கோபத்தை நம்ம பொண்ணு மேலதானே காட்டுவான்? நம்ம பொண்ணுதானே கஷ்டப்பட்டுக் கண்ணீர் விடுவா?" - தாயின் கேள்வியில் மற்றவர்கள் திடுக்கிட, குறிஞ்சி அவசரமாய் மறுத்தாள்.

"அம்மா! நீங்க நினைக்கிற மாதிரி எதுவும் நடக்காது. எங்க அண்ணன் ஒன்றும் உங்கள் வீட்டு ஆண்களைப் போல் முட்டாள்களோ முரடனோ அல்ல..."



"ஏய்! யாரை முட்டாள்ன்ற?" - வேகமாய் முன்னே வந்தவனை அலட்சியமாய்ப் பார்த்தாள்.

"மிஸ்டர்! இந்தக் கை ஓங்குற வேலையெல்லாம் என்கிட்ட வேண்டாம். எப்பவும் சும்மா இருப்பேன்னு நினைக்காதீங்க."

"ஹூம்... என்ன செய்து விடுவாயாம்?"

"அடிக்க நீளுற கையை ஒரே நிமிஷத்தில என்னால உடைக்க முடியும். அப்புறம் ரெண்டு மாசத்துக்கு அந்தக் கையால சோறு கூட சாப்பிட முடியாது."

"என்ன? நீ என் கையை உடைப்பியா?"

"கண்டிப்பா. எங்கே கையை நீட்டிப் பாருங்கள்!"

"குறிஞ்சி! ப்ளீஸ்..." - அதுவரை அமைதியாய் இருந்த சுஜாதா குரல் கொடுத்தாள்.

"சுஜா!"

"ப்ளீஸ் குறிஞ்சி. நீ வீட்டுக்குக் கிளம்பு. இனிமே என்னைப் பார்க்க வராதே!"

"சுஜா... நீ...!"

"குறிஞ்சி ப்ளீஸ்... நீ ஏன் இங்கே வரணும்? ஏன் இந்தப் பேச்சையெல்லாம் கேட்கணும். பேசாம வீட்டுக்குப் போ."

"ஸாரி... சுஜா! நான் என் அண்ணியைப் பத்தி யோசிச்சேனே தவிர, உன்னைப் பத்தி யோசிக்கலையே... நீ புதுப் பொண்ணு. சந்தோஷமா வெளியே கிளம்பிட்டு இருந்த போலிருக்கு. நான் வந்து எல்லாத்தையும் ஸ்பாயில் பண்ணிட்டேனோ? ஸாரி!"

"சுஜாதா! உன் தோழிகிட்ட சொல்லு. வீணாக கற்பனை வளர்த்துக்கிட்டு இங்கே வரவேண்டாம்ன்னு... அவ நினைக்கிற எதுவும் நடக்காது!" - எதுவும் என்றதைச் சற்று அழுத்தியே சொன்னார் கைலாசம். விரக்தியாய்ப் புன்னகைத்தாள் குறிஞ்சி.

"இந்த வீட்டுக்குள்ள நுழையும்போதே அதைத் தெளிவா புரிஞ்சுக்கிட்டேனே... இந்த வீடு பெரிசா இருக்கலாம். ஆனா உங்க மனசு எதுவுமே விசாலமா இல்லை. உங்களை நினைச்சு எங்க அண்ணி அழுதா அதைவிட முட்டாள்தனம் எதுவுமே இல்லை.

இதை அவங்களுக்கு உணர வைக்க கடவுள் தந்த நல்ல சான்ஸா எடுத்துக்கிறேன். இனிமே உங்க பொண்ணைப் பத்தி பேசிட்டு இங்கே வரமாட்டேன். கிளம்புறேன் ஸார்!" - கைப்பையை எடுத்துக் கொண்டு புறப்பட்டவளைத் தடுத்தாள் தாட்சாயிணி.

"அம்மாடி! ஒரு நிமிஷம்."

"தயவு செய்து இங்கே நடந்ததையெல்லாம்..."

"கண்டிப்பா என் அண்ணன்கிட்ட சொல்ல மாட்டேன். ஆனா சொல்ல வேண்டிய விஷயத்தைச் சொல்லியே தீருவேன்."

"எ... என்னம்மா சொல்றே?"

"உங்க கணவரும் பிள்ளையும் என்னை எவ்வளவோ பேசினாங்க. அதை விட ஒரு பெரிய பழியையும் சுமத்தியிருக்கீங்களே... அந்தப் பழியை நாங்க துடைக்க வேண்டாம்?"



"என்ன? என்ன பழி போட்டாங்க?"

"உங்க பொண்ணு பெட்டி நிறைய பணத்தோடயும் நகையோடும் வந்தாங்களாமே...!"

"ஆ... ஆமா."

"இல்லை. அப்படி எதுவும் நடக்கலைன்னு எனக்கு நல்லாத் தெரியும். ஏன்னா உங்க வீட்டுக் கல்யாணத்துக்கு வந்தபோது என் அம்மா நகையைத்தான் போட்டுட்டு வந்தாங்க. உங்க வீட்டுப் பொருள்ன்னு எங்க அண்ணியைத் தவிர எதுவுமே எங்க வீட்டில கிடையாது.

இதை என்னால நிரூபிக்க முடியும். நிரூபிப்பேன். நீங்க பேசின எல்லாத்தையும் அப்போ உங்களால திருப்பி வாங்கிக்க முடியுமா?"

"முதல்ல நிரூபிச்சுக் காட்டு. மத்ததெல்லாம் பிறகு பார்க்கலாம்."

"பார்க்கத்தான் போறீங்க. வெயிட் அன் ஸீ!" - உறுதியாய் சொல்லி விட்டு விருட்டென வெளியேறினாள் குறிஞ்சி. மற்றவர்கள் திகைத்து நிற்க, கார்த்திக் குழப்பமாய் தந்தையை நெருங்கினான்.

"அப்பா! இந்தப் பொண்ணு இவ்வளவு உறுதியா சொல்லிட்டுப் போறாளே... ஒருவேளை அவ சொல்றது உண்மையா இருக்குமோ?"

"என்ன உண்மை?"

"நம்ம நீலா எதையும் எடுத்திட்டுப் போகலையோ?"

"அண்ணா! என்ன பேசுற நீ? அவ ரூம்ல இருந்த பொருட்கள், அவளோட சூட்கேஸ்... நம்ம லாக்கர்ல இருந்த

ஜுவல்ஸ் எல்லாமே காணாமப் போயிருந்ததே... நீயும்தானே பார்த்தாய்?"

"அது சரிடா! ஆனா இந்தப் பொண்ணு இவ்வளவு உறுதியாச் சொல்றாளே...!"

"கார்த்திக்! அவ சும்மா உதார் விட்டுட்டுப் போறாடா... பார்த்திட்டே இரேன். இனிமே இந்தப் பக்கமே திரும்பி வரமாட்டாள். அவ நிரூபிப்பாளா? எதை நிரூபிப்பாள்? எப்படி நிரூபிப்பாள். உன் தங்கை கொண்டு போன தெல்லாம் எப்பவோ வட்டிக் கடைக்குப் போயிருக்கும்.

கண்டதையும் நினைச்சிக் குழப்பிக்காம போய் வேலை இருந்தாப் பாருங்க. இதுக்குப் பிறகு கோவிலுக்குப் போக முடியாது. இன்னொரு நாள் பார்த்துக்கலாம்!" – என்றவாறே கைலாசம் நகர்ந்துவிட, தாட்சாயிணி கண்ணீரோடு பூஜை யறைக்குள் நுழைந்து கொண்டாள்.

சுஜாதா தயக்கமாய் கணவனை நெருங்கினாள். "என்னங்க! நான் ஒண்ணு சொன்னா கோவிச்சிக்க மாட்டீங்களே?"

"என்ன?"

"நீங்களோ மாமாவோ பேசுற மாதிரி குறிஞ்சி ஃபேமிலி மோசமானது இல்லீங்க... எனக்கு அவங்களை சின்ன வயசில இருந்து தெரியும். மாதவன் அண்ணன் ரொம்ப நல்லவர்."

"நல்லவன் பண்ற காரியமா இது?"

"இதோ பாருங்க. அவர் லவ் மேரேஜ் பண்ணிக்கிட் டார்ன்னு தெரியும். ஆனா நீங்க சொல்ற மாதிரி பணமோ



நகையோ கிடைச்சிருந்தா... அது புழங்குற வரைக்குமாவது அவங்க ஆடம்பரமா வாழ்ந்திருப்பாங்கள்ல... புருஷன் பொண்டாட்டியா ஜாலியா வெளியே சுத்தியிருப்பாங்கள்ல!"

"ஆமா..."

"ஆனா... அப்படி எதுவும் நடந்ததில்லை. குறிஞ்சி யோட அண்ணியை அந்தத் தெருவில உள்ளவங்களுக்குக் கூட சரியாத் தெரியாது."

"என்ன?"

"ஆமாங்க. அவங்க வெளியே வரவே மாட்டாங்க. கழுத்தில கூட வெறும் மஞ்சள் கயிறு மட்டும்தான் கிடந்தது. இப்பக் கொஞ்சநாள் முன்னாலதான் அண்ணன் செயின் வாங்கிப் போட்டார்... மூணு சவரன்ல. அண்ணன் அதை வாங்கும்போது நானும் குறிஞ்சியும் கூடப் போயிருந்தோம்."

"என்ன?" – அண்ணன், தம்பி இருவரும் ஒருவரை யொருவர் திகைப்பாய்ப் பார்த்துக் கொண்டனர்.

"குறிஞ்சிக்கு எப்பவுமே அவ அண்ணி மேல கோபம். பேச மாட்டாள்."

"ஏன்?"

"வீட்டை விட்டு ஓடி வந்தது எவ்வளவு பெரிய தப்பு. நீ எப்படி இதுக்குக் காரணமா இருக்கேன்னு ரொம்ப சண்டை போடுவாள். அவங்க அம்மா எப்படித் துடிப்பாங்கன்னு சொல்லி அழுதிருக்கா. பிறந்த வீட்டைப் பத்தி அக்கறை இல்லாம வந்ததால அந்தக் கோபத்தில பேசினதே இல்லை."

சுஜாதா சொல்ல... யுவராஜனுக்குத் தொண்டை அடைத்தது.

"அதே நேரம் மனசு கேட்காம... என்கிட்ட புலம்புவா. அண்ணிக்கு உடுத்திக்க நல்லதா புடவை இல்லைன்னு சொல்லி அண்ணன்கிட்ட நிறைய புடவை எடுத்துக் கொடுக்கச் சொல்லுவாள். மாதவன் அண்ணனுக்கு அண்ணின்னா உயிர். தேவையில்லாம ஒரு பைசா செலவு பண்ண மாட்டார்.

ஆனா அண்ணிக்காக எல்லாம் செய்வார். ஒரு நாள் கூட வெளியில சாப்பிட மாட்டார். அண்ணி கையால தான் சாப்பிடுவார். அவ்வளவு அன்புங்க... பணத்தையோ நகையையோ எதிர்பார்க்கிறவங்ககிட்ட இந்த அன்பு இருக் காதுங்க."

யுவராஜன் யோசனையாய் நெற்றியைத் தேய்த்தான். நீலா நகைகளோடு சென்றது உண்மை. ஆனால் கணவன் வீட்டுக்கு வெறுங்கையோடு போவதென்றால்... அந்த நகை எங்கே போயிருக்கும்? அப்பா சொன்னது போல் மாதவன் மறைத்து வைத்திருக்கிறானா? இல்லை... விற்று சாப்பிட் டிருப்பார்களா?

அண்ணி சொல்வதைப் பார்த்தால்... இது நடந்திருக்க வாய்ப்பில்லை. நகைகளை விற்றால் கூட உடைகளை என்ன செய்திருப்பான்? மாற்றுத்துணி கூட இல்லாமல் தான் உன் தங்கை வந்தாள் என்றாளே குறிஞ்சி...

ஒருவேளை பெட்டியோடு தொலைத்திருப்பாளோ? கடவுளே! மொத்த நகையையும் தொலைத்து விட்டாளோ?



"அண்ணி! நீங்க சொல்றதைப் பார்த்தால்..." - எனத் தொடங்கிய நேரம்,

"ஹாய்... ஹாய்..." - என ஆர்ப்பாட்டமாய் வந்து கொண்டிருந்தான் அரவிந்த். அவனைக் கண்டதும் குரலைத் தழைத்துக் கொண்டான் கார்த்திக்.

"சுஜா! உள்ளே போ. எதுவா இருந்தாலும் அப்புறம் பேசிக்கலாம்."

"சரிங்க..." - என்றவாறே தங்கள் அறைக்குள் நுழைந்து கொள்ளவும் அரவிந்த் வரவும் சரியாய் இருந்தது. கையில் பரிசுப் பொட்டலத்தோடு வந்தவனை லேசாய்ப் புன்னகைத்து வரவேற்றனர்.

"வாடா!"

"ஹாய் புது மாப்பிள்ளை! எப்படி இருக்கீங்க?"

"ம்... ஃபைன். ஆமா! நீ ஏன்டா கல்யாணத்தன்னிக்கு வராம இருந்திட்ட?"

"அதை ஏன் கேட்கிறீங்க? நைட் ரொம்ப நேரம் மண்டபத்திலேயே இருந்திட்டேனா... லேட் நைட்ல வீட்ல போய்க் கொஞ்சம் டிரிங்க்ஸ் அடிச்சிட்டுப் படுத்திட்டேன்."

"நீ என்னிக்கு சும்மா படுத்த? மேரேஜுக்கு ஏன் வரலை? அதைச் சொல்லு."

"கேளு யுவா. நைட் அடிச்ச சரக்கு ஹெவியானது போலிருக்கு. மறுநாள் நான் கண்விழிச்சப்போ மதியம் மணி இரண்டு."

"அடப்பாவி!"

"ம்... அதான் வரலை. சரி... ஈவினிங் வந்து கிஃப்ட்டைக் கொடுத்திட்டுப் போலாம்னு பார்த்தா ஊர்ல இருந்து போன். உடனே ஊருக்குக் கிளம்பி வான்னு...'

"என்னவாம்?"

"போடா! எனக்கு வெட்கமா இருக்கு."

"அட! நீயா வெட்கப்படுற? சும்மா சொல்லுடா!"

"யுவா! எனக்கு மேரேஜ் ஃபிக்ஸ் ஆகிடுச்சு."

"என்ன?"

"ஆமான்டா. சொந்தக்காரப் பொண்ணு. ஊர்ல வெச்சே நிச்சயம் பண்ணிட்டோம்."

"என்னடா இது! ஒரு வார்த்தை கூட சொல்லாம...?"

"தப்பா எடுத்துக்காதே மச்சான். எல்லாம் திடீர்னு முடிவாகிடுச்சு. அதான் யார் கிட்டயும் சொல்ல முடியலை."

"சரி... கல்யாணம் எப்போ?"

"நெக்ஸ்ட் மன்த். அதுவும் ஊர்லதான்."

"ஏன்டா?"

"உறவுக்காரங்க எல்லாமே ஊர்லதானே இருக்காங்க."

"அது மட்டும்தான் காரணமா?" - சிரிக்காமல் கேட்டான் கார்த்திக்.

"அண்ணா! நீங்க பெரிய ஆள்தான். நீங்க நினைக்கிறதும் ஒரு காரணம்தான். இங்கே கல்யாணம் வெச்சா வர்றது என் கேர்ள் ஃபிரண்டாத்தான் இருக்கும். அதுவும் வாழ்த்த வரமாட்டாங்க. வறுத்து எடுச்சிடுவாங்க..."



"ஏன்டா இப்படி இருக்க? இதெல்லாம் தப்பில்லையா? நீ கல்யாணம் பண்ணிக்கிற பொண்ணுக்கு செய்யுற துரோகம் இல்லையா?"

"நமக்கு அந்த சென்டிமெண்ட் எல்லாம் கிடையாதுண்ணா. என்னைத் தேடி வர்ற பட்டர்ஃபிளைஸை நான் மிஸ் பண்றதில்ல... அதுக்கெல்லாம் ஒரு டேலண்ட் வேணுமில்ல..."

"போடா! நீயும் உன் டேலண்ட்டும்..." - என்றவாறு நகர முயன்றவனைத் தடுத்தான்.

"அண்ணே! எங்க கிளம்பிட்டீங்க? இந்தாங்க என்னோட கல்யாணப் பரிசு!" - எனப் பொட்டலத்தை நீட்டினான்.

"இதெல்லாம் எதுக்குப்பா? எனி வே தேங்க் யூ!"

"அண்ணியை எங்கே காணோம்?"

"அவளும் அம்மாவும் கிச்சன்ல இருப்பாங்க."

"சரி யுவா! நான் கிளம்புறேன். இன்னும் ஒரு வாரத்தில ஊருக்குப் போயிடுவேன்."

"எதுக்குடா?"

"கல்யாண வேலை இருக்குல்ல... எங்க வீட்ல நான் ஒரே பையன். அதனால நான்தான் எல்லாத்தையும் கவனிக்கணும்."

"கவனி. கல்யாணத்துக்கு வர்ற பொண்ணுங்களை மட்டும் கவனிக்காதே. அப்புறம் உன் வாழ்க்கையே கேள்விக்குறியாகிடும்."

"அதெல்லாம் கவனமா இருப்பேன்."

"இனிமேலாவது ஒழுங்கா இருடா. பாவம் அந்தப் பொண்ணு..."

"பார்க்கலாம்... பார்க்கலாம்."

"என்னடா இப்படிச் சொல்றே? திருந்துறதா எண்ணமே இல்லையா உனக்கு?"

"அதெல்லாம் நடக்காதுடா. தொட்டில் பழக்கம் சுடுகாடு வரைக்கும்..."

"ஹும்... உனக்குப் போய் பொண்ணைக் கொடுக்கிறானே... அவனைச் சொல்லணும்!"

"அதை பிறகு பார்க்கலாம். ஆமா! யாருடா அந்தப் பொண்ணு?"

"எந்தப் பொண்ணு?"

"அதான் நான் வரும்போது ஒரு பொண்ணு போச்சே... வாசலுக்கு வெளியே பார்த்தேன். சும்மா ரோஜாப்பூ மாதிரி இருந்தாளே..." – அரவிந்த் ரசனையாய்ச் சொல்ல, யுவராஜனுக்குக் கடுப்பேறியது.

"அரவிந்த்! அது அண்ணியோட ஃபிரண்ட்."

"அட! மேரேஜ்ல பார்க்கவே இல்லையே... ஒருவேளை மார்னிங் வந்தாளோ... ச்சே! மிஸ் பண்ணிட்டேனே...!"

"அரவிந்த்! இந்த மாதிரிப் பேச்செல்லாம் பேசிட்டு இங்கே வராதே. இது குடும்பம் நடத்துற வீடு!" – கண்டிப்பான குரலில் சொன்னான் கார்த்திக்.

"ஸாரிண்ணா... சும்மா ஜாலிக்குச் சொன்னேன்."

"இதெல்லாம் உன் மத்த ஃபிரண்ட்ஸ்கிட்ட வைச்சுக்க... யுவா! உனக்கும் சேர்த்துதான் சொல்றேன்."

"யுவா! அண்ணன் ரொம்பக் கோபமா இருக்காங்க. நாம அப்புறமா மீட் பண்ணலாம். கிளம்பட்டுமா?"

"ம்..."

"அப்புறம் யுவா! நான் ஊருக்குப் போன பிறகு கொஞ்சம் என் கார்டனையும் ஒரு பார்வை பார்த்துக்க... பழனிகிட்டயும் சொல்லியிருக்கேன். எதுக்கும் நீ அந்த வீட்டுக்கு வரும்போது கொஞ்சம் கவனிச்சுக்க..."

"சரிடா!"

"கல்யாணத்துக்கு இன்விடேஷன் அனுப்புவேன். எல்லாரும் வந்திடுங்க."

"ம்..." – என்ற யுவராஜனின் முகம் லேசாய் மாறியது. கண்கள் கூர்மையாய் அரவிந்தனின் கழுத்தில் பதிந்தது. காலர் இல்லாத பனியன் அணிந்திருந்த அரவிந்தனின் கழுத்தில் புத்தம் புதிதாய் சற்றுக் கனமான தங்கச் சங்கிலி!

அதை உற்றுப் பார்த்தான். இது... இந்தச் செயின்... இந்த மாடல்... இது நீலாவிற்காகச் செய்தது போலவே இருக்கிறதே! இதை நானும் அப்பாவும்தானே போய் வாங்கினோம். புது மாடல். பாம்பே கட்டிங். ரொம்ப அற்புதமா இருக்கும் என்றாரே கடைக்காரர்.

இது எப்படி இவன் கழுத்தில்? லாங் செயினில் இன்ஷியல் பொறித்துத் தரவேண்டும் என்று நீலா அடம் பிடித்துக் கேட்டு வாங்கியது. இது எப்படி இவனிடம்?

ஒருவேளை இந்த மாடல்தான் இப்போது பிரபலமோ? புதிதாய் வாங்கியிருப்பானோ?

"அரவிந்தா! பொண்ணு வீடு எப்படி வசதியான இடமா?"

"வசதியா? போடா... மூணு பொண்ணுங்க. இவதான் மூத்தவ. மாமனாருக்கு புண்ணாக்கு வியாபாரம். அவரே செய்து விற்கிறார்."

"அப்போ சீர்வரிசையெல்லாம்?"

"என்ன நாலு மூட்டை புண்ணாக்குதான் கிடைக்கும்!" - அலட்சியமாய்ச் சொல்லி சிரிக்கையில் கழுத்தில் புரண்ட சங்கிலி மின்னிக் கண்ணைப் பறித்தது.

வெகு இயல்பாய் அதைப் பார்ப்பது போல் பார்த்தான் யுவராஜன்.

"அட! புதுசா செயின் எல்லாம் போட்டிருக்கே... சூப்பரா இருக்கேடா... எங்கே வாங்கினே?" - என அதைத் தொட முயன்றபோது அவசரமாய் பின்வாங்கினான் அரவிந்த்.

"ஓ! இதுவா? இ... இது... இது நான் வாங்கல்ல..." - என்பதற்குள் முகம் வியர்த்து விட்டிருந்தது. பேச்சில் தடுமாற்றம் தெரிந்தது.

"என்ன... நீ வாங்கலையா? கீழே கிடைச்சதா?" - தம்பியின் பார்வையைத் தொடர்ந்து கார்த்திக்கின் பார்வையும் அதில் பதிய...

அரவிந்த் அவசரமாய்ப் புறப்பட்டான்.

"சரிடா! டயமாச்சு நான் வர்றேன்."



"இருடா... இந்தச் செயின் டிசைன் சூப்பரா இருக்கு. இப்படி ஒரு மாடல் நான் பார்த்ததே இல்லை. இதே மாதிரி நானும் ஒண்ணும் செய்யணும். அதான் கேட்டேன்."

அரவிந்த் அவஸ்தையாய் புன்னகைத்தான். "ஓ! நீ இதைப் பார்த்ததே இல்லையா?"

"ம்ஹூம்... புது மாடலா?"

"ஆமான்டா... நியூ மாடல். பாம்பே கட்டிங். இப்ப எல்லா கடைகள்லயும் கிடைக்குதே!"

"அப்படியா... நீ எங்கே வாங்கின?"

"இது... நான் வாங்கலை... என்... மா... மாமனார்தான் போட்டாங்க. நிச்சயம் பண்ணினபோது..."

"பரவாயில்லையே... புண்ணாக்கு வியாபாரம் பண்றவர் இவ்வளவு பெரிசா செயின் பண்ணியிருக்காரே... இது எத்தனை சவரன் இருக்கும்?"

"ஏன்டா! செயின் போட்டவர்கிட்ட போய் இதெல்லாம் கேட்க முடியுமா? சரி... நான் அவசரமா வீட்டுக்குப் போகணும். நாம நாளைக்கு மீட் பண்ணுவோமே... கார்த்திக் அண்ணா! வர்றேன்... பைடா!" - என்றவாறு ஒரே நொடியில் வெளியேறி மறைந்தான்.

கார்த்திக்கின் முகம் இருண்டது. "யுவா! இது... நம்ம நீலாவோட செயின் மாதிரி இல்ல...?"

"மாதிரி இல்ல... அதேதான்!" - என்ற யுவராஜனின் முகமும் குரலும் இறுகிப் போயிருந்தது.

மூளை வேகமாய் சிந்திக்கத் துவங்கியது.

# 15

உன் கண்ணீர்த் துளிகள் விலை
மதிப்பில்லாதவை! அதை
மதிப்பில்லாத உறவுகளுக்காக
துளி கூட சிந்திவிடாதே!

**வீ**ட்டை நெருங்கும்போதே குறிஞ்சியின் மனம் படபடத்தது. இத்தனை நேரமாகி விட்டதே! அண்ணன் கடையில் இல்லை. நிச்சயமாய் வீட்டில்தான் இருப்பான். என்ன சொல்லிச் சமாளிப்பது?

இந்த முகத்தை எப்படி மறைப்பது. யோசனையாய் வீட்டின் முன் தனது இரு சக்கர வாகனத்தை நிறுத்த... சத்தம் கேட்டு வெளியே வந்தார் நல்லசிவம்.

வண்டியிலிருந்து இறங்கியவள் தந்தையைக் கண்டதும் வியந்தாள்.

"அப்பா! என்ன அதிசயம்? நீங்க வீட்டில இருக்கீங்க?"

"அம்மாடி! அதெல்லாம் பிறகு சொல்றேன். முதல்ல பொறப்படும்மா..." - பதட்டமாய் சொன்னார்.

"எங்கேப்பா?"

"ஆஸ்பத்திரிக்கு. உன் அண்ணி உடம்பு முடியாம மயங்கி விழுந்திட்டா. அண்ணன் ஆஸ்பத்திரிக்குத் தூக்கிட்டுப் போயிருக்கான். என்ன ஆச்சோ தெரியலை. இதுவரை ஒரு போன் கூட வரலை. எனக்குப் பயமா இருக்கும்மா..."

"அப்பா! என்னப்பா சொல்றீங்க? அண்ணிக்கு என்னாச்சு?"



"எனக்கு எதுவுமே தெரியலைம்மா... புள்ள பேச்சு மூச்சு இல்லாம கிடந்தது. டாக்டர் வேற சீரியஸா இருக்குன்னார். வாம்மா... சீக்கிரம் போவோம்."

"போலாம்ப்பா... எந்த ஆஸ்பத்திரி?"

"ஐயோ! அதைக் கூட கேட்கலையே?"

"என்னப்பா நீங்க? அண்ணனும் சொல்லலையா?"

"இல்லம்மா... இரு... இந்த ரகுதான் டாக்டரைக் கூட்டிட்டு வந்தான். அவன்கிட்ட கேட்டாத் தெரியும்!" - சொல்லிக் கொண்டே நல்லசிவம் எதிர் வீட்டை நோக்கிச் செல்ல, குறிஞ்சி பெருமூச்சு விட்டாள்.

இறைவா! ஏன் இப்படி அலைக்கழிக்கிறாய்? இந்த அண்ணிக்கு அப்படி என்னதான் ஆனது! சுஜா வீட்டுத் திருமணத்துக்குப் போய் வந்ததில் இருந்தே அண்ணியின் முகம் சரியில்லை. பேசவும் இல்லை. அதற்குக் காரணம் இப்போதுதானே தெரிகிறது!

கல்யாண வீட்டில் அண்ணியை ரொம்பவும் திட்டி அவமானப்படுத்தி விட்டார்களோ! அதில் மனம் நொந்துதான் யாருடனும் பேசாமல் படுத்தே இருந்தாளோ? ஒருவேளை கர்ப்பமாய் இருக்கிறார்களா? அதனால்தான் மேலும் மேலும் இளைத்துக் கொண்டே போகிறதா! நல்ல விஷயமாய் இருந்தால் சந்தோஷம்தான்.

திருமணமாகி இத்தனை நாட்களுக்குப் பிறகாவது இந்த மாதிரி நல்ல செய்தி நடந்தால் சந்தோஷம்தான். தனக்கென குடும்பம், குழந்தை என்று வந்து விட்டால் தனக்கென குடும்பம், குழந்தை என்று வந்து விட்டால் அண்ணியின் வருத்தம் குறையுமே... தன் மகள் மூலமாய்

பேரக் குழந்தை பிறக்கப் போகிறது என்று தெரிந்தால் அண்ணியின் பெற்றோர்கள்கூட வந்து விடலாம்.

எப்படியோ நல்லதாய் நடக்கட்டும். அண்ணியின் சோர்வு, மயக்கம்... இதையெல்லாம் வைத்து அவள் கர்ப்பமாய் இருக்கிறாள் என்றே முடிவு செய்து கொண்டாள் குறிஞ்சி. அதனால்தான் பதட்டம்கூட சிரிப்பை வரவழைத்தது.

"குறிஞ்சி! லோட்டஸ் ஹாஸ்பிடலாம்மா... மெயின் ரோட்டுலதான் இருக்கு. ஆட்டோவில போயிடலாமா?"

"வேண்டாம்பா... வண்டியில உட்காருங்க. போகலாம்."

"கதவைப் பூட்டிட்டு வந்திடுறேன்!" - சுறுசுறுப்பாய் வீட்டிற்குள் சென்று பூட்டு சாவியோடு வந்தவர் வீட்டைப் பூட்டி விட்டு மகளின் பின்னே அமர்ந்து கொள்ள, குறிஞ்சி எந்தப் பதட்டமும் இன்றியே வாகனத்தைச் செலுத்தினாள்.

பத்தே நிமிடத்தில் லோட்டஸ் ஹாஸ்பிடல் தாமரைப் பூவின் படத்தோடு கண்ணில் பட வண்டியை நிதானமாக்கினாள். "அப்பா! நீங்க உள்ளே போய் அண்ணி பேரைச் சொல்லி எந்த வார்டுன்னு ரிஷெப்ஸன்ல கேளுங்க. நான் வண்டியை பார்க் பண்ணிட்டு வந்திடுறேன்."

"சரிம்மா..." - என்றவாறு அவர் இறங்கி நடக்க, வண்டியை பார்க்கிங் பகுதியில் நிறுத்திவிட்டு வந்தவள் அப்படியே நின்றாள்.

மருத்துவமனையின் முன்புறமாய் நின்ற பெரிய அரசமரத்தின் அடியில் சின்னதாய் இருந்த விநாயகரின் முன் நின்று கொண்டிருந்தான் மாதவன். உடம்பில் துளியும் அசைவில்லை.



மெல்ல நெருங்கி அண்ணனைத் தொட்டாள். திடுக்கிட்டுத் திரும்பியவனின் கண்கள் இரண்டும் நீரில் மிதந்தன.

தங்கையைக் கண்டதும் அந்த நீர் உருண்டு இறங்கியது.

"கு... கு...றி...ஞ்சி"

"அண்ணா! என்ன ஆச்சு? ஏன் அழறே?" - கேட்கும்போதே கண்ணீர் சுரந்தது.

"குறிஞ்சி! நான் என்ன பண்ணுவேன்? அண்ணி... அண்ணி..."

"அண்ணா! சொல்லுண்ணா? அண்ணிக்கு என்ன?"

"நம்மையெல்லாம் விட்டுட்டுப் போயிடுவா போலிருக்கும்மா..."

"எ...ன்...ன...?"

"டாக்டர் நம்பிக்கை இல்லாம சொல்றாரும்மா... அதான் கடவுள்கிட்ட பிச்சை கேட்டுட்டு நிக்கிறேன். எனக்கு என் நீலா வேணும்மா... அவ வேணும்."

"அண்ணா! அழாதேண்ணா... அண்ணிக்கு எதுவும் ஆகாது. வாண்ணா! போய்ப் பார்க்கலாம்."

"ஐ.சி.யூவில வைச்சிருக்காங்கம்மா. என்னைக் கூட உள்ளே விடலை. டாக்டர் என்னவெல்லாமோ சொல்றார். விடியுற வரைக்கும் எதுவும் சொல்ல முடியாதாம். நான் என்ன பண்ணுவேன்?"

"என்னா... அண்ணிக்கு என்ன செய்யுதாம்?"

"சரியாத் தெரியலைம்மா... மன அழுத்தம்ங்கிறார். பட்டினி கிடந்து உடம்பு மோசமாகிடுச்சு. இதயம் பலவீனமா இருக்குன்னு ஏதேதோ சொல்றார்."

"அண்ணா! முதல்ல கண்ணைத் துடை. வா... என்கூட!"

"எங்கேம்மா?"

"டாக்டர்கிட்ட நான் பேசுறேன். வா..." - அண்ணியின் கையைப் பற்றிக் கொண்டு முன்னே நடக்க, எதிரே பதட்டமாய் ஓடி வந்தார் நல்லசிவம்.

"மாதவா! எங்கேப்பா போயிட்ட? டாக்டர் உன்னைத் தேடுறார்..."

"டாக்டரா!" - பதட்டமாய் ஓட்டமும் நடையுமாய் அவன் மாடியேற, இருவரும் பின்தொடர்ந்தனர். அறைக்கு வெளியே நின்று கொண்டிருந்த மருத்துவரைக் கண்டதும்... மூச்சு வாங்க அவர் முன் சென்று நின்றான்.

"டாக்டர்! என் வொய்ஃப் எப்படி இருக்கா?"

"என்கூட வாங்க..." - என்றவர் அமைதியாய் நடக்க. பதறும் இதயத்தோடு மூவரும் தொடர்ந்தனர். தன் இருக்கையில் அமர்ந்த மருத்துவர் எதிரே இருந்த இருக்கையில் மாதவனை அமரச் சொன்னார்.

"பரவாயில்ல டாக்டர்! நீலாவுக்கு எப்படி இருக்குன்னு சொல்லுங்க. ப்ளீஸ்!"

"மிஸ்டர் மாதவன்! உங்களுக்குள்ள எதுவும் பிரச்சனையா?"



மாதவன் புரியாமல் பார்த்தான். "டாக்டர்! என்ன கேட்கிறீங்க?"

"உங்களுக்கும் உங்க மனைவிக்கும் சண்டையா? எதுவும் பிரச்சனையா?"

"சேச்சே! அவகிட்ட போய் சண்டை போடுறதா? நானா... நோ டாக்டர்! எங்களுக்குள்ள இதுவரைக்கும் சண்டையே வந்ததில்லை."

"ஷ்யூர்?"

"ஷ்யூர் டாக்டர். ஐ லவ் மை வொய்ஃப்."

"பிறகேன் அவங்க தற்கொலைக்கு முயற்சி பண்ணினாங்க...." - டாக்டரின் நிதானமான கேள்வியில் மூவருக்கும் மூச்சுத் திணறியது.

மாதவனின் கண்கள் குளமாகியது.

"எ...ன்ன? தற்கொலை முயற்சியா?"

"எஸ். இதுவும் ஒரு தற்கொலை முயற்சிதான். சாப்பிடாம தண்ணீர் கூட குடிக்காம அவங்க இருந்திருக்காங்க. எப்படி ஸார் கவனிக்காம விட்டீங்க?"

"ஸாரி டாக்டர்! நாங்க ஃபிளவர் ஷாப் வைச்சிருக்கோம். அது விஷயமா வெளியே அலையுறவன் நான். பட்! சாப்பிட்டியான்னு கேட்காம இருக்க மாட்டேன். சாப்பிட்டேன்னு சொல்லுவா!"

"அவங்க முகத்தை வைச்சி உங்களால கண்டுபிடிக்க முடியாதா?"

"ஸாரி ஸார்! கொஞ்ச நாளாவே என் வொய்ஃப் கொஞ்சம் அப்செட்டா இருந்தா. அதனால கவனிக்கப் பார்க்கலை. அடிக்கடி சோர்ந்து படுத்திட்டா. உடம்பு முடியலைன்னு சொன்னதால... நானும் விட்டுட்டேன்."

"மிஸ்டர் மாதவன்! உழைக்க வேண்டியதுதான். அதே சமயம் வீட்டில உள்ளவங்க மேலேயும் அக்கறை காட்டணும். அவங்க ஏன் அப்செட்டா இருக்காங்கன்னு கேட்டுப் பேசி அவங்களைச் சமாதானப்படுத்தி இருக்கணும்."

"ஸாரி டாக்டர்!"

"உங்க மேரேஜ் லவ் மேரேஜா?"

"இல்... ஆமா டாக்டர்!"

"ரெண்டு பேர் வீட்டிலயும் சம்மதிச்சித்தானே கட்டிக்கிட்டீங்க?"

"இ... இல்ல டாக்டர்!"

"அதாவது அவங்க வீட்டுல ஏத்துக்கல்ல?"

"ஆமா டாக்டர். அதனாலதான் அடிக்கடி அப்செட்டாகிடுவா. நானும் எவ்வளவோ சொல்லிப் பார்த்தும் கேட்கலை!"

"அவசரப்பட்டுக் கல்யாணத்தை பண்ணிடுறீங்க அப்புறம் இப்படி அவஸ்தைப்படுறீங்க... மொதல்லயே கொஞ்சம் பொறுமையா இருந்து பெத்தவங்களைச் சம்மதிக்க வைச்சிட்டு அவங்க ஆசியோட கல்யாணம் பண்ணியிருக்கலாமில்ல...?"

"ஸாரி டாக்டர். எங்க சூழ்நிலை அப்படி...!"



"என்ன ஸார் சூழ்நிலை. அன்னிக்கு நீங்க காட்டின அவசரம்தான் இன்னிக்கு உங்க மனைவியை இந்த நிலைக்கு ஆளாக்கியிருக்கு..."

"டாக்டர்!"

"மிஸ்டர் மாதவன்! உங்க மனைவி மனதளவில ரொம்ப பாதிக்கப்பட்டிருக்காங்க. தப்பு பண்ணிட்டேன். தப்பு பண்ணிட்டேன்னு புலம்புறாங்க. அம்மா அம்மான்னு தேடுறாங்க. அம்மாவைப் பார்க்கணும்னு அழுறாங்க."

"டாக்டர்!"

"அவங்க உடம்புக்குத் தேவையான மெடிஸனை நாங்க கொடுத்திட்டு இருக்கோம். பட்! அவங்க மனசுக்குத் தேவையான மருந்தை நீங்கதான் கொடுக்கணும்."

"நா... நானா? நான் என்ன செய்யணும் டாக்டர்?"

"அவங்க பேரண்ட்ஸை போய்ப் பாருங்க. உங்க மனைவியோட நிலையைச் சொல்லி எப்படியாவது சமாதானம் பண்ணிக் கூட்டிட்டு வாங்க. உங்க மனைவி உங்களுக்குத் திரும்ப கிடைக்கணும்னா நீங்க இதைச் செய்துதான் ஆகணும்."

"டாக்டர்! நான் எப்படி? எங்கே போய் தேடுவேன்?"

"என்ன?"

"இல்லை... அவங்க இப்போ வீடு மாறிட்டாங்க. அதான்..." - மாதவன் தவிப்பாய் சொல்ல, குறிஞ்சி முகம் மாறினாள். அண்ணன் ஏன் பொய் சொல்கிறான்? மாமனார், மாமியாரிடம் போய் பேசத் தயங்குகிறானோ?

அதற்காக மனைவி இந்த நிலையில் இருக்கும்போது என்ன தயக்கம்?

"விசாரிச்சுப் பாருங்க. எப்படியாவது கண்டுபிடிச்சுக் கூட்டிட்டு வாங்க. கூடுமான வரை நாளைக்கே கூட்டிட்டு வ டிரை பண்ணுங்க. ஸ்லீப்பிங் டோஸ் கொடுத்திருக்கோம். நல்லாத் தூங்குவாங்க. நாளைக்கு அவங்க பேரண்ட்ஸ் வந்திட்டாங்கன்னா எங்களால ஈஸியா உங்க வொய்ஃப்பைக் காப்பாத்திட முடியும்.

அக்கம் பக்கம் விசாரிச்சு கொஞ்சம் சீக்கிரமா கண்டுபிடிங்க. போன் நம்பர் இருந்தா பேசிப் பாருங்க. அவங்களுக்கும் கோபம், வருத்தம் இருக்கலாம். தயங்காம கால்ல விழுங்க. உங்க மாமனார், மாமியார்தானே! எப்படியாவது கூட்டிட்டு வந்திடுங்க..."

"ச... சரிங்க டாக்டர்!"

"ஓ.கே. இப்ப யாரும் போய் பேஷண்ட்டை டிஸ்டர்ப் பண்ண வேண்டாம். யாராவது ஒருத்தர் ஹாஸ்பிடல்ல இருந்தா போதும்."

"சரிங்க டாக்டர்!"

"ஓ.கே. நீங்க போலாம்..." - டாக்டர் சொன்னதும் இயந்திரத்தனமாய் எழுந்து வெளியே வந்தான். நீளமான காரிடாரில் வரிசையாய் போடப்பட்டிருந்த இரும்பு நாற்காலியில் பொத்தென அமர்ந்தான். கண்கள் உலர்ந்து போயிருந்தன. முகம் கலக்கமாய் இருந்தது.

'எங்கே போய்த் தேடுவேன்? பேரோ ஊரோ தெரியாமல் எப்படிக் கூட்டி வருவேன்? நீலா, எத்தனை



முறை கேட்டிருப்பேன். ஒருமுறையாவது உன் பிறந்தகம் பற்றிச் சொன்னாயா? இப்போது உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கிறாயே...! நான் எப்படி உன் பெற்றோரை அழைத்து வருவேன்?

இப்படிக் கடைசி வரை மௌனமாகவே இருந்து என்னைக் குற்றவாளி ஆக்கிவிடாதே. நீ என் இதயம். இதயம் தன் துடிப்பை நிறுத்திவிட்டால் உயிர் போய்விடும் நீலா. உன்னுடனே என் உயிரும் போய்விடும். சீக்கிரமாய் கண்களைத் திறந்து விடு.

உன் பிறந்த இடத்தைப் பெற்றவர்களை என்னிடம் கூறு. அவர்கள் காலில் விழுந்தேனும் அழைத்து வந்து விடுவேன். உன்னைவிட என் மானம், மரியாதை ஒன்றும் எனக்குப் பெரிதல்ல. சொல்லி விடு நீலா. என்னிடம் எல்லாவற்றையும் சொல்லிவிடு.'

சுவரில் சாய்ந்து கண்களை மூடிக் கொண்டான். சூடான கண்ணீர் வழிந்தது. உலர்ந்த சருகாய் கண் திறவாமல் கிடந்த மனைவியின் கோலம் நினைவிலாட நெஞ்சம் விம்மியது. அண்ணனின் தோளைப் பற்றி அசைத்தாள் குறிஞ்சி.

"அண்ணா! எவ்வளவு நேரம்தான் இப்படி அழுதிட்டே உட்கார்ந்திருப்ப? கிளம்பு!"

கண்களைத் திறந்தான். "எ... எங்கே?"

"என்ன அண்ணா கேள்வி இது? டாக்டர் சொன்னதைக் கேட்ட இல்ல... போ. போய் அண்ணியோட பேரண்ட்ஸைக் கூட்டிட்டு வா."

"நான்... நான் எப்படி?" - திணறினான்.

"அண்ணா! அவங்களுக்கு ஆயிரம்தான் கோபம் இருந்தாலும் அண்ணியோட உயிருக்கு ஆபத்துங்கிற போது கோபம் போயிடும் அண்ணா. நீ போய் கூப்பிட்டுப் பாரு. உடனே வருவாங்க."

"இல்ல... குறிஞ்சி! என்னோட பிரச்சனையே வேற!"

"அண்ணா! பழசையெல்லாம் மறந்திடு. அவங்க திட்டினாக்கூட அதைப் பொருட்படுத்தாதே. நமக்கு நம்ம அண்ணியோட உயிர் முக்கியம். போண்ணா... போய்க் கூட்டிட்டு வா."

"ஐயோ! குறிஞ்சி உனக்கு நான் எப்படிப் புரிய வைப்பேன்?"

"ஏண்ணா தயங்குற? உன் தயக்கம் எனக்கும் புரியுது. ஆனா இந்த நேரம் அதையெல்லாம் பார்க்கக் கூடாது. நம்ம கௌரவத்தைவிட அண்ணிதான் முக்கியம்."

"எனக்கும் புரியுதும்மா... ஆனா அவங்களை எங்கேன்னு போய் தேடுவேன்? அவங்க யாரு எப்படியிருப்பாங்கன்னு கூட எனக்குத் தெரியாது. எந்த ஊருன்னும் கூடத் தெரியாதே... நான் எங்கேன்னு போய்த் தேடுவேன்? எப்படி என் நீலாவைக் காப்பாத்தப் போறேன்?" - என்றவாறே அவன் குலுங்கி அழ...

உச்சபட்சமாய் அதிர்ந்தாள் குறிஞ்சி.

சரியாகக் கேட்டோமா? அண்ணன் என்ன சொல்கிறான்?



"அண்ணா! என்ன சொல்ற?"

"குறிஞ்சி! உன் அண்ணியைத் தவிர அவ குடும்பத்தில உள்ள யாரையும் எனக்குத் தெரியாதும்மா..."

"எ...ன்...ன?"

"அவளுக்கு அம்மா, அப்பா இருக்காங்களா? எங்கே இருக்காங்க? அவங்க பேர் என்னன்னு கூட எனக்குத் தெரியாது. அவகிட்ட எத்தனையோ முறை கேட்டும் சொல்லவே இல்லை."

"மாதவா! என்னய்யா சொல்ற?" - நல்லசிவமும் பதட்டமாய்க் கேட்க...

"நான் சொல்றதெல்லாம் உண்மைப்பா. சத்தியமா எனக்கு அவளைப் பத்தி வேற எதுவும் தெரியாதுப்பா..." - என்றான் பரிதாபமாய்.

"அண்ணா! எப்படிண்ணா? நீ அண்ணியை விரும்பித்தானே கட்டிக்கிட்ட?"

"ஆமாம்மா... என் மனசார விரும்பித்தான் கட்டினேன்."

"பிறகெப்படி அவங்க ஃபேமிலியைப் பற்றி எதுவும் தெரியாம இருக்கும்?"

"குறிஞ்சி! நான் ஒண்ணும் உன் அண்ணி பின்னால சுத்தி பல வருஷமா விரும்பிக் கல்யாணம் பண்ணிக்கலை."

"பின்னே?"

"ஒரு விபத்துல இருந்து அவளைக் காப்பாற்றி அவளுக்கு வேற போக்கிடமே இல்லைன்னு சொன்னதால நான் நம்ம வீட்டுக்குக் கூட்டிட்டு வந்தேன். ஒரு வயசுப்

பொண்ணை சும்மா கூட்டிட்டு வந்தா ஊர் என்ன சொல்லும். அதனாலதான் வர்ற வழியில ஒரு கோவில்ல வைச்சி தாலியைக் கட்டிக் கூட்டிட்டு வந்தேன்."

மாதவன் சொல்ல குறிஞ்சி உறைந்து போனாள். நம்பவும் முடியாமல் நம்பாமலும் இருக்க முடியாமல் அண்ணனைப் பார்த்தாள்.

"அண்ணா! இதெல்லாம் நிஜமா! எப்படி? எப்பப் பார்த்தே? எங்கே பார்த்தாய்?" - ஆவலும் தவிப்புமாய் கேட்டவளிடம் மாதவன் தவிர்க்க வேண்டியவற்றைத் தவிர்த்து மற்றவற்றைச் சொல்லச் சொல்ல, கேட்டுக் கொண்டிருந்த நல்லசிவமும் குறிஞ்சியும் பிரமித்துப் போயினர்.

'தன் மகன் இத்தனை உயர்வானவனா? என் மகன் மனம் இத்தனை விசாலமானதா? இவனைப் பெற்றெடுக்க என்ன தவம் செய்தேன்?' - நெக்குருகிப் போனார் நல்லசிவம்.

குறிஞ்சியின் மனமோ முற்றிலும் நெகிழ்ந்திருந்தது.

'அண்ணன் மனம் புரியாமல் எத்தனை நாட்கள் எடுத்தெறிந்து பேசிவிட்டேன்! அண்ணியின் மனம் எத்தனை புண்பட்டிருக்கும் என்று புரியாமல் நானும் காயப்படுத்தி யிருக்கிறேனே...

வீட்டிலிருந்து வெளியே வந்து எத்தனை துயரங்களை அனுபவித்திருக்கிறாள்.

அவனுக்குப் பயந்துதான்... அண்ணி வீட்டுக் குள்ளேயே பதுங்கினாளா? இந்தக் குற்ற உணர்வில்தான்



தனக்குள்ளேயே குமைந்து இப்படி மரணத்தோடு போராடு கிறாளா? அப்படியென்றால் அவர்கள் சொன்னது உண்மை. அண்ணி நகைகளோடுதான் வெளியேறி இருக்கிறாள்.

அந்த வஞ்சகனிடம் அனைத்தையும் இழந்து அண்ணனின் தயவால் உயிர் பிழைத்து வந்திருக்கிறாள். அந்தப் பெரிய மனிதர் வாய் கூசாமல் என்னவெல்லாம் சொன்னார்? உண்மை தெரிந்தால் என்ன செய்வார்? என் அண்ணனிடம் மன்னிப்புக் கேட்பாரா?

நிச்சயம் சொல்ல வேண்டும். எல்லாவற்றையும் சொல்ல வேண்டும். அதுவும் அண்ணனே நேரில் சென்று சொல்ல வேண்டும். மனிதாபிமானமே இல்லாத அந்த மனிதர்களுக்கு என் அண்ணனின் உயர்வான மனம் தெரிய வேண்டும். அண்ணனின் முன்னால் அவர்கள் கூனிக் குறுகி நிற்க வேண்டும். அதை நான் பார்க்க வேண்டும்.'

ஆவேசமாய் அண்ணனைப் பற்றி எழுப்பினாள். "அண்ணா! எழுந்திரு. வா... என் கூட!"

"எங்கேம்மா?"

"உன் மாமியார் வீட்டிற்கு?"

"என்ன?" - இப்போது மாதவன் பலமாய் அதிர்ந்தான். "என்னம்மா சொல்றே?"

"அண்ணா! அண்ணி வீடு எதுன்னு தெரியுமா?"

"எ... எது?"

"சுஜாதாவோட புருஷன் வீடு. அவரோட தங்கைதான் அண்ணி!"

"என்ன?" - அதிர்ச்சியாய் தங்கையைப் பார்த்தான் மாதவன்.

"ஆமாண்ணா! அண்ணிக்கு எல்லாருமே இருக்காங்க. ரொம்ப வசதியாவும் இருக்காங்க. ஆனா ரொம்ப கோபமா இருக்காங்க."

"அவங்க கோபத்திலேயும் நியாயம் இருக்கே குறிஞ்சி கண்ணா வளர்த்திருப்பாங்க. அவங்களை உதறிட்டுப் போனா அந்தக் கோபமும் வருத்தமும் வருமே... சரி! இதெல்லாம் உனக்கு எப்படித் தெரியும்? உன் அண்ணி சொன்னாளா!"

"இல்லண்ணா...!"

"அதானே... நான் எத்தனையோ முறை கேட்டும் என்கிட்ட சொல்லலை. உன்கிட்ட கண்டிப்பா சொல்லியிருக்க மாட்டாள். பின்னே உனக்கு எப்படியம்மா தெரிஞ்சது?"

"அண்ணா! நான் இன்னிக்கு ஈவினிங் சுஜாவைப் பார்க்கலாம்னு அவங்க வீட்டுக்குப் போனேன் அண்ணா... அப்பத்தான் தெரிஞ்சது."

"எப்படி? யார் சொன்னாங்க?"

"அண்ணியோட சின்ன அண்ணன் சொன்னார்..." - என்றாள் யுவராஜனின் கோபத்தை நினைத்துக் கொண்டே.

"என்ன? அவங்களுக்கு எப்படித் தெரியும்? நான் போயிருந்தபோது கூட அவங்க தெரிஞ்ச மாதிரி காட்டிக்கலையே... ரொம்ப நல்லபடியா உபசரிச்சாங்களே...!"

"அண்ணா! அண்ணி... சுஜாவோட கல்யாணத்துக்குப் போயிட்டு வந்து எதுவுமே சொல்லலையா...



"இல்லையே!"

"ஆமா! நீங்க ரெண்டு பேரும் ஒண்ணாத்தானே கிளம்பிப் போனீங்க? அங்கே எதுவுமே நடக்கலையா?"

"ஒண்ணாத்தான் போனோம். பட்... நீ கொடுக்கச் சொன்ன பொக்கே எடுத்திட்டுப் போக மறந்திட்டேன். அதை எடுத்துட்டுப் போனபோது நீலா அழுதுட்டே வெளியில வந்தாள்."

"ஏன்னு கேட்டியா?"

"கேட்டேன். உடனே வீட்டுக்குப் போகணும்னு சொன்னா. வேறு எதுவுமே பேசலை. ரொம்ப அழுதாள். உள்ளே யாரேனும் தெரிஞ்சவங்க இருந்து ஏதாவது பேசியிருப்பாங்கன்னு நினைச்சி அவளை மேலும் கஷ்டப்படுத்த விரும்பாம வீட்டுக்குக் கூட்டிட்டு வந்துட்டேன்."

"நீ நினைச்சது சரிண்ணா... ஆனா அண்ணியை அழ வைச்சது யாரோ இல்லை. அவங்களோட அண்ணனும் அப்பாவும்தான்."

"என்ன?"

"நீ இல்லாம அண்ணி தனியா இருந்ததும் அண்ணியை என்னவெல்லாமோ பேசியிருக்காங்க. அம்மாவைப் பார்த்துட்டுப் போறேன்னு கெஞ்சின அண்ணியை ரொம்பத் திட்டி வெளியே அனுப்பிட்டாங்களாம்."

"என்ன?" - மாதவனின் நரம்புகள் முறுக்கேறின. "என் மனைவியை ஊர் கூடி நின்ற இடத்தில் அவமானப் படுத்தினார்களா? அவர்களுக்குக் கோபம் இருந்தால் அதை

என்னிடம்தானே காட்ட வேண்டும். அவளை எப்படி வெளியேற்றலாம்?"

"அண்ணி திரும்பவும் அவங்ககிட்ட ஒட்டிக்க வந்திருக்காங்கன்னு நினைச்சாங்களாம். இன்னிக்கு என்கிட்டயும் இதே மாதிரிதான் சொன்னாங்க. அண்ணா! உனக்கு ஒண்ணு தெரியுமா?"

"என்ன?"

"அண்ணி வீட்டை விட்டு வரும்போது பெட்டி நிறைய பணம் நகையோடு வந்தாங்களாம். அதை நாம விற்று தின்னுட்டு இன்னும் வாங்கிட்டு வான்னு அண்ணியை அனுப்பினோமாம்."

"என்ன?" - இருக்கையை விட்டே எழுந்தான் மாதவன்.

"எங்க அண்ணன் நல்லவன். அண்ணி எதுவும் கொண்டுட்டு வரலைன்னு எவ்வளவோ எடுத்துச் சொன்னேன். அவங்க கேட்கலை. ரொம்ப அசிங்கமாப் பேசிட்டாங்க."

"நீ ஏம்மா அவங்ககிட்ட போய் பேசினே? விஷயம் தெரிஞ்சதும் நேரே என்கிட்ட வந்து சொல்லியிருக்கலாமே! நான் போய் பேசியிருப்பேனே?"

"அண்ணா! அவங்களை உனக்குத் தெரியாதுன்னு எனக்குத் தெரியாதே! அண்ணி எப்பவும் அழுதிட்டே இருக்காங்களே... அவங்களுக்காகப் பேசிப் பார்க்கலாம்னு ட்ரை பண்ணினேன். போன இடத்தில வாக்குவாதமாகிப் போச்சு.

ஆனா கடைசி வரைக்கும் அவங்க மனசு இளகவே இல்லைண்ணா... அண்ணியை



உன்னையும் ரொம்ப இழிவாப் பேசிட்டாங்க. நான் சவால் விட்டு வந்தேன் அண்ணா! என் அண்ணன் உங்க பணம், நகை எதுவும் தொடலைன்னு சொன்னேன். நிரூபிச்சுக் காட்டுறேன்னு சொன்னேன்.

வாண்ணா! எல்லாத்தையும் சொல்லு. அவங்க முகத்தில கரியைப் பூசு. என்னை என்னவெல்லாம் சொன்னாங்க. அவங்களை நிக்க வைச்சு கேள்வி கேட்கணும். வாண்ணா!"

நல்லசிவம் குறுக்கிட்டார். "காலையில போகலாம்மா... இந்த அர்த்த ராத்திரியில போய்ப் பேசினா சரியா இருக்காது."

"ஆமா குறிஞ்சி! அண்ணி தூங்கட்டும். விடிஞ்சதும் முதல் வேலையா நான் போய்ப் பேசுறேன். அவங்களைக் கையோட கூட்டிட்டு வர்றேன்."

"நானும் வர்றேண்ணா...!"

"வேண்டாம்மா... நீ அண்ணிக்குத் துணையா இரு. நானே போறேன். நிறைய பேசணும் நான்..." - என்றவனின் கண்கள் அப்போது தான் தங்கையின் முகத்தைக் கவனித்தது. இடது கன்னத்தில் பட்டையாய்ப் பதிந்திருந்த விரல்கள், கன்றி சிவந்திருந்த கன்னம் தெளிவாய்த் தெரிய... தங்கையின் தோள் பற்றித் திருப்பினான்.

"என்னம்மா இது? சொல்லு! இது யார் செய்த வேலை?" - ஆவேசமாய்க் கேட்டவனிடம் எதையும் மறைக்க இயலாமல் கண்ணீரோடு சொல்ல, கேட்டுக் கொண்டிருந்த மாதவனின் முகம் தீப்பிழம்பாய் மாறியது.

# 16

நினைவில் வைத்துக் கனவில்
காண்பது அல்ல நேசம் - மனதில்
வைத்து மரணம் வரை தொடர்வது
தான் உண்மையான நேசம்!

**பொ**ழுது நன்றாய் விடிவதற்குள் எழுந்து விட்டான் யுவராஜன்.

உடம்பை வாட்டிய கடுங்குளிரைப் பற்றிக் கவலைப் படாமல் மளமளவெனப் புறப்பட்டு அறையை விட்டு வெளியே வரும்போது, அங்கே ஏற்கெனவே தயார் நிலையில் நின்றான் கார்த்திக்.

"அண்ணா! நீ ஏன் இவ்வளவு காலையில எழுந்திட்டே?"

"நானும் உன்கூட வர்றேன் யுவா!"

"என்ன அண்ணா நீ? ரெண்டு பேரும் சேர்ந்து போனா அவனுக்குச் சந்தேகம் வராதா? நான் மட்டும் போறேன். நீ வீட்டில இரு."

"நோ... நோ... என்னால முடியாது. நேத்து நைட்டே போகலாம்னு சொன்னேன். நீதான் கேட்கலை. விடிய விடிய எனக்குத் தூக்கமே இல்லை தெரியுமா?"

"நானும் தூங்கலைண்ணா... சரி வா. அண்ணிகிட்ட என்ன சொல்லிட்டு வந்தே?"

"அவ தூங்கிட்டு இருக்கா. நேற்றே சொல்லிட்டேன்."

"என்ன சொன்னாய்?"



"காலையில எனக்கும் யுவாவுக்கும் முக்கியமான வேலை இருக்கு. வர லேட்டாகும். தேடாதீங்கன்னு சொன்னேன்."

"வெரிகுட் அண்ணா! சரி... வா போகலாம்..." - இருவரும் வெளியேறி காரை நோக்கிச் செல்ல, மாடியின் பால்கனியில் இருந்து கைலாசம் குரல் கொடுத்தார்.

"என்னடா! காலங்கார்த்தால எங்கே கிளம்பிட்டீங்க?"

"போச்சு! யார் கண்ணில படக்கூடாதுன்னு நினைச்சோமோ அவங்க கண்ணில பட்டாச்சு!"

"இப்ப என்ன சொல்றது யுவா?"

"ஏதாவது சொல்ல வேண்டியதுதான். அப்பா! இன்னிக்கு மார்னிங் சூரியோதயத்தை மலைமேல நின்னு பார்த்தா ஆயுள் கூடுமாம்."

"என்ன?"

"ஆமாப்பா! என் ஃபிரண்ட் இப்பத்தான் போன் பண்ணிக் கூப்பிட்டான். அதான் கிளம்பிட்டு இருக்கோம்."

"என்னடா இது? புதுசா இருக்கு. நான் கேள்விப்பட்டதில்லையே!"

"எல்லாமே புதுசாத்தாம்ப்பா நடக்குது. காலத்திற்கேத்த மாதிரி இயற்கையும் கூட மாறுதோ என்னவோ?"

"அது என்னவோ உண்மைதான். சரி... நீங்க மட்டும் ஏன் போறீங்க? எல்லாரும் சேர்ந்தே போவோமே!"

"கெட்டது கதை. அப்பா! எல்லாரும் எழுந்து ரெடியாகி வந்து நாம மலை மேல ஏறுறதுக்குள்ள மதியமாகிடும். அப்புறம் எப்படி சூரிய உதயம் பார்க்கிறதாம்?"

"அதுவும் சரிதான். சரி... ஒரு நிமிடம் வெயிட் பண்ணுங்க. நானும் வர்றேன்."

"அப்பா! நீங்க ஏம்ப்பா அவ்வளவு தூரம்? பேசாம மொட்டை மாடியில நின்னு பாருங்களேன்."

"ஏன்டா! அப்பாவுக்கு ஆயுள் கூட வேண்டாமா?"

"சேச்சே... அதுக்குச் சொல்லலைப்பா... உங்களால மலை மேல ஏற முடியாதேன்னு..."

"உங்களைவிட வேகமாக ஏறுவேன். ஒரே நிமிஷம் வெயிட் பண்ணுங்க. இப்ப வந்திடுவேன்!" - என்றவாறு கைலாசம் சென்று விட, கார்த்திக் அவஸ்தையாய் தம்பியைப் பார்த்தான்.

"இப்ப என்னடா பண்றது?"

"வரட்டும். அப்பாவும் வரட்டும்."

"யுவா!"

"மூணு பேரையும் மொத்தமா பார்த்ததும் நாம கேட்காமலே எல்லாத்தையும் உளறிடுவான் அரவிந்த்!"

"அப்படியா சொல்றே?"

"அவனுக்கு உன் மேல கொஞ்சம் பயம் உண்டு. அப்பா மேல ரொம்பவே பயம் இருக்கு."

"யுவா! அவனுக்கும் நம்ம நீலாவுக்கும் சம்பந்தம் இருக்குமா?"

"சேச்சே! நிச்சயமா இருக்காது. இவன் ஒரு பக்கா வுமனைசர்ன்னு எல்லாருக்கும் தெரியுமே! நீலா இவனைப் பார்க்கக் கூட மாட்டா..."



"பிறகெப்படி அவளோட நகை இவன்கிட்ட போச்சு?"

"நான் நினைக்கிறேன்... அந்த மாதவனுக்கும் இவனுக்கும் ஏதோ தொடர்பு இருக்கு. ஏன்னா... நீலாவோட நகையை மாதவனே அரவிந்த்கிட்ட வித்திருக்கலாமே!"

"இருக்கலாம். ஆனா அந்தப் பொண்ணு அவ்வளவு திட்டவட்டமாச் சொன்னாளே... அதை நம்பாமலும் இருக்க முடியாது யுவா!"

"ம்... எனக்கும் அப்படித்தான் தோணுது. ஆனா தங்கைக்குக் கூடத் தெரியாம மாதவன் இதைச் செய்திருக்கலாமில்லையா? எனக்கு அவன் மேல துளியும் நம்பிக்கையில்லை."

"ஏன்டா?"

"நம்ம வீட்டுக்கே வந்து முழு நேரம் நின்னு டெக்கரேட் பண்ணினானே... நம்மைத் தெரிஞ்ச மாதிரி காட்டிக்கிட்டானா பாரேன். கல்லுளிமங்கன் மாதிரி இருந்தானே...!"

"சரி சரி... அப்பா வந்தாச்சு. அமைதியா இரு!" - ஸ்வெட்டர், மஃப்ளர் எல்லாம் போட்டுக் குளிரை விரட்டியவாறே வந்தார் கைலாசம்.

"போலாமா?"

"போலாம்ப்பா... கார்ல ஏறுங்க..." - என பின்பக்கக் கதவைத் திறந்து விட்டான் யுவராஜன்.

கைலாசம் காரில் ஏற முயன்ற நேரம், அசுர வேகத்தோடு உள்ளே நுழைந்த மாதவனின் ஆம்னி அவர்களை மிக நெருங்கி நின்றது.

மூவரும் சட்டென அதிர்ந்து விலக, காரின் கதவைத் திறந்து கொண்டு இறங்கினான் மாதவன். நான்கு நாட்களுக்கு முன்பு பார்த்த முகத்திற்கும் இன்று பார்க்கும் முகத்திற்கும் நிறைய வித்தியாசம் இருந்தது. மென்மையான முகத்தில் கடுமை கூடியிருந்தது.

எந்தத் தயக்கமும் பதட்டமும் இல்லாமல் அவர்களை நேர்பார்வை பார்த்துக் கொண்டே நெருங்கி வந்தான்.

லேசாய் துணுக்குற்ற போதும் மூவரும் கோபப் பார்வையோடு நிற்க, மாதவன் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டான்.

"என் பெயர் மாதவன்!"

"தெரியும். என்ன விஷயம்? விடியும் முன் வந்து நிற்கிறே?" - அலட்சியமாய்க் கேட்ட கைலாசத்தை கூர்ந்து பார்த்தான்.

"நீங்கதான் நீலாவோட அப்பாவா?"

"ஸாரி! எனக்குப் பொண்ணு கிடையாது. ரெண்டு பசங்கதான்."

"நான் நீலாவோட அம்மாவைப் பார்க்கணும்."

"அப்படி இங்க யாரும் இல்லை."

"சரி... உங்கள் மனைவியைப் பார்க்க முடியுமா?"

"தெருவில் போற வர்றவன்கிட்ட எல்லாம் என் மனைவியை அறிமுகப்படுத்தி வைக்க முடியாது."

"நான் அவங்களைப் பார்த்தே ஆகணும்..." - மாதவன் அழுத்தமாய்ச் சொல்ல, அமைதியாய் நின்ற கார்த்திக் குரல் கொடுத்தான்.



"என்ன விஷயம்? நேற்று உன் தங்கையை நீ அனுப்பினாய். இன்று அவள் உன்னை அனுப்பினாளா? என்ன வேணும் உங்களுக்கு?"

"நான் உங்க அம்மாவைப் பார்க்கணும்..." - தெளிவாய் நிதானமாய்ச் சொன்ன மாதவனை அலட்சியமாய்ப் பார்த்தார் கைலாசம்.

"அவ இங்கே இல்லை."

"எங்கே போயிருக்காங்க?"

"அதை உன்கிட்ட சொல்ல வேண்டிய அவசியம் இல்லை."

"அவசியம் இருக்கு. ஏன்னா அவங்க என் மாமியார்!" - மாதவனின் துணிச்சலான வார்த்தையில் இருவரும் வியந்து நோக்க, கைலாசம் எகிறினார்.

"வாயை மூடுடா... பிச்சைக்கார நாயே! யாருக்கு யார் மாமியார்? இந்த மாதிரி உறவு முறை கொண்டாடிட்டு இந்த வீட்டுப் படியை மிதிக்காதே!"

"நான் ஒன்றும் உங்களிடம் உரிமை கொண்டாடவோ உறவு கொண்டாடவோ இங்கு வரவில்லை. அதற்கான அவசியமும் எனக்கில்லை. என் மனைவி தன் அம்மாவைப் பார்க்க வேண்டும் என்று துடிக்கிறாள். அதற்காக என் மாமியாரை அழைத்துப் போக வந்திருக்கிறேன்."

"என்னடா! புதுசா நாடகம் போட வந்திருக்கியா?"

"எனக்கு அந்தப் பழக்கமெல்லாம் கிடையாது."

"இதோ பார் மாதவா! காலையில வந்து பிரச்சனை பண்ணாதே. நாங்க அவசரமா வெளியே போயிட்டு இருக்கோம். நீ கிளம்பு!"

"மிஸ்டர் யுவராஜன்! உங்களிடம் பேச நிறைய விஷயங்கள் இருக்கிறது. ஆனால் அதற்கு முன் நான் உங்கள் அம்மாவைப் பார்க்க வேண்டும்."

"நான் சொல்லிட்டே இருக்கேன். நீ என்னடா சொன்னதையே சொல்லிட்டு இருக்க...? என்ன திமிரா? வெளியே போடா."

"பெரியவரே! மரியாதை. மரியாதையா பேச கத்துக்கங்க. ஏன்னா எனக்கும் இப்படியெல்லாம் பேச தெரியும்."

"யுவா! போலீஸுக்குப் போன் போடு. வீட்டுக்குள்ள ரௌடி புகுந்து கலாட்டா பண்றான்னு சொல்லு... சீக்கிரம்."

"அப்பா! இப்ப எதுக்கு... போலீஸையெல்லாம்!"

"போன் பண்ணுடா... நம்ம வீட்டில வந்து நம்மகிட்டயே திமிராப் பேசுறான்."

"போன் பண்ணுங்க யுவராஜன்! நானே போலீஸுக்கு போகணும்னுதான் இருந்தேன். எதுக்கும் பேசி பார்க்கலாம்னு வந்தேன். உங்க அப்பாதான் ரொம்ப ஆசைப்படுறாரே... வரச் சொல்லுங்க... போலீஸை... நானும் ஒரு புகார் கொடுக்கணும்."

"எ... என்ன? புகாரா?"

"ஆமா! தன்னோட தோழியைப் பார்த்துக் கல்யாண கிஃப்ட்டை கொடுத்திட்டுப் போகலாம்னு வந்த எ



தங்கையை இந்த வீட்டு ஆம்பிளைங்க அசிங்கமாப் பேசி அவமானப்படுத்தி இருக்கீங்க. எவனோ ஒருத்தன் கை நீட்டி அடிச்சிருக்கீங்க. இதெல்லாம் நான் போலீஸ்ல சொல்லணும். சீக்கிரமாப் போன் பண்ணுங்க..."

"மாதவா! போலீஸ் எல்லாம் எதுக்கு. நாமே பேசி தீர்த்துக்கலாமே... நீங்க என்ன விஷயமா வந்திருக்கீங்க?"

"நான் வந்த விஷயத்தைப் பொறுமையாச் சொல்றேன். இப்போ உங்க அம்மா எங்கே?"

"மா... மாடியில... தூங்கிட்டு இருக்காங்க."

"அப்படியா?" - என்றவன் தன் காரை நெருங்கி ஹாரனை அழுத்தினான். கையை எடுக்காமல் அழுத்திக் கொண்டே இருக்க... செவியைப் பிளக்கும்படியாய் ஒலித்த ஒலியில் மாடி ஜன்னலில் உறக்கம் கலைந்த நிலையில் தாட்சாயிணியின் முகம் தெரிந்தது. சுஜாதா இரவு உடையோடு வெளியே வந்தாள்.

"என்னங்க! என்ன சத்தம்?" - எனக் கணவனை நெருங்கியவள் இன்னும் ஹாரனை அடித்துக் கொண்டே இருந்த மாதவனைக் கண்டதும் முகம் மாறினாள். தொடர்ச்சியாய் ஒலித்த ஒலியில் மரங்களில் துயில் கொண்டிருந்த பறவைகள் துயில் கலைந்து கீச்கீச்... - எனக் கத்திக் கொண்டே கலைந்து சென்றன.

மாடியை விட்டு இறங்கி வேகமாய் போர்டிகோவை நெருங்கி வந்த தாட்சாயிணியைக் கண்ட பிறகே கையை எடுத்தான் மாதவன். சட்டென அந்த இடம் முழுக்க அமைதியாகி விட, மாதவனைக் கண்டு அதிர்வாய் நின்றவளை நெருங்கினான்.

"அம்மா! என்னைத் தெரிகிறதா?"

"தெ... தெரியுது தம்பி!"

"நன்றிம்மா. உங்களுக்கு உங்க பொண்ணைப் பார்க்கணும்னு ஆசை இருக்கா?" - தாட்சாயிணி திடுக்கிட்டு கணவனையும் மகன்களையும் ஒரு பயப் பார்வை பார்த்தாள்.

"என்ன தம்பி கேட்கிறீங்க?"

"என் மனைவி நீலா உங்கள் நினைவில் மனம் நொந்து உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கிறாள். அம்மா அம்மான்னு புலம்புகிறாள். எப்படியாவது உங்களைக் கூட்டிட்டு வரணும்னு டாக்டர் என்னை அனுப்பியிருக்கிறார்."

"என்ன? என் பொண்ணுக்கு என்னாச்சு?" - தாயின் பதட்டம் பிள்ளைகளுக்கும் பரவ, கார்த்திக் பதட்டமாய் மாதவனை நெருங்கினான்.

"மாதவன்! என்ன சொல்றீங்க? நீலாவுக்கு என்ன ஆச்சு?"

"இந்த வீட்டு ஆண்களுக்கு மனசெல்லாம் கல்லாப் போச்சு. மனசுல ஈரத்தோட இருக்கிற ஒரே ஆன்மா இந்த அம்மாதான். அதான் அவங்களைக் கூட்டிட்டுப் போக வந்தேன்."

"ஏய்! என் மனைவியை நீ அழைச்சிட்டுப் போகப் போறியா? தாட்சா! நீ முதல்ல உள்ளே போ."

"என்னங்க... நம்ம பொண்ணுக்கு..."

"பொண்ணே இல்லைன்னு ஆகிப் போச்சு."



"நீங்க வேணா அப்படி நினைக்கலாம். ஆனா என்னால முடியாது. தம்பி! நீங்க சொல்லுங்க. என் பொண்ணுக்கு என்னாச்சி? என் உடம்பெல்லாம் பதறுதே!"

"அம்மா! நீலாவை உடம்பு முடியாம லோட்டஸ் ஹாஸ்பிடல்ல சேர்த்திருக்கேன். கண் திறக்க முடியாம இருக்கா... உங்களைப் பார்க்கணும்னு துடிக்கிறா."

"ஐயோ! நீலா... நீலா..." - தாட்சாயிணி அழ ஆரம்பிக்க... சுஜாதா ஓடி வந்து மாமியாரைக் கட்டிக் கொண்டாள்.

"அண்ணா! என்ன சொல்றீங்க? அண்ணிக்கு என்ன ஆச்சு?"

"சுஜாதா! அண்ணி ரொம்ப சீரியஸா இருக்கா. அவங்க அம்மாவைக் கூட்டிட்டு வந்தாத்தான் குணமாக்க முடியும்னு டாக்டர் சொல்றாரு... நீதான் எப்படியாவது இவங்களைக் கூட்டிட்டுப் போகணும்."

"நான் கூட்டிட்டுப் போறேண்ணா... எந்த ஹாஸ்பிடல்?"

"சுஜா!" - கார்த்திக் அதட்டினான்.

"இதோ பாருங்க. அத்தை நேற்று முழுக்க அழுதிட்டே இருந்தாங்க. நான்தான் பார்த்தேன். நீங்க ஆம்பிளைங்க. வெளியில நாலு இடம் போறீங்க. உங்களுக்கு வருத்தம் தெரியலை... ஆனா அத்தை தினமும் அண்ணியை நினைச்சிட்டு உங்களுக்கெல்லாம் பயந்து வெளியே சொல்லவும் முடியாம எவ்வளவு வேதனைப்படுறாங்க..."

"இந்த வேதனை அவளுக்கு இல்லையே?"

"இருக்கு மாமா. இந்த வேதனை அவங்களுக்கும் அதிகமாவே இருக்கு. அதான் இப்படி ஒரு கணவர் கிடைச்சும் அண்ணியால மனசு நிறைஞ்சு வாழ முடியலை. இப்படி நோயாளியா மாறிட்டாங்க.

ஏங்க! எங்க தங்கைன்னா உயிர் அப்படி இப்படின்னு சொல்வீங்களே? இப்ப அவங்க உயிருக்குப் போராடிட்டு இருக்காங்கன்னு தெரிஞ்ச பிறகுகூட உங்களுக்கு உங்கள் வறட்டுக் கர்வம்தான் பெரிசாப் போச்சா? இதுதான் உங்க ளுடைய பாசமா?"

"சுஜா! நீ..."

"அண்ணா! விடு. அவங்க போகட்டும்..." – யுவராஜன் சொல்ல, தாட்சாயணி தன் மகனை நன்றிப்பெருக்கோடு பார்த்தாள்.

"யுவா!"

"போங்கம்மா... போய்ப் பார்த்திட்டு வாங்க."

"எ... எல்லாரும் போவோமே!"

மாதவன் குறுக்கிட்டான். "இல்லம்மா... நாங்க கொஞ்சம் பேசணும்..."

"என்னப்பா பேசணும்?"

"என் தங்கைகிட்ட நிறைய கேள்வி கேட்டாங்களாம். அதுக்கான பதிலை நான் சொல்லணும்..."

"த... தம்பி!"



"பயப்படாதீங்கம்மா.. எங்க அம்மா என்னை ரொம்ப நல்ல பிள்ளையாக வளர்த்திருக்காங்க. அடுத்தவங்களை நோகடிக்கிற மாதிரி நடந்துக்க மாட்டேன். சுஜாதா! கூட்டிட்டுப் போம்மா. லோட்டல் ஹாஸ்பிடல். ஃபர்ஸ்ட் ஃப்ளோர்ல நூற்று எட்டாம் நம்பர் ரூம்."

"சரிண்ணா..."

"யுவா... கார்த்திக்! அவர் இந்த வீட்டு மாப்பிள்ளைடா. கொஞ்சம் மரியாதையா நடந்துக்கங்க. அப்பாவைப் பேச விடாதீங்க."

"நாங்க பார்த்துக்கிறோம்மா... டிரைவர்! வண்டியை எடு..." – தயாராய் நின்ற ஓட்டுனர் காரில் ஏற, தயக்கமாகவே ஏறினாள் தாட்சாயிணி. கணவரின் மேல் நம்பிக்கை இல்லாமல் அழைத்தாள்.

"என்னங்க! நீங்களாவது வந்திடுங்களேன்."

"அம்மா! நீங்க முன்னால போங்க. நான் எல்லாரையும் கூட்டிட்டு வர்றேன். நீலா கண் விழிச்சதும் தைரியமா இருக்கச் சொல்லுங்க. நான் மத்தவங்களை யெல்லாம் கூட்டிட்டு வர்றேன்னு சொல்லுங்க. டிரைவர் அண்ணே! காரை எடுங்க..." – மாதவன் கனிவாகவே சொல்லி அனுப்ப, கார் புறப்பட்டது.

அது வெளியேறும் வரை அமைதியாய் நின்றவன் மற்றவர்களைப் பார்த்து புன்னகைத்தான்.

"என்ன? இப்படியே வெளியே நின்னு பேசலாமா? இல்லை... உள்ளே போய் உட்கார்ந்து பேசலாமா?"

"நீ என்ன சம்பந்தம் பேசவா வந்திருக்கே... உட்கார்ந்து பேச! என்ன சொல்லணுமோ சொல்லிட்டுக் கிளம்பு. எங்களுக்கு வேலை இருக்கு."

"இதோ பார்! நாங்க ஒண்ணும் உனக்குப் பயந்து அம்மாவை அனுப்பலை. அம்மாவோட வேதனை எங்களுக்குப் புரியுது. கல்யாண மண்டபத்துல வந்திட்டுப் போனவளைக் கண்ணில காட்டலையேன்னு ரொம்ப அழுதாங்க. அதுக்காகத்தான் இப்ப அனுப்பினோம்.

இதை வெச்சு உன்னையும் அவளையும் இந்த வீட்டில சேர்ப்போம்னு கனவு காணாதே! கண்டவங்களையும் சேர்த்துக்க இது ஒண்ணும் மடம் இல்லை... வீடு!"

"ஏன் ஸார்? உங்க வீட்டில வந்து உங்ககூட வாழ ஆசைப்படுறோம்னு எப்படி ஸார் நீங்களே முடிவு பண்ணீங்க? நான் ஒண்ணும் வீடு வாசல் இல்லாதவன் இல்லை. அடுத்தவன் சொத்துக்கு ஆசைப்படுறவனும் இல்லை."

"அடுத்தவங்க சொத்துக்கு ஆசைப்படாமத்தான் எங்க வீட்டுப் பெண்ணை மயக்கிக் கூட்டிட்டுப் போனியா?"

"ஸார்... நான்!"

"அவளுக்காகச் சேர்த்து வைச்ச நகையில ஒண்ணைக் கூட விட்டு வைக்காம எடுத்திட்டு வந்தாளே... உன் தங்கை என்னன்னா... பொட்டுத் தங்கம் இல்லாம வெறும் மஞ்சக் கயிறோடு வந்தாள்ன்னு சொல்றா!"

"அதுதான் ஸார் உண்மை."

"எது?"



"நீலாவை நான் பார்க்கும்போது அவகிட்ட பெட்டியோ... நகையோ கிடையாது. நைந்துபோன புடவையோடு கண் நிறையக் கண்ணீரோடத்தான் பார்த்தேன்."

"என்ன கதை விடுறே?"

"இல்லை ஸார். இதுதான் உண்மை. நீங்கள்லாம் நினைக்கிற மாதிரி உங்க தங்கையை விரும்பி வீட்டை விட்டு அழைச்சிட்டுப் போனது நானில்லை. வேறு யாரோ?" - மாதவன் பொறுமையாய்ச் சொல்ல, கைலாசம் ஆவேசமாய்ப் பாய்ந்தார்.

"என்னடா சொன்னே? எம்பொண்ணை என்னன்னு நினைச்சே? கண்டவன் பின்னாடியும் சுத்துறவன்னு நினைச்சியா?"

"அப்பா! விடுங்கப்பா..." - இருவரும் விலக்கி விட்டனர்.

"மிஸ்டர் மாதவன்! இப்போ என்ன சொல்ல வர்றீங்க?"

"ஸார்! என் மேல உள்ள பழியைப் போக்குறதுக்காக மட்டும் வரலை. நீலா குழந்தை ஸார்! அவ குழந்தைத்தனமா பண்ணின தப்பால அளவுக்கு அதிகமா துன்பப்பட்டுட்டா. அவளுடைய குற்ற உணர்வே அவளைக் கொஞ்சம் கொஞ்சமா கொன்னுட்டு இருக்கு. நீங்க அவ அண்ணனுங்க. உங்களுக்குத் தெரியாதா உங்க தங்கையை...!"

"குற்ற உணர்வா? அவளுக்கா? அது இருந்தா இத்தனை வருஷத்துல ஒரு நாளாவது எங்களைப் பார்க்க வந்திருப்பாளே... செய்த தப்புக்கு மன்னிப்பு கேட்காட்டிக்

கூடப் பரவாயில்லை. என் அம்மா படுத்த படுக்கையா இருக்கும்போது வந்திருக்கலாமே... உத்தமனாட்டம் பேசுறியே... நீ கூட்டிட்டு வந்திருக்கலாமே...!"

"கண்டிப்பா கூட்டிட்டு வந்திருப்பேன் ஸார்! நீலாவோட வீடு இதுதான்னு தெரிஞ்சா கண்டிப்பா கூட்டிட்டு வந்திருப்பேன்."

"என்ன உளர்ற?"

"ஸார்! நேற்று இரவு என் தங்கை வந்து சொல்லும் வரை இதுதான் நீலா வீடு என்று எனக்குத் தெரியாது."

"என்ன?" - மூவரும் ஒரே குரலில் அதிர்ந்தனர்.

"சத்தியமாச் சொல்றேன் ஸார்! நீலா என்கிட்ட தன்னை ஒரு அநாதைன்னுதான் சொன்னாள். இது வரைக்கும் உங்களைப் பற்றி ஒரு வார்த்தை கூடச் சொன்னதில்லை. உங்களுக்கு நம்பிக்கை இல்லைன்னா அவகிட்டயே கேட்டுப் பாருங்க."

"எ... என்ன சொல்ற நீ?"

"ஆமா ஸார். அவளுக்கு இதே ஊர்தான்னு கூடத் தெரியாது. எத்தனையோ முறை கேட்டும் அவ சொல்லலை. இப்பக்கூட என் தங்கை வந்து சொல்லலைன்னா நான் உங்களைத் தேடி நாய் மாதிரி அலைஞ்சிருப்பேன்!" - கைலாசம் தளர்ந்து போக, கார்த்திக் கொதித்துப் போனான்.

"அப்பா! இவன் சொல்றதை நம்பாதீங்கப்பா. அப்பாவி மாதிரி முகத்தை வைச்சிக்கிட்டு எவ்வளவு சாமர்த்தியமா நாடகமாடுறான்? உனக்கு எங்க வீடு தெரியாதா?"



"தெரியாது ஸார்!"

"அப்போ எப்படிப் பொண்ணு கேட்டு வர்றேன்னு சொன்னே? இவகூடச் சேர்ந்து காரில சுத்தினியாமே... அப்பவும் எங்க வீடு தெரியலை! நீதானடா வந்து டிராப் பண்ணுவ?"

"இல்லை ஸார். நான் உங்க தங்கைகூட சேர்ந்து எங்கேயும் சுத்தலை. நான் முதல் முறையா உங்க தங்கையைப் பார்த்தது நவம்பர் மாதம் இருபதாம் தேதி. ஒரு அதிகாலை நேரம். எனக்கு அது இன்னும் நல்லா நினைவிருக்கு.

அப்போ சேகர் ஸார் தோட்டத்தில போலியா பூப்பறிக்கப் போயிருந்தேன். அவர் வீடு மலையடிவாரத்தில இருக்கு. அப்படிப் போயிட்டு இருந்தப்பதான் உங்க தங்கையைப் பார்த்தேன். தற்கொலைப் பாறை மேல ஏறிட்டு இருந்தாங்க."

"என்ன?" - பதறிப் போயினர்.

"நானும் இப்படித்தான் பதறினேன். மேல ஏறிட்டு இருந்தது ஒரு பொண்ணுன்னு தெரிஞ்சது. ஆனா அது கருப்பா சிவப்பா... சின்னப் பொண்ணா... வயசான வங்களான்னு எனக்குத் தெரியாது. அந்த நிமிஷம் எனக்கு அந்த உயிரைக் காப்பாத்தணும்னு மட்டும்தான் தோணிச்சி.

பூப்பறிக்கிற வேலையை போட்டுட்டு வேகமாய் மலை ஓடினேன். அதுக்குள்ள அந்தப் பொண்ணு உச்சிக்குப் போயிடுச்சி. ரொம்பக் கஷ்டப்பட்டு நானும் ஏறினேன். அந்தப் பொண்ணு மலை உச்சியில நின்னு அழுதிட்டே இருந்தது. நான் ஏறினது தெரிஞ்சதும் கீழே குதிச்சிடுச்சி."

"ஐயோ!" - கத்தினான் யுவராஜன்.

"நேரே குதித்திருந்தால் எலும்பு கூட மிஞ்சியிருக்காது. அந்தப் பொண்ணு என்னைப் பார்த்திட்டே விழுந்ததால கொஞ்சம் கிராஸா விழுந்து பாறை இடுக்குல மாட்டிக்கிச்சு. உடம்பெல்லாம் இரத்தம். எப்படியாவது உசுரைக் காப்பாத்திடணும்னு நானும் குதிச்சி அந்தப் பொண்ணை வெளியே எடுத்துப் போட்டேன்.

உயிர் இருந்தது. என்னை விட்டுடுங்க. நான் சாகணும்னு கத்திச்சு. நான் தோள்ல தூக்கிப் போட்டுக் கீழே வந்து ஹாஸ்பிடல்ல சேர்த்தேன். அடி கொஞ்சம் அதிகம்தான். ஆனாலும் உயிரைக் காப்பாத்திடலாம்னு டாக்டர் சொன்னார். அப்பத்தான் ஸார் உங்க தங்கையோட முகத்தையே நான் முதன்முறையா பார்த்தேன்."

"என்ன?"

"அவங்களோட கோலத்தைப் பார்த்து விதவைன்னு நினைச்சேன். கை, கழுத்து எல்லாமே வெறுமையாத்தான் இருந்தது. கணவன் இறந்த துக்கம் தாங்காமத்தான் தற்கொலை முடிவுக்கு வந்திடுச்சோன்னு நினைச்சேன். ஆனா..."

"ஆனா என்ன?"

"ரெண்டு நாள் கழிச்சித்தான் உங்க தங்கைக்கு நினைவு திரும்பிச்சு. ஒரு வாரம் வரைக்கும் ஒரு வார்த்தை கூடப் பேசலை. டாக்டர்ஸ் நர்ஸ்ன்னு எல்லாரும் பேசிப் பார்த்தோம். உங்க தங்கை பேசவே இல்லை. கடைசியில நான்தான் உங்களைக் கொலை பண்ண முயற்சி



பண்றேன்னு சந்தேகப்படுறாங்க... என் மேல கேஸ் போடப் போறாங்க...

தயவு செய்து வாயைத் திறந்து பேசுங்க. இவங்க கிட்ட உண்மையைச் சொல்லுங்கன்னு கெஞ்சினேன். அப்பத்தான் வாயைத் திறந்து பேசினாங்க."

"என்ன பேசினா?" - ஆர்வமும் பரிதவிப்புமாய்க் கேட்டார் கைலாசம்.

"தான் ஒரு அநாதைன்னு சொன்னாங்க. தனக்குன்னு யாருமே இல்லைன்னு சொன்னாங்க. வீடு உறவுன்னு எதுவுமே இல்லாததாலதான் உயிரை விட முடிவு செய்தேன். என்னை யாரும் கொலை செய்யலை. நான்தான் தற்கொலை பண்ணிக்க குதிச்சேன்னு சொன்னாங்க."

"என்ன? எம் பொண்ணு தன்னை அநாதைன்னு சொன்னாளா? கார்த்திக்... யுவா! இதெல்லாம் என்னப்பா? நம்மையெல்லாம் விட்டுட்டு தற்கொலை பண்ணிக்கிற அளவுக்கு அவளுக்கு என்னப்பா நடந்தது? என் கண்ணே!" - கைலாசம் குலுங்கி அழ ஆரம்பித்தார்.

## 17

நிம்மதி! இதை யாரும்
தொலைக்கவில்லை - ஆனால்
இன்று வரை அதைத் தேடிக்
கொண்டே இருக்கிறோம்!

மனம் கலங்கி அழுதவரை ஆறுதலாய்ப் பற்றிக் கொண்டான் கார்த்திக்.

"அப்பா! அழாதீங்கப்பா... அதான் நீலுவுக்கு எதுவும் ஆகலையே... வாங்கப்பா! உள்ளே வந்து உட்காருங்க. மாதவன்! நீங்களும் உள்ளே வாங்க."

"பரவாயில்லை ஸார்! நான் கிளம்பறேன்."

"தம்பி! போயிடாதேப்பா. நான் உன்னையும் உன் தங்கையையும் ரொம்ப அவமதிச்சிட்டேன். தயவு செய்து என்னை மன்னிச்சிடுப்பா!" – கைகூப்பினார்.

"என்ன ஸார் இது? நீங்க போய் மன்னிப்புக் கேட்டுட்டு..."

"எவ்வளவு பெரிய மனசுப்பா உனக்கு? கொஞ்சமும் யோசிக்காம என்னவெல்லாமோ பேசிட்டேனே... உள்ளே வாப்பா. உன்கிட்ட நிறைய பேசணும். என்னால நிற்க முடியலை..."

"மாதவன்! அப்பாவுக்கு பி.பி. இருக்கு. ப்ளீஸ் உள்ளே வாங்க. நாங்க மரியாதைக் குறைவா நடந்துக்கிட்டதுக்கு மன்னிச்சிடுங்க... ப்ளீஸ்!"

"சரி... வாங்க!" – அவர்களுடன் நுழைந்து அவர்கள் காட்டிய இருக்கையில் அமர்ந்து கொண்டான்.

"என்ன சாப்பிடுறீங்க மாதவன்?"

"எதுவும் வேண்டாம். நீலா கண் விழிக்காம எதுவும் சாப்பிடுறதில்லை..."

"மாதவன்! என் தங்கை மேல இவ்வளவு பிரியமா இருக்கீங்களே... எப்படி? உங்களுக்கு அவளை ஏற்கெனவே தெரியுமா?"



"தெரியாது ஸார். எனக்குத் தெரிஞ்சதெல்லாம் என்னோட கடை, பூ மார்க்கெட், கார்டன்ஸ்தான். உங்க தங்கையைக் காப்பாற்றும்போது எனக்கு எந்த உணர்வும் கிடையாது. ஆனா அவங்க யாருமே இல்லாத அநாதைன்னு சொன்னதும் அவங்க மேல இரக்கம் வந்தது.

ஏன்னா நாங்க எங்க அம்மாவை இழந்திட்டுத் தவிச்சு நின்ன சமயம் அது. அப்பாவும் அம்மாவோட நினைவால சுத்திட்டு இருந்த நேரம். அதனால அந்த வார்த்தையோட வலி எனக்கும் புரிஞ்சது. அவங்களுக்கு ஒரு தாயா இருந்து கவனிச்சிக்கிட்டேன். தினமும் ஹாஸ்பிடலுக்குப் போவேன்.

அவங்களுக்கு வேண்டிய உதவியைச் செய்வேன். இது என் தந்தைக்கோ குறிஞ்சிக்கோ தெரியாது. கிட்டத் தட்ட ஒரு மாசம் ஹாஸ்பிடல்ல இருந்தாங்க. நல்லா குணமடைஞ்சதும் அடுத்த பிரச்சனை வந்தது. இனிமே எங்கே போறதுங்கிற பிரச்சனை.

யாராவது சொந்தக்காரங்க இருக்காங்களான்னு கேட்டேன். யாருமே இல்லைன்னாங்க. அப்படியே விட்டுட்டுப் போக மனசில்ல. திரும்பவும் தப்பான முடிவெடுத்திடுவாங்களோன்னு பயம். அதனால என் வீட்டுக்குக் கூட்டிட்டுப் போகலாம்னு முடிவெடுத்து அவங்க கிட்ட சம்மதம் கேட்டேன். முதல்ல மறுத்தாங்க. நான் திரும்பத் திரும்ப வற்புறுத்தினதும்... 'ஓ'ன்னு அழ ஆரம்பிச்சிட்டாங்க. காரணம் கேட்டப்போ சொல்லவே இல்லை. சரி... என்கூட வரத்தான் விருப்பம் இல்லாம அழறாங்கன்னு நினைச்சி விட்டுட்டேன். ஆனா மறுநாள் அவங்களே என்கிட்ட வந்து பேசினாங்க."

"ஏ...ன்ன பேசினா?"

"அது எனக்கும் அவளுக்கும் உள்ள ரகசியம். இதை வெளியே யார்கிட்டயும் சொல்லக் கூடாது. என்னை நம்பி அவ சொன்ன உண்மைகளை நான் வெளிச்சம் போட்டுக் காட்டக் கூடாது. ஏன்னா இது என் மனைவி சம்பந்தப்பட்ட விஷயம்."

"மாதவன்! நாங்க அவ அண்ணன்க... இது அவளோட அப்பா."

"அதனாலதான் ஸார் உங்ககிட்ட இவ்வளவு விபரம் சொன்னேன். நான் இந்த விபரம் சொன்னதே நான் உங்களையோ உங்க தங்கையையோ ஏமாத்தவில்லைன்னு உங்களுக்குச் சொல்லத்தான்.

ஆனா ஒரு விஷயம் உங்ககிட்ட சொல்லியே ஆகணும். நீலா யாரோ ஒருத்தனால ஏமாத்தப்பட்டதாலதான் தற்கொலை செய்துக்க ட்ரை பண்ணியிருக்கா. அந்த நபர் நிச்சயமா உங்களோட உங்க குடும்பத்தோட சம்பந்தப்பட்ட நபர்தான்!" - மாதவனின் உறுதியான குரலில் திகைத்தனர்.

"யா... யாராய் இருக்கும்?"

"அதை இதுவரை என்கிட்ட சொல்லலை. நான் கேட்கும்போதெல்லாம் தப்பு பண்ணிட்டேன். ஏமாந்திட்டேன்னு மட்டும்தான் சொல்லி அழுவா. அவ அழுகையைத் தாள முடியாம நான் கேட்கிறதையே விட்டுட்டேன்."

கைலாசம் பதட்டமாய்த் தன் மகன்களை ஏறிட்டார்.

"ஏம்பா! உங்க நண்பர்கள் யாராவதா இருப்பாங்களோ?"



திடுக்கிட்டு நிமிர்ந்தான் யுவராஜன். அரவிந்தன் கழுத்திலிருந்த செயின், அவனது மழுப்பலான பதில், அவனது முகம் எல்லாம் நினைவு வர இரத்தம் சூடானது. தந்தை அறியாமல் அண்ணனை நோக்க, அவன் மெதுவாய் வாயசைத்துக் கேட்டான்.

"யுவா! அந்த அரவிந்தா இருக்குமோ?"

மருத்துவமனையில் கண்மூடிப் படுத்திருந்தாள் நீலா. லேசான சுவாசம் வெளியாகிக் கொண்டிருக்க, சுத்தமாய் அடையாளம் மாறிப் போயிருந்தாள். தன் கண்களையே நம்ப முடியாத அதிர்வில் மகளைப் பார்த்துக் கொண்டிருந்தாள் தாட்சாயிணி.

பளபளக்கும் நிறமும் பால் வடியும் முகமும் சுத்தமாய் மாறியிருந்தது. கவனிக்காமல் விட்ட பழங்கால சிற்பம் போல் பொலிவிழந்து போயிருந்தாள்.

உடம்பு துரும்பாய் இளைத்துப் போயிருக்க... கண்கள் நிறைய நீரோடு நடுங்கும் கரங்களால் மகளை வருடினாள்.

நீலாவின் உடல் சிலிர்த்தது. முகம் லேசாய் சுருங்கியது.

சுஜாதா குரல் கொடுத்தாள்.

"அத்தே! பேசுங்க அத்தே... உங்க குரல் அவங்களுக்குக் கேட்கட்டும். பேசுங்க அத்தே!"

"ஆன்ட்டி! இப்பக் கொஞ்ச நேரத்துக்கு முன்னால கூட அம்மான்னு முனகினாங்க. கூப்பிட்டுப் பாருங்க ஆன்ட்டி!" - குறிஞ்சியும் சொல்ல, கண்ணீரோடு தலையசைத்தாள்.

மகளின் தலையை வருடிக் கொண்டே குரல் கொடுத்தாள்.

"நீலாம்மா... நீலாக் குட்டி!" - தாயின் குரல் எங்கோ ஒலிப்பதைப் போல் கேட்க, நீலாவின் செவிகள் விறைத்தன. இமைகள் லேசாய் அசைந்தன.

"பேசுங்க... பேசுங்க."

"நீலாம்மா! அம்மா வந்திருக்கேன்டா... கண் விழிச்சுப் பாரம்மா!"

"ம்..." - மெல்லிய குரலோடு கண்களைத் திறக்க முயற்சித்தாள். நல்லசிவம் கடவுளை வேண்டிக் கொண்டார்.

"பேசுங்கம்மா... புள்ள கண்ணைத் திறக்கட்டும்."

"ராஜாத்தி! உனக்கு என்னம்மா பண்ணுது! கண்ணைத் திறக்க முடியலையா? அம்மா வந்திட்டேன்டா... பாரும்மா! அம்மாவைப் பாரு..." - மகளின் முகம் வருட, தலையைத் தூக்கித் தன் மடியில் வைத்துக் கொள்ள நீலாவின் உடல் சிலிர்த்துக் கொண்டது. தாயின் வெது வெதுப்பான மடி தனது பாரத்தையெல்லாம் விலக்கிவிட லேசான முனகலோடு சிரமமாய்க் கண் திறந்தாள்.

அனைவரின் முகமும் புன்னகையோடு கண்ணீரும் பெருக... ஆவலாய் நீலாவை நெருங்கினர்.

"அண்ணி! உங்க அம்மா வந்தாச்சு. எழுந்து பாருங்க'

"அ...ம்..மாவா?"

"ம்... அண்ணன்தான் கூட்டிட்டு வந்தாங்க."



"அம்மா! அம்மாவை அவருக்கு... எப்...படித் தெரியும்?"

"எங்களுக்கு எல்லாமே தெரியும் அண்ணி. நீங்க ஏன் அண்ணி இப்படிப் பண்ணீங்க? ஏன் சாப்பிடாம பட்டினி கிடந்தீங்க? நாங்கள்லாம் எவ்வளவு பயந்து போயிட்டோம், தெரியுமா!"

"நீலாக் கண்ணு! அம்மாவை விட்டுட்டுப் போக உன்னால எப்படிடா முடிஞ்சது? எங்கேயோ ஒரு இடத்தில நீ சந்தோஷமா இருக்கன்னுதானே எங்களை நாங்களே தேத்திக்கிட்டோம். இந்தச் சமயத்தில நீ ஏன்டாம்மா இப்படிப் பண்ணின?"

"அ...ம்...மா! நான் தப்பு பண்ணிட்டேன்ம்மா... உங்களையெல்லாம் விட்டுட்டுப் போனதுக்கு நிறைய தண்டனையை அனுபவிச்சிட்டேம்மா... நிறையவே அனுபவிச்சிட்டோம்..." - கண்ணீர்ப் பெருக்கோடு தாயின் மடியில் முகம் புதைத்தாள். பரிவாய் மகளின் தலை வருடினாள்.

"ஏம்மா அப்படிச் சொல்றே? மாப்பிள்ளை தங்கமானவரா தெரியுறாரே...!"

"ஐயோ! அவர் தெய்வம்மா... அவராலதான் நான் இன்னும் உயிரோடு இருக்கேன். அவரை ஒரு குறை சொல்ல முடியாது."

"பிறகேம்மா... இப்படி உயிரை விடத் துணிஞ்ச?"

"நான் அவருக்குப் பொருத்தமானவ இல்லைம்மா... அவர் தெய்வம். நான்... நான்..."

"அண்ணி! எமோஷனலாகாதீங்க. அமைதியா இருங்க..."

"இல்லை... நான் என் அம்மாகிட்ட பேசணும். ப்ளீஸ்... என்னைப் பேச விடுங்க..." - லேசாய் மூச்சு வாங்கியது.

"சரி அண்ணி! நீங்க பேசிட்டு இருங்க. நான் மெடிக்கல் வரைக்கும் போயிட்டு வர்றேன்."

"குறிஞ்சி! இரு... நானும் வர்றேன்..." - என சுஜாதாவும் எழ, நல்லசிவமும் எழுந்து கொண்டார்.

"நான் கோவிலுக்குப் போயிட்டு மருமக பேர்ல ஒரு அர்ச்சனை பண்ணிட்டு வர்றேன்."

"சரிப்பா... நீ வா சுஜா!" - இருவரும் அறையை விட்டு வெளியேறினர். தாயின் கரத்தைப் பற்றிக் கொண்டாள் நீலா.

"அம்மா! நான் சின்ன வயசில இருந்தே உங்ககிட்ட எதையும் மறைச்சதில்ல... முதலும் கடைசியுமா மறைச்ச ஒரே விஷயம்தான் என்னை இந்த நிலைக்குத் தள்ளி யிருக்கு..."

"என்ன ராஜாத்தி சொல்றே?"

"ஆமாம்மா! நான் யாருக்காக வீட்டை விட்டுப் போனேன்னு இன்னும் யாருக்குமே தெரியாதும்மா... என்... புருஷனுக்குக் கூடத் தெரியாது."

"என்ன? நீலா... நீ என்ன சொல்றே?"

"ஆமாம்மா... நான் வீட்டை விட்டுப் போனது என் புருஷன் கூட இல்ல."



"பின்னே?"

"அண்ணனோட ஃபிரண்ட் அரவிந்த் கூட..." - மகளின் பதிலில் பலமாய் அதிர்ந்தாள் தாட்சாயிணி.

"எ... என்னடி சொல்றே? அந்தப் பொறுக்கிப் பய கூடவா போனே?"

"எனக்குத் தெரியாம போச்சும்மா... அவனோட அழகும் ஜாலியான பேச்சும் தான் தெரிஞ்சதே தவிர, அவனோட உண்மையான குணம் தெரியாமல் போச்சே. அது தெரியாமத்தான் ஏமாந்திட்டேன். நான் ஏமாந்திட்டேன்!" - முகத்தை மூடிக் கொண்டு அழுதவளைத் தேற்றவும் தோன்றாமல் இடிந்து போனாள் அன்னை.

"எனக்குத் தெரியலைம்மா... நல்லது எது கெட்டது எதுன்னு தெரியலைம்மா... அதான் அவன் சொன்னதை யெல்லாம் நம்பினேன். சொல்லிக் கொடுத்த மாதிரி யெல்லாம் பேசினேன். அண்ணன் தட்டிக் கேட்டப்போ கோபப்பட்டேன். ஆனா அது எல்லாமே எவ்வளவு பெரிய தப்புன்னு அன்னிக்கு வீட்டை விட்டு போனப்புறம்தாம்மா தெரிஞ்சது."

"நீ... நீலா! என்ன சொல்றே? என்ன நடந்தது? அவனை நம்பிப் போனவ எப்படி இந்தப் புள்ளையைக் கட்டிக்கிட்ட?"

"சொல்றேம்மா...! உங்ககிட்ட சொல்லணும். அதுக் காகத்தான் இந்த உயிர் இன்னும் போகாம இருக்கு. அன்னிக்கு நைட் நடந்த வாக்குவாதத்தில அப்பா அவனைப் பெண் கேட்டு வரச் சொன்னதும் ரொம்ப உற்சாகமா அவனுக்குப் போன் பண்ணினேன். ஆனா... அவன்..."

"அர்வி! உங்களுக்கு ஒரு குட் நியூஸ்."

"என்னடா செல்லம்?"

"நீங்களே கண்டுபிடிங்க... பார்க்கலாம்!"

"ம்... இந்த நேரம் போன் பண்ணி புதிர் போட்டா எப்படி? நான் தூக்கக் கலக்கத்தில இருக்கேன். நீயே சொல்லிடு."

"உங்க மூளையைக் கொஞ்சம் யூஸ் பண்ணுங்களேன், டியர்!"

"ஸாரிடா! நான் இப்போ வேற மூடுல இருக்கேன். ப்ளீஸ் டோண்ட் டிஸ்டர்ப் மீ யா?"

"டெய்லி இதையேதான் சொல்றீங்க... அப்படி என்னதான் பண்ணுவீங்க?"

"நீ சின்னப் பொண்ணு. உனக்குச் சொன்னாப் புரியாது."

"யாரு... நான் சின்னப் பொண்ணா?"

"ஆமா! உன் வீட்டில எல்லாரும் அப்படித்தானே சொல்றாங்க."

"நான் கடைக்குட்டில்ல... அதான் செல்லமாக் கூப்பிடுவாங்க."

"சரி... மேட்டருக்கு வா. ஏன் இவ்வளவு லேட் நைட்ல போன் பண்ணினே?"

"அர்வி! இன்னிக்கு எங்க வீட்ல காரசாரமான வாக்குவாதம் நடந்தது... நம்மைப் பத்தி!" - சிரித்துக்



கொண்டே நீலா சொல்ல... அரவிந்தனின் கிறக்கம் சுத்தமாய் இறங்கியது.

"ஹேய்! என்ன சொல்றே?"

"ம்... நம்ம மேட்டர் ஒரு முடிவுக்கு வந்தாச்சு. நீங்க நாளைக்கே பெண் கேட்டு வரணும்னு கிரீன் சிக்னல் காட்டிட்டாங்க..." - மறுமுனையில் அரவிந்தனிடம் சிறிதும் அசைவில்லை.

"என்ன அர்வி! நான் எவ்வளவு சந்தோஷமான விஷயம் சொல்றேன். உங்ககிட்ட எந்த ரியாக்ஷனும் இல்ல!"

"நீலு! நான் யாருன்னு உங்க வீட்டில சொல்லிட்டியா?" - அவனது குரலில் நடுக்கம் தொனித்தது.

"சேச்சே! உங்க வார்த்தையை மீறுவேனா? அது சஸ்பென்ஸ்ன்னு சொல்லிட்டேன். நாளைக்கு நீங்க வந்து நின்னதும் எல்லாரும் ஷாக்காகி நிற்கப் போறாங்க... பாருங்களேன்."

"ஆமாமா! கண்டிப்பா ஷாக்காகிடுவாங்க..." - நிம்மதியாய்ச் சொன்னான்.

"அர்வி! நாளைக்கு எப்போ வர்றீங்க? நான் எல்லார் கிட்டயும் சொல்லணுமே?"

"நீலு! இன்னும் குழந்தையாவே இருக்கியே... உனக்கு உன்னைச் சுத்தி என்ன நடக்குதுன்னே தெரியலையே?"

"என்ன அர்வி... ஏதோ மாதிரி பேசறீங்க?"

"உண்மைதான்டா செல்லம். நீயும் நானும் கல்யாணம் பண்ணிக்கவே முடியாது."

"ஏன்?" - திடுக்கிட்டவளின் குரல் பிசிறியது.

"நீலு! உன் வசதி என்ன என் வசதி என்ன? நான் வெறும் குத்தகைக்காரன்தானே! எனக்குன்னு ஒரு அடி நிலம்கூட கிடையாது. என்னை எப்படி உங்க வீட்டில ஏத்துப்பாங்க?"

"அர்வி! என்ன சொல்றீங்க? அப்போ... அந்தக் கார்டன், வீடு எல்லாம் உங்களது இல்லையா?"

"இல்லைடா... இதோட ஓனர் ஃபாரின்ல இருக்கார். நான் சும்மா ஒரு காவல்காரன் மாதிரிதான். எல்லாம் அனுபவிச்சுக்கலாம். ஆனால் சொந்தம் கொண்டாட முடியாது."

"என்ன அர்வி இது? எத்தனை நாள் உங்க வீட்டுக்கு வந்திருக்கேன். ஒருவாட்டிகூட நீங்க இதைச் சொல்லவே இல்லையே?"

"சொல்லியிருந்தா...!"

"சொல்லியிருந்தா... எனக்கு இவ்வளவு ஏமாற்றமா இருந்திருக்காதே...!"

"அப்போ இந்த வீட்டைப் பார்த்துதான் விரும்பினியா? என்னை விரும்பலையா?" - அரவிந்தனின் குரல் உயர, பதறினாள்.

"ஐயோ அர்வி... நான் அப்படிச் சொல்லலை... எனக்கு நீங்கதான் முக்கியம். சொத்து என்ன பெரிய சொத்து... என்கிட்ட இல்லாத சொத்தா?"

"நிஜமாவே நீ என்னை விரும்பு...



"என்ன இப்படிக் கேட்கிறீங்க? உங்களை என் உயிரா நினைச்சிட்டு இருக்கேன்."

"இப்பவும் விரும்புறியா?"

"எப்பவும் விரும்புவேன். உங்களை மட்டும்தான் விரும்புவேன்."

"இது போதும்டா செல்லம். நான் சொல்ற மாதிரி செய்யுறியா?"

"என்ன செய்யணும்? அப்பாகிட்ட சொல்லி உங்க பேர்லயே அந்த இடத்தை வாங்கித் தந்திடவா?"

"வேண்டாம் செல்லம். என்கிட்ட திறமை இருக்கு. நான் உழைச்சி இதைவிட பெரிய இடத்தைக்கூட வாங்கிடுவேன். ஆனா அதுக்கு உன் உதவி வேணும்..."

"என்ன செய்யணும் அர்வி?"

"எது சொன்னாலும் செய்வியா?"

"கண்டிப்பா... நீங்க என்ன சொன்னாலும் கேட்பேன்."

"அப்போ இன்னிக்கே வீட்டை விட்டுக் கிளம்பி வந்திடு!" - அரவிந்தன் வெகு சாதாரணமாய்ச் சொல்ல, துள்ளியமாய் அதிர்ந்தாள் நீலா. "எ...ன்...ன?"

"நீலும்மா... உனக்கே தெரியாம உன் வீட்டில உனக்கு மாப்பிள்ளை பார்த்து முடிவு பண்ணிட்டாங்க. இதை உன் அண்ணன்தான் என்கிட்ட சொன்னான்."

இன்னும் பலமாய் அதிர்ந்தாள். "என்ன சொல்றீங்க அர்வி?"

"ஆமாம்டா செல்லம். வேணும்னா... உன் சின்ன அண்ணன்கிட்ட கேட்டுப் பார்."

"இல்ல... இப்பத்தானே உங்களைப் பெண் கேட்டு வரச் சொல்லுன்னு சொன்னாங்க..."

"அது உன்னைச் சமாதானப்படுத்தறதுக்கு. ஆனா... உனக்கே தெரியாம எல்லாம் பேசி முடிச்சிக் கல்யாண தேதி கூட குறிச்சிட்டாங்க. அது தெரியுமா உனக்கு?"

"நோ... நோ. நான் இப்பவே போயி அப்பாகிட்ட..."

"வெயிட்... வெயிட். அவசரப்படாதேடா... காரியமே கெட்டுடும்."

"அர்வி?"

"இதோ பார் நீலு! அவங்க எப்படி உனக்கே தெரியாம உன்னை ஏமாத்துறாங்களோ... நீயும் அதே மாதிரி அவங்களை ஏமாத்திடு. இன்னிக்கு முழுக்க நல்ல பிள்ளையா இருந்திட்டுக் காலையில புறப்பட்டு வந்திடு."

நீலாவின் குரல் நடுங்கியது. "அர்வி! எதுக்காக... இப்படிப் பண்ணணும்? இது தப்பில்லையா?"

"அவங்க பண்றது மட்டும் நியாயமா? அது தப்பில்ல...?"

"த... தப்புதான்."

"தப்புக்கு தப்புதான் சரியாகும். நான் சொல்ற மாதிரி கேட்டா உனக்குக் கிடைப்பேன். இல்லேன்னா நீ உன் வழியைப் பார்த்துட்டுப் போ. நான் என் வழியைப் பார்த்துட்டுப் போறேன்."



"என்னங்க அர்வி! இப்படியெல்லாம் பேசுறீங்க?"

"நீதான் பேச வைக்கிற! என்ன சொன்னாலும் கேட்பேன்னு சொன்னியே... அதைல்லாம் சும்மா சினிமா டயலாக்கா?"

"அர்வி! கோபமாப் பேசாதீங்க. எனக்குப் பயமா இருக்கு..." – நீலாவின் குரல் நடுங்கியதும் சட்டென இறங்கி வந்தான்.

"ஸாரிடா... உன்கிட்ட கோபப்பட எனக்கு மட்டும் ஆசையா என்ன? எங்கே உன்னை இழந்திடுவேனோங்கிற பயம்தான். நீ என்னை நம்பலை இல்ல!"

"நம்புறேன் அர்வி!"

"அப்போ நான் சொல்ற மாதிரி செய். வேற வழியே இல்லை."

"எப்படி அர்வி? அண்ணனை... அம்மாவையெல்லாம் பார்க்காம என்னால ஒரு நாள் கூட இருக்க முடியாதே!"

"நாம என்ன வெளிநாடா போகப் போறோம். நீ கிளம்பி வா. நாளைக்கே ஏதாவது ஒரு கோவில்ல வைச்சுக் கல்யாணத்தை முடிச்சிட்டு உங்க அம்மா அப்பா கால்ல போய் விழுவோம்! அப்புறம் அவங்க நம்மை ஏத்துக் கிட்டுத்தானே ஆகணும்!"

"இது... இதெல்லாம் சரியா வருமா?"

"எல்லாம் சரியா வரும். நீ மட்டும் நான் சொல்ற மாதிரி செய். உன் டிரெஸ் நகை எல்லாம் ஒரே பெட்டியில எடுத்து வைச்சிட்டு வெயிட் பண்ணு. நான் வந்து உன்னைப்

பிக்-அப் பண்ணிக்கிறேன். உனக்குச் சொந்தமான பொருள் எதையும் விட்டுடாதே!" - என வரிசையாய் சொல்லிவிட்டு... நீலா பதில் பேச வாய்ப்பளிக்காமல் போனை வைத்து விட்டான்.

நீலாவுக்கு உறக்கம் சுத்தமாய் மறைந்து போனது. இரவு முழுக்க பலவிதமாய் யோசித்து இறுதியில் தவறான வழியே சரியென்று எண்ணி இருள் விலகும் முன் புறப்பட்டுப் போயே விட்டாள்.

யாரும் தன்னைத் தேடக்கூடாது என்று கடிதமும் எழுதி வைத்து விட்டு வெளியே வர... சரியாக வந்து விட்டான் அரவிந்த்.

மனம் கனக்க.. அவனது காரில் ஏறியவள், அது சென்று நின்ற இடத்தைக் கண்டதும் பயந்து போனாள்.

"என்ன அர்வி இது? வீட்டுக்குக் கூட்டிட்டு வராம லாட்ஜுக்குக் கூட்டிட்டு வந்திட்டீங்க?"

"அறிவிருக்கா உனக்கு? வீட்டுக்குப் போனா நேரே உன் அண்ணன் தேடி வந்திட மாட்டானா?"

"அண்ணனுக்கு எப்படித் தெரியும்?"

"நீலு! இப்படி நொய்நொய்ன்னு கேள்வி கேட்காதே. சந்தேகப்படுவானுங்க... பேசாம வா!" - பற்களைக் கடித்துக் கொண்டே அவன் பேச, பயத்துடன் வாயை மூடிக் கொண்டு சென்றாள். ரூமை அடைந்ததும் கதவைப் பூட்டினான்.

"நீலு! நீ படுத்து ரெஸ்ட் எடு. நான் ஒரு பத்து மணிக்கா வர்றேன். பக்கத்தில உள்ள கோயில்ல போய் கல்யாணம் பண்ணிக்கலாம்."



"என்னைத் தனியாவா விட்டுட்டுப் போறீங்க? நானும் வர்றேன்."

"முட்டாள்தனமா பேசாதே! உன்னைக் கூட்டிட்டுப் போனா ரெண்டு பேருமே மாட்டிப்போம். நீ பேசாம இரு. நான் சீக்கிரம் வந்திடுறேன். என்ன?"

"ச... சரி!"

"மாலை, தாலி, பட்டுப் புடவையெல்லாம் வாங்கணுமே... பணம் எதுவும் எடுத்துட்டு வந்தியா?"

"ம்... இருக்கு..." - என்றவள்... வெகுளியாய் பெட்டியைத் திறக்க உள்ளே இருந்த பணமும் நகையும் கண்ணைப் பறித்தது. அரவிந்தன் முகத்தில் தெரிந்த பேராசையைக் கவனிக்கத் தவறினாள் நீலா.

"எவ்வளவு வேணும் அர்வி?"

"ஏய் நீலு! பெட்டியை மூடு. மூடு... சொல்றேன்.!" - அவசரமாய் மூடினான்.

"ஏன் அர்வி?"

"இவ்வளவு பணம் இருக்கிறது தெரிஞ்சா பிரச்சனை ஆகிடும். திருட்டுப் பொருள்ன்னு நினைச்சி போலீஸ்ல மாட்டி விட்டுடுவாங்க..."

"யாரு?"

"இ... இந்த லாட்ஜ்ல உள்ளவங்கதான்!"

"எதுக்கு? இது நம்ம பணம்தானே!"

"அது உனக்கும் எனக்கும் தானே தெரியும். அவங்களுக்குத் தெரியாதே!"

"இப்ப என்ன பண்றது அர்வி?"

"இந்த சூட்கேஸை நான் வீட்டுக்கு எடுத்துட்டுப் போறேன். இங்க இருந்தா கோவிலுக்குத் தூக்கிட்டு அலைய முடியாது. நான் வீட்டில வைச்சிடுறேன். கல்யாணம் முடிஞ்சதும் நம்ம வீட்டுக்குத்தானே போறோம்."

"சரி..." - தலையாட்டியவளைக் கூர்ந்து பார்த்தான். கண்கள் மேலும் விரிந்தன.

"ஏய் நீலு! இவ்வளவு நகையைப் போட்டுட்டு லாட்ஜல தனியா இருக்க வேண்டாம். திருடு போயிடும். அதையும் கழற்றி வை..." - என மொத்த நகையையும் கழற்றித் தானே பத்திரப்படுத்தினான். காதிலிருந்த கம்மலைக் கழற்ற முயன்றவனைத் தடுத்தாள்.

"அர்வி! பொண்ணுங்க காதுல கம்மல் இல்லாம இருக்கக் கூடாதுன்னு அம்மா சொல்வாங்க. இது மட்டும் இருந்துட்டுப் போகட்டுமே?"

"அ...ப்படியா! சரி... எதுக்கும் ஜாக்கிரதையா இரு!" - என்றவன் பெட்டியோடு புறப்பட நடுங்கும் கரத்தால் அவனைப் பற்றிக் கொண்டாள்.

"அர்வி! எனக்கு இந்த மாதிரி இடங்களுக்கெல்லாம் வந்து பழக்கமில்ல... பயமா இருக்கு... சீக்கிரம் வந்திடுங்க."

"நீ கண்ணை மூடிட்டுப் படு. நான் சீக்கிரம் வந்திடுறேன். அப்புறம் டிபன் எல்லாம் ரூமுக்கே வந்திடும். சாப்பிட்டுக் குளிச்சிட்டு ரெடியா இரு... என்ன?"

"ம்..." - அவன் வெளியேறியதும் கதவைப் பூட்டிவிட்டுக் கொட்டக் கொட்ட விழித்துக் கொண்டு



அமர்ந்திருந்தாள். காபியோடு டிபன் வந்தது. கடிகார முள் நிற்காமல் ஓடிக் கொண்டிருக்க மதிய உணவும் வந்தது. சாப்பிட மனமின்றி திருப்பி அனுப்பினாள்.

பொழுது சாயத் துவங்கியதும் உடல் உதற ஆரம்பித்தது. காலையில் போனவனை இன்னும் காணவில்லையே! இன்னுமா தாலி வாங்குகிறான். ஐயோ! மாட்டிக் கொண்டானா? இப்போது என்ன செய்வது? போனைக் கூட வீட்டிலேயே வைத்து விட்டேனே... கீழே இறங்கிப் போக பயமாய் இருந்தது.

அப்படியே போனாலும் போன் செய்ய... ஒற்றை ரூபா கூட கையில் இல்லை. என்ன செய்வது? உடலும் உள்ளமும் பயத்தில் உதற... உடல் கொதிக்க ஆரம்பித்தது. நிற்க இயலாமல் கட்டிலில் சுருண்டபோது கதவு தட்டப்பட்டது. பயமும் ஆவலுமாய் கதவைத் திறந்தவள் மிரண்டாள்.

அரவிந்தன் கண்ணில் வழியும் போதையோடு நின்று கொண்டிருந்தான். நடையில் ஒரு தள்ளாட்டம் தெரிந்தது. அவனைக் கண்டதும் எழுந்த உற்சாகம் அவன்மீது வீசிய நாற்றத்தால் சட்டென மறைந்தது. "அர்வி! என்ன இது? நீங்க குடிச்சீங்களா?" - எனக் கேட்டவளைத் தன்னோடு சேர்த்து அணைத்தவாறே படுக்கையை நெருங்கினான். நீலாவின் பெண்மை சட்டென விழித்துக் கொள்ள அவனைப் பலமாய் உதறினாள்.

"என்ன அர்வி இது? கொஞ்சமும் டீஸன்ஸி இல்லாம?"

"நமக்குள்ள என்ன நீலு? நாமதான் கல்யாணம் பண்ணிக்கப் போறோமே!"

"அதுக்காக... இதெல்லாம் எனக்குப் பிடிக்காது. நான் கேட்கிறதுக்குப் பதில் சொல்லுங்க. குடிச்சீங்களா?"

"யெஸ்... இது இல்லாம என்னால ஒரு நாள் கூட தூங்க முடியாது நீலு. வா டியர்! நான் ரொம்ப நல்ல மூடுல இருக்கேன்..." - என மீண்டும் தோளைப் பற்றி இழுக்க... ஆத்திரமாய் அவனது கன்னத்தில் ஓங்கி அறைந்தாள்.

எதிர்பாராமல் விழுந்த அறையில்... தடுமாறி கட்டிலில் விழுந்தவன் கோபமாய் எழுந்தான்.

"இப்ப ஏன் என்னை அறைஞ்ச?"

"உங்க போதை தெளியட்டும்னுதான். கல்யாணத்துக்குத் தாலி வாங்கிட்டு வர்றேன்னு போனீங்களே... என்ன ஆச்சு?"

"அதுவா? உங்க வீட்டில ஒரே களேபரமாயிடுச்சி. அதான் கூடமாட நின்னு உதவி செய்ததுல டயமாகிப் போச்சு... என் மேல யாருக்கும் சந்தேகம் வரக்கூடாதுல்ல..."

நீலா பதறினாள். "வீட்டில என்ன ஆச்சு? எல்லாரும் தேடுறாங்களா?"

"எங்கே தேடுறது? எல்லாரும் இப்ப ஹாஸ்பிடல்ல இருக்காங்க..."

"எ...ன்...ன? ஏன்?"

"உன் அம்மாவுக்கு ஹார்ட் அட்டாக் வந்திடுச்சி. ஹாஸ்பிடல்ல சேர்த்திருக்காங்க..."

"ஐயோ! இதை ஏன் முதல்லயே சொல்லலை. நான் உடனே போகணும்..."



"நில்லு நீலு! கல்யாணத்திற்கு எல்லாம் ரெடி பண்ணிட்டேன். விடிஞ்சாக் கல்யாணம். அது முடிஞ்ச பிறகு போய் ஆசீர்வாதம் வாங்கலாம்."

"நோ... நான் இப்பவே போகணும். அம்மாவைப் பார்க்கணும்." - வேகமாய் வாசலை நெருங்கியவளைத் தடுத்தான்.

"நீ இரு. நான் போய் கார் பிடிச்சிட்டு வர்றேன். சேர்ந்தே போகலாம். கதவைப் பூட்டிக்க..." - என்றவன் கதவில் இருந்த சாவியை உருவிக் கொண்டு வெளியேறினான்.

வெளியே கதவு பூட்டப்படுவதைக்கூட உணராமல் தாயின் நினைப்பில் அழுது கொண்டு நின்றாள் நீலா. நேரம் கடந்து கொண்டே இருக்க.. கார் அழைத்து வரச் சென்றவன் திரும்பி வரவேயில்லை.

பரபரவென எழுந்து சாவியைத் தேடினாள். கதவில் இருந்த சாவி காணாமல் போயிருந்தது.

## 18

நிஜங்கள் ஆயிரம் இருந்தாலும்
நினைவுகள் ஒன்றை மட்டும்
நேசிப்பதே நிஜமான வாழ்க்கை!

**வெ**குநேரம் ஆனபின்னே நீலாவிற்கு உறைத்தது. அரவிந்தனின் பேச்சும் நடவடிக்கைகளும் நினைவுக்கு வந்து பயத்தை ஏற்படுத்தியது. இதுநாள் வரையிலும் செல்லம் என்ற வார்த்தையைத் தவிர வேறு எதையும் உச்சரிக்காதவன் இன்று வித்தியாசமாய்ப் பேசுகிறானே?

இது இல்லாமல் ஒரு நாள் கூட இருக்க முடியாது என்றால்... அவன் ஒரு குடிகாரனா? அதனால்தான் இரவில் போன் பண்ணினால் சரியாகப் பேசுவதில்லையோ? பிஸியாக இருக்கேன். பிறகு பேசுவோம் என்பானே...

அது என்ன பிஸி? எத்தனை உரிமையாய் தன்னைப் படுக்கைக்கு அழைத்தான்.

அவனது பிடியில் நடுக்கமோ தயக்கமோ இல்லையே! அலட்சியம்தானே தொனித்தது. அப்படியென்றால் இதுவும் அவனுக்கு ஒன்றும் புதிதில்லையோ! நான் ஏமாந்து விட்டேனா? இவனைப் பற்றி எதுவும் தெரியாமல் வெளியே வந்தது எத்தனைப் பெரிய தவறு என்பதை உணர்ந்தபோது நேரம் நள்ளிரவைக் கடந்தது.

இதற்கு மேலும் வரமாட்டான் என்பது தெளிவாய் புரிந்துவிட... பயத்தில் ஏமாற்றத்தில் தாயை எண்ணி தனியே இருந்து அழுதாள். விடியும் வரை அழுதுகொண்டே இருந்தாள். ஆனால் விடிந்து வெகுநேரமான பின்னும் அவன் வரவில்லை.

எப்படியும் காபி, டிஃபன் வரும். அப்போது வெளியேறி விடலாம் என்ற எதிர்பார்ப்பிலும் மண் விழுந்தது. அறையின் கதவு திறக்கப்படவே இல்லை. இந்தச் சாவி எங்கே போயிற்று? இரவெல்லாம் தேடியும் கிடைக்காத சாவியை மீண்டும் தேடி ஏமாற்றமாய் சோர்ந்து சுவரோடு சாய்ந்து அமர்ந்தாள்.

கதவைப் பூட்டி சாவியை எடுத்துக் கொண்டு போய்விட்டானா? அதைக் கூட

ஐயோ! இப்போது எப்படி வெளியே போவது? கதவை அடைந்து படபடவெனத் தட்டினாள்.

"யாராவது வாங்களேன்! நான் உள்ளே இருக்கேன். கதவைத் திறந்து விடுங்களேன். ப்ளீஸ்... ஹெல்ப் மீ!" - குரல் கொடுத்து கத்தி தொண்டைத் தண்ணி வற்றிப் போனதுதான் மிச்சம். ஒருவரும் வரவில்லை.

தன்னிலை உணர்ந்து கதறியழ ஆரம்பித்தாள். தன் குடும்பத்தாரை எண்ணி தன் தாயை எண்ணி... தன் அவசரத்தை எண்ணி அழுதழுது கரைந்தபோது கதவை யாரோ திறக்கும் ஓசை கேட்டது. அரவிந்தாகத்தான் இருக்கும் என்று ஆவலாய் ஓடினாள். ஆனால் வந்து நின்றது வேறு ஒருவன்.

குழப்பமாய் அவனை ஏறிட்டாள் நீலா. "யார் நீங்க?"

"இது நான் கேட்க வேண்டிய கேள்வி. நீ யாரும்மா?"

"நான்... நான்... நீலா!" - தயக்கமாய்ச் சொல்ல, வந்தவனின் முகம் மலர்ந்தது.

"ஓ! கிரி அனுப்பிய ஆளா? நைட்தானே அனுப்புறதா சொன்னான். இவ்வளவு சீக்கிரம் வந்திட்டே!"

"இல்ல... நான்... நேற்றே வந்திட்டேன். இது நான் தங்கியிருக்கிற ரூம்."

"என்னம்மா இது? இப்பத்தான் சாவியை வாங்கிட்டு வர்றேன். ஆமா சாவி எங்கிட்ட இருக்கு. நீ எப்படி உள்ளே வந்தே?" - என்றவாறே அவன் உள்ளே நுழைய உடல்

"ஸ... ஸார்! என்னை உள்ளே வைச்சிப் பூட்டிட்டுப் போயிட்டான். நான் வீட்டுக்குப் போகணும்!" – என்றவாறே வெளியேற முயன்றவளின் கையை எட்டிப் பிடித்தான் அவன்.

"என்னம்மா... தொழிலுக்குப் புதுசா?"

"எ...ன்ன... தொழிலா? என்ன தொழில்?"

"சரிதான். படிச்ச புள்ள. பக்குவமாத்தான் டீல் பண்ணனும். வா. இப்படி உட்கார்!" – என்றவாறு கட்டிலைக் காட்டினான்.

"கையை விடு. அம்மாவுக்கு உடம்பு சரியில்ல... நான் போகணும்."

"என்ன விளையாடுறியா? கைநீட்டி காசு வாங்கல்ல... பிறகென்ன அம்மாவுக்கு உடம்பு சரியில்ல... ஆட்டுக்குட்டிக்கு உடம்பு சரியில்லைன்னு நழுவுற... வா."

"விடுடா கையை. நான் எங்கே உன்கிட்ட காசு வாங்கினேன்?"

"அதான் உன் ஏஜெண்ட் கிரிகிட்ட கொடுத்தேனே! முழுசா ரெண்டாயிரம் தந்திருக்கேன். அடம் பிடிக்காம வா..." – அவன் என்ன பேசுகிறான் என்று புரியாவிட்டாலும் எந்த நோக்கத்தில் அழைக்கிறான் என்பது புரிய, நெருப்பு தீண்டினாற்போல் துள்ளி விலகினாள்.

நேற்று இரவு அரவிந்தனின் கண்களில் தெரிந்த அதே வெறி இவன் கண்ணிலும் தெரிகிறதே! இவன் தப்பானவன். இவனிடம் மாட்டிக் கொள்ளக் கூடாது என மூளை எச்சரிக்க... வாசலை நோக்கி ஓடியவளை இறுகப் பற்றிக் கொண்டு கதவைச் சாத்தினான். திமிறினாள்.



"என்னை விட்டுடு. நான் போகணும். அம்மாவைப் பார்க்கணும்."

"போகலாம் வா. உன்னை என் கூடவேயா வைச்சுக்கப் போறேன். வா..." – என இழுக்க, உயிரே போவதைப் போல் அலறினாள் நீலா. அறைக்கதவு தட்டப்பட, சட்டென அவளது கையை விட்டான் அவன்.

வில்லில் இருந்து புறப்பட்ட அம்பு போல் வாசலை நோக்கி ஓடினாள்.

கதவு திறக்கப்பட்டதும் வெள்ளைச் சீருடையில் ஹோட்டல் பணியாளன் நின்று கொண்டிருந்தான். கையில் புதிய பெட்ஷீட், தலையணை உறை.

அவனைக் கண்டதும் ஓடிச் சென்று அவன் பின்னால் நின்று கொண்டாள்.

"அண்ணே! நான் வீட்டுக்குப் போகணும். இந்த ஆள் என்னை விடமாட்டேங்கிறான். ப்ளீஸ்! ஹெல்ப் பண்ணுங்க அண்ணா!" – கைகூப்பி அழுதவளைக் குழப்பமாய்ப் பார்த்தான் பணியாளன். இது நேற்று அதிகாலையில் வந்த பெண் அல்லவா?

"ஏம்மா! நீங்க இவ்வளவு நேரமா இங்கே என்னம்மா பண்றீங்க?"

"அண்ணே! நான் ரூமுக்குள்ளதான் இருந்தேன்."

"என்ன... ரூமுக்குள்ளேயா? உங்க வீட்டுக்காரர் நேற்று நைட்டே காலி பண்ணி சாவியைத் தந்திட்டுப் போனாரே?"

"எ...ன்...ன?" - தாள முடியாத அதிர்ச்சியில் உடல் தள்ளாடினாள்.

பதறி அவளை பிடித்துக் கொண்டான். "என்னம்மா ஆச்சு?"

"அண்ணே! நான் உள்ளேதான் இருந்தேன். அவர் என்னைக் கவனிக்காம.. பூட்டிட்டார்!" - நடுங்கிய குரலில் நீலா சொல்ல, பணியாளன் கண்கள் அவளது கழுத்தை நோட்டமிட்டது.

"ஏம்மா! மெய்யாவே அவன் உன் புருஷன்தானா?"

"இ... இல்லைண்ணா... நாங்க கல்யாணம் பண்ணிக்கலாம்னு வந்தோம்."

"அடக் கொடுமையே! ஏம்மா... இப்படியா ஏமாளியா இருப்பே? அவன் முகத்தைப் பார்த்தாலே கடைந்தெடுத்த அயோக்கியன்னு தெரியுது. அவனை நம்பியா வந்தே? என்ன பொண்ணும்மா... நீ!"

"ஏய்! என்ன பஞ்சாயத்து பண்ணிட்டு இருக்கே... அவ எனக்காக அனுப்பின ஆள். அவதான் கதை விட்டுட்டு இருக்கான்னா... நீயும் நின்னு கேட்டுக்கிட்டு இருக்க... உன் வேலையை முடிச்சிட்டுப் போ. நீ உள்ளே வாடி!" - என அவன் நீலாவை நெருங்க, பணியாள் கைநீட்டித் தடுத்தான்.

"ஸார்! இது உங்களுக்காக வந்த பொண்ணு இல்ல ஸார்! இது நேற்றே இங்க வந்திடுச்சி. ஏதோ ஒரு மோசக்காரனை நம்பி ஏமாந்து நிக்குது. விட்டுடுங்க ஸார்!"

"ஏய்! இவளுக்கு நீ சப்போர்ட்டா? இவளுக்காக ரெண்டாயிரம் கொடுத்திருக்கேன்...



"இல்ல ஸார்! நீங்க தேடி வந்த பொண்ணு இது இல்ல. ஏம்மா! நீ போம்மா... போயிடு. ஓடு!" - பணியாள் மெல்லிய குரலில் விரட்ட, விட்டால் போதும் என ஓடினாள் நீலா. புலியாய் துரத்தப்படும் மானின் ஓட்டம். உயிரை மட்டுமல்ல... மானத்தையும் காப்பாற்றிக் கொள்ள ஓடிய ஓட்டம். எதிரே வந்தவர்களை முட்டி மோதிக் கொண்டு ஓடி பிரதான வாயிலை அடைந்தும் நில்லாமல் ஓடினாள்.

இரவாகி இருந்தது. எது பாதை? இந்த வழி எங்கே செல்கிறது? இது எந்த இடம் என்று தெரியாமல் ஓடிக்கொண்டே இருந்தாள். மெலிதான தூறலாய் பெய்து கொண்டிருந்த மழை சடசடவென வலுக்க... முகத்தில் வழிந்த நீரைத் துடைத்துக் கொண்டே ஓடினாள்.

மூச்சுத் திணறியது. கால்கள் தொய்ந்தன. அடுத்தடுத்த அதிர்ச்சியால் ஆட்டம் கண்டிருந்த உடம்பு அதற்கு மேல் ஓடமுடியாது என அடம்பிடித்தது. சாலையோரமாய் ஒதுங்கி நின்று வாய் வழியே மூச்சை விட்டாள்.

'இது எந்த இடம்?' - கண்களைச் சுழற்றிப் பார்த்தவளுக்கு இடம் பிடிபடவில்லை. அதற்கு மேல் ஒரு அடி கூட எடுத்து வைக்க முடியாத அளவுக்குக் கால்கள் துவண்டன. சாலையோரம் நின்ற விளக்குத் தூணை பற்றிக் கொண்டாள்.

மழை அதிகரித்துக் கொண்டே இருக்க, தெப்பமாய் நனைந்த உடல் குளிரில் நடுங்கத் துவங்கியது. சாலையில் சென்ற வாகனங்கள் தங்கள் பங்கிற்கு நீரை அடித்து விட்டுச் செல்ல... மழைநீரோடு சேர்ந்து கண்ணீரும் வெளியேறியது.

'எப்படியோ தப்பி வெளியே வந்துவிட்டோம். இனி எங்கே செல்வது? கொண்டு வந்த பொருளை எல்லாம் இழந்துவிட்டு வெறுங்கையோடு எப்படி வீட்டுக்குப் போக முடியும்? அம்மா நிலை இப்பொழுது எப்படியிருக்கிறதோ தெரியவில்லையே! எங்கு போவது? மற்றவர்களின் முகத்தில் எப்படி விழிப்பது?

இந்த இடம் எங்கே இருக்கிறது? எப்படி வீட்டுக்குப் போவது?' திணறிக் கொண்டிருக்கும் போது சாலையில் வேகமாய் வந்து கொண்டிருந்த ஆட்டோ தன் வேகத்தைக் குறைத்து, அவளருகே வந்து நின்றது. டிரைவர் வெளியே தலை நீட்டிக் கேட்டான்.

"எங்கம்மா போகணும்?"

"நா...ன்... ஃபால்ஸ் ரோடு போகணும்."

"எந்த ஃபால்ஸ் ரோடு?"

"ஊட்டியில சிட்ட ஷாப் இருக்கில்ல அந்த ரோடு!"

"அவ்வளவு தூரம் போகணுமா? துட்டு நிறைய ஆகும்மா."

"எவ்வளவு வேணும்?"

"இரண்டாயிரத்து ஐநூறு ஆகும்மா..."

"அ...வ்வளவா?" - திகைத்துப் போனாள்.

"எண்பத்தைஞ்சு கிலோ மீட்டர்ம்மா... இந்த மழையில எவனும் அவ்வளவு தூரம் வரமாட்டான். டேஞ்சரான ரோடு வேற... காசைப் பார்க்காதம்மா... பத்திரமா கொண்டு போய் சேர்த்திடுறேன்."



'பணம்! பணத்திற்கு எங்கே போவது?' - தவிப்பாய் முகத்தில் வழிந்த நீரை வழித்து விட்டவளின் கையில் காதில் கிடந்த கம்மல் தட்டுப்பட்டது. அவசரமாய் அதைக் கழற்றினாள்.

"அண்ணா! இது அரை சவரன் இருக்கும். இதை வைச்சிட்டு என்னைக் கொண்டு போய் விட்டுடுறீங்களா? ப்ளீஸ்!"

"என்னம்மா இது? கம்மலை நீட்டுற!"

"அண்ணா! ஃபிரண்ட்ஸோட டூர் வந்தோம். வந்த இடத்தில் நான் மட்டும் மாட்டிகிட்டேன். எல்லாரும் போயிட்டாங்க. நான் சீக்கிரம் வீடு போய்ச் சேரணும். இல்லைன்னா வீட்டில எல்லாரும் பயந்திடுவாங்க. ப்ளீஸ் அண்ணா!"

"சரிம்மா... வீட்டில கொண்டு போய் விட்டதும் காசு வாங்கிக் கொடுத்திடு. இதெல்லாம் வேண்டாம்மா..."

"வீட்டில உடனே அவ்வளவு பணத்தை எடுக்க முடியாதுண்ணா... அதோட நான் மிஸ்ஸானது வீட்டுக்குத் தெரியக் கூடாது. ப்ளீஸ்! இது ப்யூர் கோல்டுதான். நம்புங்க. மழை வேற அதிகமாகிட்டே இருக்கு. ப்ளீஸ் அண்ணா! ஹெல்ப் பண்ணுங்க!"

அவளது கெஞ்சுதலால் அரை மனதோடு கம்மலை வாங்கி வெளிச்சத்தில் பரிசோதித்து விட்டு திருப்தியாய் சட்டைப் பையில் போட்டுக் கொண்டான்.

"சரிம்மா... ஏறு. இதால ஒண்ணும் பிரச்சனை வந்திடாதே!"

எதுவும் வராதுண்ணா... கொஞ்சம் சீக்கிரம் போங்களேன்!" – அவசரப்படுத்தினாள். அரை சவரன் தங்கம் கிடைத்ததில் ஆட்டோ உற்சாகமாய்ப் புறப்பட்டது. வழிநெடுக சத்தம் வராமல் அழுதுகொண்டே வந்தாள். எங்கே செல்லப் போகிறோம்? என்ற பயத்தில் நெஞ்சை அடைத்தது.

"நீ சொன்ன இடம் வந்திடுச்சிம்மா! எந்த வீடும்மா?" - ஓட்டுநர் கேட்ட பிறகே திடுக்கிட்டு வெளியே எட்டிப் பார்த்தாள். தன் வீட்டுக்குச் செல்லும் வழியைத் தாண்டி அரவிந்தனின் வீட்டு முற்றத்தில் ஆட்டோ நின்று கொண்டிருந்தது. மனதில் எழுந்த துணிவோடு இறங்கினாள்.

"இந்த வீடுதான். ரொம்ப தேங்க்ஸ் அண்ணா!"

"பார்த்துப் போம்மா!" – என்றவாறு ஆட்டோ புறப்பட்டுப் போக, அந்த உறுமலில் அரவிந்தனின் வீட்டுக்குள் விளக்கு எரிந்தது. 'இன்னும் விழித்துத்தான் இருக்கிறாயா?' – மனதில் எழுந்த ஆத்திரத்தோடு வாசலை அடைந்து அழைப்பு மணியில் கை வைக்க... அதற்குள் கதவு திறந்தது. அரைகுறை ஆடையோடு தள்ளாடிக் கொண்டே வெளியே பார்வையை வீசினான் அரவிந்த்.

முழுக்க நனைந்து கலைந்த ஆடையோடு முகம் முழுக்க வெறுப்போடு நின்று கொண்டிருந்தவளைக் கண்டதும் தூக்கிவாரிப் போட்டது. கண்களில் கலவரம் தெரிய, மென்று விழுங்கினான்.

"நீ...யா?"

"நானேதான். என்னை எதிர்பார்க்கலையா?"

"நீ... எப்படி இங்கே வந்தே?"



"அந்தக் கதை உனக்கெதுக்கு? தாலி வாங்கிட்டியா அரவிந்த்?"

"தாலி... இன்னும் இல்ல.. நீலா! நான் ஏதோ நினைப்புல ரூமைப் பூட்டிட்டு வந்திட்டேன். இப்பத்தான் ஞாபகமே வருது. ஒரே வேலை. அதோட நல்ல மழை வேற... அதான் உடனே வரமுடியலை."

"வாயை மூடுடா நாயே! நீ சொல்றதையெல்லாம் நம்ப நான் ஒண்ணும் பழைய நீலா இல்லை. உன் வேஷம் கலைஞ்சுப் போச்சு. இன்னும் நடிக்காதே!" – தீர்க்கமான குரலில் நீலா கூற, கொஞ்சமும் அசராமல் சிரித்தான் அரவிந்தன்.

"ஓ! ஒரே நாள்ல ஆளே மாறிட்ட போலிருக்கு. ரொம்ப தைரியமா குரலை உயர்த்திப் பேசுற! ஆமா இங்கே ஏன் வந்தே?"

"உன் மேல உள்ள ஆசையில வரலை. என் பெட்டியை வாங்கிட்டுப் போலாம்னு வந்தேன்."

புரியாமல் விழித்தான். "என்ன? பெட்டியா... எந்தப் பெட்டி?"

"என் பணம், நகையெல்லாம் இருந்ததே அந்தப் பெட்டி."

"உன் பெட்டி எப்படி என்கிட்ட இருக்கும்? போ... உன் வீட்டில போய் பார்..." – அலட்சியமாய்ச் சொல்லிவிட்டுத் திரும்பியவனின் தோளைப் பற்றித் திருப்பினாள்.

"அரவிந்த்! இந்த நக்கல் பேச்செல்லாம் வேண்டாம். ...ங்கா என் பொருளைக் கொடுத்திடு. நான் போயிடுறேன்.

இல்லை... நான் போலீஸுக்குப் போக வேண்டியிருக்கும்..." - கடுமையான குரலில் சொன்னவளைப் பார்த்து சத்தமாய்ச் சிரித்தான்.

"போலீஸா! அங்கே போய் என்னம்மா சொல்லப் போற?"

"உன்னைப் பத்தி எல்லாத்தையும் சொல்வேன்."

"ஒரு திருத்தம். நம்மைப் பத்தின்னு சொல்லு."

"எ... என்ன?"

"ஆமா! ரெண்டு பேரும்தானே ஓடிப் போனோம். அதைத்தான் சொல்லணும். நாளைக்குக் காலையில நம்ம ரெண்டு பேர் போட்டோவும் ஜோடியா பேப்பர்ல வரட்டும். உங்க வீட்டில எல்லாரும் ரொம்ப சந்தோஷப்படுவாங்க. இப்பவோ அப்பவோன்னு இழுத்திட்டு இருக்கிற உன் அம்மாவுக்கு சங்கு ஊதிட வேண்டியதுதான். ஊ...ஊ...!" - வாயில் கை வைத்து அவன் ஊத... சட்டெனத் தளர்ந்தாள் நீலா.

"அரவிந்த்!"

"ஏன்டி சிட்டுக்குருவி! இத்துணூண்டு இருந்துகிட்டு என்னையே மிரட்டிப் பார்க்கிறியா? நானே எத்தனுக்கெல்லாம் எத்தன். என்கிட்டேயேவா? எங்கே போலீஸுக்குப் போ பார்க்கலாம்."

"அரவிந்த்! என் நகைகளைக் கொடுத்திடு. நான் உன்னை யார்கிட்டயும் காட்டிக் கொடுக்க மாட்டேன். என் வீட்டுக்குப் போயிடுறேன்."



"ஓ! என்னைக் காட்டிக் கொடுக்கிற எண்ணம் வேற இருக்கா? என்னைக் காட்டிக் கொடுக்கிறது உன் மேலேயே நீ சாணியைத் தெளிச்சிக்கிறதுக்குச் சமம். புரியலை! இந்தச் சுற்றுவட்டாரம் முழுக்க என்னைப் பற்றி எல்லாருக்கும் தெரியும்.

இந்த அரவிந்தோட கண்ணில பட்ட எந்தப் பொண்ணையும் கைபடாம விட்டதில்லை. என்கிட்ட இருந்து தப்பிச்ச ஒரே பொண்ணு நீதான். அது எனக்கும் உனக்கும் மட்டும்தான் தெரியும். ஆனா ஊர் என்ன சொல்லும் தெரியுமா?" - திகைத்துப் போய் நின்றவளது கன்னத்தில் தட்டினான்.

"அரவிந்த் கூட ரெண்டு நாள் ஊர் சுத்திட்டு வந்தவ வயித்துல வாங்காமலா வந்திருப்பான்னு கேட்கும்!"

"ஐயோ!" - சட்டெனப் பின்வாங்கினாள்.

"இதுக்கே பயந்திட்டா எப்படி? இன்னும் என்னவெல்லாம் சொல்லும் தெரியுமா! சொல்லட்டுமா?"

"வே... வேண்டாம்."

"அதையெல்லாம் சொன்னா... இந்த இடத்திலேயே உயிரை விட்டுடுவே. ஓடிப் போ!"

"என் நகை?"

"இத்தனை நாள் கூட சுத்திட்டுக் கடைசி வரைக்கும் கையில சிக்காம போயிட்ட. அதுக்கு நஷ்டஈடா அது என் கிட்டயே இருக்கட்டும்."

"அடப்பாவி! அது எனக்காக என் அப்பாவும் என் அண்ணன்களும் பார்த்துப் பார்த்து வாங்கினது. கஷ்டப்பட்டு சம்பாதிச்சது."

"அதெல்லாம் இப்பத்தான் தெரியுதா? வரும்போது தெரியலையா?" - முகத்தில் அறை வாங்கியது போல் அதிர்ந்து நின்றாள். கண்களில் நீர் நிறைந்தது.

"இந்தா! இது லட்சுமி இருக்கிற இடம். இங்க நின்னு கண்ணீர் விடாதே. உன் அம்மாவோட உயிர் எந்த நிமிஷமும் பிரியும்னு டாக்டர் சொல்லிட்டாராம். இந்தக் கண்ணீரை மிச்சப்படுத்தி வை. நாளைக்கு அழணுமில்ல..."

"துரோகி. பாவி! உன்னை நம்பி வீட்டை விட்டு வந்தேனே! நீ இத்தனைக் கேவலமானவனா? ச்சே! உன்னை விரும்பிய பாவத்திற்கு என்னையே நான் எரிச்சுக்கணும்."

"அது உன் விருப்பம். எனக்கு நிறைய வேலை இருக்கு. கிளம்பு!"

"விட மாட்டேன்டா. இப்பவே போய் என் அண்ண னுங்ககிட்ட சொல்லி உன்னை என்ன செய்யறேன்னு பார்."

"ஒரு நிமிஷம். இப்படி அவசரப்பட்டு என்னைப் பழி வாங்குறதா நினைச்சிட்டு உன் மொத்தக் குடும்பத்தையும் இழந்திடாதே. என்ன பார்க்கிறே? நீ யார்கூட போனேன்னு தெரியாமலே பாதி செத்துட்டானுங்க. என்கூடத்தான் வந்தேன்னு தெரிஞ்சா மொத்தமாப் போயிடுவானுங்க...

ஏன்னா என்னைப் பத்தி நான் எத்தனைபேர் கூட குடும்பம் நடத்துறேன்கிறது வரை அவனுங்களுக்குத் தெரியும். அதான் என்னை வீட்டுக்குள்ளேயே விட யோசிப்பானுங்க. நீ என்னன்னா என்னை உலக மகா உத்தமன்னு நினைச்சிட்டு இருக்கே... ஏமாந்தது நீதான்.



நான் ஒண்ணும் உன்னைத் திட்டம் போட்டு ஏமாத்தலை. தானா வந்து விழுந்த எத்தனையோ பட்டர்ஃபிளைஸ்ல நீயும் ஒண்ணு. தட்ஸ் ஆல். பணம் போனது பெரிசில்லை கண்ணு. உன்னை ஒரு சேதாரம் இல்லாம அனுப்புறேன் பார். அதுதான் பெரிய விஷயம். போ...

நைட் நேரம் இப்படியெல்லாம் வீட்டை விட்டு வெளியே வராதே. போடா கண்ணு. மழை பெய்திருக்கு. பூச்சி பொட்டு நடமாடும். பார்த்துப் போ."

"அர்வி! இவ்வளவு நேரம் யார்கிட்டடா பிளேடு போட்டுட்டு இருக்க... எனக்கு டயமாகுது... வா!" - உள்ளே இருந்து சிணுங்கலாய் ஒரு பெண் குரல் கேட்க, கண் சிமிட்டினான்.

"இன்னிக்கு இவதான் மை வொய்ஃப். வர்றேன் டார்லிங்!" - என்றவாறு வீட்டினுள் நுழைந்து கதவைச் சாத்திக் கொள்ள, அப்படியே அசையாமல் நின்றாள். சற்று நேரத்தில் விளக்கு அணைந்துவிட, அதைத் தொடர்ந்து கேட்ட சிணுங்கலைச் சகிக்க முடியாமல் தளர்ந்த நடையுடன் வெளியேறினாள்.

எப்படிப்பட்ட கயவனிடம் ஏமாந்தோம். எத்தனை பெரிய பழியை ஏற்றிருக்கிறோம் என்று புரிந்தது. கண்கள் சுத்தமாய் உலர்ந்து போனது. சாலையை அடைந்தவள் அங்கிருந்த தன் வீட்டைப் பார்த்தாள். இரவில் கூட பிரகாசிக்கும் வீடு இன்று இருள் சூழ்ந்து கிடந்தது.

நெஞ்சு விம்மியது. மொத்த வெளிச்சத்தையும் பறித்துக் கொண்டேனே! இனி எப்படி இந்த வீடு ஒளிரும்.

பெற்றவர்களுக்குத் தலைகுனிவை ஏற்படுத்தித் தந்த நான் உயிரோடு இருக்க வேண்டுமா?

வீட்டை விட்டுச் சென்ற மகள்... எங்கோ வாழ்ந்து கொண்டிருக்கிறாள் என்ற நிம்மதியாவது இவர்களுக்கு மிஞ்சட்டும். இப்படி மொத்தமாய் இழந்துவிட்டு திரும்பி வந்திருக்கிறாள் என்ற தெரிந்தால் அவன் சொன்னது போல் அனைவரின் உயிரும் போய்விடும்.

வேண்டாம். என்னால் ஒட்டுமொத்தக் குடும்பமும் இறக்க வேண்டாம். யார் கண்ணிலும் படாமல் போய் விடலாம். நான் செய்த தவறுக்கு நான்தானே தண்டனை அடைய வேண்டும்? மற்றவர்களை ஏன் தண்டிக்க வேண்டும்? வாழ வேண்டிய வயதில் வழி தவறிப் போனவள் நான். இனி வாழும் தகுதி எனக்கில்லை.

நான் வாழக்கூடாது. வாழக் கூடாது. நெஞ்சம் இறுகியது. கடைசியாய் ஒருமுறை தான் பிறந்து வளர்ந்த வீட்டைப் பார்த்தாள். கண்களில் நீர் நிறைந்தது. அம்மா! என்னை மன்னித்து விடுங்கள். உங்களைக் கூடப் பார்க்க எனக்குத் துணிவில்லை. என்னை இந்தக் கோலத்தில் பார்த்து அந்த அதிர்ச்சியில் உங்கள் உயிர் பிரிய வேண்டாம்.

நான் போகிறேன். இந்த உடல்கூட யார் கண்ணிலும் படாத தொலைவிற்குப் போகிறேன். கண்ணீரை அழுத்தமாய் துடைத்துக் கொண்டாள். உறுதியான முடிவுடன் வேகமாக மேல்நோக்கிச் சென்ற பாதையில் ஏறத் துவங்கினாள். தொய்ந்திருந்த கால்களில் எங்கிருந்து அத்தனை தெம்பு வந்தது? சோர்ந்திருந்த உடல் விறைப்பாய் நிமிர்ந்தது.



நடுநிசியைத் தாண்டியிருந்த இருட்டு... குளிர்காற்று செருப்புகள் இல்லாத கால்கள்... கரடுமுரடான பாதை... முட்புதர்கள் என எதைப் பற்றியும் கவலைப்படாமல் தீர்க்கமான நேர்பார்வையோடு மலையில் ஏறி, உச்சியை அடைந்தபோது லேசாய் விடியத் துவங்கியது.

பனிமூட்டம் புகை போல் படர்ந்து கொண்டிருக்க... பள்ளம், மேடு எதுவும் தெரியவில்லை. பனித்துளிகளின் ஈரம் பட்டு கால்கள் வழுக்கின. பறவைகளின் ஒலி கூட கேட்காத அமைதி. சில கணநேரம் அமைதியாய் நின்றாள் நீலா.

மனம் பலவற்றையும் நினைத்துத் துடித்தது. பெற்றவர்களின் அன்பு, அவர்களுடன் நடத்திய வாக்கு வாதம்... வீட்டை விட்டு வெளியேறிய நிமிடம், லாட்ஜ் அறையில் தனியே மாட்டிக் கொண்ட நிலை, அரவிந்தனின் அலட்சியமான அசிங்கமான பேச்சு... என அனைத்தையும் எண்ணிக் குமுறி அழுதாள்.

அந்த நேரம் ஏதோ ஒலி கேட்டது. சட்டெனத் திரும்பினாள். கீழே பள்ளத்தாக்கில் இருந்து ஏதோ ஒரு ஆண் உருவம் தன்னை நோக்கிக் கையை வீசியபடி மேலே ஏறி வந்து கொண்டிருந்தது. நீலாவின் புலன்கள் உஷாராயின. "வேண்டாம்... கீழே வந்திடுங்க..." – என தூரமாய் ஒலித்த குரல் அது ஆண்தான் என்று உறுதி செய்ய, நீலாவின் முகம் இறுகியது.

'என் வாழ்நாளில் இனி எந்த ஆணையும் சந்திக்கக் கூடாது. எந்த ஒரு ஆணின் நிழலும் என்மீது படக்கூடாது!' – என்ற முடிவுடன் மலையிலிருந்து குதித்தாள்.

"ஐயோ! எம்புள்ள!" – வாய்விட்டே கத்தினாள் தாட்சாயிணி. மடியில் கிடந்து இன்னும் தேம்பிக் கொண்டிருந்தவளை மார்போடு அணைத்துக் கொண்டாள்.

"என் கண்ணே! இத்தனைத் துயரங்களை அனுபவித்தாயா? உடனே நம் வீட்டுக்கு வந்திருக்கலாமே... ஏன் அந்தச் சண்டாளன் வீட்டுக்குப் போனாய்?"

"உங்களையெல்லாம் எப்படியம்மா பார்ப்பேன்? உங்க முகத்தில எப்படி விழிப்பேன்? நான் வாழக்கூடாதும்மா... நான் வாழத் தகுதியில்லாதவ..."

"அப்படிப் பேசாதே ராஜாத்தி! உன்னை இப்படிப் பறிகொடுக்கவா அருமை பெருமையா வளர்த்தேன்? அண்ணனுக்கு அப்பாவுக்கு... உன்மேல கோபம் இருக்கு. ஆனா வெறுப்பு இல்லடா. அண்ணன் கல்யாணத்தில உன்னைப் பார்த்திட்டு வந்து ராத்திரியெல்லாம் உன் அப்பா அழுததைப் பார்த்தேன்.

அவங்க மனசில இன்னும் உன் மேல அன்பு இருக்கு. நீ எங்க உயிர்டா... உன்னை எப்படி வெறுப்போம்? இப்படி உசுரை விடப் போனியா? யாரும்மா... உன்னைக் காப்பாத்தினது? எப்படியம்மா பொழச்சே?"

"அவர்தாம்மா... என்னைக் காப்பாத்தி ஹாஸ்பிடல்ல சேர்த்தாரு. நான் குணமான உடனே எவ்வளவோ கேட்டுப் பார்த்தாரு. நம்ம வீட்டை உங்களைப் பத்தியெல்லாம் கேட்டாரு. நான் எதுவுமே சொல்லலை. சொல்ல முடியலை? அவர் தெய்வம்மா...

என்னை அநாதையா விட மனமில்லாம... என்னை அவர் மனைவியாக்கி இதுவரையிலும் ஒரு வார்த்தை கூட



என் மனசு நோகுற மாதிரி பேசினதில்லை... என்னைக் கண்ணாப் பார்த்துக்கிறார். என்னை பூ மாதிரி பொத்திப் பாதுகாக்கிறார்."

"இப்படிப்பட்ட புள்ளையை விட்டுட்டுப் போக உனக்கு எப்படிம்மா மனசு வந்தது? ஏன் இப்படி உயிரை விடத் துணிஞ்ச?"

"என்னால முடியலம்மா... நான் செய்த தப்பை மறந்து அவர்கூட இயல்பா வாழ முடியல்லம்மா... நெருஞ்சி முள்ளாக் குத்துது. என்னால உங்க எல்லாருக்கும் அவமானம். அவருக்கும் சந்தோஷமான வாழ்க்கையைக் கொடுக்க முடியலைன்னுதான் இந்த முடிவை எடுத்தேன்."

"தப்பு பண்ணிட்ட நீலா!" – திடீரென கேட்ட கணவனின் குரலில்... திடுக்கென எழுந்தாள்.

கணவனோடு சேர்த்து தன்னைப் பெற்றவரும் உடன்பிறந்தவர்களும் நிற்க... நீலாவின் உடல் மெல்ல அதிரத் துவங்கியது.

## 19

நீங்கள் செய்யும் தவறுகூட
புனிதமாகலாம் – அதை
நீங்கள் ஒப்புக் கொள்ளும்போது!

"என்னை விட்டுட்டுப் போகணும்னு உனக்கு எப்படித் தோணலாம்? நான் சந்தோஷமா இல்லைன்னு யார் சொன்னது? நீயே கற்பனை பண்ணிக் கொண்டாயா?"

"இல்லைங்க. என்னால... எப்படி?"

"இதோ பார் நீலா. மறதி கடவுள் நமக்குக் கொடுத்த பெரிய வரம். நாம எல்லாருமே எத்தனையோ துன்பங்களைக் கடந்து வந்திருக்கோம். ஆனா அதையெல்லாம் மறக்கக்கூடிய சக்தியையும் கடவுள் தந்திருக்கார்.

மறக்கக்கூடிய விஷயங்களை உடனே மறந்திடணும் நீலா! இல்லன்னா அதுவே விஷமாகிடும். அறியாத வயசுல செய்த ஒரு தப்பை வாழ்க்கை முழுக்க நினைச்சிட்டு இப்படி உன்னை நீயே அழிச்சுக்கலாமா?

உன் மேல நான் வைச்சிருக்கிற ப்ரியம் உனக்குப் புரியலையா? உன் மனசு கோணாம நான் நடந்துக்கலையா? என் மேல உனக்கு நம்பிக்கை வரவே இல்லையா நீலா!"

பதறி தன் கணவனின் வாயை மூடினாள். "அப்படிச் சொல்லாதீங்க. உங்களை நம்பினதுனாலதானே உங்க கையால தாலி வாங்கினேன். உங்க மனைவியா வாழ்ந்திட்டு இருக்கேன்."

"பிறகேன்... பழசையெல்லாம் நினைக்கிறாய்? எனக்குச் செய்து தந்த சத்தியத்தை மறந்திட்டியா?"

"இல்லங்க... நான் இனிமே இப்படியெல்லாம் செய்ய மாட்டேன். என் அம்மாவைப் பார்த்திட்டேன். அவங்க கூடப் பேசிட்டேன். என் அம்மா என்னை வெறுக்கலை. என் அப்பாகூட..." - எனத் தொடங்கியவள் தந்தையின் முகத்தைப் பார்த்து மௌனமானாள்.

தந்தையும் சகோதரர்களும் பேச்சின்றி நிற்க... கண்கள் கலங்கி கைகூப்பினாள்.



"அப்பா! அண்ணா... நான் தெரியாம தப்பு பண்ணிட்டேன்ப்பா... மன்னிச்சிடுங்கண்ணா. உங்களையெல்லாம் ரொம்பக் கஷ்டப்படுத்திட்டேன். மன்னிச்சிடுங்கப்பா!" - என்றவளின் தலையை வருடினார் கைலாசம்.

கார்த்திக்கும் யுவராஜனும் தங்கையின் கையைப் பற்றினர். "ஏன் நீலு! உன் அண்ணனுங்க என்ன கையாலாகாதவனுங்கன்னு நினைச்சியா?"

"அண்ணே!"

"எங்ககிட்ட வந்து சொல்லியிருந்தா அப்பவே அவன் எலும்பை எண்ணியிருப்போமில்ல... தப்பு செய்தவனைத் தப்பிக்க விட்டுட்டு நீ சாகப் போனியா?"

"அண்ணே!"

"எங்களுக்கே தெரியாம அந்த நாய்கூட இத்தனை நாள் உறவாடியிருக்கோம். நேற்று அவன் கழுத்தில நம்ம வீட்டுச் செயின் கிடந்ததைப் பார்த்ததும் தான் லேசா சந்தேகம் வந்தது. அப்பக்கூட உன்னை ஏமாத்தினான்னு நினைக்கத் தோணலை. மாதவன் மேலதான்... ஸாரி மாதவன்!"

"பரவாயில்லை ஸார்! உங்க நிலையில யார் இருந்தாலும் அப்படித்தான் நினைப்பாங்க!" - மாதவனின் பெருந்தன்மை இருவரையும் அசைத்தது. யுவராஜன் மாதவனை நெருங்கி அவனது கைகளைப் பற்றி கண்களில் ஒற்றிக் கொண்டான்.

"மாதவன்! நீங்க எவ்வளவு பெரிய காரியம் செய்திருக்கீங்க. எங்க உயிரையே மீட்டுக் கொடுத்திருக்கீங்க.

உங்களைப் போய் தப்புத் தப்பாப் பேசிட்டோமே... வெரி ஸாரி ஸார்!"

"என்ன இது! பெரிய வார்த்தையெல்லாம் பேசிகிட்டு..."

"ஸாரி மாதவன்! உங்களை மட்டுமில்ல... உங்க தங்கையைக் கூட ஏதேதோ பேசிட்டோம். ஸாரிம்மா!" - கார்த்திக் சொல்ல...

சுவரோரமாய் நின்ற குறிஞ்சி தலை யசைத்தாள்.

"வேண்டாம் ஸார்! நீங்க பேசின மாதிரி நானும் எத்தனையோ முறை என் அண்ணனைப் பேசியிருக்கேன். என் அண்ணியை அவன் எந்தச் சூழ்நிலையில கட்டிக் கிட்டான்னு தெரியாம நிறைய வாட்டி கோபப்பட்டிருக்கேன். அவங்க மனைசப் புண்படுத்தியிருக்கேன்.

உண்மை புரியாமப் பேசினது எவ்வளவு பெரிய தப்பு. அந்தத் தவறுக்குத் தண்டனையா நீங்க பேசினதை நினைச்சிக்கிறேன்."

"அப்படின்னா... எனக்கு என்ன தண்டனை?" - யுவராஜன் கேட்க...

அவனைத் திரும்பியும் பாராமல் சொன்னாள்.

"நாம யாருக்கு என்ன பண்றோமோ... அது நமக்கே இரண்டு மடங்கா திரும்பக் கிடைக்கும்."

"அப்படின்னா ரெண்டு அடி அடிப்பியா?"

"நான் ஏன் அடிக்கணும்? என் அண்ணன் திருப்பிக் கொடுப்பார்."



"வேண்டாம் குறிஞ்சி. எதுவா இருந்தாலும் நமக் குள்ளயே நடக்கட்டும். பிரச்சனையைத் திருப்பி விட்டு மச்சான்களுக்குள் சண்டையை மூட்டிவிட்டு விடாதே!"

"அது யாரு மச்சான்?"

"நான்தான். உங்க அண்ணனுக்கு நான் மச்சான் தானே! சரிதானே... மாப்பிள்ளை!" - மாதவனை நோக்கிக் கேட்க, மாதவனின் முகம் தீவிரமாய் இருந்தது.

"நமக்குள்ள எப்ப வேணா பேசிக்கலாம் மச்சான். ஆனா இதையெல்லாம் விட முக்கியமான வேலை ஒண்ணு இருக்கு. முதல்ல அதை முடிக்கணும்."

"என்ன வேலைங்க?"

"உன்னை இப்படிப் படுக்கையில படுக்க வைச்சவனை நிரந்தரமா படுக்க வைக்க வேண்டாம்? அதுக்காகத்தான் கிளம்பிட்டு இருந்தோம். அதுக்குள்ள நீ கண் விழிச்சிட் டன்னு குறிஞ்சி போன் பண்ணியதாலதான் இங்கே வந்தோம்."

"என்ன?"

"ஆமாம் நீலு! எனக்கும் அண்ணனுக்கும் லைட்டா டவுட் இருந்தது. அதைக் கிளியர் பண்ணனும்னுதான் கிளம்பினோம். அப்பத்தான் மாப்பிள்ளை வந்தார். அவர் சொன்ன பிறகு எங்க சந்தேகம் உறுதியாகிடுச்சி."

"அவர்கிட்ட அவன் யாருன்னு சொல்லலையே?"

"நான்... யூகிச்சோம். நீலு! உனக்கு ஒண்ணு

"நாங்களே தெரியுமா? அந்த நாய்க்கு அடுத்த மாசம் கல்யாணமாம். நேற்று நம்ம வீட்லயே வந்து சொன்னான்."

"என்ன... கல்யாணமா?"

"ம்... ஒரு அப்பாவிப் பொண்ணோட வாழ்க்கை நாசமாகக் கூடாது. அண்ணா வா... அவனை ஒரு கை பார்த்திட்டு வந்திடலாம்."

"நானும் வர்றேன்." - புறப்பட்ட கணவனைத் தடுத்தாள் நீலா.

"வேண்டாங்க... நமக்கு எதுக்கு வம்பு?"

"என்ன? எத்தனை பொண்ணுங்களோட வாழ்க்கையோட விளையாண்டிருக்கான். உன்னை என்னவெல்லாம் பேசியிருக்கான். அவனைச் சும்மா விடச் சொல்றியா?"

"என்ன பண்ணப் போறீங்க?"

"அது அவன் டைமைப் பொறுத்தது."

"வேணாங்க. எனக்குப் பயமா இருக்கு. அவன் மோசமானவன்."

"நீலாம்மா... அந்தப் பயலோட வீரமெல்லாம் பொண்ணுங்ககிட்டதான். எங்களைப் பார்த்தாலே நடுங்குவான். இல்லப்பா...!"

"அண்ணா! நீங்க போய் அவன்கிட்ட பிரச்சனை பண்ணினா... அவன் சும்மா இருப்பானா? என்னைப் பத்தி அசிங்கமாப் பேச மாட்டானா?"

"பேசிடுவானா? வாய் முழுசா இருக்குமா அவனுக்கு!"

"புள்ளைங்களா! வேண்டாம்ப்பா... நமக்கு நம்ம குழந்தை பத்திரமாக் கிடைச்சிட்டா. பிறகேன் பிரச்சனை பண்ணணும்?"



"இப்படியே எல்லாரும் விட்டதாலதாம்மா அவன் இவ்வளவு ஆட்டம் போட்டுட்டு இருக்கான். இனிமேலாவது அதை அடக்க வேண்டாமா? அம்மா... நீங்க எல்லாரும் இங்க இருங்க. நாங்க போயிட்டு வர்றோம்."

"நீலா! வரட்டுமா..." - பரிவாய்க் கேட்ட கணவனைக் கண்கள் கசியப் பார்த்தாள்.

"சீக்கிரம் வந்திடுங்க. அவனை எதுவும் பண்ணிடாதீங்க. எனக்கு நீங்க வேணும். எப்பவும் என்கூட நீங்க இருக்கணும்."

"கண்டிப்பா! சீக்கிரம் வந்திடுறேன். மச்சான்... போலாமா?"

"போலாம்... வர்றோம்ப்பா!"

"ஏய்! என்னையும் கூட்டிட்டுப் போங்கப்பா!" - என வந்தார் கைலாசம்.

"நாங்களே அவனுக்கு ஜாஸ்தி. நீங்க எதுக்கு? நீங்க இங்கே இருங்க. டாக்டர் வந்தாப் பேசுங்க. அம்மா! நீலுவுக்கு என்ன சாப்பிடக் கொடுக்கலாம்னு கேட்டுக் கொடுங்க. வர்றோம்!" - மூன்று இளம் சிங்கங்களும் வாசலை நோக்கிச் சீறிப் பாய்ந்தன.

கதவருகே நின்ற குறிஞ்சியைக் கண்டதும் லேசாய்த் தயங்கினான் யுவராஜன். மெல்ல அவளது கையை எடுத்து மென்மையாய் அழுத்தி, "ஸாரிம்மா..." என்றான்.

குறிஞ்சிக்குள் பூ மொட்டவிழ்ந்தது. பதில் பேச இயலாமல் தடுமாறியவளிடம், "மிச்சத்தை வந்து பேசுகிறேன்..." - என அவளுக்கு மட்டுமே கேட்கும் தொனியில் கூறிவிட்டு வெளியேறினான்.

காரை அடைந்து ஏறியதும் மாதவன் கேட்டான்.
"அவன் வீட்டில இருப்பானா?"

"கண்டிப்பா இருப்பான். இப்ப டைம் என்ன?"

"மணி பத்தாகுது."

"நிச்சயமா இருப்பான். வெறும் சோம்பேறிப்பய. நைட்டெல்லாம் கூத்தடிச்சிட்டு மதியம் வரை தூங்குவான். பொறுக்கி நாய்."

"இப்படிப்பட்டவன் கூட எல்லாம் எப்படி ஸார் ஃபிரண்ட்ஷிப் வைச்சிருக்கீங்க?"

"திக் ஃபிரண்ட் எல்லாம் கிடையாது மாப்பிள்ளே... அக்கம் பக்கம் உள்ளவன்கிற முறையில சும்மா பேசிப்போம். அப்பல்லாம் இவன் இவ்வளவு மோச மானவன்னு தெரியாது. இருந்தாலும் வீட்டுக்குள்ள அலவ் பண்ண மாட்டோம்."

"அப்படி இருந்தே அவன் நம்ம வீட்டுப் பொண்ணை விளையாட்டுப் பொருளா யூஸ் பண்ணியிருக்கானே... அவனுக்கு எவ்வளவு கொழுப்பு இருக்கணும்."

"யுவா! அவனை சும்மா விடக்கூடாதுடா. அவன் கண்ணை ரெண்டையும் தோண்டிடணும். அவன் வாழ்க்கையில இனி எந்தப் பொண்ணையும் பார்க்கக் கூடாது."

"கண்ணை மட்டுமில்லைண்ணா இரண்டு கையையும் உடைச்சிடணும். எந்தப் பெண்ணையும் அவன் தொடக் கூடாது. இல்ல... காலையும் சேர்த்தே உடைச்சிடலாம். என்ன சொல்றே?"



"செய்துடலாம். என்ன மாப்பிள்ளை சொல்றீங்க?"

"எதுக்கு பார்ட் பார்ட்டா கழற்றணும்? அவன் இருந்து என்ன சாதிக்கப் போறான்? பேசாம மொத்தமா அனுப்பிட லாமே!"

"மாப்பிள்ளை?"

"ஆமா மச்சான். அவன் இருந்தா இன்னும் எத்தனைப் பெண்கள் தங்களோட வாழ்க்கையைத் தொலைச்சிட்டு உயிரை விடுவாங்களோ? அதுக்குப் பதிலா இவன் ஒருத்தன் உயிரை விட்டால் என்ன?"

"மாப்பிள்ளை! அது கொலைக் குற்றம் ஆகிவிடுமே!"

"ஆகட்டுமே... நான் அந்த நல்ல காரியத்தைப் பண்ணிடுறேன். நீலாவை நீங்க பார்த்துக்கங்க. இனி மேலாவது அவ எந்தக் குற்ற உணர்வும் இல்லாம சந்தோஷமா வாழட்டும்."

"அதுக்காக அவனை நீங்க ஏன் கொல்லணும்? நாங்க எதுக்கு இருக்கோம்?"

"சரி... நமக்குள்ள எதுக்கு வம்பு? மொதல்ல அவன் வீட்டில இருக்கானான்னு பார்ப்போம். நம்மகிட்ட எப்படிப் பேசுறான்னு பார்ப்போம். அதுக்கப்புறம் முடிவு பண்ணலாம்."

"யுவா! எனக்கென்னவோ அவன் வீட்டில இருக்க மாட்டான்னுதான் தோணுது. நேற்றே அவனைப் பிடிச்சிக் கேட்டிருக்கணும்."

"அதனால என்ன அண்ணா! எப்படியும் அவன் ...யிருந்து தப்பிக்க முடியாது. ராஸ்கல்! எவ்வளவு

...அவனுக்கு? நீலுவைக் கொண்டு போய் லாட்ஜில விட்டுட்டு நம்மகிட்ட எதுவுமே தெரியாத மாதிரி விசாரிச்சானே... இதுக்காகவே அவனைக் கொல்லணும்."

ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமான கோபத்தில் இருக்க, கார் அரவிந்தனின் வீட்டை நெருங்கியது.

காரைச் செலுத்திக் கொண்டிருந்த யுவராஜனின் முகம் மாறியது. தூரமாய்த் தெரிந்த அரவிந்தனின் வீட்டின் முன் நான்கைந்து வாகனங்கள் நிற்க... ஏராளமான மனிதத் தலைகள்.

"அண்ணே! ஸம்திங் ராங்?"

"என்னடா?" - என்றவாறே வெளியே பார்வையை வீசிய கார்த்திக்கின் முகமும் மாறியது.

"என்ன யுவா? இவ்வளவு கூட்டம்? வீட்டிலயே கல்யாணத்தை வைச்சுட்டானா? நாம லேட் பண்ணிட்டோமோ?"

"இல்லண்ணா! அது போலீஸ் வண்டி. என்னவோ தப்பு நடந்திருக்கு."

"நமக்கு முன்னால யாரும் முந்திக்கிட்டாங்களோ?" - மாதவன் யோசனையாய்க் கேட்க, "நானும் அப்படித்தான் நினைக்கிறேன். நேர்லேயே போய் பார்த்திடலாம்!" - என்ற தம்பியின் கரத்தைப் பற்றினான் கார்த்திக்.

"யுவா! காரை அங்கே வரைக்கும் கொண்டு போக வேண்டாம்."

"ஏண்ணா?"



"வேண்டாம். நம்ம வீட்டுப் பக்கத்திலேயே நிறுத்து. நடந்தே போய் கூட்டத்தோட கூட்டமா நின்னு பார்த்திட்டு வந்திடலாம். ஸ்டாப் பண்ணு."

"சரிண்ணா!" - என்றவாறு தங்களது வீட்டை ஒட்டிக் காரை நிறுத்த, வேலப்பன் ஓடி வந்தார்.

"ஐயா! கதவைத் திறக்கட்டுங்களா?"

"வேண்டாம் வேலப்பா! நீங்க உங்க வேலையைக் கவனிங்க. நாங்க இப்ப வந்திடுறோம்..." - என்றவாறு மூவரும் கிளம்பி அரவிந்தன் வீட்டை நோக்கி மேலே ஏறினர்.

வளைவில் ஏறும்போதே இன்னொரு போலீஸ் வண்டி கடந்து போனது. அக்கம் பக்கம் உள்ளவர்கள் தங்களுக்குள் ஏதோ பேசிக்கொண்டே ஆர்வமாய் ஓடினர்.

கார்த்திக் குரலைத் தழைத்துக் கொண்டான். "பிரச்சனை கொஞ்சம் பெரிசாத்தான் இருக்குமோ? இவ்வளவு போலீஸ் வந்திருக்குதே?"

"எனக்கும் அப்படித்தான் தோணுது. வாங்க சீக்கிரம் போகலாம்!" - நடையை எட்டிப் போட்டு வேகமாக அரவிந்தனின் வீட்டை நெருங்க, கூட்டம் சலசலத்துக் கொண்டிருந்தது.

போலீஸார் கூட்டத்தைக் கலைத்துக் கொண்டிருந்தனர். கூட்டத்தோடு கலந்து விடாமல் சற்றுப் பின்னால் நின்று கொண்டே நோட்டமிட்டனர்.

போலீஸ் உயர் அதிகாரி சத்தமாய்க் கேட்டுக் கொண்டிருந்தார். "சம்பவம் எப்பப்பா நடந்தது?"

"அரை மணிநேரம் இருக்கும் ஸார். போன் வந்தது..."

"போன் பேசியது யாரு?"

"கொலையாளிதான். நான்தான் செய்தேன்னு வாக்குமூலமும் கொடுத்தாச்சு ஸார்!"

"உயிர் இருக்கா?"

"இருக்கு ஸார். ஆம்புலன்ஸுக்குப் போன் பண்ணியிருக்கோம். வந்திட்டு இருக்கு."

"என்ன மோட்டிவ்? ஏதாவது விசாரிச்சீங்களா?"

"இன்னும் இல்ல ஸார். நீங்க வரட்டும்னு வெயிட் பண்ணினோம்."

"ஆள் எங்கே?"

"உள்ளேதான் உட்கார்ந்திருக்கு."

"இங்கே ஏன் இவ்வளவு கூட்டம்? அவ்வளவையும் போகச் சொல்லுங்க. போகாம நிற்கிறவங்களை சாட்சியா சேர்த்திடுங்க. பேர் எழுதி வையுங்க..." - என்றவாறே அவர் வீட்டுக்குள் நுழைய கூடியிருந்த கூட்டம் விசாரணைக்குப் பயந்து மெல்ல கலையத் துவங்கியது.

மூவரும் சற்று ஒதுங்கிப் பெரிதாய் நின்ற கொன்றை மரத்தின் பின்னே நின்று கொண்டனர். வீட்டின் ஜன்னல் வழியே அரவிந்தனின் அலறல் கசிந்து வெளியே வந்தது. மரண ஓலம். மூவரும் திரும்பிப் பார்க்க... ஜன்னல் மூடப்பட்டிருந்தது.

"இங்கே என்ன நடக்குது? கொலை... கொலையாளிங்கிறாங்க. யாரு யாரைக் கொலை பண்ணியது. ஒண்ணும்



புரியலையே!" - கார்த்திக் சொல்லிக் கொண்டிருக்கும்பேதே வரிசையாய் இரண்டு மூன்று வாகனங்கள் வந்து மரத் தடியில் நிற்க, பத்துக்கும் மேற்பட்டோர் கையில் மைக், கேமிரா சகிதம் இறங்க அரவிந்தன் வீட்டை நோக்கி ஓடினர்.

"பிரச்சனை விஸ்வரூபம் எடுத்திருக்கு மச்சான். பத்திரிகைக்காரங்க, டி.வி.க்காரங்கள் எல்லாம் வந்திருக் காங்களே... எனக்கு ரொம்ப டென்ஷனா இருக்கு. நாமளும் இவங்க கூட சேர்ந்து போவோமா?"

"ஷ்! அமைதியா இருங்க. எப்படியும் வெளியே வந்துதான் ஆகணும். பேசாம இங்கேயே இருந்து பார்க்கலாம்...." - என வாசலை நோக்கியவாறே நிற்க, பின்னால் இருந்து பழனியின் குரல் கேட்டது.

"அட! கார்த்திக் ஸார்... யுவன் ஸார்... உங்களுக்கும் விஷயம் தெரிஞ்சுப் போச்சா? எப்போ வந்தீங்க?"

"பழனி! கத்தாதே. மெதுவாப் பேசு. ஆமா என்ன ஆச்சி? ஏதோ கொலைங்கிறாங்க. யாருக்கு என்ன?" - யுவராஜன் குரலைத் தாழ்த்திக் கொண்டு கேட்க, பழனியும் குரலைக் குறைத்துக் கொண்டு ரகசியமாய்க் கேட்டான்.

"ஏன் ஸார்! உங்களுக்கு விஷயமே தெரியாதா?"

"தெரியாமத்தான் கேட்கிறேன். சும்மா நம்ம வீட்டுக்கு வந்தோம். இங்க கூட்டமாத் தெரிஞ்சதும் வந்திட்டோம். என்னாச்சு பழனி?"

"ஸார்! இந்த வீட்டில இருப்பானே... ஒருத்தன் டிப்-டாப்பா... அரவிந்தன்னு..."

"ஆமா!"

"அவன் பெரிய கேடிப்பயலா இருந்திருக்கான் ஸார்!"

"என்ன சொல்றே பழனி?"

"ஆமா ஸார். ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு பெண்ணோட கூத்தடிப்பான்னு நமக்குத் தெரியும். ஆனா அதெல்லாம் காசுக்காக வர்ற பொண்ணுங்க இல்லையாம். எல்லாப் பொண்ணுங்களையும் நல்லவன் மாதிரி நடிச்சிக் கல்யாணம் பண்ணிக்கிறேன்னு சொல்லி ஏமாத்திட்டு இருந்திருக்கான்."

"என்ன?"

"அட! ஆமா ஸார். என்னைக் கூட சில நாள் கூப்பிடுவான். இந்தக் குளிர்ல தனியா படுக்கிறியே என் வீட்டுக்கு வா. உனக்குக் கலர் கலரா பட்டாம்பூச்சி காட்டுறேன்னு சொல்லுவான். நான் ஏகபத்தினி விரதன் ஸார்... அதனால இவன் பேச்சுக்கு மயங்கலை.

நான் மட்டும் கொஞ்சம் மனசு தடுமாறியிருந்தாலும் போச்சு. இன்னிக்கு இவனுக்கு நடந்த மாதிரிதான் எனக்கும் நடந்திருக்கும். என் பெஞ்சாதியோட தாலிதான் என்னைக் காப்பாத்தியிருக்கு."

"என்ன பழனி? அரவிந்தனுக்கு என்ன நடந்தது?"

"யாருக்குமே நடக்கக் கூடாதது நடந்திருக்கு ஸார். வெளியே சொன்னா வெட்கக்கேடு... ச்சே!"

"என்னதான் நடந்தது? சொல்லித் தொலையேன்!" - கார்த்திக் கடுப்பானான்.



பழனி ஒருமுறை தன்னைச் சுற்றிலும் பார்த்துக் கொண்டு ரகசியமாய்ச் சொன்னான்.

"நல்லவேளை! எந்தப் பொம்பளை ஆளும் இல்லை... கார்த்திக் ஸார்! இவன் ஆடின ஆட்டத்துக்கு ஒரு பொண்ணு சரியான ஆப்பு வைச்சிட்டா. பழம் நறுக்கிற கத்தியை எடுத்து இவனோட உயிர்நாடியையே அறுத் திட்டா...."

உடல் மொத்தமும் சில்லிட்டுப் போக... மூவரும் திகைத்துப் போயினர். மயிர்க்கால்கள் குத்திட்டு நின்றன. யுவராஜன் தனக்கே கேட்காத குரலில் கேட்டான்.

"ப...ப....ழ...னி! நீ என்ன சொல்றே?"

"ஆமா ஸார்! இந்தப் பயலுக்குக் கல்யாணமாம். இவனுக்கெல்லாம் கூட ஒருத்தன் பொண்ணு கொடுக் கிறானே... அவனைச் சொல்லணும்..."

"ம்ப்ச்! நீ விஷயத்தைச் சொல்லு!"

"என்னத்தைச் சொல்றது? இந்தப் பயலுக்குக் கல்யாணம் முடிவானது தெரிஞ்சி அந்தப் பொண்ணு வந்து பிரச்சனை பண்ணியிருக்கும் போல. இவன்தான் நம்மகிட்டயே ரொம்ப நக்கலாப் பேசுவானே... அந்தப் பொண்ணுகிட்ட என்ன பேசினானோ? அவ இப்படிக் காட்டிட்டா... ஆனா அந்தப் பொண்ணு இவனை விடக் கில்லாடி போலிருக்கு ஸார்!"

"ஏன்?"

"மொத்தமா அறுக்கலையாம். கொஞ்சம் மிச்சம் வைச்சிருக்குதாம். ஏன்னா உசுரு ஒரேயடியா போகக்

கூடாதுன்னு சொல்லுதாம். அது மனசுல எவ்வளவு கசப்பு, வெறி எல்லாம் இருக்குதோ? இவன் என்னென்ன பாடு படுத்தினானோ?

ஆனா ஒண்ணு மட்டும் புரியுது ஸார். கடவுள் இருக்கார் ஸார்... முன்னெல்லாம் தெய்வம் நின்று கொல்லும்னுதானே சொல்வாங்க. இப்போ அப்படியில்லை. தப்பு செய்யுறவனுக்கெல்லாம் உடனே தண்டனையைக் கொடுத்திடுது. இதுவும் நல்லதுதான்.

இப்படி நாலு இடத்தில நடந்தாத்தானே தப்பு செய்யுறவனுக்கெல்லாம் பயம் இருக்கும். கடவுள் மேலயும் நம்பிக்கை வரும்! இந்தப் பொண்ணுக்கும் ரொம்பத் தைரியம் ஸார். இவ்வளவையும் பண்ணிட்டு பயந்து ஓடாம தானே போலீஸுக்குப் போன் செய்திட்டுப் போலீஸ் வர்ற வரைக்கும் இங்கேயே உட்கார்ந்திட்டு இருக்குதாம்.

அந்தப் பொண்ணைப் பார்க்கத்தான் இவ்வளவு கூட்டம். நான் கூட அதுக்குத்தான் நிற்கிறேன். அதோ ஆம்புலன்ஸ் கூட வந்திடுச்சே... எங்கே தூக்கிட்டுப் போனாலும் பொழைக்க மாட்டான். அது நிச்சயம்!"

பழனி அலட்சியமாய்ச் சொல்ல, மூவரும் ஒருவரை யொருவர் பார்த்துக் கொண்டனர்.

அந்தப் பார்வையில் நிம்மதி, ஆசுவாசம், திருப்தி, வெற்றிக் களிப்பு எல்லாம் நிறைந்திருந்தது. ஸைரன் ஒலியோடு மேலேறி வந்த மருத்துவமனை வாகனம் வந்து நிற்க... வெள்ளை சீருடை அணிந்த ஊழியர்கள் பரபரப்பாய் இறங்கி ஸ்ட்ரெச்சரோடு உள்ளே செல்ல,



பத்திரிகையாளர்கள் தங்கள் கேமிராவுடன் தயாராய் நின்றனர்.

அனைவரும் கூர்மையாய் கவனித்துக் கொண்டு நிற்க, அரவிந்தனின் ஓலம் பலமாய்க் கேட்க, ஸ்ட்ரெச்சர் வெளியே வந்தது. தலை அறுபட்ட கோழி போல் துள்ளித் துடித்துக் கொண்டிருந்தான். மூடப்பட்டிருந்த வெள்ளை விரிப்பு இரத்தமாய் மாறிக் கொண்டிருக்க... கண்களை மூடிக் கொண்டான் மாதவன்.

ஆம்புலன்ஸ் புறப்படும் வரை கண்களைத் திறக்கவே இல்லை. அவனது ஓலம் மட்டும் செவியில் அறைந்தது. சட்டென அடுத்த பரபரப்பு தென்பட கண்களைத் திறந்தான். சுற்றிலும் காவலர்கள் சூழ்ந்து கொண்டிருக்க... நடுவே எந்தப் பதட்டமும் பயமும் கூச்சமும் இன்றி தலைநிமிர்ந்து வந்து கொண்டிருந்தாள் அந்தப் பெண்.

நீலாவின் வயதை விட சிறிய பெண். அழகான பெண். முகத்தில் ஒரு அசாத்திய ஒளி. நடையில் ஒரு கம்பீரம். அந்தப் பெண்ணைக் கண்டதும் பத்திரிகை யாளர்கள் மொய்த்துக் கொண்டனர். பலவிதமான ஃப்ளாஷ்கள் மின்னின. அவளை நோக்கி பலவிதமான கேள்விகள் கேட்கப்பட்டன. அவள் எதற்கும் அசரவில்லை.

முகத்தை மறைத்துக் கொள்ளவில்லை. அழவில்லை. தைரியமாகப் பேசினாள். குரல் சிறு பிசிறும் இன்றி கணீரென ஒலித்தது.

"பெண்கள் எல்லாருமே தன்னோட விளையாட்டுப் பொம்மைன்னு சொன்னான். நினைச்ச நேரம் நினைச்சப்

பெண்ணோட வாழுவேன்னு சொன்னான். அவனை நம்பி நான் பணத்தையோ பொருளையோ இழந்திருந்தா போகட்டும்னு விட்டிருப்பேன். ஆனா நான் என்னையே இழந்திருந்தேன்.

அதனால என் குடும்பத்தை இழந்தேன். இவனுக்காக நான் தூக்கியெறிஞ்ச என் குடும்பத்தில இப்ப யாரும் உயிரோட இல்லை. நான் அநாதையா நிக்கிறேன்னு சொல்லி இவன்கிட்ட வாழ்க்கைப் பிச்சை கேட்டேன்.

ஆனா இவன் என்னை எச்சில் இலைன்னு சொல்லிட்டான். புதுசா ஒரு பெண்ணைக் கட்டிக்கப் போறானாம். அதான் அவன் விளையாடிய கடைசி பொம்மை நானா இருந்திட்டுப் போறேன்னு இனிமே அவன் விளையாடவே முடியாதபடி செய்திட்டேன். அவன் கழுத்தை அறுத்து அவனை ரெண்டே நிமிஷத்தில கொன்னிருக்க என்னால முடியும்.

ஆனா அவன் அவ்வளவு சுலபமா சாகக் கூடாதுன்னுதான் இப்படிச் செய்தேன். எத்தனை பெண்களை சிதைச்சிருப்பான். எத்தனை குடும்பம்... என் குடும்பம் மாதிரி அஸ்தமிச்சிப் போயிருக்கும். எத்தனை பேர் இவன்கிட்ட ஏமாந்ததை வெளியே சொல்ல முடியாம மறுகி, குமைஞ்சி மனநோயாளி ஆகியிருப்பாங்க!

அதுக்கெல்லாம் இவன் பதில் சொல்ல வேண்டாம்? அதனால் இவனுக்கு இந்தத் தண்டனை தந்தேன். பெத்தவங்களைத் தலைகுனிய வைச்சு தற்கொலை செய்யக் காரணமான எனக்குச் சட்டம் தர்ற தண்டனை எதுவா இருந்தாலும் சந்தோஷமா ஏத்துப்பேன். இதை எல்லாப் பத்திரிகையிலும் எழுதுங்க.



இதைப் படிச்சுப் பார்க்கிற பெண்களாவது விளக்கில் விழுந்து மடியும் விட்டில் பூச்சியாக இல்லாமல் குடும்பத்தில் சந்தோஷமாகப் பறக்கும் வண்ணத்துப் பூச்சியா இருக்கட்டும். வழியை விடுங்க..." - என்றவாறு தயக்கமில்லாமல் நடந்து போலீஸாரின் வாகனத்தில் ஏறி அமர்ந்தாள்.

கூடியிருந்த அனைத்துப் பெண்களும் மூக்கின் மேல் விரலை வைத்துக் கொண்டு அந்தப் பெண்ணைப் பற்றி விமர்சனம் செய்து கொண்டே கலைந்து செல்ல...

கொன்றை மரத்தடியில் நின்ற மூவரின் கண்களும் நீரால் நிறைந்திருந்தன.

## 20

ஒவ்வொரு நொடியும் - நான்
உன்னை நினைத்துக் கொண்டிருக்கிறேன்
ஒரு நொடியாவது நீ என்னை
நினைப்பாயா என்று!

நீலா நன்றாகத் தேறி விட்டிருந்தாள். முகத்தில் பழைய வேதனை, வருத்தம் எல்லாம் சுத்தமாய் மறைந்திருந்தது. புதுப்பொலிவோடு மின்னிய மனைவியை விட்டு நகர மனமில்லாமல் அமர்ந்திருந்தான் மாதவன். அவன் முகத்திலும் ஆனந்தம்.

"நீலா!"

"என்னங்க?"

"வீட்டுக்குப் போலாம்னு டாக்டர் சொல்லிட்டார்."

"போலாங்க... எனக்கும் எப்போ வீட்டுக்குப் போலாம்னு இருக்கு."

"வந்து... நம்ம வீட்டுக்குத்தானே?" - தயக்கமாய்க் கேட்ட கணவனை வியப்பாய் நிமிர்ந்தாள்.

"ஆமா! ஏன் இப்படிக் கேட்கிறீங்க?"

"இல்ல... அத்தை உன்கிட்ட நேத்து சொன்னாங்களே!"

"என்ன சொன்னாங்க?"

"நம்ம வீட்டில வந்து ஒரு மாசம் இருந்து உடம்பைத் தேத்திட்டுப் போன்னு..."

"நீங்க என்ன சொல்றீங்க?"

"நான் என்ன சொல்றது? உன் விருப்பம்தான் என் விருப்பம். அம்மா வீட்டுக்குப் போகணும் போல இருந்தா போயிட்டுக் கொஞ்ச நாள் இருந்துட்டு வா!" - என்றான் அரை மனதோடு.

கணவனைப் புன்னகையோடு தலை சாய்த்துப் பார்த்தாள் நீலா.

"வாய்தான் போன்னு சொல்லுது. முகம் வேற என்னவோ சொல்லுதே!"

"என்ன சொல்லுது?"

"என்னை விட்டுட்டு எங்கேயும் போகாதே... நீலாம்மான்னு சொல்லுதே!" - என்றாள் குறும்பாய்.

மாதவன் சட்டென மலர்ந்தான். "ஹேய்! என் மனசு சொல்லுறது உனக்குக் கேட்குதா?"



"நல்லாவே கேட்குது. அகத்தின் அழகு முகத்தில் தெரியும்னு சொல்வாங்களே... அது ஹன்ட்ரட் பர்செண்ட் உண்மை."

"நீலாம்மா... என் மனசு சொல்றது இருக்கட்டும். உன் மனசு என்ன சொல்லுது?" - ஏக்கமாய்க் கேட்டவனின் கரத்தை எடுத்து தன் கரங்களுக்குள் வைத்துக் கொண்டாள்.

"நமக்குன்னு தனியா மனசு இல்லைங்க. நம்ம ரெண்டு பேருக்குமே ஒரே மனசுதான். ஒரே எண்ணம் தான்..."

"நீலா!"

"நாம நம்ம வீட்டுக்கே போலாம்."

"நிஜமாவா சொல்றே?"

"நிஜம்... நிஜம்..."

"அப்போ... அம்மா வீட்டுக்கு?"

"போகலாம். வீக் என்ட்ல நாம சேர்ந்தே போயிட்டு வரலாம். ஆனா குறிஞ்சியோட மேரேஜ் முடியுற வரைக்கும் எங்கேயும் போய் ஸ்டே பண்ணக்கூடாது. வீட்டுக்கு வந்திடணும். சரியா?"

"உத்தரவு மகாராணி!"

"அப்புறம் விட்டில வயசுப் பொண்ணை வைச்சிக்கிட்டு நாம ரொம்பவும் இழையக்கூடாது. அதனால முதல்ல அவளுக்கு நல்லதா ஒரு மாப்பிள்ளை பாருங்க."

"மாப்பிள்ளையைப் பார்த்து முடிவு பண்ணிட்டேன். அவர் நல்லவரா... நம்ம குறிஞ்சிக்குப் பொருத்தமா இருப்பாரான்னு நீதான் சொல்லணும்!"

"நிஜமாவா? யாருங்க அது?"

"எல்லாம் உனக்கு வேண்டப்பட்டவங்கதான்!"

"எனக்கு வேண்டப்பட்டவங்களா! யாரு?"

"மாப்பிள்ளைக்கும் இதே ஊர்தான். அண்ணன் தம்பி ரெண்டே பேர். ஒரு தங்கை. மத்தவங்களுக்கெல்லாம் கல்யாணம் முடிஞ்சிடுச்சி. மாப்பிள்ளைதான் வெயிட் பண்றார்... நம்ம குறிஞ்சிக்காக..."

"மாப்பிள்ளை எப்படி இருப்பார்?"

"ம்... சூப்பரா இருப்பார். அசப்பில உன்னை மாதிரியே இருப்பார். உன்னோட கலர்... உன்னோட மூக்கு... உன்னோட சிரிப்பு."

"இதெல்லாம் என் சின்ன அண்ணனுக்குத்தான் இருக்குன்னு சொல்வாங்க."

"ஏன்? அவருக்குக் குறிஞ்சியைக் கட்டிக் கொடுக்கக் கூடாதா?"

"என்ன!" – வியப்பாய் விழிகளை விரித்தாள் நீலா.

"ம்..."

"இதெல்லாம் எப்போ நடந்தது? யார் பேசி முடிச்சது?"

"உன் அண்ணனே முடிவெடுத்துப் பேசி முடிச்சிட்டார். என்கிட்ட சம்மதம் கேட்கிறார். என்ன சொல்லட்டும் நீலா?"

"ஹய்யோ! எவ்வளவு சந்தோஷமான விஷயம் இது! உடனே சரின்னு சொல்ல வேண்டியதுதானே!"



"என்னால அப்படி சட்டுன்னு சொல்லிட முடியாதே!"

"ஏங்க?"

"முக்கியமான ஒருத்தரோட சம்மதம் வேணுமே?"

"யாரு? மாமாவா?"

"அப்பா எப்பவோ சம்மதிச்சாச்சு."

"வேற யாரு? ஓ! குறிஞ்சியா?"

"யா... அவ சம்மதம்னு சொல்லிட்டா... உடனே கல்யாணம்தான்."

"ஏங்க! குறிஞ்சிக்கு எங்க அண்ணனைப் பிடிக்குமா! சம்மதிப்பாளா?"

"கண்டிப்பா சம்மதிப்பா."

"எப்படி இவ்வளவு உறுதியாச் சொல்றீங்க?"

"நீலா! நமக்குத் தெரியாம என்னென்னவோ நடந்திருக்கு தெரியுமா? அன்னிக்கு மழையில நனைஞ்சி வந்தாளே ஞாபகமிருக்கா? நான்கூடத் திட்டினேனே?"

"ஆமாம். யார் வீட்டுக்கோ போனான்னு..."

"ம். அது உங்க வீடுதான். கூட்டிட்டுப் போனது யாருன்னு தெரியுமா?"

"யாரு?"

"உன் சின்ன அண்ணன் யுவராஜன்தான்."

"உன் சின்ன அண்ணன் யுவராஜன்தான்." – no

"அட! அப்போ ரெண்டு பேரும் ஏற்கெனவே விரும்பு ...ங்களா?"

"அது தெரியாது. பட் உங்க அண்ணன் விரும்புறார். அதை என்கிட்ட சொல்லிட்டார். குறிஞ்சிக்கும் உன் அண்ணன் மேல ஈடுபாடு இருக்கலாம்."

"எப்படிச் சொல்றீங்க?"

"அன்னிக்கு உங்க வீட்டில போய் உனக்காகப் பரிஞ்சு பேசினப்போ... உன் சின்ன அண்ணன் கோபப்பட்டு இவ கன்னத்துல அறைஞ்சிருக்கார்."

"அச்சோ!"

"ஆனா... இவ அதை என்கிட்ட சொல்லவே இல்லை தெரியுமா? திரும்பத் திரும்பக் கேட்டேன். கடைசி வரை உன் அண்ணனோட பேரைச் சொல்லவே இல்லையே?"

"ஸாரிங்க... என்னால உங்க எல்லாருக்கும் எவ்வளவு கஷ்டம்? ஸாரிங்க..."

"இப்ப ஏன் இவ்வளவு வருத்தப்படுறே நீ?"

"ஆயிரம்தான் இருந்தாலும் குறிஞ்சியை என் அண்ணன் அடிச்சது ரொம்பத் தப்பு."

"அந்தத் தப்புக்காக குறிஞ்சிகிட்ட மன்னிப்பு கேட்கப் போயிருக்காரு. அவளைச் சம்மதிக்க வைக்கிற பொறுப்பை அவர்கிட்டயே விட்டுட்டேன். அவங்களே பேசி ஒரு முடிவுக்கு வரட்டும். முடிவு சந்தோஷமா இருந்தா கெட்டிமேளம் கொட்டிட வேண்டியதுதான்."

"தேங்க்ஸ்ங்க... ஏங்க! அண்ணன் மேல உங்களுக்கு ஒண்ணும் கோபமில்லையே?"



"இருந்தது. நிறைய கோபம் இருந்தது. ஆனா இப்ப இல்லை."

"என்ன சொல்றீங்க?"

"என் தங்கையை எப்படிக் கைநீட்டி அடிக்கலாம்னு கோபம் இருந்தது. இப்ப நம்ம தங்கைகிட்ட மாட்டிக்கிட்டு எத்தனை அடி வாங்கப் போறாரோன்னு பரிதாபமா இருக்கு!" - மாதவன் சிரிக்காமல் சொல்ல, கணவனை முறைத்தாள்.

"போதும்... போதும்... நீங்க ஒண்ணும் பரிதாபப்பட வேண்டாம். எங்க அண்ணனை குறிஞ்சி சந்தோஷமா ஏத்துப்பா!"

"அவ ஏத்துக்கிறது இருக்கட்டும். நீ என்னை முழு மனசோட ஏத்துக்கிட்டியா நீலா?" - அவளது கண்களை நேராய்ப் பார்த்துக் கேட்டான்.

"எ... என்னங்க இப்படிக் கேட்கிறீங்க?"

"இல்ல... அன்னிக்கு வேற வழியில்லாம என்னைக் கட்டிக்கும்படி ஆயிடுச்சி. ஆனா உன் மனசுக்கு ஏத்தபடி நான் இருக்கிறேனா? என்னை உனக்குப் பிடிக்குமா நீலா?"

"ஐயோ! இப்படியெல்லாம் கேட்டு என்னைக் கொல்லாதீங்க."

"நீலா!"

"அன்னிக்கு ஹாஸ்பிடலுக்கு என்னைத் தூக்கிட்டுப் போ... என் உயிரைக் காப்பாத்துனீங்களே... என்னைக் கூடவே இருந்து கவனிச்சி... என் கண்ணீரைத் துடைச்சீங்களே... என் மனசு நொந்து துடிச்சப்போ

தன்னம்பிக்கையோடு பேசி என்னை எழுந்து நடமாட வைச்சீங்களே...

அப்பவே என் மனசு உங்களை ஏத்துக்கிட்டதுங்க. உண்மையான நேசம்ன்னா என்னன்னு அப்பத்தான் புரிஞ்சிகிட்டேன். மனம் நிறைய சந்தோஷத்தோடத்தான் உங்ககிட்ட தாலி வாங்கிட்டேன்.

உங்க அன்பை என்னால முழுசா ஏத்துக்க முடியாம தவிச்சதுக்குக் காரணம் நான் செய்த தப்புதான். அதை மறைக்க முடியாமத்தான் மருகினேன். உங்களை எப்பவுமே விரும்பிட்டுத்தான் இருக்கேன். உங்க அன்பு நிஜம். நேசம் உண்மையானது. நீங்க என் கடவுள். உங்களைக் கடவுளா நினைச்சி பூஜிக்கிறேன்..." - கண்கள் கசியப் பேசியவளது வாயை மூடினான்.

"போதும்மா... நீ கண்ணீர் விட்டதும் போதும். என்னைக் கடவுளா நினைச்சதும் போதும்..." - சட்டென நிமிர்ந்து கணவனைப் பார்த்தாள்.

"எ... என்ன?"

"இனிமேலாவது என்னைக் கணவனா நினைச்சுக் கருணை காட்டும்மா..." - இருகரங்களை நீட்டிப் பரிதாபமாய்க் கேட்ட கணவனைக் கண்டு வெட்கமாய் புன்னகைத்து அவனது கரங்களில் தஞ்சம் புகுந்தாள் நீலா.

'குறிஞ்சி பொக்கே ஷாப்!' - முன் தன் காரை நிறுத்தி விட்டு இறங்கினான் யுவராஜன். முதன்முதலாய் அவளைப் பார்த்த நிமிடம் மனக்கண்முன் வந்து நின்றது. முகம்



தன்னிச்சையாய் புன்னகைத்தது. உள்ளே செல்லத் தயங்கி அங்கேயே நின்று கொண்டான்.

மலர்களால் அலங்கரிக்கப்பட்டிருந்த பெயர் பலகையில் கடையின் போன் நம்பர் பொறிக்கப்பட்டிருந்தது. சட்டென ஓர் எண்ணம் தோன்ற தன் செல்லை எடுத்து அந்த எண்களை டயல் செய்தான். ரிங் போயிற்று. புன்னகையோடு காதில் வைத்தான். உள்ளே கண்ணாடித் தடுப்பின் பின்னால் நின்றிருந்த குறிஞ்சி ரிஸீவரை எடுத்து காதில் வைத்தாள்.

"ஹலோ!"

"ஹலோ மேம்! திஸ் இஸ் குறிஞ்சி பொக்கே ஷாப்!"

"யா!"

"மேம்! இன்னிக்கு ஷாப் இருக்கா?"

"இருக்கு... உங்களுக்கு என்ன வேணும்?"

"எனக்கு குறிஞ்சிப் பூ வேணும்."

"வாட்?"

"ஐ மீன் குறிஞ்சி மலர்... பன்னிரண்டு வருஷத்துக்கு ஒரு வாட்டி பூக்குமே அந்தப் பூ வேணும்."

"ஸாரி! அதெல்லாம் விக்கிறதில்லை."

"ஏங்க?"

"இது என்ன கேள்வி? அது என்ன எப்பவும் கிடைக்கிற பூவா?"

"ஓ.கே. அப்போ கடைக்கு ஏன் இந்தப் பெயரை வைச்சீங்க?"

"மிஸ்டர்! யார் நீங்க? உங்களுக்கு என்ன வேணும்?"

"அதான் கேட்டேனே குறிஞ்சிப் பூ வேணும்னு..."

"இப்ப என்ன உங்களுக்குக் குறிஞ்சிப்பூ வேணுமா?"

"யா... யா..."

"நேரே தொட்டபெட்டா போங்க. அங்க உள்ள மலைமேல ஏறி நில்லுங்க. எங்கேயாவது பூத்திருந்தா அங்கிருந்து குறிஞ்சி பறிச்சுக்கங்க."

"ஹலோ! என்ன கிண்டலா?"

"பின்னே? வேலை வெட்டி இல்லாம இப்படி வெட்டித்தனமா பேசிட்டு இருக்கிறதுக்குப் பதிலா அந்த வேலையைச் செய்யுங்க. போனை வை. நான்சென்ஸ்." - என முனகியவாறே போனை அறைந்து சாத்தினாள்.

காது வரை எதிரொலிக்க சட்டென போனை காதிலிருந்து எடுத்தான்.

"அடேங்கப்பா! எவ்வளவு கோபம் வருது? எப்படிச் சமாளிக்கப் போறேன்? ம்... ட்ரை பண்ணலாம்." தன்னைத் திடப்படுத்திக் கொண்டு படிக்கட்டில் ஏறி கடைக்குள் நுழைந்தான்.

"எக்ஸ்கியூஸ்மீ. மே ஐ கமின்!" - என்றவாறே கண்ணாடித் தடுப்பில் விரலால் தட்டினான்.

"யெஸ். கம் இன்." - என்றவாறு வெள்ளை ரோஜாக் கொத்தோடு திரும்பிய குறிஞ்சியின் விழிகள் விரிந்தன.



குறுஞ்சிரிப்போடு கண்களைச் சிமிட்டியவாறே நின்று கொண்டிருந்தவனைப் பார்த்ததும் கையில் இருந்த ரோஜாக்கள் நழுவின.

"அடடா!" - என்றவாறு குனிந்து அவற்றைச் சேகரித்து மொத்தமாய் இரண்டு கைகளிலும் பிடித்தவாறே அவள் முன் நீட்டினான்.

"ஹேப்பி பர்த்டே குறிஞ்சி!"

"என்ன?"

"பிறந்த நாள் வாழ்த்துக்கள்னு சொன்னேன்."

"யார் சொன்னது? இன்னிக்கு என்னோட பிறந்த நாள்ன்னு!"

"உங்க அண்ணன்தான் சொன்னார்!"

"என் அண்ணன் உங்ககிட்ட வந்து சொன்னாரா?"

"ஆமா குறிஞ்சி! அவரே தான் என்னை அனுப்பினார். வேணும்னா போன் பண்ணிக் கேளேன்!"

"இப்ப என்ன வேணும் உங்களுக்கு?"

"குறிஞ்சிப்பூ வேணும்."

"நினைச்சேன். போன்ல பேசும்போதே நினைச்சேன்."

"யூ மீன்... என்னோட வாய்ஸைக் கண்டுபிடிச்சிட்டியா? அப்போ என் குரலைக்கூட தெளிவா மறக்காம வெச்சிருக்கே!" என்றதும் அவசரமாய்த் தலைகவிழ்ந்தாள்.

"சொன்னது சரிதானே!" - குறும்பாய்க் கேட்டவனை வெடுக்கென நிமிர்ந்து பார்த்தாள்.

"ரொம்பச் சரி. உங்க குரலையும் மறக்கல்ல. நீங்க பேசின வார்த்தைகளையும் மறக்கல. இப்ப எதுக்காக வந்தீங்க?"

"மன்னிப்புக் கேட்க வந்தேன்."

"அதெல்லாம் இங்க விக்கிறதில்ல. கிளம்புங்க. எனக்கு வேலை இருக்கு."

"குறிஞ்சி, ப்ளீஸ்! நான் அன்னிக்கு அப்படிப் பேசியிருக்கக்கூடாது. ஸாரி... அன்னிக்கு இருந்த கோபத்தில..."

"உங்களுக்கு மட்டும்தான் கோபம் வருமா? எங்களுக்கெல்லாம் வராதா?"

"ஐயோ! உன்னோட கோபத்தை இப்பக் கொஞ்ச நேரம் முன்னாலதானே பார்த்தேன். இன்னும் காது வலிக்குது."

"என்ன?"

"நீ ரிஸீவரை வெச்சது என் காதுல அறைஞ்ச மாதிரி வலிக்குது."

"நேர்ல விழ வேண்டிய அறை அது. போன்ல பேசினதுனாலே மிஸ்ஸாகிடுச்சு."

"நீ என்னை அடி. ஏன்டா அப்படிப் பேசினேன்னு கேட்டு திட்டு. என்ன வேணாப் பண்ணிக்கோ. ஆனா நான் கேட்கப் போற கேள்விக்கு மட்டும் சம்மதம்ன்னு ஒரே ஒரு வார்த்தை சொன்னாப் போதும்."

"என்ன?"



"குறிஞ்சி! உன்னை நான் ரொம்ப நேசிக்கிறேன். காலம் பூரா உன்கூட வாழணும்னு ஆசைப்படுறேன். என்னைக் கல்யாணம் பண்ணிக்கிறியா?" - நேராய் நின்று கேட்டவனைப் பார்த்துத் தடுமாறிப் போனாள்.

"என்ன இது? இந்த விளையாட்டுப் பேச்செல்லாம் எங்கிட்ட வேண்டாம்."

"இது விளையாட்டு இல்ல குறிஞ்சி! உன்னை முதல் முறையா இதே இடத்திலே வெச்சுத்தான் பார்த்தேன். அந்த நிமிஷமே என் மனசு தொலைஞ்சி போச்சு. உன்னைப் பார்த்த நிமிஷம் இன்னும் என் இதயத்தில பசுமையா இருக்கு. பிங்க் கலர் ரோஸ், பிங்க் கலர் சூரிதார். அந்தத் துப்பட்டா கூட எம் மேல உரசிப் போனதே. உன் நினைவாய் உன் கைபட்ட ரோஜாக்களை மொத்தமாய் வாங்கிட்டுப் போனேனே. இன்று வரை அது என் பெட்ருமில் இருக்கிறது. நம் திருமணம் முடிந்து நீ அங்கு வரும்போது காட்டுவதற்காகப் பத்திரப்படுத்தி வைத்திருக்கிறேன்." - அவனது பேச்சில் இருந்து கேலி மறைந்து குரல் மென்மையாய் ஒலித்தது.

இதயத்தை வருடும் மென்குரல். பேசிக்கொண்டே அருகில் வந்தவனின் நெருக்கம். அந்தக் குரலில் தொனித்த உருக்கம். இவற்றால் கட்டுண்டு பேச்சு எழாமல் அசையாமல் நின்றாள்.

"அப்புறம் அன்னிக்கு ஈவ்னிங்கே உன்னைச் சந்திப்பேன்னு நான் சத்தியமா நினைக்கல்ல. என் வாழ் நாள் முழுக்க மறக்க முடியாத நிகழ்வு அது. ஆபத்தான

கஷ்டமான சூழ்நிலையா இருந்தாலும் நான் அந்த நிகழ்ச்சியை ரொம்பச் சந்தோஷமா உணர்ந்தேன் குறிஞ்சி.

"ஏதோ ரொம்ப வருஷம் உன்கூட வாழ்ந்த மாதிரி தோணிச்சி. நேற்றுகூட அந்தத் தோட்டம் வழியாப் போகும்போது உன்னைப் பார்த்த அந்த இடத்தில ரெண்டு நிமிஷம் நின்னுட்டுத்தான் போனேன். என்னை நீ அந்த அளவுக்கு பாதிச்சிட்ட குறிஞ்சி."

இம்முறை அவளால் கோபப்பட முடியவில்லை. அதே உணர்வுகள் அவளுக்குள்ளும் எழுந்ததே. காய்ச்சலில் துவண்டபோதும்கூட அவளது தோள் பற்றி நடந்த நிமிடத்தை எண்ணி மனம் கும்மியடித்ததே.

அன்று அவன் தன்னிடம் பேசிய வார்த்தைகளில் ஒன்றைக்கூட இன்னும் மறக்க முடியவில்லை.

அவனைக் காண வேண்டும் என்ற ஆவலில் தானே சுஜாவை சாக்காக வைத்துக்கொண்டு உடல்நிலை முழுமையாய் குணமாவதற்குள் ஓடினாள்.

ஆனால் அன்று நடந்த நிகழ்வுகள் தனக்குள் வேர் விட்டுக் கிளை பரப்பிய கொடியில் பூப்பூக்கும் சமயம் வேரோடு பிடுங்கி எறிந்த கதையாய் ஆயிற்றே.

பிறகெப்படி இவனை நினைக்க முடியும்? அவள் மனதில் உள்ளதையே அவனும் சொன்னான்.

"அன்றைக்கு என் அண்ணியைப் பார்க்கவென்று வந்தாயே. அப்போதுகூட உன்னைக் கண்டதும் என் மனம் துள்ளியது உண்மை. ஆனால் நீ இது நீலாவின் வீடு என்று



தெரியாது என்றதும்தான் கோபமாகி விட்டேன். குறிஞ்சி! எனக்குப் பொய் சொல்லுபவர்களை எப்போதும் பிடிக்காது.

"அன்று நீ சொன்னது உண்மை என்று உணராமல் நீகூடப் பொய் சொல்லி விட்டாயே என்ற ஆத்திரத்தில்தான் கொஞ்சம் முட்டாள்தனமாய் நடந்து கொண்டேன்.

அது உன் மீது எனக்கிருந்த உரிமையை அப்போது தான் உணர வைத்தது. அதே உரிமை உனக்கும் இருக்கிறது என்று உணர்ந்ததால்... இதோ உன் முன் நான் தனியே நிற்கிறேன்.

என்னை என்ன வேண்டுமானாலும் செய்து கொள். ஐயாம் ரெடி." - என்றவாறு இரு கைகளையும் கட்டிக் கொண்டு சிரம் தாழ்த்தி நின்றான் யுவராஜன்.

குறிஞ்சிக்குள் ஏதோ மாற்றங்கள் நிகழ்ந்தன. பிடுங்கி யெறியப்பட்டதாய் உணர்ந்த நேசக்கொடி மனமெங்கும் பரப்பி விரிந்து கிடந்தது. இலையும் மொட்டுகளும் கண்ணைப் பறித்தன. மலர்ந்து மணம் வீசத் தயாராய் இருந்தன.

அவனைப் பார்த்த விழிகளை நகர்த்த முடியாமல் தயங்கி நின்றவளின் கரத்தை எடுத்து தன் கன்னத்தின் மீது ஓங்கி அடித்தான் யுவராஜன்.

"ஐயோ!" - பதறி கையை விலக்கினாள்.

"இப்போது பதில் சொல்லு குறிஞ்சி! காலம் முழுக்க உன் கையால் அடி வாங்க ஆசைப்படுறேன். என்னைக் கல்யாணம் பண்ணிக்கிறியா?" - பரிதாபமாய்க்

கேட்டவனைப் பார்த்து, அதற்கு மேலும் அடக்க முடியாமல் புன்னகைத்தாள் குறிஞ்சி.

அந்தப் புன்னகை அளித்த நம்பிக்கையில் துணிச்சலில் அவளைத் தன் நெஞ்சோடு அணைத்துக் கொண்டான் யுவராஜன். "குக்குக்" - என அவனது இதயம் துடிக்க, வியப்பாய் நிமிர்ந்து பார்த்தாள்.

சிரித்துக் கொண்டே, சட்டைப் பையினுள் இருந்த அவளது வாட்சை எடுத்துக் காட்டினான்.

"உன் நினைவா இது எப்போதும் என்கூடவே இருக்கும்." - என்றதும் பொங்கிய நேசத்தோடு அவனை இறுகக் கட்டிக் கொண்டாள்.

மலர்ந்தும் மலராமல் தயங்கி நின்ற அவளது நேசம் மலர்ந்து மணம் வீசத் துவங்கியது.